

# இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களும் கவிதைகளும்

டாக்டர் சிலோன் விஜயேந்திரன், எம்.ஏ., டி.லிட்.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

468874

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களும் கவிதைகளும்

டாக்டர் சிலோன் விஜயேந்திரன்
எம். ஏ., டி. லீட்.

சித்ரா பதிப்பகம்
26, டி.என்.எச்.பி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்,
திருமங்கலம்,
அண்ணா நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
468874

முதற் பதிப்பு : செப்டம்பர் 1994

வெளியீடு : சித்ரா பதிப்பகம்,
26, டி. என். ஏச். பி.
ஷாப்பிங் காம்ளெக்ஸ்,
திருமங்கலம், அண்ணா நகர்,
சென்னை-101.

உரிமை : ஆசிரியருக்கு

**விலை ரூ. 60-00**

அச்சுப்பதிவு : சித்ரா கிராபிக்ஸ்,
24, பொன்னுசாமித் தெரு,
ராயப்பேட்டை,

---

## நன்றிக்குரியவர்கள் :

- கன்னிமாரா நூலகத்தார்
- மறைமலையடிகள் நூலகத்தார்
- அண்ணா அறிவாலய நூலகத்தார்
- ஆருயிர் நண்பன் ஆர். சி. பிரகாஷ்
- அருமை நண்பன் ஏஜாஸ் அலி
- முனீரா பேகம்
- சித்திவிநாயக நாதன் (நோர்வே)
- விமலேந்திரன, சுரேஷ், கௌரி பாலன், (ஈழ நண்பர்கள்)
- கவிஞர் சுந்தரக்கண்ணன்
- இனிய நண்பர் முல்லைச் செல்வன்
- ராஜமார்த்தாண்டன் (தினமணி)
- ஆர். சுந்தர் (மௌலீஸ் விளம்பர நிறுவனம்)
- எழுத்தாளர் ஏ.எஸ். மணி

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் பிறநூல்கள்

1. விஜயேந்திரன் கவிதைகள் (பாகம்-1) (1968)
2. அவள் (நாவல்) (1968)
3. அண்ணா என்றொருமானிடன் (1969)
4. சௌந்தர்ய பூஜை (சிறுகதைகள்) (1970)
5. பிரேமதியானம் (வசன கவிச்சித்திரம்) (1971)
6. ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை (வாழ்வும் பணியும்) (1973)
7. விஜயேந்திரன் கதைகள் (1975)
8. பாரதி வரலாற்று நாடகம் (1982)
9. உலக நடிகர்களும் நடிகமேதை சிவாஜியும் (1984)
10. நேசக்குயில் (கவிதைகள்) (1985)
11. கம்பதாசன் வாழ்வும் பணியும் (1986)
12. சிலோன் விஜயேந்திரன் கவிதைகள் (பாகம்-2) (1990)
13. அறுபதாண்டு காலத்திரைப் பாடல்களும் பாடலாசிரியர்களும் (1992)
14. ஈழத்துக்கவிதை விமர்சனம் (1992)
15. மூன்று மகாகவிகள் (1993)
16. சிலோன் விஜயேந்திரன் கவிதைகள் (பாகம்-3) (1994)

## தொகுத்த நூல்கள்

1. கல்லடிவேலன் நகைச்சுவைக்கதைகள் (1974)
2. கம்பதாசன் கவிதைத்திரட்டு (1987)
3. கம்பதாசன் திரை இசைப்பாடல்கள் (1987)
4. கம்பதாசன் காவியங்கள் (1988)
5. கம்பதாசன் சிறுகதைகள் (1988)
6. கம்பதாசன் நாடகங்கள் (1988)
7. கலைஞர் திரை இசைப்பாடல்கள் (1989)
8. ஈழத்துக் கவிதைக்கனிகள் (1991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தமிழ்க் கவிதையின்பால் யானுற்ற ஆனந்தக்காதல் 1960ஆம் ஆண்டளவில் அரும்பியது!

மணிக்கவி பாரதியையும் அவன் காட்டிய மறுமலர்ச்சிப் பாதையிலே சென்று வெற்றிக்கனி பறித்த பாரதிதாசன், ச.து.சு. யோகி, கம்பதாசன், கலைவாணன் போன்ற பலப் பலக் கவிஞர்களின் கவிதைகளையும் படித்துப் பரவச முற்றதும், இலக்கிய நண்பர்களிடம் யான்பெற்ற இன்பத்தைச் சொல்லிச் சொல்லி மகிழ்வுறுவதும் அன்றாட பணிகள் அனைத்திலும் முக்கிய இடத்தைப் பெற்றது!

**1970**இல் யான் ஆரம்பித்த **'வைகறை'** இலக்கிய இதழிலே இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களான **ச.து.சு யோகி, கம்பதாசன், கலைவாணன்** ஆகிய வெகுசிலரைப் பற்றி மிகுந்த ரசனையுடன் எழுதினேன். பிறரைப் பற்றி எழுத முடியாதபடி என் பத்திரிகை மூன்று இதழ்களோடு நின்றுவிட்டது!

சுமார் கால்நூற்றாண்டுக் காலத்தின் பின்னர் **"இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களும் கவிதைகளும்"** என்ற நூலை—தமிழில் இந்த நூற்றாண்டுக் கவிஞர்களை மிகப்பெரிய அளவில் அறிமுகப்படுத்தும் **முதல் நூலை** எழுதும் பெரும்பேற்றினை ஈந்த இறைவனுக்கு நன்றி.

தமிழில் ஏனைய துறைகளைப் போலவே கவிதைத் துறையிலும் விமர்சகர்கள் முறையாக நடந்து கொள்ள வில்லை!

தமக்கெனச் சில குறுகிய அளவுகோல்களை வைத்துக் கொண்டு அதற்குள் அடங்காத மகத்தான கவிதாசிற்பிகளை இருட்டடிப்பு செய்தே வந்துள்ளார்கள்.

இந்த நிலையில்—

கடந்த முப்பதாண்டு காலத்திற்கு மேலாக யான் ஈடுபாட்டோடு உழைத்து—நிஜத்தின் நிழலில் நின்று அடையாளங்கண்ட அருமையான கவிஞர்களை விரிந்த தமிழ் உலகிற்கு இந்நூல் மூலம் வெளிச்சத்திற்குக் கொணர்ந்துள்ளேன்.

**சிலோன் விஜயேந்திரன்**

51, அபிபுல்லா தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை-5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்கூண்டில் காதலிசை பாடும்

# சொர்க்கப்பட்சிக்குச் சமர்ப்பணம்

ஓ என் அன்பே!
காலமகள் அப்பழுக்கற்ற என்னை
ஓராண்டு இருட்சிறையில் தள்ளினாள்!
தனியாய் இருந்து அழுதேன்!

மகாஇறைவன் மீண்டுமென்வாழ்வில்
சுதந்திர ஜோதியை ஏற்றினான்!

என் ஆசாபாசங்களை அர்ப்பணிக்க
ஓர் அடைக்கலம் தேடினேன்.

இறைவன் மீண்டும் இரங்கினான்!

பிரேம சந்திரிகையாய் நீ பூத்தாய்!

நீ எனக்கு ஆடையானாய்!
நான் உனக்கு ஆடையானேன்!

ஆண்டவன் எங்களை இணைத்துவிட்டான்.
என்வாழ்வை வசந்தமாக்கிய வசீகரியே!
என் மனக்கூண்டில் காதலிசை பாடும்
சொர்க்கப் பட்சியே!
நேசம் நிறைந்த நெஞ்சுடன்
இந்நூலை உனக்குச் சமர்ப்பிக்கிறேன்!

—ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சுப்பிரமணிய பாரதியார் | 9 |
| 2. | பாரதிதாசன் | 23 |
| 3. | தேசிக விநாயகம் பிள்ளை | 36 |
| 4. | ச. து. சு. யோகி | 46 |
| 5. | கம்பதாசன் | 66 |
| 6. | ந. பிச்சமூர்த்தி | 91 |
| 7. | கலைவாணன் | 101 |
| 8. | வாணிதாசன் | 116 |
| 9. | பண்டித க. சச்சிதானந்தன் | 127 |
| 10. | மஹாகவி | 142 |
| 11. | முடியரசன் | 156 |
| 12. | சுரதா | 167 |
| 13. | துறைவன் | 176 |
| 14. | தமிழ் ஒளி | 184 |
| 15. | தொ. மு. சி. ரகுநாதன் | 194 |
| 16. | கண்ணதாசன் | 201 |
| 17. | முருகையன் | 215 |
| 18. | சாலை இளந்திரையன் | 226 |
| 19. | ராஜபாரதி | 237 |
| 20. | நீலாவணன் | 246 |
| 21. | பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் | 253 |
| 22. | காசி ஆனந்தன் | 267 |
| 23. | பிரேமிள் சிவராம் (அஜீத்ராம் பிரேமிள்) | 271 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 24. | அப்துல் ரகுமான் | 274 |
| 25. | நா. காமராசன் | 279 |
| 26. | எம். ஏ. நுஃமான் | 283 |
| 27. | சண்முகம் சிவலிங்கம் | 286 |
| 28. | இன்குலாப் | 291 |
| 29. | சிற்பி | 295 |
| 30. | புதுவை இரத்தினதுரை | 299 |
| 31. | ஈரோடு தமிழன்பன் | 302 |
| 32. | மு. மேத்தா | 306 |
| 33. | வ. ஐ. ச. ஜெயபாலன் | 310 |
| 34. | வைரமுத்து | 314 |
| 35. | சேரன் | 318 |


## குறிப்பிடத்தக்க பிறகவிஞர்கள்


| | | |
|---|---|---|
| 1. | சுத்தானந்த பாரதியார் | 320 |
| 2. | நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை | 321 |
| 3. | ப. ஜீவானந்தம் | 322 |
| 4. | புதுமைப்பித்தன் | 322 |
| 5. | சுரபி | 323 |
| 6. | மு. கருணாநிதி | 324 |
| 7. | பெ. தூரன் | 325 |
| 8. | எஸ். டி. சுந்தரம் | 326 |
| 9. | மு. அண்ணாமலை | 326 |
| 10. | நாரா நாச்சியப்பன் | 327 |
| 11. | கா மு ஷெரீப் | 328 |
| 12. | சில்லையூர் செல்வராசன் | 328 |
| 13. | கே. சி. எஸ். அருணாசலம் | 329 |
| 14. | குலோத்துங்கன் | 330 |
| 15. | சாமி பழனியப்பன் | 330 |
| 16. | எஸ். வைத்தீஸ்வரன் | 331 |
| 17. | ஞானக்கூத்தன் | 332 |
| 18. | திருலோக சீத்தாராம் | 334 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 19. | புதுவை சிவம் | 334 |
| 20. | மீ. ப. சோமசுந்தரம் | 334 |
| 21. | தங்கப்பா | 334 |
| 22. | மீரா | 335 |
| 23. | பசுவய்யா | 336 |
| 24. | த. கோவேந்தன் | 336 |
| 25. | பொன்னடியான் | 336 |
| 26. | திருச்சி தியாகராஜன் | 338 |
| 27. | சௌந்தரா கைலாசம் | 338 |
| 28. | வா. மு. சேதுராமன் | 339 |
| 29. | மின்னூர் சீனிவாசன் | 340 |
| 30. | அமுதபாரதி | 340 |
| 31. | குருவிக்கரம்பை சண்முகம் | 340 |
| 32. | இளவேனில் | 341 |
| 33. | கலாப்பிரியா | 341 |
| 34. | பொன்மணி வைரமுத்து | 342 |
| 35. | தாரா பாரதி | 343 |
| 36. | இளந்தேவன் | 343 |
| 37. | மலேசிய-சிங்கப்பூர் கவிஞர்கள் | 344 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

# சுப்பிரமணிய பாரதியார்

## 1882—1921

இருபதாம் நூற்றாண்டில் அரும்பிய மறுமலர்ச்சிக் கவிதையின் ஊற்றுக் கண்ணாக அமைந்தவன் பாரதி.

தண்டமிழ்க் கவிதா தேவிக்குப் புத்தம் புது இரத்தத்தைப் பாய்ச்சினான் அவன்.

தமிழ்க் கவிதையானது மன்னர்களைத் திருப்தி படுத்துவதற்கும், வித்துவத்தை விளம்புவதற்கும் பயன்பட்டது.

சாதாரணமக்களை ஒரு பொருட்டாகவே கருதாது உயர்மட்டக்குழுக்களுக்கு உல்லாசமளிக்கும் கருவியாகவே பன்னெடுங்காலம் இருந்து வந்தது.

இப்படியிருந்த நெடுங்கால மரபை தவிடுபொடியாக்கினான் பாரதி.

மக்கள் மேம்பாட்டை அடிநாதமாகக்கொண்ட அற்புதக் கவிதைகளை அள்ளி அள்ளி வழங்கினான் அவன்!

பாரதியின் இதயநாதம் யாதென்பதை,

''எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்...''

(பாஞ்சாலி சபதம்—முகவுரை)

என்ற வரிகள் மூலம் மிகத் தெளிவாக கூறுகிறான்!

பாரதி பாக்கள் படிக்கப் படிக்க இன்பம் பயப்பன.

அவன் கவிதைகளில் தமிழின மேம்பாட்டுச் சிந்தனைகள் காலைச் சூரியனாய்க் கவினொளி வீசுகின்றன.

தேசீய நோக்கும், ஆன்மிக ஈடுபாடும் புதுமலர்களாய் மோகன சுகந்தத்தை வாரி வாரி வழங்குகின்றன!

பாரதியின் கற்பனைத் திறமோ மிடுக்கோடு மேலோங்கி அவனை மகாகவியாய் இனங்காட்டுகிறது!

பாரதியின் தமிழ்ப்பற்று உண்மையானது; உன்னதமானது.

மாறாத் தமிழ்க் காதலில் திளைத்த அவன்,

**''செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்**
**தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே...''**

என்று ஆனந்தப் பாட்டிசைக்கிறான்.

தமிழ்நாடு அற்புத அறிஞர்கள் பிறந்த கலைக்கூடமென்பதனை

**''கல்வியிற் சிறந்த தமிழ்நாடு—புகழ்க்**
**கம்பன் பிறந்த தமிழ்நாடு''**

என்ற வரிகளாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு"

என்ற வரிகளாலும் ஆணித்தரமாக இனங்காட்டுகிறான் அவன்.

தமிழர் வீரத்தை வியந்த அவன்,

"விண்ணை இடிக்கும் தலை இமயம்—எனும்
வெற்பை அடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத் தார்தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு"

என்று பாடுகிறான்.

பண்டுதொட்டு வீரத்திலும், அறிவிலும் மேலோங்கிய தமிழர்களின் இக்கால நிலை பாரதியை வேதனையுறச் செய்கிறது!

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்குங் காணோம்"

என தமிழின் தகைமை பாடும் அவன்,

"பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகைசெய்தல் வேண்டும்"

எனத்தன் ஆத்மதாகத்தை மொழிகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழச்சாதி பல்வேறு தேசங்களில் அடிமைநிலை பூண்டுக் கிடப்பதைக் காண்கிறான் கவி.

அவன் நெஞ்சம் நெருப்பாகிறது!

**"விதியே, விதியே தமிழச் சாதியை**
**என்செய நினைத்தாய் எனக்குரை யாயோ?"**

என வினவுகிறான்.

**"ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்**
**தென்முனை அடுத்த தீவுகள் பலவினும்**
**பூமிப்பந்தின் கீழ்ப்புறத் துள்ள**
**பற்பல தீவினும் பரவியிவ் எளிய**
**தமிழச் சாதி தடியுதை உண்டும்**
**காலுதை உண்டும் கயிற்றடி உண்டும்**
**வருந்திடும் செய்தியும் மாய்ந்திடும் செய்தியும்**
**பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது**
**செத்திடும் செய்தியும், பசியாற் சாதலும்**
**பிணிகளால் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்**
**நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்..."**

எனப்பாடிச் செல்லும் பொழுது பைந்தமிழர் வையத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அவர் மாட்டு பாரதி கொண்டிருந்த உயிர்ப்பாசம் உன்னதமாக எமக்குப் புலனாகிறது!

## தேசீயப் பற்று

மகாகவி பாரதி பாரத அன்னையைக் கண்ணெனப் போற்றினான்.

இதயத்தில் வைத்து தெய்வமெனக் கொண்டாடினான்.

—இதனை

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே..."

என்றும்,

..."எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே—அவர்
கன்னியராகி நிலவினில் ஆடிக்
களித்ததும் இந்நாடே..."

என்றும் பாரதி தனது கம்பீரக் கவி வழியாய் மொழிகிறான்!

பிறிதொரு கவிதையில்,

"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்."

என அற்புதமாய்ப் பாடுகிறான்.

பாரதி வீராவேசக்கவி; அன்னை பாரதம் ஆங்கிலேயர் வசம் அடிமை நிலைபூண்டுக் கிடந்தமை கண்டான்; வெகுண்டெழுந்தான்.

"வீர சுதந்திரம் வேண்டி நின்றார்பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரமு துண்ணுதற்கு ஆசைகொண் டார்
கள்ளில்

அறிவைச் செலுத்துவாரோ?''

என்று உன்னதமாய் பாட்டிசைத்து மேலான சுதந்திர வாஞ்சை மிக்கவர்கள் ஒருபோதும் அற்ப சுகங்களுக்காக அதனைத் தாரைவார்க்க மாட்டார்கள் என்கிறான்.

பாரத புத்திரர்கள் தமது தாயகத்தை உயிரென ஓம்பு வோர்கள்! இறைவன் ஒருவனைத் தவிர வேறெவர்க்கும் அடிமையாய் இருக்க விழைவு கொள்ளமாட்டார்கள் என்பதனை

"நாமிருக்கும் நாடு நமது என்பது அறிந்தோம்
—இது

நமக்கே உரிமையாம் என்பது அறிந்தோம்
—இந்தப்

பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம்
—பரி

பூரணனுக்குச் சேயடிமை செய்து வாழ்வோம்'

என்ற கவிதை வரிகள் மூலம் அடையாளங்காட்டுகிறான் கவி.

## பாரதியின் கற்பனைத் திறன்

ஆழமான கருத்துகளை சுந்தரச் சொற்சிற்பமாக வடிக்கும் கவிதைக் கலையிற் கைதேர்ந்தவன் பாரதி.

அவன் யாத்த தனிக்கவிதைகளிலும், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற படைப்புகளிலும் இப்பண்பு உயர்ந்து மின்னுகிறது.

சுருக்கமாக சிலவற்றை இனிக்காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் காதலில் திளைத்து பைந்தமிழ்க் கவிபாரதி,

“மலரின் மேவு திருவே—உன்மேல்
மையல் பொங்கி நின்றேன்
நிலவு செய்யும் முகமும்—காண்பார்
நினைவு அழிக்கும் விழியும்...”

என கம்பீரமாகக் கவிஇசைத்து,

மேலும்

.........

“அமரர் போல வாழ்வேன்— என்மேல்
அன்பு கொள்வை ஆயின்,
இமய வெற்பில் மோத— நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன்”

என உணர்ச்சி ததும்ப உயிர்க்கவிதை பெய்கிறான்!

கலைமகள் அன்பிலாழ்ந்து பாரதி,

“எங்ஙனம் சென்றிருந்தீர்—எனது
இன்னுயிரே! என்றன் இசையமுதே!
திங்களைக் கண்டவுடன்—கடல்
திரையினைக் காற்றினைக் கேட்டவுடன்
கங்குலைப் பார்த்தவுடன் — இங்கு
காலையில் இரவியைத் தொழுதவுடன்
பொங்குவீர் அமிழ்தெனவே — அந்தப்
புதுமையிலே துயர் மறந்திருப்பேன்”

என நயமாகக் கவி சொல்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி தன் ஜெய பேரிகை கவிதையை

...

"இரவியின் ஒளியிடைக்குளித்தோம் — ஒளி
இன்னமு தினை உண்டு களித்தோம்
கரவினில் வந்துயிர்க் குலத்தினை அழிக்கும்
காலன் நடுநடுங்க விழித்தோம்"

எனக் கவிநயம் மிளிரத் தீட்டியுள்ளான்.

இதே கவிதையில்—

"காக்கை, குருவி எங்கள் ஜாதி — நீள்
கடலும் அலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி
வேறில்லை
நோக்க, நோக்கக் களியாட்டம்"

என்ற வரிகளும் அதியற்புதக் கவிஎழிலுடன் அமைந்துள்ளது.

பாரதியின் ''மனத்தை வாழ்த்துதல் கவிதை''

"நிலாவையும் வானத்து மீனையும்
காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோலவெறி படைத்தோம்"

எனக் கம்பீரமாய் போதல் காணலாம்!

பாரதியின் கவிகட்டுந் திறனுக்கு அவன் படைத்த 'அழகுத் தெய்வம்' அற்புதச் சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மங்கியதோர் நிலவினிலே கனவிலிது
கண்டேன்
வயதுபதி னாறிருக்கும்; இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்றஒளிமுகமும்
புன்னகையின் புதுநிலவும் போற்றிவரும்
தோற்றம்..."

என கவிதை உன்னதமாகச் செல்கிறது.

ஓவியர் ரவிவர்மா இரங்கற் பாவிலும்

"மலரினில் நீல வானில்
மாதரார் முகத்தில் எல்லாம்
இலகிய அழகை ஈசன்
இயற்றினான்..."

என எத்துணை அற்புதமாக தமிழ் செய்கிறான் பாரதி?

## பாரதி வாழ்க்கைக் குறிப்புகள் :

1. 1882 டிசம்பர் 11 ஆம் தேதி சின்னச்சாமி அய்யர் லட்சுமி அம்மாள் தம்பதி செய் தவப்பய னாய் பாரதி பிறக்கிறான்.

2. 1893 இல் பாரதியின் கவித்திறமை கண்டு எட்டய புர புலவர்கள் 'பாரதி' எனும் பட்டஞ் சூட்டுகிறார் கள்.

3. 1906 இல் 'இந்தியா' பத்திரிகை ஆசிரியராகி ஆவேச கவிதைகள், கட்டுரைகளைத் தீட்டுகிறான்.

4. 1912 இல் பாரதி அழியா இலக்கியங்களான குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்றவை உருப்பெறுகின்றன.

5. 1921 இல் திருவல்லிக்கேணியில் யானையால் தூக்கி எறியப்பட்டு காயமுறுகிறான் கவி. பின்பு

சிறிது காலத்தில் வயிற்றுப் போக்கினால் அவதியுண்டு மரணக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. நாட்டு வணக்கம்

காம்போதி ராகம் - ஆதி தாளம்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே - இதை
வந்தனை கூறி மனதி விருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ? - இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனா? 1

இன்னுயிர் தந்தெமை ஈன்றுவளர்த்தருள்
ஈந்ததும் இந்நாடே - எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே - அவர்
கன்னியராகி நிலவினில் ஆடிக்
களித்ததும் இந்நாடே - தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளையாடி இல்
போந்ததும் இந்நாடே - இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கைய ராய் அவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே - அவர்
தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே - மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே - பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே - இதை
(பல்லவி) வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? 3

## 2. தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்குங் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும். 1

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்! 2

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கம் செய்தல் வேண்டும். 3

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போற்
கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார். 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. அழகுத்தெய்வம்

மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்
வயதுபதி னாறிருக்கும்; இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்ற ஒளி முகமும்
புன்னகையின் புதுநிலவும் போற்றிவரும் தோற்றம்
துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே எழுந்தென்னைப் பாரென்று
சொன்னாள்
அங்கதனில் கண்விழித்தேன், அடடாவோ, அடடா
அழகென்னும் தெய்வந்தான் அதுவென்றே
அறிந்தேன். 1

யோகந்தான்சிறந்ததோ தவம்பெரிதோ என்றேன்
யோகமே தவம்தவமே யோகமென உரைத்தாள்
ஏகமோ பொருளன்றி இரண்டாமோ என்றேன்
இரண்டுமாம் ஒன்றுமாம் யாவுமாம் என்றாள்
தாகம் அறிந்து ஈயுமருள் வான்மழைக்கிங்
குண்டோ?
தாகத்தின் துயர்மழைதான் அறிந்திடுமோ
என்றேன்
வேகமுற விருப்பத்தை வெளிப்படுத்தா மழைதான்
விருப்புடன் பெய்வதோ வேறாமோ என்றாள் 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் விதிமதியைக் கடந்திடுமோ என்றேன்
காலமே மதியினுக்கோர் கருவியாம் என்றாள்
ஞாலத்தில் விரும்பியது நண்ணுமோ என்றேன்
நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலாம் என்றாள்
ஏலத்தில் விடுவதோ எண்ணத்தை என்றேன்
எண்ணினால் எண்ணியது நண்ணும்காண்
என்றாள்
மூலத்தைச் சொல்லவோ வேண்டாவோ
என்றேன்
முகத்திலருள் காட்டினாள் மோகவிடாய்
தீர்ந்தேன் 3

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

# பாரதிதாசன்

## 1891—1964

"சுப்பிரமணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை, புதுநடை காட்டினார்"

எனத் தன் குருநாதர் பாரதி பற்றிக் குறிப்பிடும் பாரதி தாசன், பாரதி வழியில் பல எழுச்சிக் கவிதைகள் எழுதியவர்.

பாரதிதாசன் முதல் கவிதைத் தொகுதி, எதிர்பாராத முத்தம், அழகின் சிரிப்பு, காதல் நினைவுகள் போன்ற நூல்களில் அமைந்துள்ள கவிதைகள், தமிழ் உள்ளவரை உலா வரக்கூடிய உன்னத கவிதைகளாகும்.

தனது வழியில் பாடும் ஓர் பரம்பரையைத் தமிழ்ப்பாவுலகிற் பரவச் செய்த தனிப்பெருமை. பாரதிதாசனுக்குண்டு.

பாரதியின் கவிதா நோக்கு தமிழ், தமிழர்கள், இந்தியர் என்று விரிந்து செல்கிறது.

பாரதி ஆன்மிகத்தை ராஜ பாட்டை ஆக்கித் தன் கவிதா ரதத்தைச் செலுத்தியவன்!

பாரதிதாசனோ தமிழின மேம்பாடும், தமிழின் மாட்சி காப்பதுமே வாழ்வின் அடி நாதமெனக் கருத்துக் கொண்டவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான் தமிழையும், தமிழரையும் பாடும்போது தனித்துவ எழுச்சியுடனும், வேகத்துடனும் அவனால் பாட முடிந்தது.

பாரதிதாசனின் காதல் கவிதைகளும் மிகுந்த சோபையுடன் மின்னுகின்றன.

**பாரதிதாசன் நோக்கில் தமிழ்**

**"தமிழுக்கும் அமுதென்றுபேர்! — அந்தத்**
**தமிழ்இன்பத் தமிழ்எங்கள் உயிருக்குநேர்!"**

என அழகாக வருணிக்கும் கவிஞன்,

**"தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்**
**தமிழ்எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!"**

எனத் தன்னிலை மறந்த இன்ப வெறியில் பாடுகிறான்!

தண்டமிழின் கவிநூல்கள் ஆயிரமாயிரம் மொழிகளில் பெயர்க்கப்பட வேண்டும்; உலகம் தமிழை அவ்வாறு கொண்டாட வேண்டுமென்ற வேணவா பாவேந்தன் நெஞ்சில் படர்கிறது! இதனை,

**"தாயெழிற் றமிழை, என்றன்**
**தமிழரின் கவிதை தன்னை**
**ஆயிரம் மொழியிற் காண**
**இப்புவி அவாவிற் றென்ற**
**தோயுறும் மதுவின் ஆறு**
**தொடர்ந்தென்றன் செவியில் வந்து**
**பாயுநாள் எந்த நாளோ,**
**ஆரிதைப் பகர்வார் இங்கே?"**

என அருமைக் கவியாக்குகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின் இனிமை இணையே அற்றது! இந்த இன்பத்தில் தனது வாணாளைக் கழித்த கவிஞன்,

**"கனியிடை ஏறியசுவையும், — முற்றல்**
**கழையிடை ஏறிய தேனும் — காய்ச்சுப்**
**பாகிடை ஏறிய சுவையும்,**
**நனிபசு பொழியும் பாலும் — தென்னை**
**நல்கிய குளிரிள நீரும்,**
**இனியன என்பேன் எனினும் — தமிழை**
**என்னுயிர் என்பேன் கண்டீர்!"**

என ஆனந்தப் பாட்டிசைக்கிறான்.

பாரதிதாசன் தமிழின் பேரழகில் மட்டும் மயங்கிக்கிடந்த பாவலன் அல்லன்!

வீழ்ச்சியுற்ற தமிழன் எழுச்சிபெற வேண்டும்.

வண்டமிழ்க் குலத்தார் வையம் தலைமைகொள்ளும் நிலைகாண வேண்டுமென்ற எழுச்சிப் பாட்டிசைத்த ஆவேசக் கவிஞன்.

**"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழென்று சங்கே முழங்கு!"**

என வீரஞ்சுடரப் பாடுபவன்,

**"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்,**
**இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!"**

எனத் தன் ஆத்ம விழைவை அறைகிறான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
468874

மேலும் தமிழன் வீரத்தை மேதினிக்கு விளக்கும் நிமித்தமாய்,

**"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்**
**விண்ணோடும் உடுக்களோடும்**

**மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்**
**பிறந்தோம் நாங்கள் ஆண்மைச்**

**சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு**
**ஞாபகம்செய் முழங்கு சங்கே"**

என ஆர்த்தெழுந்து பாடுகிறான்!

மிகுந்த தீர்க்க தரிசனத்துடன்,

**"சிங்களஞ்சேர் தென்னாட்டுமக்கள்**
**தீராதி தீரரென் றூது சங்கே!**
**பொங்கும் தமிழர்க்கின்னல் விளைத்தால்**
**சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!"**

என பாரதிதாசன் பாடியுள்ளமை எத்துணை உண்மை?

## பாரதிதாசன் காதல் கவிதைகள்

பாரதிதாசன் கற்பனை வளம் அபாரமானது.

தமிழ்ச் சொற்களை அற்புதமாகத் தேர்ந்தெடுத்து அழகுக் கவிமாலைகளாக அவன் ஆக்கியுள்ளான்!

'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' காவியத்தில்

**"குயில்கூவிக் கொண்டிருக்கும்; கோலம்**
**மிகுந்த**

**மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி
போன்றநீர்

ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள் மிக்க
உண்டு;

பூக்கள் மணங்கமழும்; பூக்கள் தொறும்
சென்றுதே

னீக்கள் இருந்தபடி இன்னிசைபா
டிக்களிக்கும்''

என்ற வருணனை மனத்தை வருடி மதுர சுகத்தைத் தரவல்லது!

'புரட்சிக்கவி' காவியத்திலும் பாவேந்தன் தன் கவிதா சௌந்தர்யத்தை அள்ளி அள்ளி வழங்குதல் காணலாம்!

''நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமு கத்தைக்
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ, அமுத
ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ

என கவிஞன் கவிமாரி பெய்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இக்காவியத்தில்

............

"சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ"

என்றும்,

"உனைக்காணும் போதினிலே என்னுளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுதற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவதில்லை"

—என்று

காலங்காலமாய் வாழவல்ல கவிதா சிற்பம் செதுக்குகிறான் புதுவையின் புரட்சிக்கவி!

இதே காவியத்தில்,

"பழகும் இருட்டினில் நானிருந்தேன் எதிர்
பால் நிலவாயிரம்போல்—அவள்
அழகு வெளிச்சம் அடித்த தென்மேல்
அடியேன் செய்த தொன்றுமில்லை"

என்ற வரிகள் காதலின் அமரானந்த அநுபவத்தை தெளிவாக உணர்த்தி நிற்கிறது!

'காதல்' என்ற தலைப்பில்

"தாமரை பூத்த குளத்தினிலே - முகத்
தாமரை தோன்ற முழுகிடுவாள்;—அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமள வல்லியைக் கண்டுவிட்டான்—குப்பன்
கொள்ளை கொடுத்தனன் உள்ளத்தினை...''

என பாவேந்தன் வடிக்கும் திறன் மகிழத்தக்க வண்ண முள்ளது.

பாரதிதாசன் அருமையான பாவலன்.

அவன் பாடல்களில் தமிழ் உணர்ச்சி பொங்கிப் பிரவகிக்கும்.

காதல் இன்பம் அமுதமழையாய்ப் பொழியும்.

தொழிலாளர் நேயம் நிறைந்து வழியும்.

சீர்திருத்தச் சிந்தனைகள் சிறகடித்துப் பறக்கும்.

**வாழ்க்கைக் குறிப்புகள் :**

1891 ஏப்பிரல் 29 இல் புதுவையிற் பிறந்தார். தந்தை கனகசபை. தாயார் இலக்குமி.

1908-இல் முதுபெரும் புலவர் பு.அ. பெரியசாமியிடமும், பின்னர் புலவர் பங்காருபத்தரிடமும், தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சித்தாந்த வேதாந்தப்பாடங்களையும் கற்றார். புதுவை மாநிலத்திலேயே புலவர் தேர்வில் முதல் மாணவராக வெற்றி பெறுகிறார். வேணுநாயகர் வீட்டுத் திருமணத்தில் மகாகவி பாரதியைச் சந்திக்கிறார்.

1964 சென்னையில் பொது மருத்துவமனையில் இறவாப் பாட்டெழுதிய பாவேந்தன் இன்னுயிர் பிரிகிறது.

## வீரத்தமிழன்

**தென்றிசையைப் பார்க்கின்றேன்; என்சொல்வேன்**
**என்றன்**
**சிந்தையெல்லாம் தோள்களெல்லாம்**
**பூரிக்கு தடடா!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றந்த லங்கையினை ஆண்டமறத் தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை
வைத்தோன்
குன்றெடுக்கும் பெருந்தோளான் கொடை
கொடுக்கும் கையான்!
குள்ளநரிச் செயல்செய்யும் கூட்டத்தின்
கூற்றம்!

என் தமிழர் மூதாதை! என் தமிழர் பெருமான்
இராவணன்காண்! அவன் நாமம் இவ்வுலகம்
அறியும்!
வஞ்சக விபீஷணனின் அண்ணனென்று தன்னை
வையத்தார் சொல்லுமொரு மாபழிக்கே
அஞ்சும்

நெஞ்சகனை, நல்யாழின் நரம்புதனைத் தடவி
நிறையயிசைச் செவியமுது தரும்புலவன்
தன்னை,
வெஞ்சமரில் சாதல்வர நேர்ந்திடினும் சூழ்ச்சி
விரும்பாத பெருந்தகையைத் தமிழ்மறைகள்
நான்கும்
சஞ்சரிக்கும் நாவானை வாழ்த்துகின்ற தமிழர்
தமிழரென்பேன், மறந்தவரைச் சழக்கரெனச்
சொல்வேன்!

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்!
விசைஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்!
சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்
தொகையாக எதிர்நிறுத்தித் தூள்தூ ளாக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காழ்ச்சிந்தை, மறச்செயல்கள் மிகவும் வேண்டும்!
கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்,
கீழ்ச்செயல்கள் விடவேண்டும் ராவ ணன்தன்
கீர்த்திசொல்லி அவன்நாமம் வாழ்த்த
வேண்டும்!

## எந்நாளோ?

என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்,
பராக்கிர மத்தால், அன்பால்,
உன்னத இமம லைபோல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட் டிடல்எந் நாளோ?

கைத்திறச் சித்தி ரங்கள்,
கணிதங்கள் வான நூற்கள்
மெய்த்திற நூற்கள், சிற்பம்,
விஞ்ஞானம், காவி யங்கள்
வைத்துள தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தக சாலை எங்கும்
புதுக்குநாள் எந்த நாளோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென் றன் செவியில் வந்து
பாயுநாள் எந்த நாளோ,
ஆரிதைப் பகர்வார் இங்கே?

பார்த்தொழில் அனைத்தும் கொண்ட
பயன்தரும் ஆலைக் கூட்டம்
ஆர்த்திடக் கேட்ப தென்றோ?
அணிபெறத் தமிழர் கூட்டம்
போர்த்தொழில் பயில்வ தெண்ணிப்
புவியெலாம் நடுங்கிற் றென்ற
வார்த்தையைக் கேட்டு நெஞ்சு
மகிழ்ந்து கூத்தாடல் என்றோ?

வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவ ரேமற்
றுடலினால் பலராய்க் காண்பார்
கள்ளத்தால் நெருங்கொ ணாதே;
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தறுக்கினாற் பிறதே சத்தார்
தமிழின்பால் என்நாட் டான்பால்
வெறுப்புறும் குற்றஞ் செய்தா
ராதலால் விரைந்தன் னாரை
நொறுக்கினார் முதுகெ லும்பைத்
தமிழர்கள் என்ற சேதி
குறித்தசொல் கேட்டின் பத்திற்
குதிக்கும்நாள் எந்த நாளோ?

நாட்டும்சீர்த் தமிழன் இந்த
நானில மாயம் கண்டு
காட்டிய வழியிற் சென்று
கதிபெற வேண்டும் என்றே
ஆட்டும்சுட் டுவிரல் கண்டே
ஆடிற்று வையம் என்று
கேட்டுநான் இன்ப ஊற்றுக்
கேணியிற் குளிப்ப தெந்நாள்?

விண்ணிடை இரதம் ஊர்ந்து
மேதினி கலக்கு தற்கும்
பண்ணிடைத் தமிழைச் சேர்த்துப்
பாரினை மயக்கு தற்கும்
மண்ணிடை வாளை யேந்திப்
பகைப்புலம் மாய்ப்பதற்கும்
எண்ணிலாத் தமிழர் உள்ளார்
எனும்நிலை காண்ப தென்றோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற் பாயப்
பருகுநாள் எந்த நாளோ?

# அழகு

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்,
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப்
பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்! ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில்அந்த 'அழகெ'ன்பாள் கவிதை தந்தாள்.

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்;
திருவிளக்கில் சிரிக்கின்றாள்; நாரெ டுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்; அடடே
செந்தோள்

புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தினாள்; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்.

திசைகண்டேன், வான்கண்டேன், உட்புறத்துச்
செறிந்தனவாம் பலப்பலவும் கண்டேன்.
அசைவனவும் நின்றனவும் கண்டேன். மற்றும்
அழகுதனைக் கண்டேன் நல் லின்பங்
கண்டேன்
பசையுள்ள பொருளிலெலாம் பசையவள் காண்!
பழமையினால் சாகாத இளையவள் காண்!
நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்
நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை.

□ □ □

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிக விநாயகம் பிள்ளை

## 1876 — 1954

"உள்ளத் துள்ளது கவிதை—இன்பம்
உருவெ டுப்பது கவிதை;
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை"

எனக் கவிதை பற்றிய தனது சிந்தனையைக் கூறும் கவிமணி யின் கவிதைகள் மென்மையானவை.

கவி வானில் இக்கவிஞனோர் அமைதிப் புறா.

நீண்டகாலம் பெண்டிர்க்குப் போதனாசிரியனாக இருந்தமையும் இக்கவிஞனின் பாடல்கள் சாந்தமயமான தற்கு ஓர் காரணமெனலாம்,

'கோவில் வழிபாடு' எனுங்கவிதையில்,

"கோவில் முழுதுங்கண்டேன்,—உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்,
தேவாதி தேவனையான்—தோழி
தேடியுங் கண்டிலனே"

எனக்கூறி, அலைபாயும் மனத்தோடு பண்ணும் போலிப் பூசைகளால் பலனேதும் இல்லை என்பதனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கண்ணுக் கினியகண்டு—மனத்தைக்**
**காட்டில் அலையவிட்டு,**
**பண்ணிடும் பூசையாலே தோழி!**
**பயனொன்றில்லை, அடி!"**

தொடர்ந்து நயமாகக் கவிமணி கூறல் காணலாம்.

'இறைவன் எங்கே?' என்ற கேள்விக்கு விடையாக,

**"உள்ளத்தில் உள்ளான், அடி!—அதுநீ**
**உணர வேண்டும், அடி!**
**உள்ளத்தில் காண்பாய் எனில்—கோவில்**
**உள்ளேயுங் காண்பாய், அடி"**

எனப்பாடுவதும் சிறப்பாக உள்ளது!

பாரதி பாட்டு கவிமணியை ஆனந்தக் கடலில் நீச்சலடிக்கச் செய்கிறது.

அந்த அற்புதமான அநுபவம்,

**"பாட்டுக் கொருபுலவன் பாரதி, அடா—அவன்**
**பாட்டைப் பண்ணோடொருவன் பாடினான் அடா!**
**கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே, அடா—அந்த**
**கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய் அடா!**

என உன்னத கவியாக உதிக்கிறது.

கவிமணி மழலைகளுக்காகப் பாடிய பாடல்களும் மிக இனியன.

'பசுவும் கன்றும்' என்ற பாடல்

**"தோட்டத்தில் மேயுது**
**வெள்ளைப் பசு—அங்கே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி
அம்மா என்குது
வெள்ளைப் பசு—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி
..............................
முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு—மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி

என யதார்த்த சித்திரமாக கவிதை வரைகிறார் கவிமணி.

'மலர்கள்' என்ற கவிதை,

"பூமகளின் புன்னகை போல்
பூத்திடு வோமே -கம்பன்
பாமணக்குங் தமிழினைப் போல்
பரிமளிப்போமே"

என எழிலோடு பின்னப்பட்டுள்ளது.

'பெண்களின் உரிமைகள்' எனுந்தலைப்பில் அருமையான கவிதைகள் வழங்கியுள்ளார் கவிமணி.

"மங்கைய ராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா!
பங்கய கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளரும், அம்மா!"

எனப் பெண்மையின் பீடிசைக்கும் கவிமணி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிந்திய கண்ணீர் துடைப்பவர் ஆர்?—பயம்
சிந்தை யகன்றிடச் செய்பவர் ஆர்?
முந்து கவலை பறந்திடவே–ஒரு
முத்தம் அளிக்க வருபவர் ஆர்?

என எழுதுவது சாகாத சத்திய வரிகள் அல்லவா?

மேலும்,

பெண்டிர்தம் முக்கியத்துவத்தை

"ஆவி பிரியும் அவ் வேளையிலே-பக்கத்து
அன்போ டகலா திருப்பவர் ஆர்?
பாவி யமனும் வருத்திடாமல்—ஈசன்
பாதம் நினைந்திடச் செய்பவர் ஆர்?"

என தமிழ் நெஞ்சங்களை நெகிழச் செய்யும் வண்ணம் எழுதியுள்ளார் கவிமணி.

இவர் தொழிலாள நேயம் மிக்கவர் என்பதனை

"பாடு படுபவர்க்கே—இந்தப்
பாரிடம் சொந்தமையா!
காடு திருத்தி நல்ல—நாடு
காண்ப தவரலவோ?"

என்ற பாடல் செம்மையுறக் கூறுகிறது.

மனிதர்களை மனிதர்கள் கொன்றழிக்கும் யுத்தப்பேயை இறையன்பிலாழ்ந்து சாந்தி வழி செல்லும் கவிமணியால் சகித்துக்கொள்ள இயலவில்லை.

இரண்டாம் உலகயுத்த போதில் கவிமணி தீட்டிய பாடல் எக்காலமும் எவ்விடத்திலும் பயனாகக் கூடிய பாங்கான பாடலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மேலை நாட்டில் எங்கோ—மூண்ட**
**வெந்தழல் இன்றெழுந்து**
**ஞாலம் முழுவதுமே—பற்றி**
**நாவிட் டெரியுதையோ!**

எனக் கவி கசிந்துருகுகிறார்!

**"போரில் எழுந்த பஞ்சம்—பாரத**
**பூமியைத் தாக்குதையோ!**
**நேருங் கொடுமையெல்லாம்—நினைக்க**
**நெஞ்சு துடிக்குதையோ?"**

என்று பாடும்போது கவிமணியின் தேசீய நேயம் நமக்குத் தெளிவாகிறது!

'விண்ணப்பம்' எனுந்தலைப்பிலமைந்த கவிதை இவர் தம் மனோரதத்தை சிறப்பாகச் செப்புகிறது!

**"பாலைவனம் சோலைவன மாக வேண்டும்;**
**பசுங்கிளிகள் அங்கிருந்து பாடவேண்டும்;**
**சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்;**
**சபைகளிலே தமிழெழுந்து முழங்க**
**வேண்டும்"**

என ஆற்றொழுக்கு நடையில் பாடுகிறார் கவி.

யான் ஆரம்பத்தில் கூறியதுபோல சாந்தபாவமே இவர் தம் கவிதைகளின் அடிநாதமாக அமைந்துள்ளது.

இவர் மொழிபெயர்த்த உமர்கய்யாம் பாடல்கள், ஆசிய ஜோதி போன்ற நூல்களிலும் இத்தகு போக்கே நிரம்பி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிமணியின் வாழ்க்கைக் குறிப்புகள்

1876 ஆம் ஆண்டு தேரூரில் சிவதாணுபிள்ளை ஆதி லட்சுமி தம்பதிக்கு மைந்தனாய் மலர்ந்தார்.

1895 இல் 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' என்ற தன் முதல் நூலை வெளியிட்டார்.

1938 இல் 'மலரும் மாலையும்' என்ற தமது சீரிய கவிதை நூலை வெளியிட்டார்.

1940 இல் 'கவிமணி' எனும் பட்டம் பெற்றார்.

1954 இல் இகவாழ்வைத் துறந்து ஈசனடி சேர்ந்தார்.

# பெண்களின் உரிமைகள்

மங்கைய ராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா!
பங்கயக் கை நலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளரும், அம்மா! 1

அல்லும் பகலும் உழைப்பவர் ஆர்?—உள்ளத்து
அன்பு ததும்பி யெழுபவர் ஆர்?
கல்லும் கனியக் கசிந்துருகித்—தெய்வ
கற்பனை வேண்டித் தொழுபவர் ஆர்? 2

ஊக்கம் உடைந்தழும் ஏழைகளைக்—காணில்
உள்ளம் உருகித் துடிப்பவர் ஆர்?
காக்கவே நோயாளி யண்டையிலே — இரு
கண்ணிமை கொட்டா திருப்பவர் ஆர்? 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திய கண்ணீர் துடைப்பவர் ஆர்?—பயம்
சிந்தை யகன்றிடச் செய்பவர் ஆர்?
முந்து கவலை பறந்திடவே—ஒரு
முத்தம் அளிக்க வருபவர் ஆர்? 4

உள்ளந் தளர்வுறும் நேரத்திலே—உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவர் ஆர்?
அள்ளியெடுத்து மடியிருத்தி மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவர் ஆர்? 5

நீதி நெறியில்லா வம்பருமே—நல்ல
நேர்வழி வந்திடச் செய்பவர் ஆர்?
ஓதிய மானம் இழந்தவரை—உயர்
உத்தமர் ஆக்க முயல்பவர் ஆர்! 6

ஆவி பிரியும் அவ் வேளையிலே—பக்கத்து
அன்போ டகலா திருப்பவர் ஆர்?
பாவி யமனும் வருத்திடாமல்—ஈசன்
பாதம் நினைந்திடச் செய்பவர் ஆர்? 7

ஏங்கிப் புருஷனைத் தேடியழும்—அந்த
ஏழைக் கிதஞ்சொல்லி வாழ்பவர் ஆர்?
தாங்கிய தந்தை யிழந்தவரைத் தினம்
சந்தோஷ மூட்டி வளர்ப்பவர் ஆர்? 8

சின்னஞ் சிறிய வயதினிலே—ஈசன்
சேவடிக் கன்பெழச் செய்பவர் ஆர்?
உன்னும் இளமைப் பருவமெலாம்—களிப்பு
உள்ளம் பெருகிடச் செய்பவர் ஆர்? 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணக வாழ்வினை விட்டெழுந்து—மனம்
மாசிலா மாணிக்க மாயொளிர்ந்து
விண்ணக வாழ்வை விரும்பிடவே—நிதம்
வேண்டிய போதனை செய்பவர் ஆர்? 10

அன்பினுக் காகவே வாழ்பவர் ஆர்?—அன்பின்
ஆவியும் போக்கத் துணிபவர் ஆர்?
இன்ப உரைகள் தருபவர் ஆர்—வீட்டை
இன்னகை யாலொளி செய்பவர் ஆர்? 11

இப்பெரு நற்கரு மங்களெல்லாம்—உமக்கு
ஈசன் அளித்த உரிமைகளாம்;
மெய்ப்பணி வேறும் உலகில் உண்டோ?
இன்னும்
வேண்டிப் பெறும்வரம் ஒன்றுளதோ? 12

மங்கைய ராகப் பிறந்ததனால்—மனம்
வாடித் தளர்ந்து வருந்துவதேன்?
தங்கு புவியில் வளர்ந்திடும் கற்பகத்
தாருவாய் நிற்பதும் நீர் அலவோ? 13

செம்மையிற் பெற்ற குணங்களெலாம்—நீங்கள்
செய்வினை யாழே திருத்துவீரேல்,
இம்மைக் கடன்கள் முடித்திடவே—முந்தி
எய்திச் சுகமா யிருப்பீரே, 14

## விண்ணப்பம்

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்;
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்;
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்;
சீலைஉடை கதருடையாய்த் திகழ வேண்டும்;
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்;
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்;
வெற்றியின்மேல் வெற்றி எமக் கெய்த
[வேண்டும் 1

கஞ்சாவை நஞ்சாகக் கருத வேண்டும்;
கள்ளொழுகுங் கடைவாயை மூட வேண்டும்;
அஞ்சாத வீரரெங்கும் தோன்ற வேண்டும்;
அகிம்சா தருமமவர் பேண வேண்டும்;
என்சாதி உயர்சாதி, இழிந்த சாதி
என்று சொல நாவுமெழா திருக்க வேண்டும்;
நெஞ்சாரும் நினைப்பெல்லாம் நிகழ்த்தி நின்றேன்
நின்மலனே இரங்கிநீ அருள்செய் வாயே. 2

பருவமழை பொய்யாது பெய்ய வேண்டும்;
பயிர்களெலாம் செழித்தோங்கி வளர
[வேண்டும்
தருமநெறி தவறாது தழைக்க வேண்டும்;
சாதிமதச் சண்டையெலாம் ஒழிய வேண்டும்;
திருமகளும் கலைமகளும் சிறக்க வேண்டும்
தேசாபி மானமெங்கும் திகழ வேண்டும்;
கருமமெலாம் நற்கரும மாக வேண்டும்;
காந்திமதி நின்னடிகள் வாழ்த்தி னேனே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்கள்

பூமகளின் புன்னகைபோல்
பூத்திடு வோமே! — கம்பன்
பாமணக்குந் தமிழினைப்போல்
பரிமளிப்போமே! 1

வண்ண வண்ணச் சேலைகட்டி
மகிழ்ந்திருப் போமே! — இந்த
மண்ணகமும் விண்ணகமாய்
மாறச் செய்வோமே! 2

மங்கையர்க்கும் ஆடவர்க்கும்
மணமுடிப்போமே! — மன்னர்
தங்கமுடிமீதும் நாங்கள்
தங்கி வாழ்வோமே! 3

கரும்பினிலும் இனியரசம்
கதி வைப்போமே!—அதை
விரும்பிவரும் நண்பருக்கு
விருந்தளிப் போமே! 4

ஈசனருள் வேண்டி நிதம்
இணையடி போற்றி — நல்ல
வாசமெழு தூபதீபம்
வழங்கி நிற்போமே! 5

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ச. து. சு. யோகி

## 1903—1963

அதியற்புதமான கவியாற்றல் பெற்ற சிலர் தமிழ் இலக்கிய உலகில் போதிய அறிமுகத்தைப் பெற முடிவதில்லை!

குண்டு சட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கும் இலக்கிய ஆய்வாளர்கள் பார்வையிலும் உன்னதக் கவிஞர்களின் படைப்புகள் படுவதில்லை!

அரசியலில் எவரெவர் செல்வாக்குப் பெறுகிறார்களோ அவர்களுக்கேற்றமாதிரி நிறத்தை மாற்றிக் கொள்ளத் தெரிந்த சாதாரண ரக கவிஞர்களுக்கு மிகப்பெரிய விளம்பரம் கிடைத்து விடுகிறது.

இப்படியான 'தந்திரம்' கைவராத தலைசிறந்த கவிதா புருடர்களும், அவர்தம் படைப்புகளும் வெளிச்சத்திற்கு வராமலேயே போய் விடுகிறது.

கம்பதாசன், கலைவாணன், தமிழ் ஒளி போன்ற அருமையான கவிஞர்கள் போல் போதிய விளம்பரமின்றி ஓரங்கட்டப் பட்ட ஓர் அதியற்புதக் கவிஞன் ச. து. சுப்பிரமணிய யோகி.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களில் கம்பநாடன் போல் அதிமிடுக்கோடு கவிதைகள் படைத்தவர் இவர்!

**"போதெல்லாம் பாட்டு, பொழுதெல்லாம் சங்கீதம்**
**யாதுக்கும் அஞ்சோம் அவனியெலாம் எம்**
**உடைமை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதுக்கும் வஞ்சனைக்கும் சூட்சிக்கும் மாந்தர்
செயும்
வாதுக்கும் மாமருந்து யாங்கள் செயும்
வண்கவிதை"

எனக் கம்பீரமாகக் கவிதாபிரகடனஞ் செய்கிறார் யோகி யார்.

சக்திதேவியின் அருளில் ஆழ்ந்து,

"சொல்லினாலே கவிசொல்ல வந்தேன்
சொல்லில் அமிழ்தினை மெல்ல வைத்தாள்
கொல்லும் அமிழ்தினில் கூற வந்தேன்
கோடிக் கவிதைகள் ஊற வைத்தாள்"

என யோகியார் பாடும் போது இதுவன்றோ உயிர்க்கவிதை என என் ஆத்மா கூவுகிறது!

ச.து.சு. யோகியாரின் 'தமிழ்க்குமரி' ஓர் அருமையான கவிதைத் தொகுதி. 'தமிழ்க்குமரி' என்ற தலைப்பில் யோகி தமிழ்நாட்டின் கீர்த்தியை,

"பங்கயத்துக் குமரிமுனை பாதம் சேர்த்தாள்
பசும்பொன் முடிவேங்கடத்தைப் புனைந்தங்
கார்த்தாள்
பொங்கிவரும் காவிரியை இடையில் கோத்தாள்,
புரமூன்றும் கடற்கன்னி பணியப் பார்த்தாள்
மங்கலம் சேர் மேலைமலைச் செங்கோலுற்றாள்,
மலர் மொட்டு லங்கை யெனும் மகளைப் பெற்றாள்,
எங்கள் குலத்தெய்வம், தாய்,— எமக்கு வீடு,
இளமை குன்றாக் கன்னி எங்கள் தமிழர் நாடு!"

என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக் கவிதையை,

"இளங்கோவன் சிலம்பு முரல் இன்னிசையில்
தவழ்ந்து
இணைக் குறள் முப்பாலுண்டு குறுகுநடை பயின்று
களங்கமிலாப் பக்தியினார் பன்னிருவர் நால்வர்
கற்கண்டுச் சொற்கோவைக் கவிமாலை புனைந்து,
பளிங்கனைய கவிக்கரசன் கம்பனெனும் தேவன்
பண்ணிவைத்த காவியத்தின் பசும்பொன் முடி
தரித்து
இளங் குமரி தமிழ்த் தாய்தான் என்றென்றும் பாடும்
இளந் தமிழ்நாடு ஈடொப்ப தில்லை எந்த நாடும்!"

எனத் தமிழ்நாட்டை தமக்கே உரிய கம்பீரக்கவிதை மூலம் அடையாளங் காட்டுகிறார் கவிஞர்.

யோகியார் காளிதேவியின் அதிதீவிர பக்தர்.

"பாடு நீ என்பார்; எங்ஙனம் பாடுவேன்?
உண்மை அறிந்திலர் உலகத்து மக்கள்;
பாடும் குரல் நான்; பாடுவாள் காளி"

எனக்கூறும் கவிஞர்,

தொடர்ந்து—

"அன்னையே நின்னுடை யமுதக் கவிதைக்
கடலில் யானொரு சிறுநுரைக் கலக்கம்;
தேனிசை வெள்ளத்து ஈப்போல் இயங்கும்
யானோ பாடுவேன்; யாரிதை யறிவார்?"

என்று நயம்பொங்கச் சொல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகியார் 'முதல் தேவி' என்ற தமது கவிதையில் காளி பெருமையினை,

"பாரில்லை, விண்ணில்லை, பகிரண்டம்
யாவுமில்லை
நீரில்லை, நெருப்பில்லை நீண்டதொரு காரிருளில்
யாருமில்லா வேளையில் இவ்வண்டமெலாம்
உண்டாக்கி
வேரில்லா வித்தாகி வினையில்லாது
இருந்தோய் நீ."

எனப்பாடுங் கவிஞர்,

"வெள்ளி வான் பாற்கடலில், வேதத்து
அனந்தன் மேல்
அள்ளும் மது விழியாள் அம்பிகை என் ஆணழகி
கொள்ளைத் திருமகளாய்க் கோமளங்கள்
காட்டிடவே
துள்ளுஞ் சுடர்களெல்லாம் மோகனமாய்ச்
சூழ்ந்தனவாம்!"

என்ற வரிகள் மூலம் தமது கவிதா சாமர்த்தியத்தை உன்னதமாய் எமக்கு உணர்த்துகிறார்!

### அகல்யா

யோகியார் யாத்த அகல்யா காவியம் தமிழ்க்கவிவானின் வைரநிலா எனலாம்.

ஒவ்வொரு வரியையும் உயிர்நாதமொலிக்க அமைத்துள்ளார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமே—

"பூவாத பூங்கமலம், புரையாத மணிவிளக்கம்,
மோவாத முத்தாரம், முளையாத செங்கரும்பு,
காம்பின்றித் தன்னிலேதான் கவின்விரியும்
கற்பகக்கா,
கூம்புமிருள் மொட்டினிலே குமையாத மின்னல்
வெள்ளம்
குவியாத சந்திரிகை, குலையாத வானநிதி,
அவியாத மீனரசி, அலையாத அமுத கும்பம்,
புகைநீக்கிச் செந்தழலின் புரிநீக்கிச்
செவ்வொளியை
நகையாக்க, அந்நகை ஓர் நறுமலராய்ப்
பூத்ததெனப்
பங்கயத்து நான்முகனார் பங்கயத்துப்
பொங்கெரியில்
தங்கம் தழைத்த மதுக் கூழற் கனவாய்த்
தோன்றினையே!"
......

என அமைந்துள்ளது.

அகலிகைபால் இந்திரன் மோகமுற்றமையை,

"கண் இமைகள் காதற் கதவம் திறப்பிக்க,
பண்ணிசையும் செவ்வாய்ப் பனிமலரில்
தேன்துளிக்க,
தோள் மிகுந்து துள்ள, துளை வளைந்து கூத்தாட,
தாள் குழைந்து கெஞ்ச தளிர்க்கரங்கள் கொஞ்ச,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேகமலர்க் காவனத்தே, வானவில்லின் வீதியிலே,**
**வேக மின்னல் போல் அலைந்து விளையாடுங்**
**காலையிலே,**
**சிலம்பு குலுங்குவதும், சதங்கை சிலம்புவதும்,**
**அலம்புமணி மேகலைகள் அலம்புவதும்**
**கேட்டானோ''**

என ச. து. சு. யோகி சித்தரிப்பது ஒரு பெருங்கவிஞ னுக்கு—பிறவிக் கவிஞனுக்கு அழுத்தமான அழகுச் சொற்கள் எத்துணை தூரம் சேவகம் புரிகின்றன என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளன!

தனிமையில், இரவில் அகல்யா துயின்று கொண்டிருக் கிறாள்.

கனவிலே மிதக்கிறாள்.
வானரசன் வருகிறான்.
வடிவரசியை பார்க்கிறான்.
அவள் கணவனெனக் கருதுகிறாள்.
அவளும் அவனும்,
பருவப் பசியைத் தணித்துக் கொள்கிறார்கள்.
இந்த காட்சியினை,

**''கூந்தல் புரள, கோல முன்கைத் தண்டின் மேல்**
**ஏந்து தாமரை முகத்தில் இனிமைக் கனவூர,**
**பெண்ணழகுத் தெய்வம் பேரமைதி யோடுறங்கும்;**
**பண்ணசைந்து நீளமூச்சுப் பாய்ந்து கொங்கை**
**தாலாட்டும்,**
**ஆசை அவசரத்தில் அஞ்சுங் கணத்துள்ளே**
**மோசக் களிப்பினிலே முன்னேறும் வானரசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆங்கவளைக் கண்டான், அழகுண்டான்,**
**கொண்டான்**
**தீங்கு தடுப் பாரில்லை, தீமை புரிந்துவிட்டான்**
**"என்றுமில்லாப் பேராசை என்கணவர்**
**கொண்டாரே!**
**இன்று கண்டேன் பேரின்பம்யான் என்று**
**இணங்கி விட்டாள்!"**

என்று யோகியார் அருமையாகக் கூறுகிறார்!

அகல்யா அப்பழுக்கற்றவள்!

இந்திரன் சூட்சிக்குத் தன் கற்பை இரையாக்கினாள்.

அவள் கணவனாகிய முனிபுங்கவன் அவளுக்குச் சாபமிட்டதும் தர்ம மன்று!

இதனைக் கவிஞர்,

**"அறம் நின்றாள் வீழ்ந்தாள், அறம் கொன்றார்**
**வாழ்கின்றார்**
**திறம்கொண்ட செம்மாப்பால் தீமை**
**புரிந்துவிட்டார்!**
**காதலன்தான் கற்பழித்தான்; கணவன் அவள்**
**பொற்பழித்தான்!**
**மாதரசை வேசையென மாநிலத்தார் ஏசலுற்றார்"**

என ஒண் சித்ரமாய் வரைந்துள்ளார்.

## மேரி மக்தலேனா

பெருங்கவி ச. து. சு. யோகியின் அற்புதக் கவிதா கீர்த்திக்குச் சான்றாக விலைமாதாக இருந்து மகிபன் யேசுவின் அரு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளொளியில் புனிதவதியான 'மேரி மக்தலேனா'' பற்றிய காவியமும் அமைந்துள்ளது.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் கவிதைகளில் விரவிக்கிடக்கும் அதிகம்பீரத்தை யோகியார் தம் கவிதைகளில் மிக இயல்பாக கொணர்கிறார்!

மேரிமக்தலேனாவை வர்ணித்து,

''வாடாக்கலை, குறையா திருள்
மறையாச் செழுந் திங்கள்,
மூடா இதழ், உதிராதளி,
மூசா இள முளரி,
ஓடா திருள் ஓயா தழல்
பாயா தொளிர் மின்னல்,
தேடாத் திரவியம் மான்விழி
தேனின் மொழி மயிலாள்''

என்றும்,

''வான் எத்தனை, மண் எத்தனை
மதி எத்தனை விண் மீன்
தான் எத்தனை, பரிதிக் கதிர்
தழல் எத்தனை, உலவாக்
கோன் எத்தனை குடி எத்தனை,
மான் ஒத்தவள், முறுவற்கு ஒரு
விலை ஒத்தவை இவையோ''

எனவும் மிடுக்கோடு மொழிகிறார்.

பாவை மக்தலேனா, பாவ இருள்போக்கும் இயேசு மகான் வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவன் வருகையை,

"மலையெலாம் மந்த மாருதம் தூதாய்
மன்னவன் சேவடி பணியும்.
கலையெலாம் அவன் வாய் மலரினில் புகுந்த.
கருணையோ அவன் கணில் கனிந்த
விலையிலாக் காதல் அன்பெலாம் அவன்தன்
விரி நிலா முறுவலில் மலர்ந்த.
அலையெலாம் அன்று நுரைமலர் சொரிந்தங்கு
அருட்பதம் தாங்கிய அண்ணல்"

என மந்திரச் சொல்லடிக்கி மனமோகனச்சித்திரமாய் வரைகிறார் யோகியார்!

இயேசு வந்து கொண்டிருக்கிறார்...

அவர் அருள் கிட்டுமோ என்று மக்தலேனா அங்கலாய்க்கிறாள்!

இந்தக் காட்சியினை

"குலமகளாய்ப் பிறந்தும் எந்தன்
வறுமையுறும் கொடுமையினால்
நலம் இழந்தேன், காமம் எனும்
நஞ்சுண்டேன், நானிலத்தில்
விலைமகளாய், புலை மகளாய்,
வெறுமகளாய்க் கழிந்தேற்கும்
அலைமகள் சேவடி தாங்கும்
அண்ணல் அருள் வாய்த்திடுமோ?"

என்று சொல்லோவியமாக்குகிறார் கவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவந்தார்; அனைவர் பாலும் அருட்பார்வையைப் பதித்து தன்வழி போகிறார்; தூரத்தே போய்க் கொண்டிருக்கிறார்!

அவள் அலைபாயும்மனத்தோடு வீதிவழி தொடர்கிறாள்.

இதனை,

"துள்ளினாள், பாய்ந்தாள்,
துடித்தாள் ஒரு கணத்தில்
வெள்ளிடையே வந்தாள்,
வீதிவழிப் போகின்றாள்,
நள்ளிரவில் பூக்கும்
நன்மதி போலே உயிரை
அள்ளும் ஒரு பேரமைதி
அவனியெலாம் சூழ்ந்ததுவே"

என்று அழகாய்ச் சொல்லி காவியத்தை நிறைவு செய்கிறார்!

**உமர்கய்யாம் பாடல்கள்**

தமிழில் பாரசீகப் பெருங்கவி உமர்கய்யாம் பாடல்களை நானறிய நால்வர் மொழிபெயர்ப்புச் செய்திருக்கிறார்கள்.

பாரசீகக் கவியின் படைப்புக்குள் தமது வேலைப்பாடுகளைக் காட்டாது, மூலத்தின் நாதம் சிதையாமல் தமிழ்ப்படுத்திய தனிப்பெருமை ச. து. சு. யோகியாரையே சாரும்.

"வாடீ, என் கிண்ணம்
வழிய மது வார்த்திடுவாய்!
நீடொளியின் வான் வசந்த
நெருப்பிசையில் உன் கவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுக்கும் குளிருடையைக்
கழற்றியெறி! காலப் புள்
விடுக்கும் ஒரு கணத்துள்ளே
வியன் சிறகும் விரித்ததுவே"

மேற்காணுவது யோகியார் தமிழ்ப்படுத்திய அற்புதமான ஒரு கவிதை!

சரசிகளின் நேசம், சதா மதுவில் லயிப்பு; நிலையற்ற இந்த ஜீவிதத்தை இப்படி கழிப்பதே இன்பம்!

இதுவே பாரசீகக் கவியின் இதய நாதம்!

இக்கருத்தை பட்டவர்த்தனமாக தெளிவுறுத்தி பளிங்குச் சால்லடுக்கி ஓர் கவிதையை யோகியார் தமிழில் தருகிறார்!

அது—

"மாதவிப் பூங் கொடி நிழலில்
மணிக் கவிதை நூலொன்றும்,
தீதறு செந்தேன் மதுவும்,
தீங்கனியும்--பக்கத்தில்
காதலி நீ பாட்டிசைத்துக்
கனிவோடு கூடுவையேல்
ஏதும் இனிக் கவலை யில்லை;
இதுவன்றோ பரமபதம்!

என்ற கற்கண்டுக் கவிதையாகும்!

**கண்மணி ராஜம்**

உண்மைக் கவிதை உயிரின் நாதமாக ஒலிக்கும்.

கருத்தும், மொழிநயமும் இரண்டறக்கலந்து கலாரசிகர்களை வசீகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கவி ச.து.சு. யோகி தன்குழந்தைராஜத்தை இழந்தஞான்று பாடிய 'கண்மணி ராஜம்' அத்தகைய அற்புதக் கவிதை!

"சின்னஞ் சிறு குழந்தை
சிங்காரப் பெண் சிறுமி
என் நெஞ்சு அமுதூற்றும்
இனிமை எங்கு போனதுவோ?"

என ஆரம்பத்திலேயே தன் ஆத்மசோகத்தை இனங்காட்டுகிறார்!

............

"பூப்போலக் கண்கள்
பூப்போலப் புன்சிரிப்பு,
பூப்போலக் கைவிரல்கள்,
பூப்போலப் பாதங்கள்,

என்றும்,

"மாம் பழத்தின் மேனி
மதி உறிஞ்சும் வட்டமுகம்,
பூம் பருத்தி ஆடை
புனையாத தோகை மயில்"

என்றும் கவிவருணிக்கும் போது எம் நெஞ்சும் நெகிழ்கிறது!

மேலும்,

"காட்டு மரப் பொந்துக்
கருங்குயிலி அல்ல எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு நெஞ்சப் பொந்தில்
பாட்டிசைத்த பொன் குயிலி''

என வெகு வெகு இயல்பாகக் கூறும் கவிஞர்,

தொடர்ந்து—

''தேசம் எலாம் சுற்றும்
சிறு பறவை சின்னேரம்
வீசும் கிளை ஒன்றில்
வீற்றிருந்து போவது போல்...''

.........

''ஆண்டு இரண்டு கூட
நிறையாத ஆயுளுடன்
மாண்டுவிட்டாள் என்னுடைய
மன் உயிராம் பெண்பாவை''

என்று ஜீவகளை பொருந்திய கவிதை பெய்கிறார்.

பெருங்கவி, மறைந்த நன்மகள்பற்றி—

''புருவத்தில் பொட்டிட்டு
புது விழிக்கு மையெழுதி
கருவம் அடைந்ததெல்லாம்
கண்மூடிப் போச்சுதடீ''

என்றும்,

'' அப்பன் இவன் ஏழை,
அரைக் காசு கஞ்சியில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பரிசு வேண்டாம்!
எனத் துறந்து போயினையோ?

என்றுமெழுதி முத்தாய்ப்பாக,

"காட்டாதன வெல்லாம்
காட்டி எம்மைப் பிரிந்தாய்
மீட்டும் எங்கள் வீட்டினிலே
விளையாட வாராயோ"

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

என்கிறார்!

ச.து.சு.யோகியார் இருபதாம் நூற்றாண்டின் முதல் வரிசைக் கவிஞர்களில் ஒருவர். தமிழறிந்தார் மத்தியில் இவர் நாமம் என்றும் மங்காது!

## வாழ்க்கைக் குறிப்புகள்

யோகியார் சேலம் மாவட்டத்திலுள்ள சங்ககிரியில் 1903ஆம் ஆண்டு பிறந்தார்.

தந்தை துரைசாமி ஐய்யர், தாயார் மீனாட்சி அம்மாள்.

யோகியாரின் கவிதைவளர்ச்சிக்கு உந்துசக்தியாய் அமைந்தவர் சிறியதந்தை எஸ். வெங்கடேச அய்யர்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் ஆழ்ந்த புலமை மிக்கவர் இவர்.

சில திரைப்படங்களுக்குக் கதை—வசனம்—பாடல்கள் எழுதி இயக்கியுமுள்ளார்.

தமது அற்புதமான கவிதை ஆற்றலுக்குரிய புகழைப் பெறாமலேயே 1963ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24ஆம் தேதி இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்குகள் எட்டும்

1

திக்குகள் எட்டும் சிதறித் திடுக்கிடக்
கெக்கலி கொட்டிடுவாள்;
பொக்கென ஓர்கணத்தே அண்டம் யாவையும்
பொட்டென வெட்டிடுவாள்;
கக்கும் குருதிக் கடலினில் ஊழியின்
காற்றில் குதித்திடுவாள்;
நக்கபிரானுக்கு நாயகி பாவம்
நடுங்க நகைத்திடுவாள்;

2

அண்டங்கள் யாவும் குலுங்கிடக் கிண்கிணி
ஆட்டங்கள் காட்டிடுவாள்;
மண்டலம் நடுவில் குளிர்ந்த மதிவைத்த
கோலம் விளக்கிடுவாள்;
கண்டு மகிழ்ந்தவர்க்கு இன்ப வெறியில்
கவிதை பொழிந்திடுவாள்;
பெண்டு பிள்ளை குட்டி யாவரும் வாழ்ந்திடப்
பேரருள் செய்திடுவாள்.

3

சட்டச் சடசடக் கொட்டும் இடிக்குரல்
சத்தத்தில் வீற்றிருப்பாள்;
வெட்டி யடித்திடும் மின்னல் வெறியினில்
மெட்டி மினுக்கிடுவாள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துட்டர் பயப்படச் சிட்டர் களித்திடத்
தோத்திரம் பாடிடுவோம்;
பட்டின் மெதுவுப் பதத்தினில் வீழ்ந்து
பரவசம் எய்திடுவோம்

## காசில்லாக் கனகரத்னம்

### 1

வெய்யில் படபடக்கும்,
வெப்பம் கொழுந்துவிடும்,
நெய்யில் நெருப்புருக்கும்
தார்போட்ட நெடு வீதி,
இருபுறமும் மச்சு மச்சாய்க்
கட்டிடங்கள் எத்தனையோ,
ஒருமனிதன் தங்குதற்கோர்
ஒதுக்குப் புறமில்லை,
காரோடும், ட்ராமோடும்,
கானல் அலையோடும்,
நீரோடும் பைப்பில்லை
நிழலோடாச் சென்னையிலே.

### 2

என்றைக்கோ நன்றாய்
இருந்தானாம்; ஆனாலும்,
இன்றைக்கோ இவனைப் போல்
இடுக்குடையார் யாருமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் குடையுமில்லை,
காலுக்குச் செருப்பில்லை,
பையில் பணமில்லை,
பசிக்குப் பருக்கையில்லை.
மேலோடும் வேர்வையினில்
மிதந்தோடும் மேல் சட்டை,
காலா வதியான
கந்தலிலே பஞ்சகச்சம்,
பஞ்சடைந்து பாசடைந்த
பாழ்ங் கிணறு போல் குழிக்கண்;
புஞ்சிப்புக் காணாத
பொக்கை வாய், புழைக் கன்னம்,
கீற்றுவிட்ட நெற்றி,
கிறுக்கிவிட்ட கோணல் முகம்,
நால் திசைக்கும் பொடி நாற்றம்
நாறு புனல் மூக்கோட்டை
தோலிருக்கச் சுளை முழுங்கும்
சூரன் போல் வறுமைப் பேய்த்
தோலிருத்தித் தசை முழுங்கச்
சுக்காகிப் போன உடல்,
முட்டியிடும் கால்கள்,
முறுக்குவிடும் மூட்டியெலாம்
பட்டினியாம் பாழ் வயிறு
பாதாளம் பார்த்து வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

வீட்டில் மனைவி கர்ப்பம்,
விளையாட்டுக் கைக்குழந்தை
நீட்டிப் படுத்துவிட்டான்,
நெஞ்சுக்குள் ஆபத்தாம்!
மொட்டச்சிமார் நால்வர்,
மூளிப் பெண் மூவருக்குக்
கட்டத் துணியில்லை.
கண்ணாலம் காத்திருப்பார்,
மூத்த பெண் வீட்டோடே,
மோகனத்துக்கு அவள் கணவன்
வார்த்தைக்குத் தக்கபடி
வரிசையெடுக் காமையினால்.
அன்றாடம் நாலு பணம்
அகப்பட்டால் சோறுண்டு.
என்றாகிலும் கிடைக்கும்
இலைபோட்ட சாப்பாடு.
பாவிமகன் பிள்ளைகட்குப்
பாடம் சொல்லி வாரானாம்,
மூவிரண்டு ரூபாய்க்கு
மோசமில்லை மாசத்தில்!
என் செய்வான் ஏழை!
இரு காலும் தள்ளாடப்
பன்முறை ஆபீஸ்கள்
பல பலவும் போய் வந்தான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவல் பேப்பரில் 'தேவை'
 என்னென்னவோ கண்டான்,
இரவல் காகிதம் வாங்கி
 எவ்வளவோ விண்ணப்பம்
எழுதினான் : என்றாலும்,
 எழுதியதுதான் மிச்சம்
தொழுதான், பல்லிளித்தான்,
 தோத்திரித்தான், பணக்காரர்
நெஞ்சம் இளகவில்லை
 'நீட்டு கம்பி!' என்றுரைத்தார்
'பஞ்சை இவன் பூமிக்குப்
 பாரம்' எனச் சொல்லிவிட்டார்.
காலியில்லை வேலை,
 காலியிருந்தால் லஞ்சக்
கூலிக்குக் காசில்லை,
 கொடுக்கச் சிநேகரில்லை.
பகல்பகதூர் ராப்பகதூர்
 பட்சமிவன் பாலில்லை,
அகல உலகத்து இவனை
 ஆதரிப்பார் யாருமில்லை.
பேர் பெத்தப் பேர்தான்,
 கனகரத்னப் பெரும் பேராம்
ஊர் சுற்றும் நாய்க்கேனும்
 எச்சில் உணவுண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சைப் பார்ப்பான் ஏழைப்
பரதேசிக்கு அதுவுமில்லை.
நெஞ்சம் கொதிப்பேற,
நினைவெல்லாம் தற்கொலையின்
மீதேறச் சென்னை நகர்
வீதியெல்லாம் சுற்றுகிறான்.
காசினிக்குக் கருணையில்லை,
கடவுளுக்குக் கண்ணில்லை,
சீ சீ! சமூகத்தின்
சிறுமைகளுக்கு எல்லையில்லை!

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பதாசன்

## 1916 — 1973

இருபதாம் நூற்றாண்டின் முதல்வரிசைக் கவிஞர்களில் ஒருவர் கம்பதாசன்.

கவியெழுத ஆரம்பித்த காலகட்டத்தில் பாரதி, பாரதி தாசன் இருவரையும் ஆதர்சமாக வரித்துக்கொண்டார் இவர்.

கால ஓட்டத்தில் தமக்கென அமைந்த தனிப் பாதையில் சென்று தனித்துவமான புதியகோணக்கவிதைகளைக் கம்பதாசன் யாத்தார்.

மனமோகனமான சொற்கள், நவமான உவமைகள், உலகக் கவிகளோடு ஒப்பிடவல்ல உருவகங்கள் இவற்றோடு கூடிய அருமையான கவிதைகள் இவருடையது.

வாழுங்காலத்திலேயே மகாகவிகளான அல்லாமா இக்பால், ஹரீந்திரநாத்சட்டோபாத்யாயா போன்றோரால் விதந்தோதப்பட்ட தனிப்பெருந்தமிழ்க் கவிஞன்.

தேசீயச் சிந்தனைகளை முன்னெடுத்துச் சென்ற காங்கிரஸ் பேரியக்கம் ஒரு கால கட்டத்தில் தமிழகத்திலும் அதீத செல்வாக்குப் பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பதாசன் அத்தகைய செல்வாக்குமிக்க இயக்கத்திற்குத் தோதான கவிதைகளை எழுதி கரைந்து போகவில்லை.

அடுத்த காலகட்டத்தில் திராவிடஇயக்கங்களின் தொடர் ஆட்சி தமிழகத்தில் கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்து விட்டது.

பெருங்கவி கம்பதாசன் ''காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும்'' தந்திரம் அறிந்து தன் தனித்துவத்தை இழக்க வில்லை.

கம்பதாசன் சோஷலிஸ்ட்; தீவிர சோஷலிஸ்ட்!

டாக்டர் ராம் மனோகர் லோகியா, பெருங்கவி ஹரீந்திர நாத் சட்டோபாத்யாயா போன்றோர் சார்ந்து நின்ற சோஷ லிச இயக்கத்தைச் சார்ந்து நின்றார்.

கொள்கைப்பிடிப்பற்ற — சுயத்துவச் சிந்தனைகள் அற்ற பச்சோந்திக் கவிராயர்கள் சிலர் தமிழகத்தில் பெற்ற விளம் பரத்தையும், புகழையும் கம்பதாசன் பெறவில்லை!

மறுமலர்ச்சி தமிழ்க்கவிதைகளில் ஆழமான கண்ணோட் டத்தை செலுத்தும் எவருமே நிச்சயம் கம்பதாசனின் தனித் துவ சாதனைகளை கொண்டாடியே ஆக வேண்டும்!

## பாட்டாளி வர்க்கச் சிந்தனைகள்

இக்கவிஞரின் கவிதைகளில் பாட்டாளி வர்க்கம் பற்றிய சிந்தனைகளும் காதல் வாழ்வின் ஆனந்தங்களும், அவலங் களும் முன்னிலை வகிக்கின்றன.

முதற்கண் பாட்டாளிகளின் பால் இவருக்குள்ள பேரபி மானத்தைப் புலப்படுத்தும் பாக்களைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சூரியனும் ஓர் தொழிலாளி... தினம்
சுற்றும் உலகும் தொழிலாளி"

எனத் தொழிலாளி பற்றிப் புத்தம்புது கோணத்தில் பாடலை ஆரம்பித்து,

"..................
பாரை நடத்தும் தொழிலாளி...
பரமனடா கலைப் பிரமனடா!"

என்று பாடலை எழுச்சியோடு பூர்த்தி செய்கிறார்!

இயற்கையின் சின்னங்களை தொழிலாளியாய் கற்பனை செய்வது இதுகாறும் எக்கவியும் செய்யாத எழிற்கற்பனை அல்லவா?

கவிஞர் 'செம்படவ தொழிலாளி' பற்றி,

"மூடுபனிக் காலையிலே மீன் பிடிக்க
முதலை நிகர் கட்டுமரம் தன்னிலேறி;
ஆடுகின்ற அரவை நிகர் கடலலைமேல்
அச்சமின்றி சென்றிட்டான் முத்துமாரி!"

எனக் கவிதையைத் தொடங்கி ஆழ்கடலில் தொழிலாளி காணும் சோதனைகளை,

"எல்லையிலா வானிடையே வௌவால் போலே
இருண்ட மழை மேகங்கள் சூழலாச்சு!
ஜில்லெனவே கடல்வாடை சிலிர்க்கலாச்சு
சீறி அலை பேய்ச்சிரிப்பு சிரிக்கலாச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மலையைப் பிளந்தூன்றும் அரசின் வேர்போல்
கண்கூச இடிமின்னல் தோன்றலாச்சு
......................''

என வெகு நேர்த்தியாக எழுதி சென்றுவிட்டு,

'ஏழைச் செம்படவன் இத்துணை இன்னல்களும் காண நேர்ந்தமையை,

"தாவிகரை சேர்வதற்கு முத்துமாரி
தவிதவித்தான்; அவன் உயிரோ சாற்றலாச்சு.
பூவினிலே மக்கள்பசி போக்குதற்கு
போந்த தொழிலாளி நிலை கண்டேனென்றே"

என்றெழுதிக் கவிதையை நிறைவு செய்கிறார்.

'நவராத்திரி கொலு' எனுந் தலைப்பில் கம்பதாசன் எழுதிய கவிதை முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தை சுரண்டி வாழ்வதை அற்புதமாய்ப் படம் பிடித்துக் காட்டுகிறது.

"உழவுத் தொழிலாளி—நுதலில்
உதிர்ந்த வேர்வைத்துளி
கொழுத்த முதலாளி—அணியினில்
கொலுவாச்சு வைரமாய்

"ஆலைத் தொழிலாளி — உடலினில்
அள்ளி எடுத்த ரத்தம்
காலன் முதலாளி — பேலாவில்
கள்ளாய் கொலுவாச்சு!"

..................

இப்படியாக கவிதை உணர்ச்சியோடு தொடர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையின் கொடுமையை கவிஞர் 'பிச்சைக்காரர்' பாட்டில் மகோன்னதமாய் அடையாளங் காட்டுகிறார்!

"மழை இளைப்பாறிட குட்டையுண்டு—கொடும்
மனதிளைப்பாறிட எண்ணமுண்டு
அழல்இளைப்பாறிட நீருமுண்டு—எங்கள்
ஆசை யிளைப்பார உண்டோ இடம்?"

என்றெழுதி.

.....................

"நதியிளைப்பாரிட ஆழியுண்டு—கொடும்
நஞ்சிளைப்பாரிட மருந்துமுண்டு
கதிரிளைப்பார இரவுமுண்டு—எங்கள்
கவலை யிளைப்பார உண்டோயிடம்?"

என அருமையாக எழுதி, இறுதி அடிகளை,

.....................

"பண்ணிளைப் பாரிட தாளமுண்டு—எங்கள்
பசியிளைப் பாரிட உண்டோயிடம்?"

என்று தமது கவித்துவமேம்பாட்டை தெட்டத் தெளிவாக உணர்த்துகிறார்!

கம்பதாசனின் 'படகோட்டி' உயர்ந்த கவிதாசித்ரமாகும்.

ஓர் ஏழைப் படகோட்டி.

அவன் படகில் பணக்காரத்தம்பதியின் சவாரி; சல்லாபம்!

பசியோடு படகோட்டி!

அவன் இதயத்தே துடிக்கும் எதிர்பார்ப்புகள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள்!

இதோ கவிதை :

"தேன்தூக்கி முல்லைமலர் சிரிக்கத் தென்றல்
சிலிர்க்க வரும் வசந்தத்தின் மாலைப்போதில்,
வான்நோக்கி நிற்கின்ற வரையின் மீது
வாரியென நீர்தேக்கும் ஏரி தன்னில்,
அன்னம் நிகர் படகோட்டிப் பிழைப்போன்;
வேர்வை
அரும்பிடவே புயமலுக்கத் துடுப்புத் தள்ள,
மின்னலிடைப் பெண்ணுடனே ஓர்பணக்காரன்
மிதந்துசெலும் அப்படகுக்குள் துயின்றான்
மெல்ல"

என மந்திரச் சொல்லடுக்கி மாத்தமிழ் பெய்யும் கம்பதாசன்,

பசியோடு தன் மனையாள் கிடப்பாளே! இந்தப் பணக்காரன் பாவையோடு சரசம் ஓய்ந்து எப்போ எழுவான் என எண்ணியபடியுள்ள நிலையினை,

"இருள் பாய்ந்த மலைக்காட்டில் குயிலேகாதல்
இசையெழுப்பத் திசையெல்லாம் நிலவின்
வெள்ளத்
தருள் தோய்ந்த இச்சமயம் படகு ஓட்டி
அயர்ந்திருக்கும் காதலரைப் பார்த்தங்
கெண்வான்,
பூத்திருக்கும் வேப்பமரத் தோப்பில் நேற்று
புனைந்தகுடில்; என்மனைவி பசியால் வாடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருப்பாள் வழிபார்த்து, இவர்கள் எப்போ
கண்விழித்துக் காசீவார் எழுப்ப லாமா?

என்று நெகிழ்வோடு எழுதுகிறார்!

படகோட்டி சிந்தனை தொடர்கிறது. 'உலகிலே பண மிருந்தால் சகல சந்தோசங்களும் கிட்டும்! அது இல்லாதவன் நிலை?

"சொல்லரிய உள்ளுணர்ச்சி விழிசுழற்றத்
துளிரிதழ்கள் முத்தத்தின் சுவையில் தோய்ந்து
எல்லையிலா இன்பத்துள் மூழ்கி யுள்ளார்!...
இவர்காணும் இன்பமெனக் கேனோ இல்லை?
பாரினிலிக் காதலர்கள் செல்வர்; நல்ல
பட்டுடையும் பொன்நகையும் கொண்டோர்; இந்தப்
பாரிடையே வேண்டுகின்ற இன்பமெல்லாம்
படைத்திடுதல் பணமதனின் சக்தியன்றோ?"

என்ற பளிங்கனைய வரிகள்மூலம் இல்லாதான் ஏக்கத்தை எடுத்துக்காட்டும் கவிஞர், அந்த ஏழைப்படகோட்டியின் இதயத்தே அரும்பும் எதிர்நாள் ஏக்கத்தை,

"நாவடக்கிச் சேவகம்செய் யானே நாளை
நல்லதொரு காலம்வரச் செல்வனானால்
பூவணையும் வண்டெனவே என்பெண்டாட்டி
புயமணைத்துப் படகினிலே பூரித்துய்வேன்!
அந்தநாள் என்படகை இந்நாளிங்கே
அமர்ந்திருப்போர் தள்ளவரின் அப்போ தின்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தைதான் மகிழ்வுறுமோ? இன்றென்**
**நெஞ்சாய்**
**செப்பரிய ஏக்கத்தால் துயரில்வேமோ?''**

என, அழகுறக் கூறுகிறார்!

வாழ்வின் சுகங்களை முழுமையாகப் பெற வசதியற்றோரும், முப்போதும் சொர்க்கசுகம் காணும் வசதிமிக்கோரும் இருக்கிறார்களே!

ஈசன்படைப்பில் ஏனிந்த பாகுபாடு?

என்ற 'படகோட்டி'யின் மனவோட்டத்தை,

**''என்னைப் போல் இன்னவரும் எல்லாம்வல்ல**
**ஈசனருட் படைப்பன்றோ? இந்தப் பாரில்**
**இன்பந்தான் பிறரடைய ஒருவர் துன்பம்**
**ஏற்பதுவோ இதிலுள்ள நீதி என்ன?''**

..................

என எடுத்தியம்புகிறார்.

கவிஞரின் 'உழவன் பிள்ளை' என்ற பாடலும் இல்லாமைக் கொடுமையை, அற்புதமாக இனங் காட்டுகிறது!

..................

**''சுந்தரச் செக்கரை முன்னொரு நாள்**
**சிந்தூர மென்று திலகமிட்டேன்!**
**அந்தோ! அதென்றன் மூதாதையர்**
**சிந்திய குருதிக் கண்ணீரையா!**

**''பின்னர் ஓர்தினம் இன்புறவே**
**பெரிய விண்மீன் தனை மோந்தேன்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னே! அதென்றன் தங்கை நுதல்
இருந்த வேர்வைத் துளி கண்டீர்!
வந்திடும் தென்றலில் மற்றொருநாள்
வண்ணத் தமிழிசைக் கேட்டிட்டேன்
அந்தோ! அதென்றன் தாய் பசியால்
வெந்திடும் வேளையில் விட்ட உயிர்!''

மேற்காணும் கவிதை வரிக்கு வரி ஓர் உண்மைக்கவியின் இதயராகமாக ஒலிப்பதனை எவரே மறுப்பர்?

இனிப் 'புதுக்குரல்' கவிதையில் கம்பதாசன் தொழிலாள வர்க்கத்தை எவ்வண்ணம் ஆர்த்தெழச்செய்கிறார் எனப் பார்ப்போம் :

''புழுதிஎன எமைமிதித்துப் போகின்றீர்கள்
பொறுத்திருந்தோம்; பொறுத்திருந்தோம்
இத்தனை நாள்!
அழுதழுது முறையிட்டு அலுத்துப் போனோம்
அனுதாபம் காட்டிடுவோர் யாருமில்லை
பொழுதுபுலர் வேளைதனில் வீசும்காற்றுப்
புழுதிதனில் புதுஜோதி பூத்திடாதோ?
விழிமலரச் செய்தபுது விழிப்பினாலே
விண்ணிடிபோல் போர்முரசு
கொட்டுகின்றோம்''

என்று பாடுங் கவிஞர் தொழிலாள சக்தியினை,

..................

''நகையுறுத்தி நாண்மலரை விழிக்கச் செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லருணன் போன்றவொரு விழிப்பினாலே
தூமதிநேர் போர்சங்கம் ஊதவந்தோம்!''

என்வும்,

**''புயமலுத்தோம்! பசித்தீயில் பெண்டுபிள்ளை**
**புழுப்போல துடிதுடித்து வேகுதையோ!**
**அயர்விலாதப் புதுவிழிப்பு கொண்டுவிட்டோம்!**
**அச்சமில்லை, பழிக்குப்பழி வாங்க வந்தோம்!**

என்றும், அருமையாகச் சொல்கிறார்!

இனித் தொழிலாளரை நசுக்கும் சக்திகளை அவர்களே அழித்தொழித்து விடுவார்கள் என்பதனை,

**''நலமுறவே உழைப்பவர்க்கே உணவு வேண்டும்**
**நியாயமிது; நியாயமிது; நியாயமிஃதே!**
**'அல'வெனவே மறுப்பவர்கள் கடவுளேனும்**
**அடுத்தகணம் அவர்தலைஎம் காலில் வீழும்!'',**

என்று தீஉமிழும் வார்த்தைகளால் வடிக்கிறார் கவிஞர்.

## காதல் கவிதைகள்

காதல் என்பது பல கவிஞர்களின் கவிதைகளில் வெறும் கற்பனைப் பொருளாக மட்டுமே உள்ளது!

கம்பதாசனைப் பொறுத்தவரை,

**''காதலே வாழ்வே**
**காதலே சாவே''**

என வாழ்ந்தவர்.

ஆதலால்தான் அநுபவச்சித்திரங்களாக அதியற்புதக் காதல் கவிதைகளை அவரால் பின்ன முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்ரலேகா!

அவள் அழகுத் தேவதை; நடனராணி; கேரள மகாகவி வள்ளத்தோளின் உறவுப் பெண்!

கம்பதாசனை அவள் கண்டாள்;
காதலித்தாள்;
**1952-ஆம் ஆண்டு பிரிந்து சென்றாள்!**
கவிஞர் துடித்தார்.
கண்ணீரில் ஆழ்ந்தார்.
கம்பதாசன் காதல் தோல்வியானது!
ஆனால் தமிழ் இலக்கியத்திற்கு வெற்றியானது!
ஆம்!
சித்ரலேகா பிரிந்த நாளின்
இரவெல்லாம் விழித்திருந்து—
"பாட்டு முடியுமுன்னே" என்றோர்
எழிலேந்தும் நூலாக்கினார் கவி!

அந்நூலில்—

**"பாட்டு முடியுமுன்னே மீட்டிய வீணையை**
**பக்கம் வைத்தே நடந்தாய்—இனிதாய்**
**(பாட்டு)**
**கேட்ட நினைவே கண்ணீர்த் துளியில்**
**கீத மிசைக்குதடி — காதல்**
**(பாட்டு)"**

என நெஞ்சுருகிக் கொஞ்சு தமிழ் பெய்கிறார் கவிஞர்!

இதே நூலில்—

**"காசினியில் மின்விட்டு பொழியாக் கார்போல்**
**காதலதும் கண்ணீரும் பிரிந்திடாதோ?"**

என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கண்சமைத்த வெண்பருக்கை அனைய என்றன்**
**கண்ணீரால் கொடுங்காலப் பசிமாறாதோ?"—**

என்றும் இதயசோகத்தை இன்றமிழ்க் கவியாக்குகிறார்.

தொடர்ந்து—

கலாராணி காதற்பிரிவை,

**"பொன்னிறத்து புனைமயில் நின்நடன ரேகை**
**பூங்கொடிதான் தென்காற்றில் புரளும்போது**
**என்நயனம் தொட்டழைத்து பிறகே மாற்றி.**
**ஏக்கமெனும் எரிதழலின் ஜ்வாலை யாச்சே!"**

என செழுங்கவிதையாக்குகிறார்.

சித்ராவின்மேலுற்ற அளப்பரியகாதல்வெறியால் அவளை அதீத கட்டுப்பாடுகளுக்குள் தாம் சிறைம்படுத்தியமையை எண்ணியவராக,

**"சித்திரமே வரைந்ததில் உன்செழிய கோலம்**
**சிறைபிடித்து வைத்திடவே ஆவல்மீறி**
**எத்துபல செய்திட்டேன் கண்டதென்ன**
**ஏமாந்தேன் தேன்மாந்தா வண்டு போல?"**

எனக் கசிந்துருகிப் பாடுகிறார்.

ஆருயிர்ச்சித்ரலேகா கர்ப்பமுற்று மகவைப்பெற்ற வேளையின் நினைவிலாழ்ந்து,

**"தேன்பிலிற்றும் மொட்டெனநீ கர்ப்பமுற்று**
**தெய்வீகப் பாலகனை ஈன்ற வேளை**
**வான்பிளந்த புதுப்பலமே என்றன் தோளில்**
**வண்ணமொடு குடியேறி நின்ற தேடி!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான்புகுந்த அமைதியெனக் கலந்த வாழ்வின்
கலயத்தை விதிக்கையே உடைத்த தாலே
பேன்நிறைந்த கூந்தலென என்னை எண்ணி
பிறரிடமா சீப்பதனை கேட்கச் சென்றாய்?"

என மகாகவிகளுக்கே உரிய பீடுடன் கவிதாமிர்தத்தைச் சிந்துகிறார் கம்பதாசன்!

சித்ராவின் காதலில் சங்கமித்த சந்தோச நாட்களின் பெருமிதத்தை,

"கண்டு கொண்டேன் நானே—காதல்
என்னவென்று தானே
விண்ணின் விரிவிலும் பெரிது—ஆல்
வித்ததிலுமே சிறிது
தண்ணீரதிலுமே மெலிது—சூழ்
சாவதனிலுமே வலிது"

எனச் சொர்ண சித்ரமாக்குகிறார் கவிஞர்.

சித்ராவை அணைத்து மகிழ்ந்தமையை, இதழ் கவ்விய இனிய நிகழ்வினை,

"தனித்துநின்ற நிழல்கள் ரவிநீங்கத்
தழுவல் போலக் களித்தோம்
இனித்த எண்ணத்தாலே வெறிஎழ
இதழ்கள் மோதத் திளைத்தோம்"

என்று உவமையெழிலோங்க—உணர்ச்சி பீறிட கவியாய் வழங்குகிறார் கம்பதாசன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாட்டு முடியுமுன்னே' நூலைச் சித்ரா பிரிவில் வெந்து கண்ணீர் காணிக்கையாக்கிய கம்பதாசன் காதல் பற்றியும் பலவித கோணங்களில் ஜீவனை வசீகரிக்கும் சுகந்த மலர்கள் நேர்த்த பல கவிதைகள் எழுதினார்!

"நீ சிரித்தால் என்ன?
நிலாச் சிரித்தால் என்ன?
கான் சிரித்த பூக்கள்
காலக் காற்றில் போச்சே!—காதல்
கனவும் மறையலாச்சே!
கார் சிரித்தால் என்ன
கதிர் சிரித்தால் என்ன?
நீர் சிரித்த நுரையே
நில்லா ஆற்றில் போச்சே! - காதல்
நினைவும் மறைய லாச்சே!"

என்று கவிஞர் அடிமனச் சோகவெக்கையை எத்துணை எழிலோடும், இயல்பாகவும் வெளிப்படுத்துகிறார்?

காதலைப்பற்றி சுயானுபவச் சித்ரமாக,

"அழகுத் தீயின் ஜ்வாலையாகும்
காதல் என்பதே — அஃது
ஆண் பெண் எனும் இருகரைக்குப்
பால மாகுமே!"

என்றெழுதுகிறார் கவி.

'காதல் பாதை' என்ற கவிதை மிகுந்த மொழி நயத்துடனும் அழகுடனும் உள்ளது!

"கடல் நீலம் வான் நெஞ்சில்
கமழுகின்ற காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவின் மலரில் தேன்வந்து
களிப் பெய்தும் வேளை
அடர்கானில் சூழ்ந்திருக்கும்
அமைதிநிகர் சோலை
ஆச்சரியம் கண்மலர்ந்து
அமைத்த கனாப்பொய்கை
அருகினிலே கருக்கிருளில்
அழகுக் காதல் பாதை'

என்று தமக்கே உரிய தனிப்பாணியில் எழுதும் கவிஞர்,

"சந்திரிகை தானுருக்கித்
தாளப் பொடி தூவி
தகதகத்த செக்கர் நிழல்
தன்னுடனே கூட்டி,
சிந்தனைகள் தனைநெய்து
செய்த ஒரு கிளையில்
தென்றலிலே திருவிளக்கின்
சிறகடித்துப் பாடும்
திறமையதன் அருகினிலே
செழும் காதல் பாதை!"

என உவமையெழில் கொஞ்ச கவிமிடுக்கு மிஞ்ச எழுதுகிறார்!

மேலும்,

"நட்சத்திர வண்டினங்கள்
நனவின் அனல்மொய்க்கும்
நமபயத்தின் புதையலினை
ஞானப் பேய் காக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY



உட்கசிந்த தாயுள்ளம்
ஒளி ஊச லாடும்
உன்மத்தம் சிசு மழலை
உட் பொருளைக் கூடும்
உணர்ச்சியதன் அருகினிலே
உயர் காதல் பாதை!''

என்றுமெழுதி நவயுகத்துப் பெருங்கவி தாமென்பதை கம்பீரமாக நிறுவுகிறார் கம்பதாசன்!

கவிஞர், 'பிணைப்பு' என்ற கவிதையை,

''அந்தநாள் அடவிவழி தனிலே நீயே
அலர்ந்த ஒருமலராக இருந்தாய் போலும்
அந்தநாள் அவ்வழியாய் சென்ற கொண்டல்
அழுதஒரு நீர்த்துளியாய் உனில்வீழ்ந்
தேனோ?''

என்றும்,

''அந்தநாள் அளப்பரிய தாரை சூழ்ந்த
அணிநீல இருளாய்நீ இருந்தாய் போலும்
அந்தநாள் யான் தனித்த கூண்டிற் புள்ளாய்
அழகதனை விழிக்கனவின் இடைநுகர்ந்
தேனோ?''

என்றும் அமைத்து தமிழ்க்கவிதா தேவிக்கு புதிய திசையை காண்பித்தவர் தாமென்பதை அருமையாக அடையாளங் காட்டுகிறார் கவிஞர்!

## கற்பனைத் திறம்

இதுகாறும் யானெடுத்துக்காட்டிய கம்பதாசனின் பாட்டாளி வர்க்கக்கவிதைகள், காதல் கவிதைகள் போன்றவற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய கவிநயமும், கற்பனை வளமும் மேலோங்கி மின்னியதை பார்த்திருப்பீர்கள்.

கவிஞரின் பிறகவிதைகளில் காணக்கிடக்கும் தமிழுக்குப் புதிதாக வந்தமைந்த கற்பனை வளத்தைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

தாஜ்மஹாலைப் பற்றிக் கவிஞர்,

**"வட்ட நிலா புவி வீழ்ந்ததுவோ?- ஷாஜஹான்**
**வடித்த கண்ணீரின் முதல்துளியோ?**
**திட்டமிட்டுப் பூத்த சொப்பனமோ?-மும்தாஜ்**
**ஜீவதீபந்தான் சிரிக்கின்றதோ?"**

என்றும்;

..................

**"மேவிய காதல் புகழையெல்லாம்-எண்ணியாழ்**
**மீட்டிடும் மௌனமாம் பாடகனோ?**
**சாவதன் நெஞ்சமும் நெக்குருக-சலவைக்கல்**
**தனித்தழும் அதிசயம் தாஜ்மஹால்"**

என வெகு அழகாக - புதுமையாக கற்பனை செய்கிறார் கவி!

"வருவாளா?"

என்ற கவிதையில் செக்கர்வான் பற்றி அரைத்த மாவையே அரைக்கும் கவிராயர்கள் போலில்லாது,

**"காக்கைசிறு குஞ்சொன்று வாய்பிளந்தாற்**
**போலே**
**கங்குலினைப் பின்வைத்து முன்னின்ற**
**செக்கர்"**

என கற்பனை செய்யும் கம்பதாசன் போக்கு அவரின் தனித்துவத்தை எடுத்துக் காட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உதிர்ந்தமலர்'' எனுங்கவிதையில் மலரினை,

''முள்ளுடைச் சிறுசெடியின் - கனவாய்
மூண்டு சிரித்த மலர்
கள்ளெனும் பொக்கிஷத்தால் - விம்மியே
கர்வம் அடைந்த மலர்
பனித்துளி மணிசூடித் - தென்றலின்
பாட்டினைக் கேட்ட மலர்
கனிந்துள விண்ணதன்கீழ் - மௌனக்
கல்வியைக் கற்ற மலர்''

என்று அபாரமான கற்பனை வளத்துடன் வருணிக்கிறார் கவி!

''அழகு எங்கே'' என்ற கவிதையில் வானத்தைப் பற்றிய

''காம்பின்றி நின்றிருக்கும் - இனிய
காயாம்பூ வான வானம்''

என்ற கவிஞரின் கற்பனையின் எல்லையைத்தொட சாமான்ய கவிஞர்களால் என்றைக்கும் இயலாதல்லவா?

'இயற்கையின் கானம்' எனுந் தலைப்பில்,

''சந்திர சூரியர்கள்.... என்றன்
தாளங்க ளாகுமடா!
விந்தைக் கடலலைகள் .. அதிலே
விம்மி எழும் ஒலியாம்!

..................

''பளிச்சிடும், தாரகைகள்.... என்றன்
பாடலின் வார்த்தைகளாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒளித்திரு வானவில்லே... என்றன்**
**உள்ளத் துணர்ச்சியடா''**

என்று கம்பதாசன் எழுதும்போது தமிழறிந்த எவருக்கும் அவர்பால் ஓர் மரியாதை ஏற்பட்டே ஆக வேண்டுமல்லவா?

'இருதலைக் கொள்ளி' கவிதையில் நாகரிகம் சாவைப் பார்த்துச்சொல்வதாக உருவகம்செய்து கம்பதாசன் எழுதிய,

**''இருளினிலே மலர தன் மூச்சுப் போலே**
**ஏகுகின்ற அக்காளே! சாவே! நிற்பாய்''**

என்ற வரிகளில்தான் எத்துணை நளினம்!

**''நித்தம் வறுமையில் நெஞ்சழிந்து-தன்னை**
**நேசனெனச் சொல்ல யாருமின்றி**
**பித்தன் இவனெனக் காட்சி தந்து - உயிர்**
**பிரிந்தபின் புகழைப் பெறுபவன் யார்?''**

என்று ஓர் கவிதையில் கேட்கிறார் மகாகவி கம்பதாசன்.

அவர் எழுதியது அவருக்கே பொருத்தமாகி விட்டது! தமிழ்க்கவி வானில் கம்பதாசன் புகழ் மங்காத ஜோதி வீசும் சூரியனாய் புலர்ந்துவிட்டது.

அது மாறாது; மறையாது!

## வாழ்க்கைக் குறிப்புகள்

- 1916-இல் திண்டிவனம் மருங்கேயுள்ள உலகாபுரம் கிராமத்தில் சுப்பராயர் - பாலம்மாள் தம்பதிக்கு மைந்தனாய் பிறந்தார்.
- 1940-இல் ''கனவு முதலிய கவிதைகள்'' என்ற கவிஞரின் முதல் நூல் வெளிவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே ஆண்டு 'வாமன அவதாரம்' திரைப்படம் மூலம் பாடலாசிரியராக அறிமுகமானார். மஹாமாயா, மங்கையர்க்கரசி, ஞானசௌந்தரி, அவன், வானரதம், அக்பர் போன்ற பல படங்கள் அவர்தம் இசைப்பாத்திறனை இனங்காட்டியது.

- பச்சை சோஷலிஸ்ட்டான கம்பதாசன் சோஷலிஸ்ட் கட்சியில் டாக்டர் ராம்மனோகர்லோகியா, வங்கத்துப்பெருங்கவி ஹரீந்திரநாத்சட்டோபாத்யாயா போன்றோரிடம் இணைந்து தீவிரமாகச் செயலாற்றினார்.

- தமிழில் அதிகமாக சமத்துவக் கவிதைகளை எழுதியவரும், கவிதையுலகில் தமக்கென தனிப்பாதையை வகுத்துக்கொண்டவருமான கம்பதாசனுக்கு, திரைப் **பாடல்களில்** மறுமலர்ச்சியை கொணர்ந்தவர் என்ற பெருமையும் சேர்கிறது.

- அற்புதமான கவிஞரான இவர் தகுதிக்கேற்ற இடத்தைப் பெறாமல் எல்லா வழியிலும் புறக்கணிக்கப்பட்டு, மது அருந்தும் பழக்கத்தால் உடல் நலங்கெட்டு 1973 மே 24-ஆம் தேதி சாவைச் சந்தித்தார்.

## இயற்கையின் கானம்

**சந்திர சூரியர்கள் ...என்றன்**
**தாளங்களாகுமடா!**
**விந்தைக் கடலலைகள் ...அதிலே**
**விம்மி எழும் ஒலியாம்!**

**அருவியே என்சுருதி ...விண்ணில்**
**அதிர் இடி மத்தளமாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்குயில் கத்தலது ...என்றன்
கானத்தின் கார்வையடா!
முரலும் வண்டினங்கள் ...வஸந்த
முத்தம் பெருந்தென்றல்
குரலின் இனிமையிலே ...இழைந்து
கொஞ்சும் சுரங்களடா

பனிச்சிடும் தாரகைகள் ...என்றன்
பாடலின் வார்த்தைகளாம்
ஒளித்திரு வானவில்லே ...என்றன்
உள்ளத் துணர்ச்சியடா!

வானம் மயங்கிநிற்கக் ...கால
வாயினால் பாடுகின்றேன்
தானமும் பாடிடுவேன் ... ஊழி
சலதி கொந்தளிப்பாம்!

## உதிர்ந்த மலர்

முள்ளுடைச் சிறுசெடியின் - கனவாய்
மூண்டு சிரித்தமலர்
கள்ளெனும் பொக்கிஷத்தால் - விம்மியே
கர்வம் அடைந்த மலர்.
பனித்துளி மணிசூடித் - தென்றலின்
பாட்டினைக் கேட்ட மலர்
கனிந்துள விண்ணதன்கீழ் - மௌனக்
கல்வியைக் கற்றமலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திச் சிவப்பினையும் - விண்மீன்
அழகின் விழிப்பினையும்
சிந்தையிற் கொண்டமலர் - மனமே
செய்து திளைத்த மலர்
வீழ்ந்து கிடக்குதையே! - உச்சி
வெய்யிற் சுடலையிலே
வாழ்வின் விருப்பங்களை - மண்ணிலே
வரைந்துளதோ வண்டே?

## பாட்டு முடியுமுன்னே...

பல்லவி

பாட்டு முடியுமுன்னே மீட்டிய வீணையைப்
பக்கம் வைத்தே நடந்தாய் - இனிதாய்ப்
(பாட்டு)

அநுபல்லவி

கேட்ட நினைவே கண்ணீர்த் துளியில்
கீத மிசைக்குதடி - காதல்
(பாட்டு)

சரணம்

தாவிய கடல்அலை கரை தனைத் தொட்டுத்
தணல் மெழுகதுபோல் உருகிச் சென்றாலும்
மேவிய அலையின் வடுவே மணலில்
மின்னி மிளிராதோ - மேலும்
(பாட்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளி

சூரியனும் ஓர் தொழிலாளி... தினம்
சுற்றும் உலகும் தொழிலாளி
வாரி அலையும் தொழிலாளி... எதிர்
வந்திடும் காற்றும் தொழிலாளி
மாரி நதியும் தொழிலாளி... இருள்
மலரும் உடுவும் தொழிலாளி
பாரை நடத்தும் தொழிலாளி.. இனிப்
பரமனடா கலைப் பிரமனடா!

# பிச்சைக்காரன்

மழை இளைப்பாறிடக் குட்டையுண்டு-கொடும்
மனதிளைப் பாறிட எண்ணமுண்டு
அழல் இளைப்பாறிட நீருமுண்டு-எங்கள்
ஆசையிளைப்பாற உண்டோ இடம்?

பாம்பிளைப் பாறிடப் புற்றுமுண்டு-பட்சி
பறந்திளைப் பாறிடக் கூடுமுண்டு
வேம்பிளைப் பாறிடக் காகமுண்டு-எங்கள்
வேட்கை யிளைப்பாற உண்டோ இடம்?

நதியிளைப் பாறிட ஆழியுண்டு-கொடும்
நஞ்சிளைப் பாறிட மருந்துமுண்டு
கதிரிளைப் பாற இரவுமுண்டு-எங்கள்
கவலை யிளைப்பாற உண்டோ இடம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிளைப் பாறிடத் தூக்கமுண்டு-அற்ப
கழுதை யிளைப்பாறிடத் துறையுமுண்டு
பண்ணிளைப் பாறிடத் தாளமுண்டு-எங்கள்
பசியிளைப்பாறிட உண்டோ இடம்?

## கடவுளும் மனிதனும்

மீன்குஞ்சு விளையாடக் கடல் படைத்து
மேலான வான்சென்று கடவுள் பார்த்தார்
தேன்கூடு போன்றவலை திறமாய்ப் பின்னி
செம்படவன் மீன்பிடித்து விற்கலானான்
பார்த்த கடவுள் பதை பதைத்தார்

பார்க்கா மரண இருள் ஒளித்தார்
பச்சைக்கிளி கனிதின்னப் பசியமாவை
படைத்திட்ட கடவுள் வான் சென்று பார்த்தார்
தச்சனுமே மாமரத்தை வெட்டிக்கூண்டு
சமைத்ததனில் கிளிதன்னைப் பிடித்த
டைத்தான்
பார்த்த கடவுள் பதை பதைத்தார்
பார்க்கா மரணம் இருள் ஒளித்தார்

தேரையது வாழ்ந்திடவே பாறைதன்னைச்
சிருஷ்டித்த கடவுள் வான்சென்று பார்த்தார்
பாறைகளைப் பிளந்தெடுத்து சிற்பிதானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்திட்டேன் கடவுள்சிலை கல்லிலென்
றான்

பார்த்த கடவுள் பதை பதைத்தார்
பார்க்கா மரண இருள் ஒளித்தார்
மதுக்குமுதம் கண்மலர மதியம்தன்னை
மணிவானில் படைத்திட்ட கடவுள் பார்த்தார்
புதுவிதமாய் மதியதனைப் பறக்கவிட்டு
போட்டியிடும் விஞ்ஞானப் பூதம் கண்டார்
பார்த்த கடவுள் பதை பதைத்தார்
பார்க்கா மரண இருள் ஒளித்தார்.

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந. பிச்சமூர்த்தி

## 1900—1976

தமிழில் புதிதாகப் பல சோதனைகளைச் செய்து பார்க்க வேண்டுமென்ற வேணவாவோடு, மகாகவி பாரதியின் வசன கவிதைகளாலும் அமெரிக்கக்கவி வால்விட்மனின் வசன கவிதைகளாலும் மிகவும் ஈர்க்கப்பட்ட ந. பிச்சமூர்த்தி, தமிழ்க் கவிதைத்துறையில் ஓர் அழகியதிருப்பத்தை ஏற்படுத்தியவர்.

மானுடநேயமும், சமூக விமர்சனப் போக்கும் அனைத்துக்கும் மேலாக தத்துவச் செறிவும் அவர் கவிதைகளில் பரவிக் கிடக்கின்றன.

வார்த்தைகளை விரயஞ்செய்யாது எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப மிக அழகாகக் கையாளுகிறார் அவர்.

ஓர் விளக்குப்பூச்சி தீயிடைவீழ்ந்து மரணத்தை தழுவுதலைக் கவிஞர், ஆன்மா ஜோதியில் கலக்கிறது என்ற நோக்கில்,

**"அட கதையே!**

**விளக்குப் பூச்சியா மாய்வதற்கு உதாரணம்**

**இதோ ஒரு சிறகு பொசுங்குகிறது**

**போகட்டும் என்று சுற்றுகிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ மற்றொன்றும்,
விட்டேன் என்ற சங்கற்பம்;
தீயில் குளிப்பேன் என்ற உயிராசை,
சக்தி தூண்ட, துணிவு பொங்க,

நகர்ந்தேனும் சுடரண்டை செல்கிறது
அதோ சென்று விட்டது!
அதான் உருமாற்றும் தெய்வ முயற்சி—

அத்வைதச் சாதனை
ஜோதியின் அகண்டம் ஜீவாணுவை அழைக்கிறது,
லயம்!
விட்டிலின் உடல் சாம்பலாகி விட்டது
விட்டிலா மாய்வதற்கு உதாரணம்?"

என்று எழுதுகிறார்.

(தீக்குளி—கவிதை)

'ஒளியின் அழைப்பு' என்ற கவிதையில் ஓர் சோனிக் கழுகை உதாரணங்காட்டும் பிச்சமூர்த்தி அக்கழுகின் வீழ்ச்சி நிலையினை விவரித்து அந்த வீழ்ச்சியினின்று அது எவ்வாறு உத்வேகம்கொண்டு எழுந்து ஜெயத்தைநோக்கிப் போராடுகிறதோ, அதுபோன்றே விதியின்முதுகிலும், சாஸ்திரநாற்றத்திலும் சோம்பலுற்றுச் செயலிழந்த மானுடன் ஆத்தெழ வேண்டுமென்கிறார்.

.....................

"நானும் ஒரு கழுகு, சோனிக்கழுகு!
சூழவும் எவ்வளவு பெரிய, பழைய முதிய இருட்டு!
பழமை என்ற பிரமையில் அரையொளியில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்களின் பிணங்கள் எப்படி உயிருடன்
நடிக்கின்றன!
அறிவின் சுயேச்சையை
அழுக்குப் பிசாசுகள் எப்படி சிறைப்
படுத்தி விட்டன!''

என்று கூறி,

''பரவாயில்லை விடேன்....
சோனியானாலென்ன?
போர் என்ற சங்கு முழங்குகிறது,
அழகின் சிரிப்பு அண்டமாய் பிறந்திருக்கிறது
அகண்ட ஒளி அனாதியாய் மலர்ந்திருக்கிறது
அழகும் அத்யாத்மமும் அழைக்கின்றன.
ஜீவா! விழியை உயர்த்து
சூழ்வின் இருள் என்ன செய்யும்?''

என முடிக்கிறார்.

பொய்யிருள் ஆழ்ந்த மானிடன் ராஜச பான்மைகொண்டு ஆத்தெழ வேண்டுமென்ற சிந்தனையைத் தூண்டும் நல்ல கவிதை இது!

கவிஞர் எழுதிய 'கிளிக்கூண்டு' ஓர் அற்புதக் கவிதை!

.......................

''வாழ்க்கையும் காவிரி,
அதிலெங்கும் கிளிக்கூண்டு
நானொன்று கட்டினேன்
வார்த்தையே மணல், ஓசையே ஜலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் தீராத வேட்கையே குவிக்கும் விரல்கள்;**
**பாட்டென்னும் கூண்டொன்றமைத்தேன்,**
**அழகென்னும் கிளியை அழைத்தேன்...**
**காலையில் கதவுகள் கிழக்கில் திறக்கவும்,**
**ஒளியாற்றில் செம்மேக மாதுகள் குளிக்கவும்,**
**மரங்களின் ஓசை மதுரமாய் மிதக்கவும்.**
**கண் காணா கரீச்சான்கள்**
**களியேறிப் பாடின...**

என்று கவிதை மிகுந்த நளினத்தோடு அமைந்துள்ளது!

ஆசையே துன்பங்களின் தாய் என்பான் புத்தன். ஆசை பேராசையாகி நிலைகிறங்கச்செய்யும் போக்கினை "லீலை" என்ற தலைப்பில் கவிதையாக்குகிறார் பிச்சமூர்த்தி.

**"மண்ணில் பிறந்தால்**
**வானேற ஆசை,**
**காலோடிருந்தால்**
**பறப்பதற்காசை**
**வானாயிருந்தால்**
**பூமிக்கு வேட்கை,**
**கொண்டலாயிருந்தால்**
**மழையாகும் ஆசை,**
**மின்னாயிருந்தால்**
**எருக்குழிகாசை**
**எருக்குழியானால்**
**மலராகும் பித்து**
**இரும்பாயிருந்தால்**
**காந்தத்திற்காசை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரும்பாயிருந்தால்
நெருப்புக்காசை...
தனியாயிருந்தால்
வீட்டுக்கு ஆசை
வீட்டோடிருந்தால்
கைவல்யத்திற்காசை
நானாயிருந்தால் நீயாகும் ஆசை
உனக்கோ?
உலகாகும் ஆசை!

மேற்காணும் கவிதை எழிலும், பொருட்செறிவும் மிகுந்தது என்பது வெள்ளிடை மலையல்லவா?

கவிஞரின் 'காட்டு வாத்து' கவிதையில்,

''தன்னறிவுக்கும் அப்பால்
தனி அறிவுக் கப்பாலும்
தரணியையும்
தராதலங்களனைத்தினையும்
உடலாக்கிப் புகுந்து
விஞ்ஞானிகள் வியக்க
விளையாடும் சக்தியினை,
உதிரத்தில் ஒன்றியதாய்,
உள்ளுக்குள் இருந்து
கணத்திற்கு கணம்
உசுப்பாமல் வழிகாட்டும்
உணர்வாய் உணர்ந்துவிட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன்னும் இல்லை,**
**பின்னும் இல்லை,**
**தொடர் சங்கிலி''**

என்ற பகுதியில் ஆத்மா மெய்யறிவோம்பித் தெளிவுபெறின் நித்யானந்தத்தில் நிலைத்திடும் என்னும் பேருண்மையைக் கவிஞர் அழகாகச் சொல்கிறார்!

ந. பிச்சமூர்த்தி தமது சீரிய புதுக்கவிதைகளாலும், அரிய சிறுகதைகளாலும் மட்டும் கீர்த்தி பெறவில்லை!

அவர் யாப்பறிந்த நல்ல மரபுக் கவிஞருங்கூட! 'குயிலின் சுருதி' அவர்தம் மரபுக்கவித் திறனுக்குச் சான்று பகரவல்லது!

## வாழ்க்கைக் குறிப்புகள் :

- ந. பிச்சமூர்த்தி 1900ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்திலமைந்த கும்பகோணத்தில் பிறந்தவர்.
- 1932 இல் கலைமகள் பத்திரிகை மூலம் சிறுகதை ஆசிரியராகஅரும்பினார். தொடர்ந்து புதுக் கவிதைகள், கட்டுரைகள் எழுதிக் குவித்தார்.
- 1959 இல் புத்தெழுச்சியோடு சி. சு. செல்லப்பா நடத்திய 'எழுத்து' பத்திரிகையில் எழுதி, பலரும் புதுக்கவிதைத் துறையில் ஈடுபட வழி செய்தார்.
- வக்கீலாக விளங்கிய அவர் எழுத்துக் காதலால் அத்தொழிலை உதறியவர்.
- 1976 இல் புதுக் கவிச் சிற்பி பிச்சமூர்த்தி அழியாத மெய்ப்பொருளோடு சங்கமித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்

மாந்தோப்பு வஸந்தத்தின் பட்டாடை
உடுத்தியிருக்கிறது.
மலர்கள் வாசம் கமழ்கிறது,
மரத்திலிருந்து ஆண்குயில் கத்துகிறது
என்ன மதுரம்! என்ன துயரம்!
ஆண்குயில் சொல்லுகிறது:
காதற் கனல் பெருக்கெடுத்துவிட்டது;
கரைகள் உடைந்து போயின;
நெஞ்சத்தின் வேர்கள் கருகுகின்றன,
குயிலி! காதல் நீரை வார்த்துத் தீயை
அணைப்பாய்.
கருகிய வேர்களுக்கு உயிரை ஊட்டுவாய்
க்காவூ...க்காவூ...

அடுத்த கொல்லையில் எதிர்க்குரல்—
பெண்குயில் கூவுகிறது.
என்ன சோகம்! என்ன இனிமை!
பெண்குயில் சொல்லுகிறது;
தனிமை உயிரைத் தணலாக்கி விட்டது;
தணல் உன் குரலால் ஜ்வாலையாகிறது.
என் நெருப்பு உன் நெருப்பை
அணைக்குமா....?
காதல் தீர்வதைவிட இக்கிளர்ச்சியேபோதை
இத்துன்பமே இன்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயிலா! நெருப்பை வளர்ப்போம்;
க்கா வூஉ... க்காவூஉ

காதல் தெய்வம் காற்றொலியுடன் கலந்து
சொல்லுகிறது;

ஒன்றுபட்டால் ஒய்வுண்டாகும்
தேக்கமுண்டாகும்,

காதற்குரல் கட்டிப் போகும்....
பிரிவினையின் இன்பம் இணையற்றது.
தெரியாமலா ஈசனும் இயற்கையும் ஓடிப்
பிடிக்கிறார்கள்?

தெய்வ லீலையை உரக்கச் சொல்லு
க்காவூஉ... க்காவூஉ....

## தேவை

எங்களுக்கு
ஏட்டுச் செய்தியும்
இடர்ப்பாட்டின் பட்டியலும்
காடியாச்சு,
சுரம் ஏறி இறங்கி
ஏறிக் கொண்டிருந்தால்
சமுதாயம் என்ன உடம்பா
டாக்டரைக் கூப்பிட?
வேதனை தான் நல்வாழ்வா?
பலசரக்குப் போராட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் விட்டு விலை ஏற்றம்,
விலைப்புள்ளியும்
பஞ்சப்படியும்
விளையாடும் சடுகுடு
பொறுமைக்கு எல்லை உண்டு.
மயிலிறகு போடாது
நவபாரதம் பிறக்க
தூக்குமரம் தேவை,

## தேவாங்கு

தேய்ந்தொழியும் இனமா
யார் சொன்னது?
ஆந்தையின்
உருண்டையான ஞானக்கண்ணும்
அசைவா அமைதியா என்னாப்
புதிரான இயக்கமும்
அமைப்பில் குரங்குமையும்
உள்ளத்தில்
பற்றற்ற வாழ்நெறியும்
எனினும்
சீக்குகளை ஓட்டும்
ஆன்மீக சித்தியும்
பரிணாமப் பாதையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதிகளாதலால்
டைனோசாராகவில்லை.
மாறுபட்டு நினைத்தாலும்
நாற்சந்தியில் வந்துள்ள
இனமென்பதுறுதி.
ஒன்று மற்றொன்றாம்
உயிரியலுக்கொப்ப
நாளை
ஒரு பத்தாயிரம் ஆண்டுகளில்
புதுவித மனிதக் குரங்காகி
அதிமானுட புகண்டனும்
ஆகலாம்.
முடிகயிறு வாங்கும் நாமோ
பக்தர்கள்,
நினைத்ததே ஆவோம் என்பதால்
ஒருவேளை
ஆகியே விட்டோமோ
என்னவோ,

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

# கலைவாணன்

## 1917—1990

இருபதாம் நூற்றாண்டின் கவிதா வளர்ச்சிக்கு மகத்தான முறையில் தன்பங்களிப்பைச்செய்த எழுச்சிக்கவிஞரே அப்புலிங்கம் என்ற இயற்பெயர் கொண்ட கலைவாணன்

யாருக்கும் அஞ்சாது, யார் காலிலும் வீழாது சுயாதீனமாகச் சுந்தரக் கவிதைகளை அள்ளி அள்ளி வழங்கியவர்.

ச.து.சு. யோகி என்ற பெருங்கவிஞனைத் தமது குருவெனக் கொண்டாடும் கலைவாணன் கவிதைகளில் மொழி நயமும், ஓசைமிடுக்கும் பின்னிப்பிணைந்து சுடர் வீசுகின்றன.

'பித்தன்' என்ற தலைப்பில்,

" விந்தைதரும் சிந்தனைகள்
விளங்கா நறுஞ்சொற்கள்,
சந்தமிகும் இன்னிசைகள்,
சதிராடும் கற்பனைகள்,
உந்திஎழும் கவிதைஇவை
ஒவ்வொன்றும் இங்கெனக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தம் எனில், நீங்களெலாம்
'சுத்தக் கிறுக்' கென்பீர்!

என அழகுத் தமிழில் தமது அகவிலாசத்தை இனங்காட்டு கிறார் கவிஞர்.

மேலும்,

................

"காய்ந்து நிணம் நாறுகின்ற
கருவாட்டைத் தின்பதற்குத்
தேய்ந்தபணத் தோடுகடைத்
தெருவழியே சுற்றியகால்
ஓய்ந்தலுத்து நிற்பவர்கட்கு,
உடுக்கதிரை அறுத்தடிக்கச்
சாய்ந்தபிறைக் கொடுவாளைச்
சாணையிடத் திறல்உண்டோ?"

என மிடுக்கோடு பாட்டிசைத்து, கம்பீரமாகத் தன்னை நிறுத்துகிறார்!

சித்தன் என்ற பிறிதொரு கவிதையில்,

''ஈண்டிதோ மீண்டும்இவ் வுலகில்
இன்னும்ஓர் பிறப்புறப் பெற்றேன்'
வேண்டிய அனைத்தும் வேண்டியாங் கெய்தும்
விண்ணகத் தேவரும் வெள்க,
மாண்டுமண் ஆகி ஆண்டுபன் னூறு
மறைந்திறந் தொழிந்ததன் பின்னும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாண்டிவந் துன்முன் மீண்டும் நிற்கின்ற**
**தமிழ்க்கலை வாணனைப் பாராய்!''**

எனப் பாடித் தாம் மெய்ச்சித்தன், அழியாமை எய்திய கவிதா நித்யன் என மார்தட்டுகிறார் கவிஞர்.

தமக்கு மரணமில்லை; தம் கவிதைகளுக்குமில்லை என்பதனை 'எனக்குச் சாவேது?' என்ற கவிதையில்,

**''சாவினை மீறிஎன் சந்தத் தமிழ்க் கவிச்**
**சத்தம்உன் செவிகளில் நித்தமும் கேட்குமே**
**நாவினைத் தாண்டிய நரகத் துடிப்பிலே**
**நான்தரும் பாடல்கள் வானின் றொலிப்பதும்**
**ஓவியத் தூரிகைக் கெட்டா விசித்திர**
**ஒப்பனை பெற்றென துருவம் சொலிப்பதும்**
**சீவியம் பெற்றுநான் சிவமாக நிற்பதும்**
**சிந்தைக் குணர்த்துமே என்தன் கவித்துவம்'**

என்கிறார் கவி.

கவிஞர் தாம் கொண்ட ஞானப் பசியைத் தன் மலையாளஃ புரிந்திலனோ என அங்கலாய்த்து,

**''கிள்ளும் பசிக்குஊண் தா'' என நான்**
**கேட்டவுடனே, பாற்சோற்றை**
**அள்ளிக் கொண்ர்ந்துஓர் தட்டினிலே**
**அருகில் படைத்தாள் என் மனைவி,**
**தள்ளிக் கவிழ்த்துப் பாற்சோற்றைத்**
**தட்டிப் புரட்டிவிட்டு, ''அடியே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளப் பசிக்கு ஊண் ஊட்டடி'' என்று
உரைக்கக் கேட்ட வுடனேயே,
துள்ளித் துடித்து, 'ஓர் கிறுக்கிது' எனத்
தூர விரைந்து ஏன் ஓடுகிறாள்',

என கவியெழில் மின்னத் தமிழ் பின்னுகிறார்,

கவிஞர் கலைவாணனுக்கு மகன் பிறந்தஞான்று, நண்பர்கள் அவரை வாழ்த்தி 'மகனும் தங்களைப் போல் பெருங்கவிஞனாய் பொலிய வேண்டுமென்கிறார்கள்.

மகாத் தகுதி படைத்த கவிஞராகத் தாமிருந்தும் போதிய புகழைப் பெறாது அல்லலில் ஆழ்ந்துபோகும்போது கவிஞன் வாழ்க்கை தம் மகனுக்கு எதற்கெனக் கவிஞர் கருதுகிறார்!

அதனை,

...............

"தொடுத்தநல் அறிவும் ஒழுக்கமும் படிப்பும்
தோய்ந்தஎன் வழியினைப் பற்றல்
விடுத்துஅர சியலில் வீழ்ந்திடில் நாட்டை
வெருட்டிநின்று ஆளலாம் அன்றோ''

என இன்றைய நிதர்சன நிலையைக் கவிஞர் செப்புகிறார்!

மேலும்,

"சொல்லினில் ஏய்ப்பும் சூதுடன் வாதும்
சூழ்ச்சியும் மாட்சியைக் கூட்டும்
புல்லர்கூட் டுறவும் பொய்யினில் நிமிர்ந்த
போலிஆ டம்பர வாழ்வும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையேல், கல்வி-கேள்வியால் உலகில்,
என்பயன் விளைந்திடும்? என்போல்
தொல்லையில் சிக்கி அல்லலுற்று அழுது
தொலையவோ என்மகன் பிறந்தான்?"

எனக் கவிஞர் பாடும்போது அவர் கவியில் சத்தியநாதம் ஒலிக்கிறது என்பதில் யாருக்குத்தான் சந்தேகம் வரும்?

கலைவாணன் 1940 இல் யாத்த 'நான்' என்ற கவிதை,

...............

"மண்ணின் மனத்துயர்கள்
மண்டிக் கவிந்த இரு
கண்ணீர் தளுபவிதிக்
காற்றில் பொருமி எழும்
எண்ணக் கருக்கலிலே
எங்கோ மலர்ந்தொளிரும்
வண்ணக் கவி மலரை
வார்த்தைகளில் கோத்திடுவேன்

என்று அமைந்துள்ளது.

தமது பாட்டை பிறர் போற்றினாலும், தூற்றினாலும் தமக்குக் கவலையில்லை என்பதனை

"கொள்ளுபவர் கொள்ளட்டும்
குற்றம் குறைகூறித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளுபவர் தள்ளட்டும்
 தாழ்ச்சிசொலிக் கைகொட்டி
எள்ளுபவர் எள்ளட்டும்
 எள்ளளவும் என்னுடைய
உள்ளமிதைக் கண்டயர்வில்
 ஓர் கணமும் தயங்காது''

என்கிறார் கர்வமுடன்!

கலைவாணனின் மனச்சிமிழ் ஓர் அருமையான கவிதை-

''அற்புதங்கள் பலபுரியும்
ஆற்றலுட னேபிறந்து
கற்பனையின் புதுமையெலாங்
கைவலிமை கொண்டமைத்து
விற்பனர்கள் கைகூப்பி
விருதுசொல வாழ்த்திடுமோர்
சிற்பியின்கைச் சிமிழஃது என்
சீவனுள்ள இருதயங்காண்!

என்று தன்னம்பிக்கையுடன் பாப்பொழியும் கவிஞர்.

தம் மனச்சிமிழ் மகிமை பற்றி—

''கானம் இசைக்குமனம்
கற்பனையாழ் மீட்ட அதில்
கவிதை மலர்ந்ததுவும்
கனவுகள்தாம் பாலமிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத் தளவுயர்ந்த
வையகத்தி னிச்சைகளை
வாயிற் படியேறி
வாங்கியதும் இங்கிதில்தான்''

என நயமோங்கச் சொல்கிறார்!

மெய்ஞ்ஞானத்தை உதறித்தள்ளி விஞ்ஞானத்தை மட்டும் போற்றி செய்யும் பேர்வழிகளை 'சிரிக்கின்றேன்' என்ற கவிதையில்,

...............

''கணுக்கணு வாய்பிரித் தாய்ந்த முடிவினில்
கண்டதீ தென்றவீ றாப்புடன்,
அணுக்கள் இணைந்ததில் ஆகிய தேஇந்த
ஆருயிர் மானுடம் என்றுளம்
துணுக்குறப் பேசும்விஞ் ஞானப் புலமைத்
துடிப்பினைக் கண்டுகை கூப்பிடும்
அணுக்கரை நோக்கி அலட்சிய மாய்க்குதித்
தார்த்துக்கை கொட்டிச் சிரிக்கிறேன்.''

என்று சாடுகிறார் கவிஞர்!

தாசிப்பெண்களிடம் தத்தம் ஆசைதணித்துவிட்டு அத்தகையோரை வெறுத்துப்பேசும் சமூக பிரபலஸ்தர்கள் பலரைப் பார்க்கிறோம்!

கலைவாணனிடம் அந்தப் போலித்தனம் இல்லை!

அவர்,

''அந்திப் பொழுதலரும்
மந்தாரை போல் அழகைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தும் சிவப்பிதழும்
சேல்போல் இருவிழியும்
பந்தான மார்பகமும்
பட்டனைய கட்டுடலும்
கந்தமலர்ப் பூங்குழலும்
காமமெனுந் தூண்டிவிட

என தாசிப் பெண்ணின் அங்கவர்ணனையை அற்புதமாகச் சொல்லி,

..............

"சுாசுக்கா பெண்ணின்பம்
காலத்தே மண்ணாகும்
மாசுக்கா எழில்ரோஜா
மலர்போன்ற இதழ்முத்தம்
யோசித்தேன் யோசனைக்கே
எட்டவில்லை அவ்வின்பம்
தாசிப்பெண் காசுக்குத்
தருவதுவும் மலிவன்றோ?"

என சத்திய உணர்வைச் சந்தனத் தமிழாக்குகிறார் கவிஞர்!

இறுதியாக,

"ஆவலுடன் போய்நின்றால்
அன்புடனே வரவேற்றுச்
சேவகிபோல் இட்டதெலாம்
செய்பவளா இழிந்தவள்? இத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவடியா ளையடையத்
தேடுவதா ஒரு பெரிய
பாவமெனப் பேசுகிறாய்
பாழுலக மானிடனே!"

என மனந்திறந்து பாடுகிறார் கவிஞர்.

"நல்லேருழவர் தஞ்செல்லேரை ஓட்டவும்
சொல்லேருழவர்கள் சும்மா இருக்கவா?
இல்லாத வாழ்விலே இன்பினைக் கூட்டுவோம்
ஏட்டிலே அதையும் ஓர்பாட்டிலே தீட்டுவோம்
கற்பனைக் கன்னிநம் கண்காண வந்ததோ
காலையின் செவ்விதழ் காட்டிச் சிரிக்கிறாள்
அற்புதம் செய்யலாம் அழகான செய்யுளால்
அன்பனே! சொல்லேரை ஆழமாய் ஓட்டடா!"

எனக் கம்பீரமாகக் கவிதா பிரகடனம் செய்யும் கலைவாணன் மறுமலர்ச்சித் தமிழ்க்கவிதைவளர்ச்சிக்குச் செய்தபங்கு மகத்தானது!

மொழி ஆட்சியும், ஓசைமிடுக்கும் பின்னிப்பிணைந்த அருமையான கவிதைகளை வரைந்த கலைவாணனிடம் ஆன்மிக விழைவும், அழகியல் பாங்கும் நிறைந்துள்ள அளவுக்கு சமூக சீருத்த சிந்தனைகள் குறைவாகவே உள்ளது!

ஆனால் சமூக சீர்திருத்த சிந்தனைகளை, மொழியை, நாட்டைப் பாடிய மிகப்பல கவிராயர் கவிதைகளில் காணக் கிடைக்காத அதிகம்பீரம் கலைவாணன் கவிதைகளில் நிரம்பி வழிகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க்கைக் குறிப்புகள் :**

- 1917இல் திருச்சி அருகேயுள்ள திருவானைக்கா எனும் ஊரில் பிறந்தவர்.
- 1940ஆம் ஆண்டிலிருந்து சக்தி, கலாமோஹினி, கிராம ஊழியன் போன்ற இலக்கியப் பத்திரிகைகளில் இவர்தம் அற்புதக் கவிதைகள் வெளிவந்தன.
- நிலக்கிழாரான இவர் தமக்கென தாமே போட்டுக் கொண்ட வட்டத்தில் வாழ்ந்தவர்! இவர் யாத்த கவிதைகளோ தமிழின் தகுதியை திசையெட்டும் கம்பீரமாய் இனங்காட்ட வல்லன.
- 1971 இல் பாவலர் மன்றம் என்ற அமைப்பு இக் கவிஞருக்கு ''கவிஞர் திலகம்'' எனும் மிகவும் பொருத்தமான பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
- குருஞான சம்பந்தர் என்ற ஆன்மிகப் பெரியாரின் வரலாற்றைக் கூறும் ஞானதீபம் காவியமும், 'உதயம்' காவியமும், அழியாஅழகி, பித்தன், நிவேதனம், மனச்சிமிழ் போன்ற நூல்களும் கவிஞர் தம் திறனைப் பறைசாற்ற வல்லன!
- 1991இல் கவிஞர் திலகம் கலைவாணன் சொந்த ஊரான திருவானைக்காவில் சிவன்சேவடி சேர்ந்தார்.

## நாங்கள் ஓர் ஜாதி

**வானில் பருந்தோ டுலாவுவோம்**
**வாரியுள் மீனொடும் மூழ்குவோம்**
**நானிலத் தாய்க்குப் பிறந்தவர்**
**நாங்கள் கவிஞர்ஓர் ஜாதியார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்ப மெனப்படுஞ் சொற்களால்
அண்ட சராசரம் போலவே
பற்பல தோன்றப் படைத்திடும்
பாவலர் என்பதும் எம்மையே

கல்விற் கடவுளைக் கண்டதைக்
கைலை மலைமிசை ஏற்றுவோம்
மெல்ல எடுத்துக் கடல்அலை
மீதில் மிதக்கவும் போடுவோம்

காலையில் காரிருட் கல்லணைக்
கட்டை உடைத்து வெளிவரும்
பாலைப் பழிக்கின்ற பட்டொளிப்
பாய்ச்சலில் நீர்விளை யாடுவோம்

கற்பனை என்றபூங் காவிலே
காவிய மென்ற மலர்க்குலம்
பற்பல பூக்கப் பறித்ததைப்
பார்மகள் சென்னியில் சூட்டுவோம்.

மெல்லிய பச்சைத் தளிர்உடை
மேனிக் கெழில்செயக் கொல்லையில்
மல்லிகைப் பெண்செயும் புன்னகை
மர்மமும் நாங்கள் அறிந்தவர்.

அந்தர மென்றபே ராழியில்
ஆனந்த மாய்மனப் பெண்ணுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரத் தோணியை ஓட்டுவோம்
சந்தடி யின்றி இராவிலே.

விண்ணையும் மண்ணையும் கூட்டுவோம்
வேறோர் உலகையுங் காட்டுவோம்
எண்ணத் துணைவிசெய்! என்றிடில்
ஈசனை யும்பிடித் தாட்டுவோம்.

காலத்தின் முப்பெருங் கோணமும்
காண்பதற் காய்க்கவிக் கற்களால்
பாலம் சமைத்ததில் ஏறி. இப்
பாரினைக் கண்டுகை கொட்டுவோம்.

வில்லுடை வீரரும் எங்கள் வாய்
வீச்சினுக் கஞ்சிடு வார்கள் ஏன்,
கொல்ல வருங்கொடுங் கூற்றமுங்
கூடச் சிறிதுபின் வாங்குமே.

சித்தப் பெருங்கடல் மத்தியில்
முத்துக் குளிப்பத னால்எமைச்
சித்த ரெனச்சிலர் செப்புவார்
பித்தரென் றும்பலர் பேசுவார்

உங்களைப் போலல, மாந்தரே
உண்மையில் நாங்களே தேவர்கள்.
எங்களுக் கீடிந்த மண்ணிலே
ஏது? போதுமே இல்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதையின் பிறப்பு

காதிரண்டும் செவிடாகிக்
கண்குருடாய்ப் புலன்களெலாம்
பேதித்து நிலைமாறிப்
பின்னுக்குச் சென்றுவிட
ஏதினிலும் செல்லாமல்
என்னிதயம் துஞ்சிவிட
மேதினியில் வாழ்ந்தாலும்
மெல்லமன மிறந்துறங்கும்
போதினிலே, சவமாகப்
போதத் துயில்புரியும்
ஆதிப் பரமசிவ
மாகியஎன் நெஞ்சினிலே
சோதிக் கதிர்விசிறுஞ்
சொக்கழலாய்க் கக்கிருளில்
தாதியற்றே கருங்குறத்தி
நடந்துவிளை யாடிடுவாள்
பாதியிலே வந்துநின்ற
பாழினிலே கூத்தாடும்
மாதினிடக் கால்படவும்
மாண்டவுயிர் மீண்டுமெழக்
காதினிலே கேட்டதையும்
கண்களிலே கண்டதையும்
ஓதிடுவேன், இவைகளைத்தான்
உலகம் கவிதையெனும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசு

மெல்லிய வெள்ளிதழ் விள்ளவும்
மின்னிகர் புன்னகை காட்டிடக்
கொல்லைப் பசுங்கொடி மீதிலே
குந்திக் கிடக்கும்ஏ மல்லிகா!

சொல்லடி எதுக்கோ இப்புது
சொற்பன வாழ்வு? சடுதியில்
கொல்லக் கருதி விதிப்பயல்
கொள்ளக் கொடுத்த பரிசிதோ?

விண்ணகச் சோலையில் எண்ணிலா
வெண்மலர் பூத்துக் குலுங்கையில்
மண்ணகங் கண்டு மயங்கிட
மாலையி லேஎழுஞ் சந்திர!

வண்ணம் மிகுந்தஇந் நீர்க்குமிழ்
வாழ்க்கை எதற்கோ? எளிதினில்
உண்ணக் கருதிய ஊழ்வினை
ஓதக் கொடுத்த பரிசிதோ?

தொங்கிய பூங்குழல் ஆடவும்,
செங்கையில் பொன்வளை பாடவும்,
கொங்கைகள் மெல்லக் குலுங்கவும்
கூடஇங் குற்றஎன் காதலி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குமிவ் வாலிபப் புத்தெழில்
பூப்பதும் ஏதுக்கோ? அண்மையில்
மங்கித் தனக்குள் மறைக்குமுன்
மண்கொளத் தந்த பரிசிதோ!

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணிதாசன்

## 1915—1974

வாணிதாசன் பாவேந்தர்பாரதிதாசனை ஆதர்ச கவிஞராக ஏற்றுப்பாட்டிசைத்தவர். இனிய, எளிய தமிழ் சொற்கள் இவர்தம் பாவெங்கும் விரவிக் கிடக்கிறது.

தமிழின மேம்பாட்டுச் சிந்தனைகள் இவர்தம் கவிதைகளின் உயிர்ச் சுருதியாய் ஒளிர்கிறது.

காதலைப்பற்றியும், இயற்கையைப்பற்றியும் கூட தெள்ளத்தெளிந்த தமிழிலே அருவிநடைப்பாடல்கள் யாத்துள்ளார் கவிஞர்!

'விண்மீன்' எனுந் தலைப்பில் இவர் யாத்த கவிதையில்,

**" தைத்திங்கள் குளம்பூத்த பூவோ விண்மீன்?**
**தமிழ் வேந்தர் வெளியிட்ட சின்னக்காசோ**
**மைத்தடங்கண் மடமாதர் உதித்துப் பின்னர்**
**மாலைக்குத் தேர்ந்தெடுக்கும் முல்லைப் பூவோ?**
**தைத்திட்ட பட்டாடை முத்தோ, தீட்டித்**
**தரப்பட்ட ஒலிக்கல்லோ, சரிகைச் சேலை**
**உதிர்த்திட்டபொடிப்பூவோ,தொலைவில்தோன்றும்**
**ஊரிட்ட மின்விளக்கோ விண்மீன் கூட்டம்"**

என அழகாகக் கற்பனை செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைப் போதின் எழிலில் மயங்கிய வாணிதாசன்,

"வெண்ணிலவு மேற்றிசையில் ஒளிமங்கிச் சாயும்;
விடிவெள்ளி கீழ்த்திசையில் புன்முறுவல் பூக்கும்;
பண்ணெழுப்பும் வரிவண்டு; முல்லைமலர் நாறும்;
பசுங்குழவி விழிமலர்த்திக் காலுதைத்துக் கத்தும்;

கண்ணுறங்கா துறங்குகின்ற இளந்தாயின் கைகள்
கைக்குழந்தை உடல்வருடும்; பூமணத்தை வாரி
மண்ணெழுந்து குளிர்காற்று மெல்லவந்து சேரும்;
மரக்கிளைகள் சலசலக்கும்; மலர்ந்து வரும் காலை!

எனப்பாடுவது இயல்புணர்ச்சித் தாலாட்டும் தரமான கவியாக மலர்ந்துள்ளது.

வாணிதாசன் தமிழன் எழுச்சி வேண்டி,
மிடுக்கோடு-உணர்ச்சிப் பெருக்கோடு பாடுகிறார்!

"கார்பொய்த்த காலத்தும் நீர் பொய்க்கா நாடு!
கல்துளைத்துக் கலைவளர்த்து நெல் விளைத்த
நாடு!
கூர்பொய்த்த வேலெடுத்தும் பகைவெட்டிச் சாய்த்த
குன்றுநிகர் தோள்மறவர் வாழ்ந்ததிரு நாடு!
சீர்பொய்த்துப் போனதுவோ? அந்தந்தோ
அந்தோ
செந்தமிழர் நிலைஇதுவா? இந்நிலையை மாற்றப்
பேர்பொய்த்துப் போகாமுன் எழுந்தோடி வாரீர்!
பிற்போக்கு நிலைமாறப் பரவட்டும் தீயே!

என்று மிடுக்கோடு பாடுகிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாயடங்கமாட்டேன்' கவிதை,

" நானுண்டு; நான்கற்ற தமிழுண்டு; போதும்!
நல்லோர்கள் வல்லோர்கள் நற்றமிழை யாத்தோர்
தேனுண்டு நான் வாழ்வேன்;சீர்சிறப்புவேண்டேன்"

என்றமைந்து வாணிதாசன் மனவிழைவினை தெளிவாக உணர்த்துகிறது!

தமது கவிதா லட்சியம் தமிழின மாண்பு நிலையே என்பதனை,

"அந்தியிலே கோயிலெலாம் மணியடிக்கக்
கேட்டேன்!
ஆனாலும் எனதுள்ளம் அமைதிகொள்வ
தில்லை!
சந்தியிலே கூடுகின்ற கூட்டம்போல் இன்றித்
தமிழ்மக்கள் தாய்நாட்டின் நலம் பேண
வேண்டும்!
பந்தியிலே தலைவாழை இலையிட்டே
உண்போர்,
பசிமீறிக் கையேந்திக் கெஞ்சுகின்ற ஏழை
புந்தியிலே நிழலாடக் காண்கின்றேன்; இந்தப்
போக்கெல்லாம் என்பாடல் மாற்றிப்
விட்டால் போதும்!

என அழகாகச் சொல்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழன் ஆதிக்க சக்திகளிடமிருந்து விடுபட வேண்டு மெனும் தாகத்தோடு கவிஞர்,

"தனித்து வாழ்ந்தால் தமிழ்வாழும்!
தரளம் பொன்னும் நமதாகும்!
இனித்த கலைகள் கைத்தொழில்கள்
எங்கும் நிறையும்! வாழ்வுயரும்!
குனித்த பார்வை இனிவேண்டாம்!
கொட்டி முழக்குப் போர்முரசம்!
மனித்த பிறப்பின் உயிர்மூச்சு
தாயக மண்ணின் விடுதலையே!"

என, ஆவேசக்கவி பாடுகிறார்!

தமிழின் பேரழகில், மாட்சியில் தனையிழந்த வாணி தாசன்,

"திருவிளக்கே! தமிழ்மகளே! தித்திக்கும் தேனே
சீர்த்திமிகு தென்னவர்கள் மடிவளர்ந்த செல்வி
உருமாறாப் பேரழகி கன்னிஇளம் பெண்ணே!
உன்னிடத்து மொழிக்கெல்லாம் உயிர்தந்த
தாயே!
பெருங்கடலும், நீள்வானும் வான்குவிந்த மண்ணும்
பிறந்தவுடன் பிறந்துவந்த குளிர்க்காற்றும்
தீயும்
ஒருங்கிணைந்த புதுப்பொலிவே! தமிழ்த் தாயே!
போற்றி
உனைப்பாடல் என் வேலை; பிறிது
விரும்பேனே!

என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணிதாசனின் வசீகரக் காதல் கவிதைகள் சிலவற்றைக் கண்ணுறுவோம்!

பிரிவுத் தீயாழ்ந்து,

''வீட்டினில், விளக்கில், வானில்
விரிகடற் பரப்பில், கற்றோர்
ஏட்டினில், பண்ணி யைந்த
இசையினில், குளத்தில், முல்லைக்
காட்டினில் அவளை யன்றி
வேறொன்றும் கண்டே னில்லை!
கூட்டிவா; வந்தால், உள்ளக்
குறைதீரும்; வாழ்வேன் நெஞ்சே!''

என உணர்ச்சிப் பீறிடப் பாடுகிறார்!

இதே நோக்கில் ''நீ இல்லாச் சில நாட்கள்'' எனுங் கவிதையை,

..................

''நீ இல்லாச் சில நாட்கள் நினைவில்லாப் பாடல்!
'நிலவில்லாப் பெருவானம்! கழியில்லா நெய்தல்!
தீயில்லா வைகறையே தென்றலில்லா மாலை
தெளிவில்லா நெஞ்சந்தான் விளக்கத்தைப்
போலாம்

நீ இல்லா சில நாட்கள் வேலில்லாச் சாரல்
நீரோடாப் பேராறு! நெல்விளையாச் சிற்றூர்!
காயில்லாப் பழத்தோப்பு! கண்ணில்லாப் பெண்டீர்!
காற்றில்லாக் கொடுங்கோடைக் காலத்தைப்
போலாம்'

என்று அருமையாக யாத்துள்ளார் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாரின் நேசநினைவில் ஆழ்ந்து கவிஞர்யாத்த கவியொன்றைக் காண்போம்!

"என் அன்னை சிற்றூராள்! எழுதாப் பாடல்!
இல்லறத்தின் வழிகாட்டி! புகழ்ச்சியில்லை!
உண்மை!
மின்னலிடை தேயாத வெண்மதியம்! நீங்கள்
விரும்புகின்ற என்பாட்டின் ஆதியவள்! அந்தத்
தென்னவளைத் தீந்தமிழை என்னுயிரை அன்பைச்
சிறுவயதில் நானிழந்தேன்! ஆனாலும், அந்த
முன்னவர்கள் தீந்தமிழை மறக்கவுமா கூடும்?
முழுநேரம் அவள் கனவே! கனவும் ஒரு கானல்!

நெஞ்சுருக்கும் இக்கவிதை, தாயினைத் தமிழெனப் போற்றி செய்யும் வண்ணம் வனையேந்தி நிற்கிறதல்லவா?

வாணிதாசன் கவிதைகள் பாரதிதாசன் கவிதைகளை அடியொற்றி மலர்ந்தவை! தனித்துவவீச்சுகள் அவர் பாக்களில் அருகியிருத்தல் கண்கூடு!

தமது கவிதாநாயகனாக — குருவாகச்சுடர்ந்த பாரதிதாசன் மறைந்தபோது வாணிதாசன்,

"கண்ணீர் சிந்துக கண்களே!
கண்ணீர் சிந்துக கண்களே!
அண்ணல் பாரதிதாசன் இறந்தார்!
அந்தோ! அந்தோ! அந்தோ! மறைந்தார்'
அழகின் சிரிப்போ அழியா ஓவியம்!
ஆசான் பிரிவென் அழுகைக் காவியம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பழகு தமிழுக் கினியார் பிறப்பார்!**
**பைந்தமிழ் வளத்தை இனியார் நிறைப்பார்?"**

என நெக்கருகிக் குருவுக்கு கண்ணீர் பாக்களைக் காணிக்கை செய்கிறார்.

## வாழ்க்கைக் குறிப்புகள்

- 1915 ஆம் ஆண்டு புதுவை மருங்கேஉள்ள வில்லியனூரில் அரங்கதிருக்காமு, துளசியம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார்.
- தமிழ், பிரெஞ்சு இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்.
- இவர்தம் கவிதைகள் ஆங்கிலம், ரஷியமொழி, இந்திய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.
- 7-8-74 இல் வாணிதாசன் வையம் துறந்தார்.

# எண்ணம்

கழைஉதிர்த்த நெல்அருந்திக் கானமயில் கூவும்!
காட்டெருமை கன்றருகில் அசைபோடும்; நீண்ட
தழைஉதிர்த்த மரக்கிளையில் பேடைச்செம்
போத்து

தனித்திருக்கும் சேவலிடம் தாவிப்போய்க் குந்தும்!
மழைஉதிர்த்த கற்பாறைப் பள்ளத்து நீரை
மானினங்கள் கால்மடித்து வாலாட்டி உண்ணும்!
இழைஉதிர்த்த மணியோத்த கொன்றைமலர்ச்
சாரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்கினிலே அடைகாக்கும் வெண்கழுகுப்
பேடை! 1

கருங்கண்கள், வெள்ளிறகு, பிளந்தவாய் மூக்கு,
கன்னியர்கள் குளிக்கின்ற நிறமஞ்சள் நெற்றி
பெருங்கால்கள், உளியொத்த சிறியவிரல், காட்டுப்
பேரீந்தின் முள்போன்ற நகக்கூர்மை எல்லாம்
ஒருங்கமைந்த வெண்கழுகுப் பேடையோ நித்தம்!
ஊன்உணவு குஞ்சுக்குத் தேடிவந்தே ஊட்டும்!
அருங்குடும்பத் தாய்மாரின் பண்பெல்லாம் இந்த
அடர்காட்டு மலைக்கழுகுக் கார்உணர்த்தி
வைத்தார்? 2

கண்பறிக்கும் இடிமின்னல் காற்றோடு சேர்ந்தே
களிறொத்த கார்முகில்கள் பேரிரைச்சல் போடும்!
விண்பறித்து எழுந்ததென மேல்வானில் மோதும்
வெளியெல்லாம் சுழல்காற்று! விலங்கினங்கள் ஓடும்!
மண்பறிக்க வந்ததென மழைவானில் கொட்டி
வாட்டிற்றே! உயிர்இனங்கள் பசியால்வா டிற்றே!
எண்ணியெண்ணி ஏங்கிற்றே வெண்கழுகுப்
பேடை
இரையின்றி வாய்திறக்கும் குஞ்சுகளைக்
கண்டே! 3

வான்வெளுக்கத் தாய்ப்பறவை மலைச்சாரல்
எங்கும்
வட்டமிட்டு வட்டமிட்டு நெடுநேரம் சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்தேடித் திரிந்ததுவே! ஊன்பொதிந்த சின்ன
உயிரொன்றும் கிடைக்கவில்லை! என் செய்யும்
பேடை!
கான்தேடி வயல்தேடிக் கடல் பரப்பும் தேடிக்
கண்ட பயன் களைப்பொன்றே! கூடுதிரும் பிற்றே!
ஊனுக்கு வாய்திறக்கும் குஞ்சுகளைக் கண்டே
ஒருநொடியில் தன்னுடலைக் கிழித்துழுக் காலே! 4

குஞ்சுகளுக் கருகினிலே தாய்ப்பறவை சென்று
கொட்டுகின்ற குருதியினைக் குஞ்சுகளுக் (கு)
ஊட்டும்
பஞ்சொத்த பார்ப்புகளோ பசியாறு மட்டும்
பருகிற்றுத் தாயுடலின் செங்குறுதி யாவும்!
அஞ்சவில்லை! அசையவில்லை! தாயன்பே
அன்பாம்!
அருகினிலே தள்ளாடி அசைந்தசைந்து சென்றே
மஞ்சள்வாய்க் குஞ்சுகட்கு வயிறார ஊட்டி
மகிழ்ச்சியிலே வெண்கழுகு மாண்டதுவே அந்தோ!
5

வெண்கழுகைப் போன்றவரே நற்கவிஞர் கூட்டம்!
விளையாட்டாய்ச் சொல்லவில்லை! உண்மை!
முழுஉண்மை!
புண்பட்ட உள்ளந்தான் பிறர்புண்ணைக் காணும்!
புரியாத சிக்கலெலாம் புரிந்தமனம் நீக்கும்!
கண்ணுக்குத் தெரியாமல் அழுதழுது சோர்ந்த
கவிஞர்தாம் கண்கலுழும் கவிபுனையக் கூடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுள்ளோர் சிரிப்பதற்கும் வாழ்வதற்கும் இந்த
மாக்கவிஞர் இல்லையெனில் நாடுசுடு காடே!

## நீ இல்லாச் சில நாட்கள்

நீஇல்லாச் சிலநாட்கள் வீயில்லாச் சோலை!
நீரில்லா மலர்ப்பொய்கை! நிழலில்லாப் பாட்டை!
தீயில்லாக் குளிர்காலம்! சீரில்லாப் பாடல்!
திக்குந்திசை இல்லாச் செழுங்காடு போலாம்! 1

நீஇல்லாச் சிலநாட்கள் சேயில்லா வீடு!
நெடுங்கடலின் மணற்காடு! நெஞ்சள்ளாப் பேச்சு!
தம்பிஇல்லா அண்ணன்! தலைவனில்லாப்
படையாம்! 2

நீஇல்லாச் சிலநாட்கள் நினைவில்லாப் பாடல்!
நிலவில்லாப் பெருவானம்! கழியில்லா நெய்தல்!
தீயில்லா வைகறையே! தென்றலில்லா மாலை!
தெளிவில்லா நெஞ்சத்தான் விளக்கத்தைப்
போலாம்! 3

நீஇல்லாச் சிலநாட்கள் வேலியில்லாச் சாரல்!
நீரோடாப் பேராறு! நெல்விளையாச் சிற்றூர்!
காயில்லாப் பழத்தோப்பு! கண்ணில்லாப் பெண்டிர்!
காற்றில்லாக் கொடுங்கோடைக் காலத்தைப்
போலாம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனோ?

அல்லி சிரிக்கும்; நடுங்கும் மர நிழல்;
அழகு நிலவொளி பாயும்;
புல் நுனி ஒளிசெயும்; நன்மணி போலப்
புதுமணம் வீசும் கடம்பு;
நல்லிசை மீட்டும் சல்விபாய் அருவி;
நாணல் வெண்தலை அசைக்கும்;
'கொல்'லெனச் சிரித்துப் பகலெலாம் களித்த
குளிர்மரை சுருங்கிடல் ஏனோ? 1

வானிடை முளைக்கும் முழுமதி கண்டே
வாவென் றழைக்கும் குழவி;
போனதை வந்ததைப் பேசி முதியவர்
புத்துணர் வடைகிறார் நெஞ்சில்!
ஊன்மிசை உயிரில் இன்பம், அடடா!
உயர்ந்தது முழு நிலா வானில்!
மானினம் பழிக்கும் கன்னியர் கூட்டம்
வாடி வதங்கிடல் ஏனோ? 2

சூடகம் ஆர்க்கக் கைத்தலம் கொட்டிச்
சுழல்விழி நகைமுகப் பெண்கள்
பாடுவர் ஆடுவர் பாலொளி கண்டே;
பாட்டியர் பழங்கதை சொல்வார்;
காடையாம் அவனுக் கென்னுளம்
கொடுத்தேன்;
களித்தோம்; கண்டனை நிலவே!
வாடுதென் உடலுயிர்! நான்கடைத் தேற
வழிசொலா திருப்பதும் ஏனோ? 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டித க. சச்சிதானந்தன் [ஈழம்]

ஈழத்துக் கவிதைப் பாரம்பரியம் இரண்டாயிரம் ஆண்டு களாய்ச் சுடர்வீசுகிறது!

இருபதாம் நூற்றாண்டில் மகாகவி பாரதி ஆரம்பித்த மறுமலர்ச்சிக்கவித்தென்றல் ஈழத்தில் விரவ ஆரம்பித்தது, 1940ஆம் ஆண்டிலேதான்!

அந்தக் காலகட்டத்தில்,

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற மொழிகளை முறையாகப்பயின்று பழமையை முற்றாக நிராகரித்து விடாமல் யாப்பிலே புதுமை செய்து பாடப் புறப்பட்ட பெருங் கவிஞர், பண்டித. க. சச்சிதானந்தன்!

எழுபது வயதைத் தாண்டிய நிலையில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவரும் இக்கவிஞரின்கவிதைகளில் உணர்ச்சி உச்சாணிக் கொம்பில் ஊஞ்சலாடும்.

வார்த்தைகள் வசந்தமலர்களாய் வசீகரப் புன்னகை புரியும்.

சப்தநயம் கவிதைகளுக்கு மெருகூட்டும்!

தண்டமிழ்மொழியின்பால் தமக்குள்ள பற்றை வெளிப் படுத்தும் வண்ணம் 'தமிழ்க் கவிப்பித்து' எனுந்தலைப்பில் மிக உன்னதமான கவிதை எழுதியுள்ளார்!

**"பொன்னின் குவையெனக்கு வேண்டியதில்லை**
**என்னைப்**
**போற்றும் புகழெனக்கு வேண்டிய தில்லை;**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் முடியெனக்கு வேண்டியதில்லை-அந்த
மாரன் அழகெனக்கு வேண்டிய தில்லை''
என எழுச்சியோடு பாடுங்கவிஞர்,

''கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா-உயிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமே யடா
தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா-தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா''

என்று இதுகாறும் எந்தத் தமிழ்க்கவியும் பாடாத அதி ஆவேசப்போக்கில் பாடுகிறார்!

தமிழ்க்கவியின்பத்தில் பித்தாகி,

''உண்ண உணவெனக்கு வேண்டியதில்லை-ஒரு
உற்றார் உறவினரும் வேண்டியதில்லை;
மண்ணில் ஒருபிடியும் வேண்டியதில்லை-இள
மாதர் இதழமுதும் வேண்டியதில்லை!''

என்கிறார். கம்பநாடன் கவியிலாழ்ந்து,

பாட்டில் ஒருவரியைத் தின்று களிப்பேன்-உயிர்
பாயுமிடங்களிலே தன்னை மறப்பேன்;
காட்டில் இலக்குவனைக் கண்டு மகிழ்வேன்-அங்குக்
காயும் கிழங்குகளும் தின்று மகிழ்வேன்''
என்கிறார்.

இறுதியாக கவிதாபித்துத் தலைக்கேறி,

''தேவர்க்(கு) அரசு நிலை வேண்டியதில்லை;
அவர்
தின்னும் சுவையமுது வேண்டியதில்லை''
என்று பாடி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சாவிற் றமிழ் படித்துச் சாக வேண்டும்-என்றன்**
**சாம்பர் தமிழ்மணந்து வேண்டும்"**

என்று முழங்குகிறார்.

பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகளை முழுமையாகக் கல்லாத பலர்,

"சாவிற்றமிழ் படித்துச் சாகவேண்டும்" என்ற வரிகள் பாவேந்தருடையது என அரற்றி வந்தார்கள்.

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் பல மேடைகளில் அவ்வரிகள் ஈழத்துக் கவிஞர் பாடியதெனும் உண்மையை உரைத்து வந்தார்!

1991-இல் அடியேன் ஆய்வு செய்து தொகுத்த ஈழத்துக் கவிதைக் கனிகள்' நூலில் பண்டித க. சச்சிதானந்தத்தின் கவிதையை முழுமையாக வெளியிட்டு இப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தேன்.

இனி சச்சிதானந்தத்தின் பிறகவிதைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் பொங்கிப் புதுவெள்ளமாய் ஓடவேண்டுமென்ற இதயகனா கவிஞர்க்கு!

ஆனால் நடைமுறையில்?

வேற்று மொழியின் ஆதிக்கமே எங்கணும் பரவி நிற்றலைக் காண்கிறார்; கவல்கிறார்.

'தாயின் கண்ணீர்' என்ற கவிதையில் தமிழ்த்தாயே தன் நிலை கண்டு அழுகிறாள் எனும் அழகார் கற்பனையுடன் எழுதுகிறார்!

**"பிஞ்சுத் தளிர்கள் கால்தொடுவ தென்றிருந்**
**தேன்;**

**பின்னே பார்த்தேன்;**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்ச மலர் முகமும் கண்ணீரு மாகியொரு
கன்னி நின்றாள்;
காந்தள் விரலாற் கால் தொட்டாள்;
"கண்மணியே

எழு" வென்றாளே
சோர்ந்து கிடந்தேன் எழுந்திட்டேன்;
"தோகாய் நீ
யாரோ என்றேன்.
"புத்திரனே" யென்றிதழ் எடுத்தாள்; புகலாது
விக்கி நின்றாள்;
முத்தாய் உடைந்து முகம் நனைக்கும்
கண்ணீரும்
உயிர்த் தெழுந்த
விம்முதலும் பேசினவே'

எனத் தமிழ்த்தாயின் குமுறலை துன்ப ஓவியமாய் வரைகிறார் சச்சிதானந்தன்!

மேலும் தமிழன்னை,

"ஆங்கிலப்பேர் வெள்ளமொன்று ஐயையோ
வருகுதே பார்!"

என அங்கலாய்த்து அழுது வடிவதாகக் கவிஞர் எழுதுகிறார்!

இறுதியாக தமிழன்னை,

"தங்க இடமுண்டோ? என்றிந்தத் தமிழ்
நாட்டுத்
தெருக்களெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூவிக் குழறிக் குரலடைத்தேன்; கூப்பிடுவார்
எவரும் இல்லை;
வாவிக் கரையும், மலர்ப்பொழிலும்; வன நடும்
வைகி வைகித்
தன்னந் தனியே தளர்கின்றேன் தமிழ்மகனே!
தாய் நா''னென்று
விக்கிப் பொருமினாள் என்றன் அன்னை''

எனத் தமிழன்னை நிலைப்பாட்டைத் தமது உணர்ச்சிக் கவி மூலம் எம் கண்முன் கொணர்ந்து விழிகளை நனைத்திடச் செய்கிறார் கவிஞர்!

தமிழர்களைத் தட்டியெழுப்பும் வண்ணம் ''வாழ்வாம் மலையில் ஏறும் வீரன்'' எனுந்தலைப்பில்

''மலையோ நெடிது வழியோ தொலைவென்
றஞ்சாதே வீரா!
பலவாய் வருதே பலமோ இலையென்
றோயாதே வீரா!

'தலைமேல் வரட்டும், தனியே சுமப்பன்' என்
றெழுவாய் வீரா!
பகையாய் இருளும் பசியும் வரட்டும்
நெஞ்சம் சோராதே!

தொகையாய் வரட்டும் துயராய் வரட்டும்
கால்பின் வைக்காதே!
திகையா தெழுவாய் திடமாய் உரமாய்ப்
போபோபோ வீரா!''

என—

கனல் தெறிக்கும் கவிபெய்கிறார் கவிஞர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் எழில் எந்தக்கவிஞனையும் பாடத் தூண்டும்.

பண்டித சச்சிதானந்தன் 'உயிர்கூவும் அங்கே' எனுந் தலைப்பில்,

அன்ன நடை நடந்து நதியூரப்
பின்னற் கொடியசைய வளியூர,
மின்னும் பனித்துளிகள் இலையாடச்
சின்னஞ் சிறுபறவை இசைபாட
மலர்விரியும் போதென் மனம்விரியும் அங்கே!
குயில்கூவும் போதென் உயிர்கூவும் அங்கே"

என அழகின்பத்தேன் மாந்தி கம்பீரக்கவி இசைக்கிறார்!

மேலும்,

சிருங்கார ரசம் இணைய,

"வெள்ளிக் குளிர் நிலவு மதிவீசப்
பள்ளக் கடலருகின் மணல்மீது,
கள்ளக் கிளிமடவாள் அருகாக
உள்ளக் கடல் திறந்து உரையாடக்
கடல்பொங்கும் போதென் உடல்பொங்கும்
அங்கே!
கரைமோதும் போதென் உரைமோதும்
அங்கே"

என,

மதுரமணித்தமிழ் செய்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞரின் 'காதல்பூங்கா' கவிதை விரக நெருப்பில் விரிந்த மலராகப் பொலிந்திடக் காணலாம்!

"மையாம் இருள்படர்ந்து மனமிருண்டேன்;
பூவுலகப்
பொய்யால் உளமுலர்ந்தேன்; பைங்கிளியே!
நின்னன்பாம்
நெய்யாற் குளிர்வித்து நின்பூந் திருச்செல்வக்
கையால் உயிர்த்திரிக்குத் தீபமிடு
கண்மணியே!

எனப் பாடுங் கவிஞர்,

"இனிமையிலே பாலின்பம்; ஈதலிலே
திருவின்பம்
கனிவினிலே யாழின்பம்; கவியினிலே
உயிரின்பம்
நினைவினிலே அன்பின்பம்; நிலவொளியில்
நானிருக்கும்
தனிமையிலே நின்னின்பம் தோன்றுதடி
தையலாளே!

என்று மிகுந்த தாபத்தோடுப் பாடுகிறார்!

மேலும்,

வைரமணிச் சொற்கூட்டி,

"மானே கலைதேட மயில்கள் பெடைதேட
வானேகும் அன்றில்களும் வாழ்த்துணை தேட
ஊனோடுளமுருகி உயிரெல்லாம் காதலிக்க
நானே தனியிருத்தல் நன்றாமோ நாயகமே"

எனப் பாத்தீட்டுகிறார் கவிஞர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டித சச்சிதானந்தன் கவித்திறனுக்கு அவர் யாத்த "பெண்மையின் வெற்றி" குறுகாவியமும் சான்று பகர வல்லது!

அந்தக் காவியத்தில்,

"மலர்கொய்வாள்; மறித்தோடி
உயிர்கொய்வாள்; மதுவூறி
அலர்செல்லா முகைகொய்வாள்;
அன்றலர்ந்த தாமரைக்கே
பலர் சொல்லா வசை வைத்தாள்"

என்ற பகுதியும்,

"கண்டாலே கரியகண்ணால்
காமன்தன் கொடியன்னாள்;
வண்டாடும் கண்பிறழா;
வரிவளைக்கை குடங்கொள்ளா;
மொண்டாலும் நீர் மொள்ளாள்;
முந்துதமிழ்ப் பழங்கவிதை
உண்டாரின் மெய்ம்மறந்தாள்
ஊற்றமுதக் கிளிமொழியாள்"

என்ற பகுதியும்,

"நதிக்கரையில் உளம்வைத்து
நாணடைப்ப உடல்கொண்டு
மிதிக்கின்ற வழியறியாள்
மீளுகின்ற பேதையாள்
விதிக்கரையில் மோதுகின்ற
கலமாகி வெய்துயிர்த்தாள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிக்கின்ற எண்ணமெலாம்
அவனென்றி ஓர்கிலாதாள்"

என்ற பகுதியும் இக்கவிஞரின் கவிதா விலாசத்தை உன்னதமாக நிறுவுகிறது!

## வாழ்க்கைக் குறிப்புகள்

- ஈழத்தில் — யாழ்ப்பாண மாவட்டத்தின் வடக்கே உள்ள பருத்தித்துறை பகுதியில் உள்ள ஓர் சிற்றூரில் பிறந்தார்.
- இவர் தந்தையார் கணபதிப்பிள்ளை பெருஞ் சோதிடராவார்.
- கவிஞர் க. சச்சிதானந்தன் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றவர்.
- மகாவித்வான் நவநீதக்கிருஷ்ணபாரதியாரிடம் இவர் தமிழ் கற்றவர்.
- லண்டன் பல்கலைக்கழகத்தில் இருதுறைகளில் பட்டம் பெற்ற இவர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர்பட்டமும், இலங்கைப்பல்கலைக்கழகத்தில் 'கல்வி டிப்ளோமா' பட்டமும் பெற்றவர்.
- கல்லூரி ஆசிரியராக—ஆசிரியகலாசாலைவிரிவுரையாளராகப் பணியாற்றியவர்.
- எழுபது வயதைத்தாண்டிய நிலையில் யாழ்ப்பாணத்தில் இப்போது வாழ்ந்து வருகிறார்!

# தமிழ்க் கவிப்பித்து

பொன்னின் குவையெனக்கு வேண்டிய
தில்லை—என்னைப்
போற்றும் புகழெனக்கு வேண்டியதில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் முடியெனக்கு வேண்டியதில்லை—
அந்த
மாரன் அழகெனக்கு வேண்டியதில்லை!

கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா—உயிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமே யடா
தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா—தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா!

உண்ண உணவெனக்கு வேண்டியதில்லை-ஒரு
உற்றார் உறவினரும் வேண்டியதில்லை;
மண்ணில் ஒருபிடியும் வேண்டியதில்லை—இள
மாதர் இதழமுதும் வேண்டியதில்லை!

பாட்டில் ஒருவரியைத் தின்று களிப்பேன்-உயிர்
பாயுமிடங்களிலே தன்னை மறப்பேன்;
காட்டில் இலக்குவனைக் கண்டு மகிழ்வேன்—
அங்குக்
காயுங் கிழங்குகளும் தின்று மகிழ்வேன்!

மாட மிதிலைநகர் வீதி வருவேன்—இள
மாதர் குறுநகையிற் காதலுறுவேன்;
பாடியவர் அணைக்கக் கூடி மகிழ்வேன்--இளம்
பச்சைக் கிளிகளுடன் பேசி மகிழ்வேன்!
கங்கை நதிக்கரையில் மூழ்கியெழுவேன்—பின்பு
காணும் மதுரை நகர்க் கோடி வருவேன்
சங்கப் புலவர்களைக் கண்டுமகிழ்வேன்— அவர்
தம்மைத் தலைவணங்கி மீண்டு வருவேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பொற் சிலம்புடைத்த செய்தியறிந்து—
அங்குச்
சென்று கசிந்தழுது நொந்து விழுவேன்;
அம்பொன் உலகமிர்து கண்டனேயடா-என்ன
ஆனந்தம் ஆனந்தம் கண்டனேயடா !

கால்கள் குதித்துநட மாடுதேயடா—கவிக்
கள்ளைக் குடித்த வெறி ஏறுதேயடா!
நூல்கள் கனித்தமிழில் அள்ளிடவேண்டும்—
அதை
நோக்கித் தமிழ்ப்பசியும் ஆறிடவேண்டும்.

தேவர்க்(கு) அரசுநிலை வேண்டியதில்லை—
அவர்
தின்னும் சுவையமுது வேண்டியதில்லை
சாவிற் றமிழ் படித்துச் சாகவேண்டும்—என்றன்
சாம்பர் தமிழ்மணந்து வேகவேண்டும்!

## தாயின் கண்ணீர்

கூவிக் குலவிக் குருவியினம் விளையாடக்,
கொம் ரெல்லாம்
பூவிற் கிடந்து சிறைவண்டும் இசைபாடப்;
பொய்கை நீரில்

ஓடிச் சிறுமீன் உலவிவர, அசைந்துவரும்
பிள்ளைத் தென்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடைக் கனலைக் குளிர்செய்ய, இளவேனிற்
பொழுதில் ஓர்நாள்

செக்கச் சிவந்த செந்தளிரால் மாமரங்கள்
பந்தலிட்டுப்
பக்கத் தழைக்கும் பூங்காவிற் பைம்புல்லிற்
றனிமை யாகி
மெல்லத் தலைசாய்ந்தேன், அப்பொழுது,

பிஞ்சுத் தளிர்கள் கால்தொடுவ
தென்றிருந்தேன்;
பின்னே பார்த்தேன்;
கஞ்ச மலர் முகமும் கண்ணீருமாகியொரு
கன்னி நின்றாள்;

காந்தள் விரலாற் கால் தொட்டாள்;
"கண்மணியே
எழு" வென் றாளே
சோர்ந்து கிடந்தேன் எழுந்திட்டேன்;
"தோகாய்நீ
யாரோ" என்றேன்.
"புத்திரனே" யென்றிதழ் எடுத்தாள்; புகலாது
விக்கி நின்றாள்;
முத்தாய் உடைந்து முகம் நனைக்கும்
கண்ணீரும்
உயிர்த்தெழுந்த
விம்முதலும் பேசினவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிற் சிலம்பும், கொடியிடையில மேகலையும்,
வள்ளைக்காதிற்
காலித் திலங்கும் குண்டலமும், கைவளையும்
கருமை சீய்க்கும்
சிந்தா மணியும் திறங்கண்டேன்; சேவடியில்
வீழ்ந் திட்டேனே.
"எந்தாய் தமிழே" என்றேதோ குழறினேன்
ஏக்கத் தாலே.

"அன்னாய் அழுது வெதும்பாதீர்; அடியேன் நீர்
ஈன்ற பிள்ளை
சொன்னாற் குறைகள் துடையேனோ
சொல்லும்" என்றேன்.
கன்னி கலங்கினாள்; கட்டுரைத்தாள்,
"வெள்ளம் புரண்டு வருகுதப்பா! வீதியெலாம்
வேகத் தோடே
தெள்ளு தமிழ் ஏட்டுச் செல்வமெலாம்
சிதைத்துக்
குலைத்து வாரி

பச்சைத் தமிழ்த்தேன் பரிமளித்த முன்றில்களை
மூழ்க மூடி,
மெச்சிப் புலவர் எனைவளர்த்த சங்கமெலாம்
மேல்கீ ழாக்கி,
முன்னைப் பழையோர் முத்தாடிச் சேர்த்தகலை
சிதறிப் போகத்
தென்னன் மதுரைத் தெருவெல்லாம்
வருகுதப்பா
அங்கேபார்! மகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலப்பேர் வெள்ளமொன்று ஐயையோ
வருகுதே பார்!
தாங்கி வளர்த்த தமிழ்மன்னர் மனைக்கெல்லாம்
ஓடிப் போனேன்.
மண்ணில் முடிசாய்ந் (து) உறங்குகிறார்
மன்னரெலாம்
மனையும் சாய
சங்கப் பலகைக் கோடினேன்சூழ் தண்ணீருட்
தாழக்கண்டேன்;

'தங்க இடமுண்டோ?' என்றிந்தத் தமிழ்
நாட்டுத்
தெருக்களெல்லாம்
கூவிக் குழறிக் குரலடைத்தேன்; கூப்பிடுவார்
எவரும் இல்லை;
வாவிக் கரையும், மலர்ப்பொழிலும், வனநடுவும்
வைகி வைகித்
தன்னந் தனியே தளர்கின்றேன் தமிழ்மகனே!
தாய் நா'' னென்று
விக்கிப் பெருமினாள் என்றன் அன்னை.

## உயிர் கூவும் அங்கே

அன்ன நடை நடந்து நதியூரப்;
பின்னற் கொடியசைய வளியூர,
மின்னும் பனித்துளிகள் இலையாடச்,
சின்னஞ்சிறு பறவை இசைபாட,

மலர்விரியும் போதென் மனம்விரியும் அங்கே!
குயில்கூவும் போதென் உயிர்கூவும் அங்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக் குளிர் நிலவு மதிவீசப்,
பள்ளக் கடலருகின் மணல்மீது,
கள்ளக் கிளிமடவாள் அருகாக,
உள்ளக் கடல்திறந்து உரையாடக்;

கடல் பொங்கும் போதென் உடல்பொங்கும் அங்கே
கரைமோதும் போதென் உரைமோதும்
அங்கே!

கொம்பிற் குழைமலரும் ஓர்காவில்,
அம்புற் றளிரணைமேற் றலைசாய்ந்து,
வம்புப் புதுத்தென்றல் சுகமாக,
கம்பன்கவி வந்து நாவூறக்

கரைமிஞ்சிப் பாடும்போ தெதுவுந்தான் வேண்டேன்
உரைமிஞ்சிக் கூவும்போ துலகொன்று
காண்பேன்!

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

# மஹாகவி

## 1927-1971

இருபதாம் நூற்றாண்டுக் கவிதை வளர்ச்சிக்கு மிக உறுதுணையாக இருந்த கவிஞர்களில் 'மஹாகவி' என்ற புனை பெயரில் பாக்கள் பின்னிய உருத்திர மூர்த்தியும் ஒருவர்!

பாரதிதர்சன் பாணியில் பல கவிஞர்கள் பைந்தமிழ் நாட்டில் கவிகள் கட்டப் புறப்பட்டார்கள்.

அதுபோலவே 'மஹாகவி' கொணர்ந்த புதிய கவிப் பாணியைப் பின்பற்றி ஈழத்தில் ஓர் கவிஞர் குழாம் உதயமானது!

பேச்சோசை பண்பை அதிகமாகப் பேணி மண்ணின் வாசனை கமழ, நாளாந்த நிகழ்வுகளை இயல்பாகக் கூறுவதே இக்கவிஞரின் கவிதைப்பாணி.

கவியெழுத ஆரம்பித்த காலத்தில் இவருக்கு முன்னோடியாக அமைந்தவர்கள் பாவேந்தர் பாரதிதாசனும், தமிழகம் அறியத்தவறிய அருமைக்கவிஞர் கலைவாணனும் ஆவர்.

கால ஓட்டத்தில் தமக்கெனத் தனிப்பாணியைக் கவித்துறையில் வரித்துக்கொண்டவர் மஹாகவி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கவியாக மலர்ந்த ஞான்று,

''பிஞ்சுப் புதுநெஞ்சைப் பீறிட்டுப் பொங்கிவரும்
பேச்சில், பிறநாட்டார் பெறாதபெரும் பேற்றில்
உயிர்
மிஞ்சித் தெறிக்கின்ற மேம்பாட்டுப் பாட்டில் எனை
மீறிப் பறக்கின்ற மின்சார வீச்சில், அட
கிஞ்சித்துமே அழகு கிடையாதாம், கேட்டாயா?
கேடுற்றவரிடையே கெட்டழியா தென்னிடமே
எஞ்சிக் கிடக்கின்ற இன்தமிழ் இவ்வெண்பாக்கள்
என்றைக் கொருநாளோ எத்திசையையும்
வெல்லும்''

என உணர்ச்சி யோங்கத் தன்னம்பிக்கையோடு பாடுகிறார் இவர்!

'எங்கள் ஊர்' எனுந்தலைப்பில் ஒரு கிராமத்துக் காலைப்போதின் நிகழ்வினை,

''வயலினை பாலை
வனமாக்கு கின்ற
வெயிலுக்கு முன்னர்
உழவர் விரைந்தெழுந்து
'போயிலை'க்கு நீர் இறைக்கப்
போவார்கள்; போம் வழியில்
நாய்கள் விழித்துக்
குரைத்து நமை எழுப்பும்!
கோழிகளும் கொம்பிருந்து
கொட்டாவி விட்டெழுந்து

நாழியாய் விட்டதென
நாட்டுக்கறிவிக்கும்"

என மிக அருமையாக—இயல்பாக இக்கவிஞர் எழுதுகிறார்!

தமது 'கிராமம்' கவிதையில் கிராம வாழ்க்கை கவிதா உணர்வை கிளர்ந்தெழச் செய்யும் என்பதனை,

"நாள் முழுதும் பாடுபடுவார்கள்—ஓயார்
நன்று புரிவார் இரங்குவார்கள்;
ஆள் புதியன் ஆனாலும்
ஆதரிப்பர்; போய் உதவுவார்கள்-ஊரார்கள்
பூமலியும் பொய்கை மகிழ்வாக்கும்; - அங்கு
போ, அருகில் குயில்பாடல் கேட்கும்!
நீ மடிந்த தென்றிருந்த
நின்கவிதை யுணர்வுதலை தூக்கும்
பாஆக்கும்"

என்று அழகுறக் கூறுகிறார்!

ஈழத் தலைநகராம் கொழும்பில் அரசு பணியில் இயந்திரமாகச் செயற்பட்ட கவிஞர் விடுமுறையில் யாழ்ப்பாணம் போக நேர்ந்த பேரின்ப அநுபவத்தை,

"இந்நாளெல்லாம் எங்கள் வீட்டுப்
பொன்னொச்சிச் செடி பூத்துச் சொரியும்
முல்லையும், அருகே மல்லிகைக் கொடியும்
கொல்லெனச் சிரித்துக் கொண்டிருக்குங்கள்
அல்லவோ? வயல்கள் எல்லாம் பச்சை
நெல்நிறைந்திருக்கும் என்நாட்டில்! பாட்டும்
பாடாத உழவன் பாடுவான்!துலாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடாது நிற்கும் அன்றோ! இன்றே!

யாழ்ப்பாணத்தை யான் அடையேனோ!
கூழ்ப் பானையின் முன்கூடிக் குந்தி
இருந்து இலைகோலி, இடுப்பில் இட்டு
ஊட்டிய
கரம் தெரிந்துஊற்றும் அவ்விருந்து அருந்தி
லனோல்,
பட்டினி போக்கா பழம், பால், இவ்வூர்
ஓட்டலின் மூட்டை ரொட்டிகள்! அன்னை
பழஞ் சோற்றுண்டி கிழங்கொடு பிசைந்து
வழங்கலை நினைத்தால் வாயூறாதோ?"

என பைந்தமிழ்ச் சித்ரமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்!

ஆணவத்தின் உச்சியிலே நிற்கும் மாந்தர் அன்பின் அருமையை அறியாது போயினர்!

யுத்த வெறி கொண்டு ஒருவரை ஒருவர் கொன்று மடிகின்றனர்!

இது ஜெகமெங்கணும் காணப்படும் விபரீதப் போக்கு!

'மஹாகவி'க்கு இது பொறுக்கவில்லை!

விஞ்ஞானம் வளர்ந்தென்ன? அறிவுலகச் சாதனைகள் விரிந்தென்ன?

சாந்தி போயிற்றே!

சமாதானம் அர்த்தமற்றதாகி விட்டதே— என்ற கவலை கவிஞர்க்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இதனை 'மடிகிறோம்' எனுந் தலைப்பில்,

**''குரங்கிலே பிறந்து கொலையையே பயின்று
கொடியராய் குருடராய் இன்று
கரங்களில் ரத்தக் கறைவிழ அணுவின்
கடையுகக் கனலெழும் யுத்தத் (து)
அரங்கிடைப் பூமி உருண்டையைப் பிளக்க
அடுக்குகள் எடுக்கிறோம்! முன்பு
மரங்களில் வாழ்ந்தும் மகிழ்ந்த நம் இனத்தை
மாய்கிறோம் மடிகிறோம் மனிதர்!''**

என்று ஆதங்கத்தோடு நேயச்சித்ரம் தீட்டுகிறார் அவர்!

மழை காணா மண்ணிலும் பாறை பிளந்து பயிர் உண்டு பண்ணும் விவசாயி பற்றி மகாகவி 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' எனுங் கவிதையில்,

**''மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது!
ஏர்
ஏறாது, காளை இழுக்காது
எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன்விளைப்பான்
என் ஊரான்''**

எனச் சொல்லி,

**ஆழத்து நீருக் ககழ்வான் அவன்
நாற்று
வாழத்தன் ஆவி வழங்குவான், ஆதலால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கி வளர்ந்து பொலிந்ததுபார்
நன்னெல்லு"

என்று விவசாயியின் பீடுடை பணிப்பாங்கில் தன்னை மறக்கிறார் கவிஞர்!

மீனவத் தொழிலாளிக்கு 'நீருழவன்' எனும் புதுப்பெயர் சூட்டி ஓர் அருமையான கவிதை ஆக்கியுள்ளார் கவிஞர்!

...............

"வெட்டவெளி
நீரை உழுதான்
நெடுநாட் பழக்கம் இது
பாரை, சுறா என்று பார்த்திருக்கும்
ஊரை
மகிழ்விக்க வல்லமனிதன், வயிற்றை
அகழும் பசியால் அயரான்
பகல்முற்ற
முன்னர் தன்வற்றா முயற்சிக்கிவை ஈடே
எனும்படி நிறைந்த எவ்வளவோ
மின்னுகின்ற
மீனின் சுமையோடு மீள்கின்றான்"

என்று அழகுறப்பாடி,

உழைப்பே ஆனந்தமென்பதை,

"பேருழைப்பு
ஈனும் மகிழ்ச்சிக் கெதிரேது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடன்

தொட்டால் துலங்காத தொழில் உண்டோ?"

என்று தெளிவாகக் கூறுகிறார்.

மஹாகவியின் 'தேரும் திங்களும்' கவிதை மிகச் சிறந்தது.

சமூகச் சாதி பைசாசத்தின் கோரத்தாண்டவம் கவிஞரின் இதயத்தை வாட்டுகிறது! சந்திரனில் காலடி வைத்த மாந்தர் பரம்பரை சாதித் திமிரில் அழிகிறதே என்பதை,

"ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே!
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை"
என்று
வந்தான் ஒருவன்

...............

வந்தான் அவன்ஓர் இளைஞன்,
மனிதன் தான்
சிந்தனையாம் ஆற்றற்சிறகுதைத்து வானத்தே
முந்தநாள் ஏறி முழுநிலவைத் தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி"

என்று அறிமுகப்படுத்தி, அவன் வடம் இழுக்க முயலுகையில்,

"நில்" என்றான் ஒராள்
"நிறுத்து" என்றான் மற்றோராள்
"புல்" என்றான் இன்னோராள்
"கொல்" என்றான் ஒராள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொளுத்து" என்றான் வேறோராள்.
கல்லொன்று வீழ்ந்து கழுத்து வெட்டுண்டு,
பல்லோடு உதடு பறந்து சிதறுண்டு,
சில்லென்று செந்நீர் தெறித்து தெறித்து
நிலம் சிவந்து,
மல்லொன்று மனிசர் கொலையுண்டார்!"

என்று நிகழ்ந்த கொடுமையினைக் கூறும் கவிஞர், இறுதியாக—

முந்தநாள் வான முழுநிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்,
அதோ மண்ணில் புரள்கிறது"

எனக் கவிதையை அழகுறப்பூர்த்தி செய்கிறார்.

மஹாகவி இயற்கை எழிலேந்தும் நற்கவிகள் பின்னியுள்ளார்.

'காட்டுமல்லிகை' எனுந் தலைப்பில்,

"கார்காலம் வரவும் வானம்
கவிழ்த்தது மழை நன்னீர்; இப்
பாரெலாம் செழிக்க, நீ என்
ஊரெலாம் மலர்ந்தாய் கண்டேன்,
காட்டு மல்லிகையே! உன்னை
யார் தள்ளினாலும் என்ன?
யானுளேன் பாடுதற்கு!"

எனப் பாடிச் செல்கிறார் பாங்கோடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவேனில் கால அழகில் ஆழ்ந்து,

...............

"வெயிலடிக்காச் சோலையில்,
மாந்தளிர் மலர்கள் மீது
வீற்றிருக்கின்றாள் கொலு
அவ் விளவேனில் மாது;
குயில் எடுக்கும் குரல்காட்டிக்
கூப்பிடுகின்றாளே,
கும்மியடித்தானந்தம்
கொள்ள இதுநாளே"

...............

என பாடிச் செல்கிறார்!

ஈழத்துக் கவிச் செம்மலான மஹாகவி பேச்சோசைப் பண்பைப் பேணி மண்வாசனை கொஞ்ச யாப்பைச் சிதையாமலேயே புதிய கோணத்தில் பாட்டிசைத்த தனித்துவம் மிக்கவர்.

அது மட்டுமல்ல—

ஜப்பான் கவி வடிவொன்றை அடியொற்றிக் 'குறும்பா' என்ற புதுவகைப் பாவினத்தைத்தமிழுக்கு அறிமுகப்படுத்திய முன்னோடியும் அவரே!

## வாழ்க்கைக் குறிப்புகள்

- யாழ்ப்பாணம் மருங்கே அலவெட்டி எனுங் கிராமத்தில் 9-1-1927இல் பிறந்தார்.
- 1943இல் இருந்து இவர் தம் பாக்கள் கிராம ஊழியன், மறுமலர்ச்சி, ஆனந்தன் வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● 19 ஆம் வயதில் கிளார்க்காக அரசாங்கப் பணியில் சேர்ந்த இவர் 1967 இல் இலங்கை நிர்வாக சேவைத் தேர்வில் சித்தியடைந்தார்.

● 1970இல் அரசகரும மொழித்திணைக் களத்தில் உதவி ஆணையாளராகப் பதவி பெற்றார்.

● தமிழ் உலகின் மிகச் சிறந்த தனித்துவக் கவிஞர்களில் ஒருவரான இவர். 1971 ஆம் ஆண்டு 20ம் தேதி மீளாத்துயிலாழ்ந்தார்.

## யாழ்ப்பாணம் செல்வேன்

இந்நாளெல்லாம் எங்கள் வீட்டுப்
பொன்னொச்சிச் செடி பூத்துச் சொரியும்
முல்லையும், அருகே மல்லிகைக் கொடியும்
கொல்லெனச் சிரித்துக்கொண்டிருக்குங்கள்
அல்லவோ? வயல்கள் எல்லாம் பச்சை
நெல்நிறைந்திருக்கும் என் நாட்டில்!பாட்டுப்
பாடாதஉழவன் பாடுவான்! துலாக்கள்
ஆடாது நிற்கும் அன்றோ இன்றே!

யாழ்ப்பாணத்தை யான் அடையேனோ!
கூழ்ப்பானையின் முன்கூடிக் குந்தி
இருந்து இலைகோலிஇடுப்பில்இட்டுஊட்டிய
கரம் தெரிந்துஊற்றும் அவ்விருந்து
அருந்திலனேல்,
பட்டினி போக்கா பழம், பால், இவ்வூர்
'ஓட்டலின் முட்டை ரொட்டிகள்! அன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழஞ்சோற் றுண்டி கிழங்கொடு பிசைந்து
வழங்கலை நினைத்தால் வாயூறாதோ?

கடவுளே! உடனே உடுத்துக் கொண்டு
அடுத்த ரயிலைப் பிடித்துக் கொள்கிறேன்.
யாழ்ப்பாணத்தை யான் அடைவேனே!
தாழ்ப்பாள் இட்டுத் தனிப் பெட்டியிலே
நித்திரை போய்ப்பின் நிமிர்ந்து பார்த்தால்
அத்தரை யன்றோ! அடடா, அந்தப்
பெற்ற பொன்னாட்டைப் பிரிந்து
இனிமேலே
சற்றும் இக்கொழும்பில் தங்கேன்! இங்கே

முலை இளம் முளைகள் முளைந்தெழுவதனை
கலைகுறைத்து அணியும் கன்னியர்
காட்டவும்
'தலை இழந்தே' நாம் தடந்தோள் ஒலிக்கும்
சட்டைகள் கைகள் முட்டஇட்டும்
பட்டிகள் கழுத்தை வெட்ட விட்டும்
கொட்டிடும் வியர்வையிற் குமைவதா?
இவற்றை
விட்டெறிந்து எண்சாண் வேட்டி கட்டி
முட்டொழியலாம் அம்மூதூர் செல்வேன்.

## பல்லி

தாய்முலை உண்டு தழைத்து மகிழ்ந்து
வாயினிலே தயிர் சிந்தியதொன்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் உலை முட்டிடுவாளை மறந்து
பாயில் உருண்டது, பாதம் எறிந்து;

நீச்சலடிக்கும் நிலத்தில் மலர்க்கை
வீச்சினில் விண்ணில் மிதக்க நினைக்கும்
கூச்சலிடும் களிகொண்டு எதுகண்டும்
ஆச்சரியக் கடல் ஆழம் அமிழ்ந்தும்.

காற்றில் எழும் கடுகோ என முன்னே
தோற்றும் அவ்வண்டு, தொடர்ந்திரு
கண்கள்
ஏற்றிய விற்புருவங்கள் இறக்கி
ஊற்றில் அதோடும் இருந்தன கீழே,

விந்தை நிகழ்ந்தது வேறிலை அங்கே
சிந்திய மைத்துளி போற் சிறுவண்டு
குந்த, இருந்த ஓர் பொந்தை அகன்று.
வந்ததை உண்டு நடந்தது பல்லி.

அம்ம, அதோமிக ஆத்திரம் உற்றில்
வெம்மையினால் உளம் வெந்துவெகுண்டு
'கும்மியடித்த' குழந்தை துடித்து
விம்மிவெடிந்து விசித்தலறிற்று.

அன்னை நுழைந்தனள் அள்ளி
அணைத்தாள்
கன்னம் நனைந்த கண்ணீரை அழித்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன எதற்கென ஏங்கி இளைத்தாள்.
தன் அருமார்பை அருந்த அளித்தாள்.

## தேரும் திங்களும்

"ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே;
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை"
என்று
வந்தான் ஒருவன்.

வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்திங்கு நூறாண்டு வாழ்வதற்காய்ப்
பெற்ற மகனே அவனும்,
பெருந்தோளும்

கைகளும், கண்ணில் ஒளியும், கவலையிடை
உய்ய விழையும் உளமும் உடையவன்தான்.
வந்தான். அவன்ஓர் இளைஞன்;
மனிதன் தான்.

சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து வானத்தே
முந்தநாள் ஏறி முழுநிலவைத் தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி!

"ஈண்டுநாம் யாரும் இசைந்தொன்றி நின்றிடுதல்
வேண்டும்" எனும் ஓர் இனிய விருப்போடு,
வந்தான் குனிந்து வணங்கி வடம்பிடிக்க—

"நில்!" என்றான் ஓராள்
"நிறுத்து" என்றான் மற்றோராள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புல்" என்றான் ஓராள்
"புலை" என்றான் இன்னோராள்
"கொல்" என்றான் ஓராள்
"கொளுத்து" என்றான் வேறோராள்.

கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு,
பல்லோடு உதடுபறந்து சிதறுண்டு,
சில்லென்று செந்நீர் தெறித்து
நிலம் சிவந்து,
மல்லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்.

ஊரெல்லாம் கூடி இழுக்க உகந்த தேர்
வேர் கொண்டது போல் வெடுக்கென்று நின்றுவிடப்
பாரெல்லாம் அன்று படைத்தளித்த அன்னையோ
உட்கார்ந் திருந்துவிட்டாள் ஊமையாய்த்
தான் பெற்ற
மக்களுடைய மதத்தினைக் கண்டபடி.

முந்தநாள் வான முழுநிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்,
அதோ மண்ணிற் புரள்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

# முடியரசன்

## [ 1920 ... ]

இருபதாம் நூற்றாண்டுக் கவியுலகிற்கு தெளிவும், ஓசைச் சிறப்பும் மிக்க கவிதைகளால் தம் பங்களிப்பைச் செய்தவர் இவர்!

பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களில் மிக விசேடமாகக் குறிப்பிட வேண்டியவண்ணம் இவர்தம் பாக்கள் பல வீச்சோடு அமைந்துள்ளது.

'அழகின் சிரிப்பு' என்னும் மகுடத்தில்,

**"அலைகடலின் அப்புறத்தே ஓரக் கோட்டில்**
**அடரிருளை அகற்றியபின் கிழக்கு வானில்**
**கலையாத செந்நிறத்தைப் பூசி விட்டுக்**
**காதலியைக் காணவரும் காதலன்போல்**
**தலைகாட்டிக் கதிரவன்தான் சிரித்துக் காட்டும்**
**தன்மையினில், மகிழ்வூட்டும் அழகு தன்னில்,**
**கலையழகு சிரித்துவிளை யாடக் கண்டு**
**கழனிகளின் வரப்போரம் நடந்து சென்றேன்"**

என தமது அழகுக் கவிதையால் எமை வசப்படுத்தும் கவிஞர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தர் வாழ்வு வளப்பின்றிக் கிடக்கிறதே! சுரண்டும் வர்க்கத்தால் சுருண்டு போய்க் கிடக்கிறதே என வேதனைப் படுகிறார்!

இதனை,

..................

"இங்கெல்லாம் சிரிக்கின்ற அழகு கண்டேன்
இனியதமிழ் பேசுகின்ற மனிதன் வாழ்வில்
பொங்கிவரும் அழகில்லை! உழைத்துண்டாக்கும்
பொருளெல்லாம் பிறர்நுகரப் பெற்றதாலோ
தங்குலம் வாழாமல் சுரண்டுவோரைத்
தரைமட்டம் ஆக்களமும் எண்ணத்தாலோ
மங்குமவன் முகத்தினிலே சிரிப்பும் இல்லை!
மனிதரினம் விலங்கினமாய் வாழ்தல் நன்றோ

எனக் கனலேந்துந் தமிழெழுதுகிறார்!

'இயற்கைத்தாய்' எனுங்கவிதையில், மலர்கள்தோறும் வண்டுகள் சென்று தமிழ் பாடுவதாக கவிஞர் கற்பனை செய்கிறார்.

அக்கவிதை—

"தென்றலெனும் தொட்டிலிலே எனைக்கிடத்தித்
தேன்நுகர மலர்கள் தோறும்
சென்றிருந்து தமிழ்பாடும் 'வண்டொலியால்'
செவிகுளிரத் தாலே தாலோ
என்றினிய தாலாட்டித் துயின்றிடுவாள்;
எழுந்தழுதால் ஆறுகாட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றிருந்து வீழருவி, கடல்காட்டிக்
கொஞ்சிடுவாள் மலர்கள் காட்டி"

என இயற்கைத்தாயின் தயையை தண்டமிழ்க் கவியாகப் பொழியும் திறன் வியக்கத்தக்கது!

முடியரசனின் எழில் எனுங்கவிதை,

"கண்ணொன்றால் காவியத்தை ஆக்கிக் காட்டும்
காரிகையார் நடையுடையில் எழிலின் தேக்கம்,
மண்தின்றால் தீமைஎன அறியாப் பிள்ளை
மழலைமொழிப் பார்வைகளில் எழிலின் ஓட்டம்
விண்சென்று மீளுகின்ற பட்டம் விட்டு
விளையாடும் சிறுசெருவில் எழிலின் பாய்ச்சல்
தண்ணென்ற புனலோடைச் சலசலப்பில்
தகுமெழிலின் பளபளப்பு விளங்கக்
கண்டேன்"

என்றமைந்து, கற்பனைச் செறிவும், இயல்போட்டமும் இயைந்து விளங்குகிறது!

மாடமாளிகைக்கும், சிறு குடிசைக்கும் பேதமின்றி ஒளிபெய்யும் நிலவின் போக்கு கவிஞர்க்கு அனைவர்க்கும் அனைத்தும் 'உடைமை' என்ற பொதுவுடைமைச் சித்தாந்தத்தை ஞாபகம் செய்கிறது.

'நிலவு' எனுங்கவிதையில் இதனை,

"பொதுவுடைமை ஆட்சியினை இரவுப் போதில்
புரிகின்ற முழுமதியே! உன்னைக் கண்டு
மதுவுண்ட வண்டானேன்; இன்பப் பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்குளிர மனங்குளிரப் பாடி நின்றேன்"
என்ற வரிகளால் அழகுறச் சொல்கிறார்!

தொடர்ந்து,

"ஆரியத்தால் ஒளியிழந்த தமிழர் போல
அழகிழந்தாய் உனையடைந்த மேகத்தாலே
நாரியரின் முகங்கண்டு நாணி உள்ளே
நண்ணினை நீ என எண்ணி நகைத்தாள்
முல்லை

வேறினத்தார் நாடாள வீணன் அல்லேன்
வேலெடுத்துப் போர்த்தொடுப்பேன்
வெற்றி கொள்வேன்
சீரழிப்பேன் எனக்கிளம்பும் வீரன் போலச்
சிரித்தெழுந்தாய் மேகத்தை பிளந்து மேலே

என கருத்தும், வேகமும் மிக்கதாக கவிஞரால் புனையப் பட்டுள்ளது.

கவிஞரின் 'புதருள் கனி' எனுங்கவிதை ஓர் விதவையின் அவலநிலை கண்டு ஆர்த்தெழுந்து சமூகத்தின் பேதமை உணர்வைச் சாடும் வண்ணமுள்ளது!

"உருத்தெழுந்த மார்பகத்தாள்
வில்லொடித்த புருவத்தாள்
உள்ளத்தே தைத்தோடிப்
பாய்கின்ற வேல்விழியாள்
கருத்தெழுந்த மேகத்தைப்
புறங் கண்ட சுரிகுழலாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னத்தில் அழகொளியாள்
அன்னத்தின் எழிலுடையாள்!"
....................

என்று அருமையாக விதவைப் பெண்ணை வருணித்துச் செல்லும் கவிஞர்.

விதவைப்பெண்ணே தம்மிடம்,

"சிந்துகின்ற நீர்துடைத்து
விருப்பந்தான் ஆனாலும்
சீறிடுவர் உறவினர்தாம்
சாதியினில் ஒதுக்கிடுவர்
நிந்தனைகள் பேசிடுவர்
நேர்நிற்க ஆற்றலிலேன்
நீறாகிப் போகாதோ
நேர்மையற்ற சட்டமெலாம்"

கூறுவதாகப் பாத்தீட்டி திண்ணமுறத் தம் எண்ணத்தை இயம்புகிறார்.

முடியரசனின் ஊரார் என்ற பாட்டும் மிகச்சிறப்பானது!

"வாழவிடார் சாகவிடார் வாழ்வில் ஓர்நாள்
வகைகெட்டு வறுமையுறின் உதவமாட்டார்;
ஏழைஎனில் எதுசெயினும் ஊரார் கூடி
இதுகுறையாம் அதுகுறையாம் என்று நம்மைத்
தாழவுரைத் தின்புறுவர்; செல்வன் என்ன
தகிடுதத்தம் செய்தாலும் தானம்போட்டு
வாழவென்றே காக்கைபிடித் தலைவர் அந்தோ!
வாழ்கின்றார் மனிதரெனும் பெயரும் தாங்கி!"

என எங்கணும் காணக்கிடக்கும் யதார்த்த போக்கினை மக்கள் மனோபாவத்தை தெளிவாகக் கூறுகிறார் கவிஞர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுத் துணைவியிடம் பெறுகின்ற இன்பத்தைக் காட்டிலும் குழந்தையிடம் பெறுகின்ற இன்பம் மேலானது என்பதனை,

'குழந்தை இன்பம்' கவிதையில்

"நரம்பேறும் யாழ்மீட்டிக் காதல் கூட்டி
நல்லிசையால் மகிழ்வூட்டி இருக்கும்போதும்
மரஞ்சேர்ந்த மாதுளைபோல் தோன்றும் உன்றன்
மார்பகத்தால் பேரின்பம் தந்த போதும்
சுரந்தூறும் உன்இதழைச் சுவைக்கும் போதும்
சொல்லரிய இன்பத்தைக் காணுகின்றேன்
இருந்தாலும் என்குழந்தை மெய்யில் தாவி
இளங்கையால் தொடுகின்ற இன்பம் ஆமோ?",

அற்புதமாக வெளிப்படுத்துகிறார் கவிஞர்!

முடியரசன் தொழிலாள நேயம் மிகுந்தவர் என்பதனைத் தமது 'தொழிலாளி' எனுங்கவிதையில்,

..................

"ஆடையிலே அழுக்ககற்றித் தூய்மை ஆக்கி
அழகுசெய்து தருகின்றோன், பொலிவு
குன்றத்
தாடையிலே வளருமதை வழித்தொழித்து
தளிர்கின்ற முடிவெட்டி அழகு செய்வோன்,
கோடையிலே வருந்தாமல் முள்ளால் கல்லால்
கொடுமையொன்றும் நேராமல் நடப்பதற்குச்
சோடையின்றிச் செருப்பளிப்போன் இவர்க
ளெல்லாம்
தொடக்கூடாச் சாதி என்றால் தொலைக
வையம்!"

என எழுச்சியோடு சொல்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியரசன் இனமானக்கவிஞர் தண்டமிழ்க்காதல் மிக்கவர் இதனை,

'மொழியுணர்ச்சி' எனுந்தலைப்பிலுள்ள,

.....................

'ஆங்கிலமோ பிறமொழியோ பயின்று விட்டால்
அன்னைமொழி பேசுதற்கு நாணுகின்ற
தீங்குடைய மனப்போக்கர் வாழும் நாட்டில்
தென்படுமோ மொழியுணர்ச்சி ஆட்சி மன்றில்
பாங்குடன்வீற் றிருக்கும்மொழி தமிழே என்று
பகர்நாளில் மொழியுணர்ச்சி தானே
தோன்றும்
ஈங்கதற்கா என்செய்யப் போகின்றீர்நீர்?
இளைஞரினி விழித்தெழுந்தால் விடிவு
தோன்றும்

என ஆவேசமாகப் பாடுங்கவிஞர், பின்பு,

"வணக்கமெனச் சொல்பவரைக் கட்சி சார்த்தி
வாட்டுகிறோம்; தாய்மொழியைப் புதைத்து
விட்டுப்
பிணக்கல்லில் வரவேற்பு நல்கல் வேண்டேன்
பிறமொழியின் அடிமைகளே" என்று சொன்ன
குணக்குன்றாம் நம்காந்தி எந்தக் கட்சி?
குறிக்கோளாய் வங்கமொழி வளர்ப்பான்
வேண்டி
பிணக்கின்றிப் பலநூல்கள் தந்த தாகூர்
பேணினரே மொழியுணர்ச்சி எந்தக் கட்சி?"

எனத் தம் அழகார் கவிதைமூலம் ஆழமான வினாத் தொடுக்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழ்க்காதலி' என்ற தலைப்பில் கவிஞர் தமிழின் மீதுள்ள பற்றை,

"தென்னகத்துத் திருமகளே கனியே நெஞ்சில்
தித்திக்கும் கனிச்சாறே! சுவையே! தேனே!
என்னகத்து நின்று நடம் ஆடும் பாவாய்!
எழிலரசி! எஞ்ஞான்றும் இளமைத் தோற்றம்
நின்முகத்துக் காண்கின்றேன் களிப்பில் மூழ்கி
நிகரில்லை நினக்கென்றே நிமிர்ந்து நோக்கி
உன்னலத்தைக் காதலித்தேன் உயிர்மூச் செல்லாம்
உனக்கென்றே வாழ்கின்றேன் தமிழ ணங்கே!"

என நேர்த்தியாகப் பாடுகிறார்!

**வாழ்க்கைக் குறிப்புகள் :**

- 7-10-1920இல் பெரிய குளத்தில் பிறந்தார்.
- தந்தையார் சுப்பராயலு, தாயார் சீதாலட்சுமி
- துரைராஜ் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் முடியரசனாகி முடியரசன் கவிதைகள், காவியப் பாவை, பூங்கொடி போன்ற இலக்கிய நூல்கள் மூலம் தம் கவிதா சக்தியை இனங்காட்டினார்.
- காரைக்குடி உயர்நிலைப்பள்ளி ஒன்றில் பலகாலம் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.
- சாகித்ய அக்கடமி மூலம் இவர்தம் கவிதைகள் பல வேற்றுமொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன.

## கவிதைப் பெண்

உணவில்லை உடையில்லை என்று வாட்டும்
ஓயாத கவலையில்லை; அந்த நாளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணல்நின்று கடல்கண்டேன் வானில் நிற்கும்
மதிகண்டேன் மலர்கண்டேன் வயல்கள்
கண்டேன்
தணல்கூரும் கதிர்கண்டேன் அங்கங் கெல்லாம்
தணியாத காதலுடன் கவிதை என்னும்
அணங்கிருந்து புன்னகைத்துக் கடைக்கண்
ணோக்கால்
அருகழைப்பாள் பேசாமல் நானிருப்பேன் 1

இதழ்விரித்துத் தென்றலெனப் பாட்டிசைப்பாள்
எழில்மயிலாய்த் தோகைவிரித் தாடி நிற்பாள்
விதவிதமாய் நிறங்கொண்ட துகிலுடுத்து
விளையாடிச் செவ்வானில் காட்சி நல்கப்
புதுமாலைப் பொழுதாகி நின்றிருப்பாள்
பூமணத்தை வீசிடுவாள் மயங்கிருட்டில்
மதிமுகத்தைக் காட்டிடுவாள் எனைமயக்கி
வந்தணைப்பாள் இன்பத்தைக் கண்டு
ணர்ந்தேன் 2

உயிராகி உணர்வாகி என்னகத்தே
ஊடாடிச் சொல்லரிய மகிழ்வளித்துச்
செயிரேதும் இல்லாத காதல் கொண்டு
சேர்ந்துறைந்தாள்; சின்னாளில்
செம்பொற் றாலிக்
கயிறதுவால் பெண்ணொருத்தி மனைவியானாள்
இல்லறத்துக் கடன்பலவும் முறையாய்ப் பேணி
வயிறுநிறை செயலொன்றே தலையாய் எண்ணி

வாழ்ந்தேன் நான் ஆயினுமோர் சுவையே
யில்லை 3

மனஞ்சலித்துக் கடற்கரையிற் சோர்ந்து நின்றேன்
மனங்கவர்ந்த கவிதைப்பெண் வந்து நின்றாள்
எனைமயக்கி ஏகிவிட்ட எழில ணங்கே
என் துயரம் அறியாயோ? மற்றொ ருத்தி
தனைமணந்தேன் என நினைந்தோ சென்று
விட்டாய்?
தவிக்கின்றேன் உனைக்காண அருகில் வாவா!
எனைமறத்தல் சரியாமோ? முறையோ? என்றேன்
''என்னன்பா! உனைமறவேன் உண்மை
சொல்வேன் 4

உன்மனைவி பணிவிடையில் உனக்குப் பாவை
உவந்தளிக்கும் இன்பமதில் மதலை நல்கும்
இன்னமுத மழலைதனில் விழியில் மெய்யில்
இற்கிழத்தி புலந்திருக்கும் விழியில் பேச்சில்
என்னையினிக் காண்பரிது; குடல்வ ளர்க்க
இரந்துண்போன் பொற்கரத்தில் உழைப்பால்
ஓங்கும்
வன்புயத்தில் விதவையர்கண் சிந்தும் நீரில்
வாழ்கின்றேன் வா அங்கே என்று சென்றாள் 5

## குடும்பம் ஒரு காவியம்

அன்பினுக்கோர் எல்லைஎனும் அன்னை தந்தை
அறவுரைகள் எடுத்துரைக்கும் ஏடாம், இல்லாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமெனும் சுவையுணர்த்தும் ஏடாம் உள்ளம்
ஈர்க்கின்ற மழலைமொழிப் பிள்ளை நெஞ்சத்
துன்பறுக்கும் இசைச்சுரங்கம், உடன்பி றந்த
துணைவர்களோ தோள்வலிமை
காட்டும் ஏடாம்,
வன்புரைக்கும் நாத்தியவள் அவலம் என்னும்
சுவையினையே வடிகட்டி உணர்த்தும் ஏடாம்

ஆதலினால் குடும்பமது சுவையால் நெஞ்சை
அள்ளுமொரு காவியமென் றறைதல் சாலும்
மோதலிலாக் குடும்பத்தில் பகைக்கு ணத்தை
மூட்டிவிடும் ஊராரோ காவி யத்தைத்
தீதுறவே அரித்தொழிக்கும் அந்துப் பூச்சி
செல்கரையான் இவைபோல்வர்,
அவர்கள் பேச்சை
காதுமடுத் திடவேண்டா, ஒதுக்கிவிட்டுக்
காவியத்தைக் காத்திடுக வாழ்வீர் நன்றே!

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுரதா

## (1921...)

"முத்திநெறி யறியாதார் மூர்க்கர் என்றால்
முத்தநெறி அறியாதார் வீண ரன்றோ
கத்திநெறி வீரரிடம் போய்ச்சே ரட்டும்
காதல்நெறி நம்நெஞ்சில் உறவாடட்டும்"

எனத் திறந்த மனத்தோடு தீந்தமிழ்க் கவிதை பாடும் சுரதா இந்த நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ்க் கவிஞர்களில் ஒருவர்.

தமக்குச் சரியெனப்பட்டதை அஞ்சாது பேசியும், எழுதியும் வரும் தனித்தன்மை வாய்ந்தவர்.

வால்பிடிக்கும் கலையிலும், கால்பிடிக்கும் கலையிலும் நிபுணத்துவம் பெறாதபடியால் தகுதிக்கேற்ற புகழையும், பொருளையும் அவரால் ஈட்ட இயலவில்லை.

சுரதா கவிதைகள் காலைக்காற்றையும், மாலை நிலவையும்போல் எவரையும் ஈர்க்கும் இயல்புடையவை!

"முதலடியைத் தேனாக்கி, அடுத்த டுத்து
முளைக்கின்ற தொடரடியை அமுத மாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவிதமாய்ச் சந்தநய நட்புண் டாக்கிப்
வியப்புமிகு உவமைகளால் புதுமை தேக்கி"

கவிதை பாடுகிறார் சுரதா!

'தரைமீன்' எனுந்தலைப்பில்,

"தலைநிமிர்ந்த புகழ்பெற்ற சோழ நாட்டின்
தாய்ப்பாலாம் காவிரியின் ஈர நீரில்
மலருதிர்ந்து போர்வையைப்போல் மிதக்க, மேற்கு
மலைச்சாரம் சந்தனம், தக் கோலம் யாவும்
அலையுயர்ந்த வெள்ளத்தில் மிதக்க, செங்கால்
அன்னம்போல் ஓடங்கள் மிதக்க, ஓர் பால்
சிலர்மிதந்து நீராட, நதியில் ஈரச்
சிலையாகிக் கொண்டிருந்தாள் ஆதி மந்தி"

என்றும்,

"தண்ணீரின் ஏப்பந்தான் அலைகள் என்றான்
தமிழ்க்கலைகள் வாழ்நாளை வளர்க்கும் என்றாள்
விண்மீது விளங்குகின்ற நிலவின் மீது
வீடுகட்டும் காலமொன்று வந்தே தீரும்
கண்ணாலே கதைசொல்லும் மாதே!' என்றான்
கட்டழகி மொட்டுமொட்டாய்ச் சிரித்தாள்! யாவும்
பெண்ணாலே ஆகு'மென்றான், அதனைக் கேட்டுப்
பிழிந்ததொரு புடவையெனக் குனிந்து கொண்டாள்!"

என்று சுவையாகப் பாடுகிறார் சுரதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சித்தூர் சாம்பல்' எனுந்தலைப்பில்,

...............

"நிழலழகே நெஞ்சத்தை மயக்கு மாயின்
நேரழகு வாட்டாமல் விடுமோ என்னை,
மழையழகுக் கூந்தலில் மென் மலர்கள் சூட்டி
மடி நடுவில் உடைபொன்று படிந்து மூங்கிற்
கழியழகுத் தோள்தொட்டுத் தழுவி இன்பக்
கடலாடும் நாளெந்நாள் என்றே எண்ணி
விழிகளினால் அவளழகைக் கௌவிக் கொண்டு
வெறியோடு விடைபெற்றான் புடைவைப்
பித்தன்"

என காதல் ரசம் ததும்ப கவிதீட்டுகிறார்.

'அம்மி' என்ற கவிதையும்,

...............

"பட்டாடை கட்டிக்கொண் டிருக்கும் நல்ல
பால்நிலவே இளவேனிற் பூவே உன்னைத்
தொட்டாலும் கைமணக்கும் உன்றன் பேரைச்
சொன்னாலும் வாய்மணக்கும் ஆணும்
பெண்ணும்
ஒட்டாமல் உறவில்லை கலப்பே யின்றி
உலகத்தில் தனிப்பொருளாய் ஏதுமில்லை
வெட்டாமல் குளம்வருமோ வயலில் நெல்லை
விதைக்காமல் முளைத்திடுமோ?" என்றான்
செவ்வேள்"

என்றமைந்து கவிஞர் கற்பனைத் திறனைப் புலப்படுத்துகிறது.

இ. நூ.—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவேந்தர் பாரதிதாசன் பாக்களில் தன்வசமிழந்து கவிதைக்கலை கைவரப்பெற்ற சுரதா, தன்குருவின் நிழல் படியாத் தனித்துவக் கவிதைகள் பல வடித்தவர்.

மிகச்சிறந்த கவித்திறன் மிகுந்த பொன்னிவளவன், அப்துல்ரகுமான், நா. காமராசன் போன்றோர்க்கு ஆரம்ப காலத்தில் எழுச்சியூட்டிய வழிகாட்டியாக அமைந்தவர் சுரதா!

அத்தகைய சுரதாவின் உயர்ந்த கவிதைகளில் ஒன்று 'இருட்டுக்குச் சேலைதந்தாள்' என்ற தலைப்பில் அமைந்துள்ளது!

"முல்லைக்கு முறுவல் தந்தாள்
முகிலுக்கு கூந்தல் தந்தாள்
வில்லுக்கு புருவம் தந்தாள்
வேலுக்கு விழிகள் தந்தாள்"

................

எனப் பாடுங்கவிஞர்,

....................

"திருட்டுக்குத் தேதி தந்தாள்
சேல்விழி பாதி தந்தாள்
இருட்டுக்குச் சேலை தந்தாள்
இளமைக்கு வேலை தந்தாள்"

என்று தொடரும் போது வாலிப நெஞ்சங்களில் காதலின் வசந்த நதி பாயாமல் இருக்க முடியுமா? கவித்தேன் மாந்தும் மெய்ரசிகன் மயங்காமல்தான் இருக்க முடியுமா?

'கண்ணீர்' என்ற கவிதையை சுரதா தத்துவ நோக்கில்,

"பிறக்கும்போ தழுகின்றோம் நமக்கே தேனும்
பிணிவந்தால் அழுகின்றோம் பின்னர் இங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கும்போ தழுகின்றோம் நமது வாழ்வில்
இன்னல்வரின் அழுகின்றோம் கவலை
நெஞ்சை
அறுக்கும்போ தழுகின்றோம் நம்மைச் சார்ந்தோர்
அல்லலுறின் அழுகின்றோம் சிலபேர் நம்மை
வெறுக்கும்போ தழுகின்றோம் வையத் தாரை
விட்டதுண்டோ அவலமெனும் தீராத்
துன்பம்"

என்று மிக நயமாக எழுதியுள்ளார்.

தமிழின்பால் தாமுற்ற அழியாக்காதலை 'என்குரல்' எனுங் கவிதையில்,

"என்மொழி தமிழே அந்த
எழில்மொழி அறிவின் ஆக்கம்
என்மொழி தமிழே அந்த
எழில்மொழி தேனின் தேக்கம்
என்மொழி தமிழே அந்த
எழில்மொழி எனக்குத் தாய்ப்பால்
என்மொழி தமிழே அந்த
எழில்மொழி புகழின் போர்வை"

என எழுச்சியோடு பாடுகிறார் கவிஞர்.

கவிஞர் சுரதாவின் கவிதைகளில் உவமைகள் மேமாத ரோஜாபோல் மோகனமாய் பூத்துப் பொலியும். இளவேனிற் கால மாலைப் போதாய் எவரையும் வசப்படுத்தும்!

'மேலாடை' எனுங் கவிதை,

"விண்ணுக்கு மேலாடை வெயில்விழுங்கும் மேகம்
வீணைக்கு மேலாடை நரம்புகளின் கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுக்கு மேலாடை மயில்நீல இருட்டு
மனத்திற்கு மேலாடை வளர்கின்ற நினைவு
கண்ணுக்கு மேலாடை காக்கின்ற இமைகள்
கனவுக்கு மேலாடை தேங்குகின்ற தூக்கம்"

.............

என்று பாங்கோடு போகிறது!

எச்சில் எனுந் தலைப்பில்,

"குழந்தையோ பெற்றோர் எச்சில்
கூடையோ குறத்தி எச்சில்
பழங்களோ பறவை எச்சில்
பால்தயிர் இடைச்சி எச்சில்"

...............

எனக் கவிதையை சீரோங்கப் பாடிச் செல்கிறார் அவர்.

பாவேந்தர் பாரதிதாசன்,

"காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்"

என்று பாடியதும்,

"மாலையெழில் மதியிலே மாதினைக்
கண்டேன்"

எனப் பாடிவிட்டு "பார்த்தாயா நானும் பாவேந்தர் போல் பாடுகிறேன்" என மார்தட்டித் திரியும் நகல் கவிராயர்கள் பலர் உள்ளார்கள்!

சுரதா அத்தகையோரில் ஒருவர் அல்லர்.

அவர் சுயத்துவம் நிறைந்த தனிவழிக் கவிஞர்.

அவர் வாழுங்காலத்திலேயே அவரைக் கௌரவித்துக் கொண்டாட தமிழக அரசும், தமிழ்மக்களும் முன்வந்தால் தமிழன்னை நெஞ்சில் 'தேன்மழை' பொழியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க்கைக் குறிப்புகள் :**

- நாகப்பட்டினம் மருங்கே 1921 ஆம் ஆண்டு திரு வேங்கடம்—சண்பகம் தம்பதிக்குத் தனயனாக தன் மானக் கவிஞர் பிறந்தார்.

- இராஜகோபால் என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர், பாரதிதாசன் பாக்களினால் ஈர்க்கப்பட்டு சுப்புரத்தினதாசன்— சுரதா என பெயர் வைத்துக் கொண்டார்.

- 1945இல் 'மங்கையர்க்கரசி' படத்திற்கு வசன மெழுதி திரையுலகிற் புகுந்தார். தொடர்ந்து சில படங்களுக்கு வசனமும், ஜெனோவா, அமரகவி, திருமணம், தைபிறந்தால் வழிபிறக்கும் உட்பட பல படங்களுக்கு இலக்கியச் செறிவுள்ள பாடல்களும் புனைந்தார்.

- இவர் தம் முதல் கவிதை நூல் சாவின் முத்தம்.

- தேன்மழை, துறைமுகம் போன்ற சிறந்த கவிதை நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டார்.

- எழுபது வயதைத் தாண்டியபோதும் முனைப்போடு இலக்கியத் தொண்டாற்றி வருகிறார்!

# இருட்டுக்குச் சேலை தந்தாள்

முல்லைக்கு முறுவல் தந்தாள்
        முகிலுக்குக் கூந்தல் தந்தாள்
வில்லுக்குப் புருவம் தந்தாள்
        வேலுக்கு விழிகள் தந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுக்குச் செந்தேன் தந்தாள்
சுனைநீர்க்கு குளிர்ச்சி தந்தாள்
அல்லிக்குச் செவ்வாய் தந்தாள்
அழகுக்கே அழகு தந்தாள்!

நடைதந்தாள் அன்னத் திற்கு
நகைதந்தாள் எனக்கு; நன்னூல்
இடைதந்தாள் கொடிக்கு, நல்யாழ்
இசைதந்தாள் எனக்கு; தக்க
விடைதந்தாள் பிறர்க்கு; மையல்
விழிதந்தாள் எனக்கு மேலும்
மடல்தந்தாள் படிப்ப தற்கு
மலர்தந்தாள் நுகர்வ தற்கு!

மிரட்டிக்கொண் டிருந்த காளை
மாட்டினை விரைந்து நான்போய்
விரட்டிக்கொண் டிருந்தேன் வந்தாள்
விழிகளால் பிடித்தேன் காதல்
திருட்டுக்குத் தேதி தந்தாள்
சேல்விழி பாதி தந்தாள்
இருட்டுக்குச் சேலை தந்தாள்
இளமைக்கு வேலை தந்தாள்!

## விருந்து

வினையே புரிந்து மழைநா ளறிந்து
விரிநீர் கடந்து வருவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனியே கலந்த மொழியா லமைந்த
　　கதைகா வியங்கள் நவில்வார்
இனியே விருந்தின் சுவையே யருந்தி
　　இதழே பொருந்தி மகிழ்வேன்
தனியே பிறந்து தமிழ்போற் குளிர்ந்து
　　சரியாய்த் திரண்ட நிலவே!

அறமே புரிந்த வினைவீ ரரென்னை
　　அணைவார் அணைந்து புகழ்வார்
துறைமீ தமர்ந்து விழவே லெறிந்து
　　தொடுதோள் படிந்து மகிழ்வேன்
பிறைமீ தெழுந்த ஒளியால் தளர்ந்து
　　பெருமூச் செறிந்த நிலைபோம்
திறமே புரிந்து நுரைவாய் திறந்து
　　நிலையாய்க் கனைக்குங் கடலே!

□ □ □

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைவன்

## [ 1925... ]

கந்தசாமி என்ற இயற்பெயர் கொண்ட 'துறைவன்' ஒரு அருமையான கவிஞர். தெளிந்த நடையில் தேனார் சொல்வார்த்துக் கவிக்கலை ஓம்பிய வித்தகர்.

வாசகனை நோக்கி,

"இதயக் கூட்டில் கவிதை விளக்கினை
ஏற்றி மகிழ இசைந்தனை, தோழ,
நன்று நின் விருப்பம், நானில அரங்கில்
நீயும் நானும் இரு சிறு பறவைகள்!!
மண்ணில் தத்தி நல்லிரை தேடியும்
வான விரிவை மறந்திலோம், தோழ,
உண்டு மகிழ்ந்தாய் என்னொடு சிறிது
நல்ல பொழுதாய்ப் போக்கலாம் வருக!

என நளினமாக எழுதி, மேலும் பாநலம் பொலிய,

"கதிரொளி பருகிக் காற்றிலே மிதந்து
மண்ணும் வானும் கலந்திடும் வனப்பைக்
காணலாம், வருவாய்!"

எனத்தீட்டி, தொடர்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அழகு மலர்களின் ஆசை விழிகளில்
முத்தம் பதிப்போம் முழுநிலா ஒளியில்
இன்பச் சுனையில் இருவரும் நீந்தலாம்"

என முருகார் கவிமுத்திரை பதிக்கிறார் கவிஞர்!

துறைவன் தமது 'பொற்சுடர்' எனுங்கவிதையில்,

....................

"அங்கங்கே அங்கங்கே
ஆச்சரியக் குன்றுகளாய்த்
தங்கிவிளை யாடுகின்ற
தங்கவொளிச் செண்டுகளே"

....................

எனப் பொற்சுடரை அழைத்து தன் மனவிழைவை,

....................

"சிந்தைக் குகைகளிலும்
சேணுயர்ந்த சோலைகளின்
அந்தப் புரங்களிலும்
ஆசனங்கள் போட்டமர்ந்து,
எண்ணக் கனிதின்போம்
இசையின் தெளிவுண்போம்
மண்ணைக் குழைத்ததிலே
மாதுளம்பூக் கொய்திடுவோம்"

....................

எனப்பாடிச் செல்வது இன்பம் பயக்கும் வண்ண முள்ளது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் தமது 'காதலி' எனுங் கவிதையை வெகு நேர்த்தியாக—

"புயலும் கருக்கிருட்டும்
போராடும் நேரத்தில்
நனையாச் சிறுகூட்டில்
அன்பில் நனைந்திரண்டு
நீலச் சிறகணைந்து
நித்தியத்திலே கரைந்து
கூட்டு வளைவிற்குள்
குவலயமே முற்றிநிற்க

பறவைச் சிறுமொழியில்
'காதல்' எனும்மானிடரின்
சொல்லுக்கு இணைதேடி
ஆணொன்று பெண்ணொன்று
நெருக்கி யணைந்திருக்கும்
நேயச் செருக்கன்றோ
நீஎன்ற சொல்லுக்கு
நேரெதுகை!"

என எழுதியுள்ளார்.

'சருகு என்ற கவிதையை

................

"பிறக்கலாம் என்னும் ஆசை
பிடர் பிடித் துந்த மீண்டும்
சிறக்கலாம் என்னும் எண்ணம்
சிந்தையில் அமுது பெய்யத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறக்கலாம் வாழ்வை யின்று
துணிவதே கருமம் என்றே
இறக்கலாம் இழிவொன் றில்லை
என்பதோர் தெளிவு கண்டேன்"

எனமொழி நளினமும் தத்துவப் பாங்கும் சங்கமிக்க எழுதி யுள்ளார் கவிஞர்.

துறைவன் கவியாற்றலை 'நிறை' எனுங் கவிதை மிகத் துல்லியமாய் காட்டவல்லது! மாதொருத்தியை,

"ஒன்பது செண்பகப்பூ—இவள் நிறை
ஒன்பது செண்பகப்பு—ஒன்பதே
ஒன்பது செண்பகப்பூ
கைகள் நறுங் காந்தள்—கருங்
கண்களோ பூங்குவளை
நையும் இடை சுமந்த— பெரு
நகில்கள் தாமரைப்பூ"

...............

என வருணித்துச் செல்கிறார்!

'திரைப்பெண்' கவிதையில் பாவங்களை விழிகளில் கொணரும் கலாவித்தகி ஒருத்தியை, வியந்து,

"சின்னஞ்சிறிய பருவத்தாள்—வாழ்வுச்
சிக்கல் அறியாப் புதுமுல்லை!
இன்னது உலகென் றுணராதாள்—இவள்
எங்கே கற்றாள் இத்தனையும்?"

என்று வினவி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுனையின் நெஞ்சத் துயிரெல்லாம்—ஒரு
சோதி மலராய்த் தோன்றியதோ?
நினைவின் ஆழத் திருந்ததெலாம்—இவள்
நீளவிழியில் நீந்தியதோ"

எனவும்,

"அழகை எழுதி அறிவெழுதி—தண்
அமுதம் பாயும் கலைஎழுதி
குழையுங் கொடிபோல் உடலெழுதி—அயன்
குற்றமில்லாத் தொழில் செய்தான்"

எனவும் துறைவன் எழுதும் பைந்தமிழ் எம் மனத்தைத் தாலாட்டுகிறதல்லவா?

கவிஞர் யாத்த 'தாரகை' எனுங்கவிதை,

.............

"மைக்குழல் மங்கை இரா—வெறிகொள்
மையல் இயற்றுகையில்
மெய்க்களி பூண்டிடலும்—உதிர்ந்த
மென்னகை ரத்தினமோ?"

...............

என எழில் மின்னத் தீட்டப்பட்டுள்ளது.

**வாழ்க்கைக் குறிப்புகள் :**

- 1925 இல் பிறந்தவர்.
- அகில இந்திய வானொலியில் நெடுங்காலம் பணி யாற்றிய துறைவன் பணியிலிருந்து ஓய்வு பெற்று நாகர்கோவிலில் வசித்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விஞ்ஞானப் புதுமை கொஞ்சும் கட்டுரைகளும் பல எழுதியுள்ளார். பல நாடகங்களும் படைத்துள்ளார்,
- பொற்சுடர், ஒன்பது செண்பகப்பூ ஆகிய கவிதை நூல்கள் வெளியிட்டுள்ளார்.
- ஆங்கிலப் பேராசிரியரும், சிறந்த விமர்சகருமான அ. சீனிவாசராகவனின் மாணவர் இவர்!

## நிறை

ஒன்பது செண்பகப்பூ—இவள் நிறை
ஒன்பது செண்பகப்பூ—ஒன்பதே
ஒன்பது செண்பகப்பூ

கைகள் நறுங்காந்தள்—கருங்
கண்களோ பூங்குவளை
நையும் இடை சுமந்த—பெரு
நகில்கள் தாமரைப்பூ!

செவ்விதழ் நல்ரோஜா—இவள்
செவிகள் செவ்வந்தி:
அவ்வளவும் சேர்த்தேன்—இவள்
அரைக் கழஞ்சுமில்லை!

முல்லை நறுமணம்போல்—இவள் என்
மூச்சில் இழைந்திடுவாள்
எல்லையிலாக் கனவை—ஒளியை
எடைகள் பார்ப்பதுண்டோ?

(ஒன்பது செண்பகப்பூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் கொத்தி

ஆற்றுப் படுகையிலே........அம்மா
ஆற்றுப் படுகையிலே........

மீறிநிமிர்ந்திடு பாறையமர்ந்துடன்
மின்னச் சிறகடித்தே—என்மனப்
பின்னல் முடிசிதைத்தே
ஏறிய தோன்வெறி யாறிடத் துள்ளிடும்
ஈனச் சிறுமீனை—இடையொடு
வானத் தெரிசுடராய்.
வீறிட்ட நீலப் பறவை பிடித்தங்கம்
பிய்த்து விழுங்கிடலும்—சிந்தனை
மொய்த்த துயருரைப்பேன்.

வீரிட வாயற்றுப் போரிடத் தாயற்ற
வெற்றுச் சிறுமீனின்—மனம்
பெற்றுக் கதறி நெஞ்சு
நீறிப் பொடிப்பொடியாகிடு நேரத்தில்
நீசமணிப் பறவை—செவி
கூசக்குரல் கொடுக்கும்!
"வேறு நினைத்திடு மானுட, நின்னுடை
விந்தை யுலகத்திலே—இதே
பந்தயம் உண்டுணர்வாய்!'
சீறிடும் இக்குரல் வீறிட்டுப் பாயுதென்
சிந்தைக் குளத்தினிலே—கொள்ளிப்
பந்தெனச் சுட்டலைந்தே
கீறிடும் வட்டக் கிறுக்கலிலே—பெருங்
கேள்வி அலைந்தம்மா—வாழ்வின்
வேள்வி குலைந்த தம்மா. (ஆற்றுப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை

தோழிய ரோடு நீ ஆடவேணும்—வட்டம்
சுற்றிச் சுழன்று நீ பாடவேணும்
நாழிகை போவ தறியாமல்—நானும்
நட்ட சிலையாக நிற்கவேணும்!

பிச்சிப்பூ சூடி நீ போகவேணும்—அந்த
வாசத்தில் நான் பித்தனாக வேணும்!
மச்சிலிருந்து நீ பார்க்கவேணும்!—நான்
மன்னவன்போல் நடை போடவேணும்!

தண்ணியெடுத்துத்திரும் புகையில்—உன்னைத்
தற்செய லாகநான் காணவேணும்!
மண்ணில் பதிந்த உன்கால் சுவட்டில்—நான்
மந்திர பூசைகள் செய்யவேணும்!

பூப்பறிக் கின்ற போதினிலே—ஒரு
பூவாக உன்கையில் எட்டவேணும்
தோப்பு நிழலிலே நீயுறங்க—ஒரு
தும்பியாய் வந்துன்னைப் பாடவேணும்.

அம்மன் கொடை வரப்போகுதடி—என்றன்
ஆசை தணிந்திடப் போகுதடி
கும்மி பிணைந்து நீ ஆடுகையில்—உன்றன்
குஞ்சம் எனைத் தொடப் போகுதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஒளி

## [1924—1965]

இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த கவிஞர்களில் தமிழ் ஒளியும் ஒருவர்.

மொழிநயமும், ஓசைமிடுக்கும் கைகோத்த கவினார் கவிதைகளை யாத்தவர் அவர்.

'எண்ணம்' எனுந் தலைப்பில்,

''மேக ரதத்தினில்
ஏறிடவும் ஒரு
மின்னலெனை உரு
மாறிடவும்,

...............

காட்டு மலரெனப்
பூத்திடவும் வருங்
காற்றினில் ஆனந்தக்
கூத்திடவும்
பாட்டு மயக்கினில்
ஆழ்ந்திடவும் எழிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவை முயக்கினில்
வீழ்ந்திடவும்"

...............

என உணர்ச்சியும் அழகும் பொங்கித் ததும்பப் பாவிருந்து படைக்கிறார் அவர்.

தமிழ் ஒளியாந்த மழைத்துளி எனுங் கவிதை,

"தந்ததன மென்று பந்தலில்—மலர்ப் பந்தலில்
வந்து விழுந்தது நீர்த்துளி—மழை நீர்த்துளி!
பச்சைப் பசுந்தழைக் காட்டிலே—இலை மேட்டிலே
தைச்சுக் கிடந்தது புன்னகை—மழை மென்னகை"

என்றமைத்து கவிஞர் தம் புலமைக்குச் சரியான சான்றாகத் திகழ்கிறது!

தமிழ் ஒளி 'வசந்த மனோகரி' எனுந்தலைப்பில்,

"மாமரக் கொம்புகள்
தோரணங் கொண்டு
மலர்கள் அசைந்தாடக்
காமனைச் சென்று
கருங்குயிற் கன்னி
கலந்து இசைபாடப்
பூமகள் புன்னகை
கொண்டு மலர்கள்,
புனைந்து புனைந்தாடக்
கோமள வல்லி
வசந்த மனோகரி
கொஞ்சிட வந்தாளே!"

என்று வசந்தகாலத்து நிகழ்வுகளை வண்டமிழ் ஓவியமாய் புனைகிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அணு ஆற்றல்' எனுந் தலைப்பிலமைந்த கவிதையில் விஞ்ஞானப் புதுமைகளை வியந்து போற்றும் அறிவார்ந்த பார்வையைப் பார்க்கலாம்.

அவர்—

"காலம் நமக்குக்
கதை சொல்லப் போகிறது!
ஓலம் இடாதீர்!
உதயம் பிறக்கிறது!
சின்ன அணுவாற்
செகத்தை மயக்கிடலாம்
என்ன புதுமை!
எலாமும் இயற்றிடலாம்!

.... .... .... ....

பூதங்கள் யாவும்
புவிப்பொருள் காட்டுகின்ற
நாதங்கள் ஆயின!
நாம் மகிழ்ந்தாடுவமே!"

என சீருறப் பாடுகிறார்!

தமிழ்ஒளி கவிதைகளில் தொழிலாளி நேயம் விரிந்திருக்கிறது!

"செல்வர்களுக்கு ஒரு கேள்வி"

என்ற கவிதையில் வறுமைக்கெதிராக போர் முரசு கொட்டுகிறார் அவர்.

"உனக்கு மட்டும் உன்னை உணவு கிடைக்குமோ
—ஊரில்
உள்ள ஏழை உண்டால் நெஞ்சம்
அடைக்குமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு மட்டும் உறங்கப் பஞ்சணை மெத்தையோ'
— ஊரில்
உள்ள ஏழை உறங்கக் குப்பை செத்தையோ?"

என ஆவேச வினாத்தொடுக்கும் அவர்,

"உலகம் உன்றன் கைகளில்தான் உருளுமோ?
உரிமை பெற்றால் இயற்கை என்ன
மருளுமோ?
கலகம் செய்யும் ஏற்றத்தாழ்வை நீக்கடா பேதம்
காட்டுகின்ற முறைமையைத்தூள் ஆக்கடா!

எனப் பாடலை எழுச்சியோடு பூர்த்தி செய்கிறார்.

உழைப்போர் உயர்வுவேண்டி ''தோள்தட்டி எழுவீர்'' எனுந் தலைப்பில்,

'தோள் தட்டியே எழுவீரே—பழந்
தொல்லையழிந்திடவே, உழைப்போரே!
வாள் எயிற்றுக் கொடும்வேங்கை—பசி
வந்த அக்காலையில் சீறுதல் போலே!

எனப்பாடி,

உழைப்பவனுக்கே உலகம் உரியது என்பதனை ஆணித்தரமாக—

"யாருக்கிந்தப்புவி சொந்தம்? — பொருள்
அத்தனையுமிங்குச் சேர்த்தவர் நீரே!
ஊருக்குழைத் திளைத்தீரே—உம்
உண்மை நிலையை யுணர்த்திடுவீரே"

என்று சொல்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பட்டமரம்' என்ற கவிதை,

'மொட்டைக் கிளையோடு
நின்று தினம்பெரு
மூச்சு விடும் மரமே!
வெட்டப் படும் ஒரு
நாள்வருமென்று
விசனம் அடைந்தனையோ?

.....................

"பாடும் பறவைகள்
கூடி உனக்கொரு
பாடல் புனைந்ததுவும்,
மூடு பனித்திரை
யூடு புவிக்கொரு
மோகங் கொடுத்ததுவும்,
ஆடுங் கிளை மிசை
ஏறிச் சிறுவர்
குதிரை விடுத்ததுவும்,
ஏடு தருங்கதை
யாக முடிந்தன!
இன்று வெறுங்கனவே!"

எனத் தமிழ் ஒளியால் மிக இயல்பாகப் பின்னப்பட்டுள்ளது.

விண்மீன்கள் பற்றிக் கவிஞர்,

.....................

"சொந்த உரிமை இழந்திருக்கும்—பெண்கள்
சோக உணர்ச்சிச் சிதறல்களோ?"

என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இரவெனும் வறுமையின் கந்தல் உடை—தனில்**
**எண்ணற்ற கண்களோ விண்மீன்கள்?"**

என்றும்,

......................

**"காலம் எழுதும் எழுத்துக்களோ—பிச்சைக்**
**காரர் இதயத்தின் விம்மல்களோ?"**

................

என்றும் நேர்த்தியாகக் கற்பனை செய்கிறார்!

கிரகணம் பற்றிக் கவிஞர்,

................

**"ஒரு சிறு வெண்மலரில்**
**ஒரு கரு வண்டுமது**
**பருகிட வந்தமரும்**
**படமென வரும்நிழலே!**

என்றும்,

**"ஆடும்" ஊர்வசி யாகவிண்ணிடை**
**ஆடுகின்ற நிலாமகள்!**
**மூடு கார்இரு ளூடுசெந்தழல்**
**மூடுகின்ற கலாமகள்!**

என்றும் அழகாகக் கவி படைத்துள்ளார்!

தமிழ் ஒளியின் 'கண்ணம்மா' எனுங்கவிதை,

**"மஞ்சள் கரைத்து விட்டாள்—கண்ணம்மா**
**மாணிக்க ஓடையிலே!**

UNIVERSITY OF PERADENIYA LIBRARY 6-1-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சங் கரைந்து விட்டேன் மஞ்சளாய்
நீந்திநீ ராடுகின்றேன்!

..............

"உள்ளம் எழுதிவிட்டாள்—கண்ணம்மா
ஊற்றுநீ ரோடையிலே!
கள்ளம் அழிந்து விட்டேன்—அடியேன்
காதல்நீ ராடுகின்றேன்"

எனவும் அழகெழுச்சியுடன் புனையப்பட்டுள்ளது!

கவிஞர் தமிழ்ஒளி தமிழை முறையாகப் பயின்றவர்! ஓசை நயமோங்க ஒண்கவியோவியங்கள் வரைந்தவர்.

கண்ணப்பன் கிளிகள், வீராயி போன்ற குறுங் காவியங்களிலும் அவர்தம் கவித்திறன் மின்னிடக் காணலாம்!

'தமிழ்ஒளி' தமிழ் இலக்கிய உலகில் தமது தகுதிக்கேற்ற புகழைப் பெறவில்லை!

நுனிப்புல் மேயும் ஆய்வாளர்களும், ஒரு சில கவிஞர்களையே மீண்டும், மீண்டும் கூறிக் கொண்டிருக்கும் விமர்சகர்களும் அவரை ஓரங்கட்டி விட்டாலும், தமிழ் ஒளியின் அருமை நண்பர் செ.து-சஞ்சீவி கவிஞரின் படைப்புகளை தொகுத்து தமிழர்களுக்கு வழங்கிவருவது மிகவும் போற்றத்தக்கது!

## வாழ்க்கைக் குறிப்புகள்

- விஜயரங்கம் என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர் தமிழ்ஒளி 21-9-1924இல் சின்னையா நயினார்—செங்கேணி அம்மாள் தம்பதிக்கு மகனாக பாண்டிச்சேரியில் பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாவேந்தர் பாரதிதாசனைக் கவிதைக் குருவாக ஏற்றுக்கொண்டார்.

- திராவிடக் கழக ஈடுபாட்டோடு இருந்த அவர் 1947ல் சென்னை வந்து பொதுவுடமைக் கட்சியில் சங்கமித்தார்.

- தகுதிமிக்க கவிஞனாக இருந்தும் உரிய மரியாதையும், புகழும் கிட்டாத நிலையில், நாடிய காதலும் வாடிய நிலையில்—வறுமையின் பேரிடித் தாக்கிய நிலையில் 29.3.1965இல் மண்ணுலகிலிருந்து விடைபெற்றார் தண்டமிழ்க் கவிச்செம்மல் தமிழ் ஒளி-

## கவிஞன்

மோனக் கருக்கலிலே—விண்
மூத்தொளி தோன்றுகையில்
வானக் கடல்கடந்தே—அதை
வாங்கிவர விரைவேன்!

முத்துப் பனித்துளியில்—கதிர்
முத்த மளிக்கையிலே
பித்துக் கவிபுனைந்தே—மணம்
பேசி மகிழ்ந்திடுவேன்!

சாயும் கதிர்களிலே—இருட்
சாலம் புரிகையிலே
காயும் நிலவெனவே—வழி
காட்ட எழுந்திடுவேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலக் கடல் அலையில்—கதிர்
நெய்த வலையிடையே
கோலக் குளிர்மணிபோல்—கவி
கொட்டிச் சிரித்திடுவேன்!

ஊரை எழுப்பிடவே—துயர்
ஒன்றை நொறுக்கிடவே
தாரை முழக்கிடுவேன்—தமிழ்ச்
சாதி விழித்திடவே!

கத்தி முனைதனிலே—பயங்
காட்டும் உலகினிலே
சத்திய பேரிகையை—நான்
தட்டி முழக்கிடுவேன்!

## புனல்மகள்

தனந் தன மெனப் புனல்மகள்
நடமாடுவாள்—தகித்
ததிங்கிணம் கிணம் கிணமென நடை
தத்தித் தளாங்கு கறைஇரு புடை
—தனந்தனமெனப்

வனந் தரும்குளிர் நிழலிடை
எழில் மிஞ்சி—கை
வளை யொலியொடு கொஞ்சி
வரும் வஞ்சி
—தனந்தனமெனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனந் தனத் தனம்
ததிங் கிணத் தனம்
தகிதி தத்தம்
தத்த தந்தமெனத்
தரங் கங்களொடு
—தனந்தனமெனப்
கலகலவென கால்வாய்களிற்
காற்சிலம்பொடும் ஓடி—விழி
கவர்ந்திடும் இடம் தேடி
சலசல வெனத் தமிழ்தரும்பதம்
தரும் தருமெனப் பாடி
உளம் கூடி
விளையாடி
—தனந்தனமெனப்

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சிற்றம்பலக் கவிராயர்

## (1923...)

### (தொ. மு. சி. ரகுநாதன்)

புதுமைப்பித்தன் வரலாறு, பாரதி காலமும் கருத்தும், போன்ற அருமையான நூல்களையும், சிறந்த பல சிறுகதைகளையும், பஞ்சும் பசியும் என்ற நல்ல நாவலையும் எழுதிய ரகுநாதன் கனன்றெழுந்து கவிபாடிய சீரிய பாவலருங்கூட!

'திருச்சிற்றம்பலக் கவிராயர்' என்ற புனை பெயரில் அவர் எழுதிய கவிதைகளிலும், கவியரங்கங்களில் பாடிய கவிதைகளிலும் ஜீவ துடிப்பு நிறைந்துள்ளதை யாரும் மறுக்க இயலாது!

தொழிலாளர் உயர்வினை 'நாம்' என்ற தலைப்பில்,

''காடுகளாய் மலை மேடுகளாய் எங்கும்
காணக் கிடந்த இப்பூ வுலகை
மேடு திருத்தியே கன்னலும் செந்நெலும்
விம்மி விளைத்திடச் செய்தவர் நாம்''

மாலையிள வெயிற் கோலத்திலே மழை
வானவில்லின் ஏழு வண்ணத்திலே
நூலைத் திரித்ததும் சேலைகள் நெய்ததும்
நூற்றுக் கணக்கில் குவித்ததும் நாம்''

என்று எழுச்சியோடு எழுதுகிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து தொழிலாளர் பீடினை,

"எண்ணும் கணக்கும் இறந்தொழிந்தாலென
எண்ணிற் பலப்பல விந்தையெலாம்
பண்ணிய மானிடச் சாதியர் நாம்; இந்தப்
பாரிற் படைப்புக் கடவுளர் நாம்!"

என ஆவேசமாகப் பாட்டிசைக்கிறார்!

கவிஞர் தம் இலட்சியத் தாகத்தை 'ஓய்ந்திருக்க மாட்டோம்' என்ற தலைப்பில்,

"ஓய்ந்திருக்க மாட்டோம்—தலை
சாய்ந்திருக்க மாட்டோம்!
வேய்ந்த கூரையின்றி—நடு
வீதியிலே தூங்கிக்
காய்ந்த கும்பியோடும்—முழக்
கந்தல் துணியோடும்
மாய்ந்து மக்கள் வாடும்—புன்மை
மாய்ந்து தொழியு மட்டும்
ஓய்ந்திருக்க மாட்டோம்—தலை
சாய்ந்திருக்க மாட்டோம்"

என கம்பீரமாக அடையாளங் காட்டுகிறார்!

'இந்தியக் குடியரசு' எனுந் தலைப்பில்,

நாட்டில் நடக்கும் பித்தலாட்டங்களை— ஏற்ற தாழ்வுக் கொடுமைகளை,

...............

"இந்தக் குடியரசால் ஏழை பணக்காரனெனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பந்தத் தளையெல்லாம் பட்டுவிழ—சொந்தமென
உழுதுழுது பாடுபட்டும் உழைப்பின் பலனறியாப்
பழுதுபட்டு மக்கள் குலம் பஞ்சமற—தொழு
தடிமைக்
கும்பிடுகள் சாத்துகின்ற குல்லாக்கள் போடுகின்ற
வம்பு நிறை சோம்பேறி வாழ்க்கையற—செம்படித்த
காசும் கிடைக்குமென்றால் கள்ளுக்கடை நடத்தும்
நீசத் திருக்கூட்டம் நீறாக—தேசத்தில்
லஞ்சப் பிசாசுகளால் லாந்தி வரும்பேரெல்லாம்
பஞ்சாய்ப் பொடித்தூளாய்ப் பறந்தோட,
[நெஞ்சத்தில்**

**கள்ளத்தனம் கொண்டு கண்ணில் மண் தூவுகிற
குள்ளமனிசரெல்லாம் கூண்டேற—வெள்ளமென
நாட்டில் நலம் கொழிக்க, நலிவுற்ற பஞ்சைமக்கள்
வீட்டில் திருச்சேர்ந்து விளக்கேற—தேட்டமுடன்
கலிவெண்பா யாத்திசைத்தேன்; கானியில் மக்கள்
குலம்
கலிநீங்கி வாழ்க களித்து."**

என்று பட்டவர்த்தனமாக தீட்டியுள்ளார்,

வங்கப் போலீசாரின் துப்பாக்கிக் குண்டுக்கு உணவு வேண்டிப் போராட்டம் நடாத்திய போர்க்குழுவில் அங்கம் வகித்த அணங்கொருத்தி பலியாகிறாள்!

இந்தக் கொடிய நிகழ்ச்சிகண்டு கவிஞர் உணர்ச்சி பீறிட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வன்பசியின் கொடுமையினால் வயிறு காய்ந்து
வாழவகை கேட்டுரிமை வேட்டுச் சென்ற
அன்புள்ள சோதரியே! நின்னைப் போலீஸ்
அரக்கர்படை துப்பாக்கிக் குண்டால் கொன்றார்
என்பதொரு செய்தியினைக் கேட்டோம்; நெஞ்சில்
எரிநெருப்புக் கனல்மூளக் கண்டோம்; மக்கள்
துன்பத்தைத் துடைக்கவகை யற்ற சர்க்கார்
தோட்டாவால் பதிலளிக்கும் கோரம் கண்டோம்"

என்று பாடுகிறார்.

'இளமைத் தமிழ்' எனும் தலைப்பில் பாடிய கவியரங்கக் கவிதையில்,

................

"கன்னித் தமிழரசி
காலத்தால், இவ்வுலகின்
முன்னை மொழிக்கெல்லாம்
முந்தியவள் என்றாலும்
பின்னைப் புதுமைக்கும்
பெதும்பை இளம் பெண்ணாவாள்!

................

நங்கையவள்—
திங்கள் பிறைக்கொழுந்து
திரியும் பொதிகையிலே
வங்கம் கவிழ்ந்ததென
வழிந்தோடும் வெள்ளருவிக்
கங்கைப் புதுப்புனலில்
நீராடும் காரிகையாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிக் குமரிமுனைக்
கரிய பொடி மணலைப்
பின்னி முறுக்கி தலைப்
பின்னலென மின்னவிடும்
சின்னஞ் சிறுவயசுச்
செல்வி தமிழ்க்கன்னிகையாள்
தேனருவித் தூவானம்
தெறிக்கும் கதிரொளியின்
வானவில்லே மென் துகிலாய்
வளைந்து புனைந்து வரும்
கானத்துப் பொன்மயிலாய்க்
களிக்குமொரு பூங்கொடியாள்!''

..................

என்று தமிழணங்கின் மாட்சி விரித்து தேன்கவி பெய்கிறார் கவிஞர்!

'சாந்தி நிலவுக' எனுந் தலைப்பிலமைந்த
கவிதையை யுத்தக் கொடுமைகளைத் தவிர்க்க
வேண்டுமென்ற வேணவா மின்ன

எழுதியுள்ளார் கவிஞர்.

..............

''துண்டுப் பிறைநிலா வாரியில், நுண்துளி
தூற்றும் இளம்பனியில்—கரு
வண்டு பயின்றிடும் இங்கித நாதத்தில்
வாசக் குளிர்மலரில்—சுகம்
கண்டு குலவிடும் மக்களெலாம் சூறைக்
காற்றெனப் போர் வருமேல்—எரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுபட்டு, வாழ்க்கை விண்டுபட்டு விழும்
கூக்குரல் கேளாவோ?

என்கிறார்.

இந்தக் கவிதையைப் படிக்கும்போது யுத்தப் பிசாசை—அது எந்தக் கோணத்தில் உதித்தாலும் எதிர்க்க வேண்டுமெனத் தோன்றுகிறதல்லவா?

ரகுநாதனுக்கு ஓர் முன்னோடியாகவும், சங்கைக்குரிய சகாவாகவும் இருந்தவர் 'சிறுகதை மன்னர்' புதுமைப் பித்தன்.

ரகுநாதன் புதுமைப் பித்தனுக்கெழுதிய 'வேளூர்க் கவிராயா' என்ற வெண்பா ஆவேசப் பொன்பா.

''வேளூர்க் கவிராயா! விண்ணாண
செந்தமிழின்
வாளொத்த கவியிரண்டும் வாசித்தேன்—
நாளெல்லாம்
வெந்தழூழாற் பாட்டெழுதும் விருத்தா
சலப் பெரியோய்
தந்திட்டேன் மிகவந்தனம்

தங்கக் கவியென்றே தழுக்கடிச்சிச்
சொல்லி வரும்
வெங்கத் திருக்கூட்டம் வீடுபெற — சங்கத்து
நக்கீரன் தன்வழியில் நாமிருவர்
சென்று நிதம்
மொக்க வுண்டு பேனா முனை!

மேலுள்ள வெண்பாக்கள் ரகுநாதனின் கனன்றெழுங் கவியுள்ளத்திற்கு சீரிய சான்றல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிந்தனையில் முற்போக்கு,
செயலில் துணிவாற்றல்,
எந்தெந்த காலத்தும்
ஏற்ற புதுமை வழி—"

...............

அனைத்தும் நிரம்பிய ஆண்மைசெறிந்த கவிதைகளை அள்ளி அள்ளி வழங்கிய ரகுநாதன் இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவரென்பதில் ஐயமில்லை!

## வாழ்க்கைக் குறிப்புகள்

- திருநெல்வேலியில் பிறந்தவர்.
- பொதுவுடமை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு உழைத்தவர்.
- சென்னையில் சோவியத் தகவல்மையத்தில் நீண்ட காலம் பணிபுரிந்தவர்.
- சுமார் நாற்பது ஆண்டு காலத்திற்கு முன் 'சாந்தி' என்ற அற்புதமான இலக்கியப் பத்திரிகைக்கு ஆசிரியராக அமைந்து ஆண்மையுடன் எழுதியவர்.
- படைப்பிலக்கியம், வரலாறு, ஆய்வு என பல்துறைகளில் பங்கேற்று அழுத்தமாகத் தன் முத்திரையைப் பதித்தவர்.
- எழுபது வயதைக் கடந்த நிலையில் சொந்த ஊரில் வாழ்ந்து வருகிறார்.

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணதாசன்

## [1927—1981]

இந்த நூற்றாண்டுக் கவிஞர்களில் தமிழ்ப் பெருங் குடியினரிடம் அதிகம் பிரபலம் பெற்ற கவிஞர் யார்?

ஐயமென்ன? கண்ணதாசனே அவர்!

கவிஞர் யாத்த எளிமையும், இனிமையும் செறிந்த அருமையான திரைப்பாடல்கள், தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் ''காற்றின் ரதமேறிச்'' சென்று அவருக்குப் புகழைச் சேர்ந்தது!

கவின் கொஞ்சும் திரைப்பாடல்கள் ஆயிரக் கணக்கில் யாத்த கண்ணதாசன் சீரிய கவிதைகளையும் அள்ளி, அள்ளி வழங்கியுள்ளார்!

தமிழ்த்தாயின் நேயத்தே நெஞ்சாழ்ந்து,

''தேவருக்கும் மூத்தவளே
செங்கதிருக் கடுத்தவளே!
தென்னிலவுக் கிளையவளே!
திருவளர்த்த பூமகளே!
தென்றலொடும் பிறந்தவளே!
தென்மதுரை யடைந்தவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரமெனும் குடிசையிலே
ஆரம்ப மானவளே!
ஆரியர்தம் வாய்மொழிக்கும்
அடைமொழியாய் நின்றவளே!
காலமெனும் காட்டாற்றில்
கரையேறி வந்தவளே!

காவியப்பூங் காவினிலே
ஓவியமாய் வளர்ந்தவளே!
தொல்காப்பி யன்மனதில்
தொட்டில் கட்டிக்கொண்டவளே!
பல்காப்பி யங்களிலும்
பருவமகள் ஆனவளே!"………

என்று சரளமாகவும், நளினமாகவும் கவிபடைக்கிறார் அவர்.

தமிழர் தம் குலப் பெருமையைப் பிரிதொரு கவிதையில் மிக அழகாக,

"செவ்வாழைக் கால்நிறுத்திச்
செங்கரும்புப் பாலமிட்டுச்
சீர்இழையும் பட்டாலே
சிங்காரத் தொட்டில்கட்டிக்
கொவ்வைச் சிறுவாயில்
குமிழியிடும் புன்னகையை
மெல்லக் கிடத்தி
மெல்லியலார் தாலாட்ட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலாட்டுப் பாட்டினிலே
தமிழ்படித்த பூமழலை
வேலேந்தி வில்லேந்தி
வெற்றி வடிவினிற் செங்
கோலேந்தி ஆண்ட
குலத்திற் பிறந்தோரே
உள்ளத்தி னுள்ளே
உயரமாய்க் கிடந்ததமிழ்
வெள்ளத்தில் நீந்தும்
வீரத் தமிழ்க்குலமே!...''

எனக் கூறிச் செல்கிறார்!

கண்ணதாசன் விரிந்த பார்வைமிக்கவர். தேசீய சிந்தனைகள் அவர் தம் பாக்களில் மின்னுகின்றன!

'தேசம் ஒன்று; தேசீயம் ஒன்று' எனுந்தலைப்பில் உவமையெழிலும், உணர்ச்சியும் கைகோக்க,

''மயில் கிளிசிட்டு மணிப்புறா அன்னம்
குயில்செம் போத்து கொஞ்சிடும் மைனா
பறவைகள் நிறத்தில் பலப்பல வாயினும்
இனத்தால் ஒன்றெனல் இயற்கையின்
பாட்டு!''

என்று பாடி,

''நிலத்து நிறத்தே நீரும் நீரின்
தரத்தே பயிரும் தழைத்தல் இயற்கை
மண்படு மரபில் மானிடச் சாதி
பண்படு மதனைப் பண்பா டென்க!

என பண்பாடு பற்றிப் பாங்கான விளக்கமளித்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மொழிவே றாயினும் மொழியும் உயிரின்
வழிஒன் றாயின் வாழ்க்கையும் ஒன்றே!
பட்டுநூ லிழையும் பருத்திநூ லிழையும்
கட்டும் இடையிற் கனத்தால் மாறினும்
மானங் காத்தலில் மாறுவ தில்லை!
முற்றிலும் மாறி முறிந்தபண் பாட்டினை
ஒட்டியே இனங்கள் ஒவ்வொன் றாயின!
ஒன்றில் பிறந்து வெவ்வே றாகும்
எல்லோ ரினமும் ஒன்றே யாகும்"

என பாரத ஒருமைப்பாட்டை நேர்த்தியாக வலியுறுத்தும் கவிஞர் பாரத பண்பாட்டின் செழுமையை,

"பாரத முழுதும் ஒருபண் பாடாம்!
கூரிய இமயப் பனிவரை தொட்டுக்
குமரி வரைக்கும் கூறுகூ றாகப்
பகிர்ந்து பார்த்தாலும் பண்பா டொன்றே
அடக்கைக் கனிக்குச் சாட்சிகள்
வேண்டாம்...."

என்று ஆணித்தரமாக அறைகிறார்!

தேசீய சிந்தனையுள்ள கவிஞர் சீனர்கள் பாரதம் மேல் படையெடுத்தஞான்று.

"எதிர்வரும் பகையை
ஏறிட்டு நோக்கிக்
கொதிநெருப் பள்ளிக்
கொட்டா திருந்தால்
விழிகளி ரண்டும்
வீழ்க நிலத்தே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA 6-1-1996 LIBRARY

தூவெனக் காறிடத்
துன்னலர் குழுவைப்
போவென வழியே
போக்கா திருந்தால்
நாவொடு வாயும்
நாலு துண்டாக...

என்று உணர்ச்சி பீறிடப் பாட்டிசைக்கிறார்.

பிறிதொரு கவிதையில்,

................

திங்களும் வானில்
திரிகிற வரையில்
எங்களுக் குரிமை இந்நாடே-இதில்
தங்கள் உரிமைச்
சாஸ்திரம் சொல்வோர்
எங்குவந் தாலும் மண்ணோடே!

வெண்பனிக் குன்றில்
செம்பனி ஆறு
கண்படு முன்னே ஓடிவரும்—அது
தண்பொழில் எங்கள்
தாயக கீதம்
பண்ணோ டெழுந்தே பாடிவரும்!

என்றெழுதித் தம் கவித்திறனை இனங்காட்டுகிறார் அவர்!

தத்துவச் சிந்தனைகளைத் தரளத் தமிழில் பாடுந்திறன் கவிஞரிடம் மிகுந்துள்ளது!

"பூஜ்ஜியத்துக் குள்ளே ஒரு
ராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாமலே இருப்பான் ஒருவன்—அவனைப்
புரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்
தென்னை இளநீருக் குள்ளே
தேங்கியுள்ள ஓட்டுக் குள்ளே
தேங்காயைப் போலிருப்பான் ஒருவன்—
அவனைத்
தெரிந்து கொண்டால் அவன்தான்
இறைவன்!"

மேற்காணும் கவிதை வரிகள் மூலம் கவிஞர் மிகமிக எளிமையான—அழகாக "இறைவன் எங்கே?" என்ற கேள்விக்கு விடை பகர்கிறார்.

இதே கவிதையில்

"ஒன்பது ஓட்டைக் குள்ளே
ஒருதுளி காற்றை வைத்து
சந்தையில் விற்றுவிட்டான் ஒருவன்-அவன்
தடம்தெரிந்தால் அவன்தான் இறைவன்"

என்ற பகுதியும், அநுபவத்தின் பின்னணியில், உண்மையின் அடித்தளத்தில் இருந்து கவிஞரால் புனையப்பட்டுள்ளது!

'யார் நால்வர்' என்ற கவிதையும் கண்ணதாசனின் தெள்ளிய அறிவுக்கு-இலக்கியத்திறனுக்கு சான்று பகரும் வண்ணம்,

"இருபதி லேயோ இருமி இளைத்து
அறுபதி லேயோ ஆடிமு டித்து
சூடு தணிந்து சுதியும் முடிந்து
கேடுறு கேண்மை நாடு துறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல நினைத்ததும் சொல்லா தொழிந்து
வெல்ல விழைந்ததும் வெல்லா தழிந்து
மெய்யே பொய்யாய் பொய்யே மெய்யாய்
கையொரு கட்டும் காலொரு கட்டும்
போட இறந்தவன் நாடக உடலைத்
தந்தோள் கொடுத்துத் தாங்கி எடுத்து
கடைக்கரு மஞ்செயக் கடைக்கா லூன்றும்
நால்வர்! நால்வர்! நன்றிக் குரியவர்!
அவரே உலகம் அறிவுரை கூறும்
நால்வர்! நால்வர்! நாளை நம் மவரே"

என்று அமைந்துள்ளது.

சோகபாவம் மிகுந்த கவிதைகளை வடிப்பதில் கண்ண தாசன் கைதேர்ந்தவர்.

நேருஜி இறந்தஞான்று ஆனந்தவிகடனில் கவிஞரெழுதிய கவிதை காலங்காலமாய் வாழவல்ல அமர கவிதையாகும்!

"அம்மம்மா என்ன சொல்வேன்
அண்ணலைத் தீயி லிட்டார்
அன்னையைத் தீயி லிட்டார்
பிள்ளையைத் தீயி லிட்டார்
தீயவை நினையா நெஞ்சைத்
தீயிலே எரிய விட்டார்!
தீயசொல் சொல்லா வாயைத்
தீயிலே கருக விட்டார்!

என உள்மன நெகிழ்வுடன் தங்குதடையின்றித் தமிழ் பெய் கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து,

"சாவே உனக்கொருநாள்
சாவுவந்து சேராதோ!
சஞ்சலமே நீயுமொரு
சஞ்சலத்தைக் காணாயோ!
தீயே உனக்கொருநாள்
தீமூட்டிப் பாரோமோ!
தெய்வமே உன்னையும் நாம்
தேம்பி அழவையோமோ!"

என்று கவிஞர் எழுதிச் செல்லும்போது இதுவன்றோ கவிதை என போற்றவே தோன்றும்!

தமது சோதரி பிரிவு குறித்துக்கவிஞர்,

"என்னை அழவிடு! என்னை அழவிடு!
அன்னை என்னை அழவே படைத்தாள்!
தன்னந் தனியே சாய்ந்து படுத்து
தலையணை நடுவே இருவிழி புதைத்து
தாயொரு தந்தை தமக்கை தலைமுறை
சரஞ்சர மாகப் பிரிவதை நினைத்து..."

என்றும்,

"வானம் அழுவது மழையெனும் போது
வையம் அழுவது பனியெனும் போது
கானம் அழுவது கலையெனும் போது
கவிஞன் அழுவது கவிதையா காதோ!...

என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்நாதமொலிக்கும் கவிசெய்கிறார் அவர்!

கண்ணதாசனின் 'தனிவழிப்பயணம்' எனுங்கவிதை,

"சாலையில் போவதோ தனிவழிப் பயணம்
சாலையின் முடிவில் சந்திப்பு மரணம்
உட்புறக் காற்று அப்புறம் போகுமுன்
கட்குடம் மைக்குடம் காய்ந்து சாயுமுன்
ஓராயி ரங்கவி உலகுக் களித்து
நூறாயி ரம்தரம் நானே படித்து
தேரா மனதும் தேர்ந்து தெளிந்து
எழுதிய ஏட்டைஎன் கையில் எடுத்து
தலைவன் புத்தக சாலையில் வைப்பேன்
அதுவரை என்னைத் தனிவழி விடுங்கள்!"

என அருமையாகச் செல்கிறது!

தாய்லாந்து போன கவிஞர் அங்கே அழகு பொங்கும் அணங்கினரைக் கண்டார்! பழகு தமிழிலே பாங்கான கவிதைகள் படைத்தார்!

அவற்றில்,

"கள்ளரும்பிய வாயிதழ் மழைக்
கார்அரும்பிய பூங்குழல்
உள்ளரும்பிய பல்லணி அதன்
ஊடரும்பிய தேன்மொழி
வெள்ளரும்புகள் பால்நுதல் சிறுவிழி
யரும்புகள் நாடகம்
துள்ளரம்பையின் சாயலோ இளந்
தோளரும்பிய 'தாய்க்'கிளி!'

என்ற கவிதை கம்பீரமாய் ஜொலிக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணதாசன் கவித்திறன் அவர்யாத்த தைப்பாவை, மாங்கனி காவியம் உட்பட பல தனிக் கவிதைகளிலும் மேலோங்கி நிற்றலைக் காணலாம்!

## வாழ்க்கைக் குறிப்புகள்

- சிறுகூடல்பட்டிச் சிற்றூரிலே; சாத்தப்பன்—விசாலாட்சி தம்பதிக்கு மைந்தனாக 24-6-1927இல் பிறந்தார்.
- 1944இல் தம் முதற்கவிதையை வடித்தார்.
- 1949இல் 'கன்னியின் காதலி' படம் மூலம் திரைப் படப் பாடலாசிரியராக அரும்பினார்.
- 'கண்ணதாசன்' என்ற பெயரில் இலக்கியப் பத்திரிகை ஆரம்பித்து அருமையாக நடாத்திக் காட்டினார்.
- 1978இல் அரசவைக் கவிஞராக அப்போதைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரால் நியமிக்கப்பட்டார்.
- ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட, தமது கருத்தும் எழிலும் பொருந்திய திரைப்பாடல்களாலும், சீரிய கவிதைகளாலும் படித்தவர்களையும், பாமரர்களை யும் ஒருசேரக் கவர்ந்த தனி ஒரு கவிஞரான இவர், 24-7-81இல் அமெரிக்காவில் உள்ள சிகாகோ மருத்துவமனையில் விழி மூடினார்!

# அன்னைக்கு விண்ணப்பம்

காதலைப் பாடக் கலைஞரைப் பாடக்
கவிஞரைப் பாட நான் நினைத்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதரைப் பாட மழலையிற் பாடும்
மைந்தரைப் பாடவும் விழைந்தேன்
பாதையில் மாறிப் பாழ்வெளி யேறி (ப்)
பாதகர் குழுவிடைச் சேர்ந்தேன்
சூதரைப் பாடிச் சூழ்ச்சியைப் போற்றிச்
சோர்ந்தனே எந்தமிழ்த் தாயே !

மூடரைப் பாடி முழங்கிய நாளை
முறையுடன் கழித்திருந் தேனா !
ஓடெடுத் தேனும் கைப்புறத் திறந்து
ஊர்ப்புறத் துண்டிருந் தேனா !
தேடரும் புலவர் திருமனைத் தோட்டச்
சேவகம் செய்திருந் தேனா !
பாடினேன் பாழும் பரத்தையைக் கற்புப்
பத்தினி என்றுயான் தாயே !

இருட்டறை நீங்கி வெளிப்புவி காண
எழுந்துயான் வந்துளேன் தாயே!
குருட்டுளம் மாறிக் குழைவுளம் பெற்றுக்
குணத்தொடும் வந்துளேன் தாயே!
பொருட்கவி பாடிப் புதுமலர் பூத்துப்
பொலிவுற வந்துளேன் தாயே!
அருட்கடல் உந்தன் அரியணை மேலே
அமர்த்துவாய்! எந்தமிழ்த் தாயே!

## அழுவதில் சுகம்

தொழுவது சுகமா ? வண்ணத்
தோகையின் கனிந்த மார்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுவது சுகமா ? உண்ணும்
விருந்துதான் சுகமா ? இல்லை
பழகிய காதல் எண்ணிப்
பள்ளியில் தனியே சாய்ந்து
அழுவதே சுகமென் பேன்யான்
அறிந்தவர் அறிவா ராக !

காலங்கள் பிரித்த போதும்
கடவுளே தடுத்த போதும்
கோலங்கள் நரைத்த போதும்
குலமெலாம் வெறுத்த போதும்
பாலங்கள் மீண்டும் சேர்ந்தால்
பார்வையைக் கண்ணீர் மூடும்
ஞாலங்கள் அதற்கும் கீழே
நான்கண்ட காதல் உண்மை !

கண்களே அழுவீர் ; எந்தன்
கட்டிலில் துவண்டு வீழ்ந்த
பெண்களே அழுவீர் ; என்னைப்
பிரிந்தவள் வந்தாள் ! நெஞ்சின்
புண்களே மறைவீர் ; தேவி
புன்னகை புரிந்தாள் ! பாடும்
பண்களே இனிமேல் உங்கள்
பாடுதான் வேட்டை ! வேட்டை !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பையின் மதுவே ! உன்னைக்
குடித்துநான் துடித்த தாலே
காப்பியக் கவிஞ னானேன்
காதலி மீண்டும் வந்தாள் ;
மூப்பிலா இளைஞ னானேன் !
முடிவிலா உளத்தன் நானே
யாப்பிலா அவளை நெய்வேன்
அளிப்பனோர் பால காண்டம் !

நதிகளே வருக ; விண்மீன்
நடனங்க ளிடுக ; வானின்
மதியிசை பொழிக ; பூமி
மங்கல முழக்கம் செய்க !
அதிசயம் நிகழ்ந்த தாக
அரம்பையர் வானிற் சொல்க !
இதிகாசக் கதைகள் எல்லாம்
எமக்குமோர் இடத்தை நல்க !

அலைகடல் ஆர வாரம்
அவையெங்கள் காதல் கீதம் !
மலைமுக டடையும் மேகம்
மணவிழாப் பந்தற் கோலம் !
நிலைதொறும் நீரின் தேக்கம்
நெஞ்சத்தில் வார்த்த தீர்த்தம்
இலைமலர் கனிக ளெல்லாம்
எமக்கவன் மணிமுத் தாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தம் கொடுத்த தந்த
அழுகைதான் சிரிப்பே யல்ல!
நானந்தச் சுகத்தைக் கண்டேன்
நாளெல்லாம் அழுது பார்த்தேன்!
ஏனிந்த மயக்கம் என்றே
எண்ணுவீர் ஆயின், இன்று
நான்கண்ட காட்சி காண
நானல்ல நீங்கள் யாரும்!

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. முருகையன் [ஈழம்]
## (1935...)

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவியுலகில் திருப்பங்களைத் தோற்றுவித்த தனித்துவக் கவிஞர்களில் இ. முருகையன் ஒருவர்!

'முருகையனை அறிந்து கொள்வதென்பது நவீன தமிழ்க் கவிதையின் ஒரு பகுதியை அறிந்து கொள்வதாகும்' எனச் சொன்ன டாக்டர் க. கைலாசபதியின் கூற்று மிகைப்படுத்தப் பட்டதன்று.

விஞ்ஞான கல்வியை முறையாகக் கற்ற இ. முருகையன் தமிழ் இலக்கண, இலக்கியங்களையும் முறையாகக் கற்றவர்.

ஆதலால் விஞ்ஞான பூர்வ அணுகுமுறைகளை தமது கவிதைகளில் கொணர்வது அவருக்குச் சாத்தியமாயிற்று.

யாப்பு நெறிகளை புறக்கணித்து விடாமலேயே காலத்திற்கேற்ற சில மாறுதல்களைப் புகுத்திக் கவிதைகள் படைத்துள்ளார் அவர்!

தமது 'விடிவு' எனுங் கவிதையில்,

"பழந்தமிழை அகழ்ந்தெடுத்தே
ஆங்கிலத்தில் பலநூறு சொல் எழுதி
வெள்ளைக் காரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளி வந்திருக்கும் அவையில் ஏறி
எழுதியதைப் படிப்பதனால்
தமிழ் வாழாது"

என முழங்கும் கவிஞர்,

"கொழுந்து விடும் புத்தறிவின் முனைமுகத்தில்
கொண்டுவந்து நம் தமிழைக் கருவி ஆக்கி
விழுந்திருக்கும் நம்மவரும் விழிக்குமாறு
விறு விறுப்பை ஊட்டுவதால்...
விடிவுண்டாகும்.

என்கிறார்.

'பாவலன் யார்?' என்பதற்கு விடையாக,

"ஊடு போய் எதையும் உள்புகுந்தேறி
ஓடி ஓடி நுழையும் நுனி கொண்ட
மோடியான வடிவேலது வாங்கி
மூசி வீசுபவர் பாவலர் ஆவார்,"

எனப்பகரும் முருகையன் கலைகள் நோக்கம் யாதாக இருத்தல் வேண்டும் என்பதற்கு,

"கலைகள் எல்லாம் மனிதர்களின் நுகர்ச்சிக்காக
கருத்துகளைக் கையாளும திறமை என்ற
வலுவும் உள்ளோர் கலைஞர்களாய் வாய்ப்பார்
என்றால்
மண் முழுதும் அவராலே பயன் எய்தாதோ'

என பதிலிறுக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாடு மாடு என்று பல ஏசி''... எனுந் தலைப்பில் கவிஞர், பணக்காரத் தமிழர்கள் வீடுகளில் கொத்தடிமைகள் போலஉழலும் ஈழத்தின் மலையகப்பகுதி சிறுவர்கள் பிரச்சனையை அருமையாகக் கவிவடிவில் தருகிறார்.

''மாடு மாடு என்று பல ஏசி,
திட்டிக் கொட்டித் துரத்தி விரட்டிச்
சாமம் வரைக்கும் சாறு பிழிந்து
சக்கை வாங்குவீர்கள்
பொடியனை''

என உணர்ச்சி பீறிட எழுதும் கவிஞர், ஈழத்தின் தேயிலை உற்பத்தியை விருத்தி செய்து ஈழத்துப் பொருளாதாரத்தை மேம்படச் செய்தவர்கள் மலையகத் தமிழர்களே எனும் உண்மையை,

''பொடியனின் தமையனும் தாயும் தந்தையும்
மாமனும் மாமியும் மச்சான் காரனும்
உடம்பைப் பிழிய ஒருப்படாதிருந்தால்
மலை முகடுகளில், தேயிலை வளருமோ?
வங்கியில் எல்லாம் காசு புரளுமோ?''

என்ற வரிகள் மூலம் தெட்டத் தெளிவாக உணர்த்துகிறார்.

அடிமைப்பட்டவன் அடிமையாகவே இருப்பதில்லை! இல்லாதவன் பொல்லாதவனானால் உலகம் தாங்காது. மாடு மாடு எனத் திட்டு வாங்கிக் கிடக்கும் சிறுவனும் ஆர்த்தெழும் நாள் வருமென்பதை பணத்திமிர்மிக்க முதலாளி வர்க்கத் தமிழர்களுக்கு எச்சரிக்கும் விதத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாடு மாடென ஏசுகிறீர்கள்
மாடும் கயிறுகள் அறுக்கும்
ஆடவர் மகளிர் அது செய்யாரோ?"

என்றெழுதி ஆணித்தரமாகக் கவிதையை நிறைவு செய்கிறார் கவிஞர்.

'பசிக்கு வைத்தியம்' எனுங் கவிதையில் எத்துணை பெரிய ஞானியாயினும் பசிக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்கிறார்.

................

"ஞானியின் சிரசோ வானமுகிலிடை
ஞாபகம் எங்கோ கடந்து நடந்தது,
எல்லை இல்லா இருள் வெளிக்கு அப்பால்
மின்னொளி நிரம்பி மிளிரும் பரப்பிலே
உறங்காது உறங்கி, உண்மை
அருந்தாது அருந்தி ஆத்துமம் கிடந்ததே"

என ஞானியின் செயற்பாட்டைச் சொல்லும் கவிஞர், ஐம்பூதங்களும் ஞானியை நிலைகுலைய வைத்து பசியின் மகத்துவம் உரைப்பதினை,

"நீ முன் தெளிந்த நிலத்தை ஏன் மறந்தாய்?
நீ முன் நீந்திய நீரை ஏன் மறந்தாய்?
நெருப்போ சிற்றுயிர் வயிற்றுள் நுழைந்தது
எரித்து வருத்திச் சுருட்டி அலைத்தது
துடித்துப் பதைத்த சிற்றுயிர்,
தடால் எனச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிந்து விழுந்தது, தரையிலே—
பசிக்கு வைத்தியம் பார்த்திடும் பொருட்டே''

என நையாண்டித்திறன் பொங்கக் கூறுகிறார் கவிஞர்!

ஆசார சீலர்களெனத் தம்மைக் கருதிக் கொள்வோர் சாதித் திமிரோடு அலைந்து மக்களைக் கூறுபோடுவதை 'எழுச்சிதான் எமக்கு வேண்டும்' கவிதையில்,

''வேதத்தை ஆகமத்தை
வேறெதன் பொருட்டென்றாலும்
ஓதற்கு நாட்டம் இல்லா
உத்தமப் பெரியார் எல்லாம்
சாதிக்குச் சான்று தேடி
சாஸ்திரம் புரட்டுகின்றார் -
தீதுக்காய் நெடுக வாழ்வோன்
திருக்குறள் படித்தல் போலே!';

என்று கடுமையாகச் சாடுகிறார் கவிஞர்!

பஞ்சபூதங்களின் நுட்பங்கள் கூறும் விஞ்ஞானக் கலை மெத்த வளருது மேற்கே!

நாமோ கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துப் பெருமைகளைப் பேசிக் கிடக்கிறோம்.

முருகையனுக்கு இது பொறுக்கவில்லை; இப்போக்கினை,

''விண்வெளி எட்டி வெளிச்செல்லும் முன்பாக
மண்தரையில் வான வனப்பைச் சமைப்பதற்கும்
வாய்ப்பை சமனாய் பகிர்ந்து சுவைப்பதற்கும்,
ஏய்ப்பை ஒழித்தே இணைந்து நடப்பதற்கும்
நெஞ்சம் இசைந்தார்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மேனாட்டார் செயற்திறன் வியந்து, நம்மவர் பிற்போக்கு நிலையினை,

"நாமோ
இரண்டாயிரம் ஆண்டு பழையசுமை
அத்தனையும்
சற்றே இறக்கிச் சலிப்பின்றி, ஓய்வுபெற்றுப்
புத்தூக்கம் எய்திப் புறப்படவும்
எண்ணுகிலோம்"

என்று வேகத்தோடு பாடுகிறார்!

மதியோங்கியோராயும், அஞ்சாமை மிக்கோருமாய் உலகின் முன் தம்மை இனங்காட்டிய ஈழத் தமிழர்கள் பலர் இந்நாளில் அ க தி க ளா கி அல்லற்படுவது கண்டு, கனன்றெழுந்தது கவிபாடுகிறார் முருகையன்.

"வீடிழந்து தெருவிலே நிற்கிறோம்
வெட்டப் பட்டும் அடிபட்டும் சாய்கிறோம்
தேடிவைத்த சிலபண்டம், சல்லிகள்
திருடப்பட்ட அகதிகள் ஆகிறோம்
ஓட ஓட விரட்டப் படுகிறோம்
ஓங்கி மோதி உதைக்கப் படுகிறோம்
வயிற்றில் ஏறி மிதிக்கப் படுகிறோம்"

என்கிறார் அவர்.

தொடர்ந்து,

"வழியில் வைத்து மறிக்கப் படுகிறோம்
வயலில் விட்டுப் பொசுக்கப் படுகிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையில் இட்டுச் சிதைக்கப் படுகிறோம்
செக்கில் இட்டுத் துவைக்கப் படுகிறோம்"

என்கிற கவிஞர்,

"சண்டை வென்று
தமிழினம் ஓங்குக—
சமத்துவத்தின் குளிர்மை நிலவிலே"

எனத் தம் கனவைக் கவியாக்குகிறார்.

பேச்சோசைப் பண்பைப் பேணி, கருத்துகளை முன்னிலைப் படுத்தும் தனிப் பாணியில் கவிதைபொழியும் முருகையன், தமது கவிதை வாழ்வின் முற்பகுதியிலே மொழிநயம் மோகச் சிறக்கடிக்க, ஓசையெழில் ஓங்க பல கவிதைகளைப் படைத்தவர்!

எடுத்துக்காட்டாக,

"காரிருள் துண்டு படும்படி பண்பு
கனன்றதோர் இன்கவிதை
காலை மலர்ந்தது போல எழுந்தது
காண்க; இவன் கவிஞன்!
கூறிய இன்ப நறும்பதம் என்பன
கொண்டு தமிழ் வனையக்
கோகில கானம் எனும்படி பண்கள்
குழைந்து விளைந்தமையால்"

என கம்பீர கவி செய்யும் இவர், மேலும்

"நாடு, நறுந்தமிழ் ஞான விருந்துகள்
நாளும் நடந்தவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவில் இருந்து அவ்வா ணிமொழிந்தவை,
நாத நயந்திகழ் சீர்
வீடி தெனும்படி மேய செழுங்கவி
வீறு சிறந்தமை யால்,
வேக மிகுந்து கனிந்த பதங்களில்
வீரம் இருந்தமை யால்!''

என்று எழில்மின்னப் பாடுகிறார்!

## வாழ்க்கைக் குறிப்புகள்

- யாழ்ப்பாணம் மருங்கே உள்ள சாவகச்சேரிப் பகுதியில் உள்ளடங்கிய கல்வயல் சிற்றூரில் 1935-இல் பிறந்தார்.
- 1950 இல் இருந்து கவிதை எழுதி வருகிறார்.
- 'மாடும் கயிறுகள் அறுக்கும்' இவர் தம் அரிய கவிதைகளைக் கொண்ட நூல். 'நெடும்பகல்' விஞ்ஞான சிந்தனை வளம் பொலிய இவர் யாத்த காவிய நூல்.
  'ஒரு சில விதி செய்வோம்' இவர் தம் திறனாய்வுக் கண்ணோட்டத்தைப் புலப்படுத்தும் கட்டுரை நூல்.
- லண்டன் பல்கலைக் கழக பீ.ஏ., பி.எஸ்சி. பட்டங்களைப் பெற்ற இவர் இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளராகப் பணியாற்றுகிறார். வீறுடன் கவிதைகளும் எழுதி வருகிறார்.

## புதிய நாள்

புதிய நாள் மலர் பூத்து விரிந்திடும்
பொலிவினோடது காற்றில் அசைந்திடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமதாய் ஒரு சூக்கும நன்மணம்
இசைய ஓர் மன ஊக்கம் எழுந்திடும்
உதயமான இந் நாட்கென வந்துள
உயர்வு தோதென ஆட்கள் நினைந்திட
எதுவும் நாம் ஒரு மூச்சில் முயன்றிடில்
இயல்வதாம் எனும் நோக்கு
மிளிர்ந்திடும்.

பிறரை நோவுற வாட்டுதல் என்பது
பெருமை யாவையும் ஓட்டிடு புன்செயல்
அறமிலாதது;
தீக்கெடு வன்முறை
அதனை வேரொடு நீக்குதல் நன்னெறி,
குறைவிலா நிலை கூட்டுவம் என்பவர்
கொடுமை யாவையும் வீட்டுவர்—
மொய்ம்பினர்
திறமையாளர்கள் மாட்சிமை கொண்டிட,
செழுமையானதொர் வாழ்க்கை
தெளிந்திடும்.

உலகெலாம் அதி கூர்ச்சிறு நுண்ணிய
உணர்வு தீவிரமாய்ச் செயல் பண்ணிட
வறுமை, காய்வுகள், காழ்ப்புகள், சஞ்சலம்
வலிமையோடொரு போர்ப்படை
வென்றிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகி ஓடிட மேட்டிமை மிஞ்சிட,
மெலிவு, நோய்நொடி, வேற்றுமை
துஞ்சிட
பொலிவினோடொரு பூர்த்திமை
வந்திடும்
புதிய நாள் மலர் பூத்து விரிந்திடும்.

## வாயடைத்துப் போனோம்!

'ஏன் நண்பா, மௌனம் எதற்கு?'
என்று கேட்டிருந்தாய்.
வாயடைத்துப் போனோம்;
வராதாம் ஒரு சொல்லும்.
'திக்' கென்ற மோதல்—
திடுக்கிட்டுப் போனோமே!
பொய் வதந்திக் கொள்ளி
பொசுக்கென்று போய்ப்பற்ற

ஏற்ற வகையில்
இதமான நச்செண்ணெய்
ஊற்றி
அதில் ஊற வைத்த உள்ளங்கள் இல்லாமல்
இத்தனை தீய எரிவு நடைபெறுமா?
எத்தனை தீய எரிவு—தலையுடைப்பு,
குத்து வெட்டு, பாயும் குருதிக் குளிப்பாட்டு?
சற்று முன்னர் மட்டும் சகஜமாய்ச் சாதுவாய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசி இருந்த பிராணி
சடக்கென்று
வாரை இடுப்பாற் கழற்றி,
மனங்கூசாமல்
ஓங்கி விளாச ஒருப்பட்ட சிந்தையதாய்
மாறிவிட்ட விந்தை மருமம் என்ன?
சுர்ரென்று
சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?

கொள்ளை, திருட்டு, கொலைகள்,
கடையுடைப்பு,
பிள்ளை அரிவு, பிடுங்கல், வதை
புரிந்து
சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?
ஒன்றும் எமக்குச் சரியாய் விளங்கவில்லை.
'திக்'கென்ற மோதல்-திடுக்கிட்டுப்
போனோம் நாம்.
வாயடைத்துப் போனோம்;
வராதாம் ஒரு சொல்லும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலை இளந்திரையன்

## (1930 ..)

தமிழின மேம்பாட்டுச் சிந்தனைகளையே தமதுவாழ்வின் இலட்சியக் கனவாகக் கருதி வாழ்ந்து வரும் சாலை இளந்திரையன், இந்நூற்றாண்டின் உயரிய கவிஞர்களில் ஒருவர்!

அவர் நெஞ்சிலிருந்து அமுத கங்கையாய் கவிதை பிரவகிக்கிறது!

'சோதி வேண்டும்' எனுந் கவிதையில்,

"புல்லின் நுனித்துளி நீரில்—ஒரு
பொற்றை அடங்குதல் போலே
சொல்லில் இயன்றிடும் பாட்டில்-உயிர்ச்
சோதி பிடிபட வேண்டும்!

......

பாட்டு நடந்திட வேண்டும்;—அதன்
பாதச் சிலம்பொலி தன்னில்,
நாட்டு மனிதரின் நெஞ்சம்—தனி
நர்த்தனம் ஆடவும் வேண்டும்!

எனப்பாடுவது, கவிஞரின் கவிதா நோக்கை நயத்தோடு இனங்காட்ட வல்லது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்துப் பாதை வழியே வஞ்சியொருத்தி கஞ்சிக் கலயத்தினை ஏந்திப் போகிறாள்.

காண்கிறார் கவிஞர். சொற்கோலம் போடுகிறார்! எப்படி?

"செந்நெல் கழனிகளூடே—எழில்
நீண்டு கிடக்கும் வரப்பில்;
புன்னகை மின்னிடும் வாயும், ஒளி
பொங்கும் விழிகளுமாக—
பொன்னில் இழைத்ததோர் சிற்பம்—
உயிர்
பூத்து நடப்பது போல,
கன்னி நடந்திடுகின்றாள்—ஒரு
கஞ்சிக் கலயத்தினோடே"

என்று! சுகமான சுடர்க்கவிதை அல்லவா இது?

வானின் வனப்பு கவிஞரை வரித்துக் கொள்கிறது.

அதனை,

"காலைக்குப் பொன்னொளி பூக்கும்;—
பகல்
கண்ணுக்குள்ளே வெயில் தேக்கும்;
மாலைக்குச் செஞ்சிவப் பேந்தும்;—ஒளி
மங்கிடக் கங்குலில் நீந்தும்!
வானுக்குள்ளே விளக் கேந்தும்—ஒரு
வண்ண மினுமினி யாலே
மேலுக்குப் பொன்னிழை பூணும்—அதன்
மேன்மை கவிக்கடங் காதே!

எனச் சித்திரந் தமிழாகச் சிந்துகிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையாரின் 'மலைச் சாரல்' கவிதை, தத்ரூபமாக,

..............

"வேட்டைக்கு வருகின்றார் வேடர்; காட்டில்
விறகு வெட்டிக் கட்டாக்கித் தலையில்
கொண்டு
வீட்டுக்கு விரைகின்றார் உழைப்போர்; பன்றி
வெளியேறி வருகிறது புதரை விட்டு;
பாட்டுக்கள் சீட்டி;யாங் அடித்துக் கொண்டே,
மந்தையுடன் நகர்கின்றார் இடையர்; நாளை
காட்டத்தன் அழகையெல்லாம் மலையின்
சாரல்
காரிருளால் மூடுவதைக் காணும் திங்கள்!

என்று அமைந்துள்ளது!

கவிஞர் யாத்த 'ஆற்றங்கரைதனிலே' கவிதை அழகு கொஞ்சும் அமுதக் கவிதை!

..........

"செந்நெல்லும் சுவைக்கரும்பும் இணைந்த
காட்சி
தீந்தமிழில் உரைநடையும் கவிதையும் போல்
செந்நெல்லின் மணியொன்றை; இழுத்துச்
செல்லும்
சிற்றெறும்பு கரும்பினிலே தேனு றிஞ்சும்
வந்தங்கே கதிரறுக்கும் தொழிலர் கையில்
வாளிருக்கும், வாயினிலோ கரும்பிருக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொந்தங்கொண்டங்குவரும் தென்றல், மாதர்**
**சுந்தரவாய்ப் பாடலுக்குள் மறைந்து**
**கொள்ளும்!**

என்று கவிதை அருமையாகப் போகிறது!

பூவையின் காதல் புன்னகையால் ஆவிகிறங்கிய கவிஞர்;

**"கற்றை நிலவைப் பிடித்துவைத்தே—அதில்**
**காந்த விசையையும்கொட்டி வைத்தே**
**ஒற்றைச் சிறுநகை என்றிவளும்—இதழ்**
**ஓரத்தி லேவிளை யாடவிட்டால்,**
**முற்றுந் துறந்த முனிவர்களும்—சிறு**
**'மோகச் சலனம்! அடைவரெனில்**
**பற்றிப் படரும் மனத்தினனாம்—இந்தப்**
**பச்சை மனிதனைக் கேட்கணுமோ?"**

என்று எழிலோங்கத் தமிழ் பின்னுகிறார்!

இளந்திரையன் இயற்கையின் எழிலிலே, காதலின் மனோகரத்திலே மட்டும் மனமிழந்து பாட்டிசைப்பவரல்லர்;

அவர் போர்க்குண கவி! எவர்க்கும் விலை போகா வீறுடைய வித்தகக்கவி.

அவர்தம் மனப்போக்கை, 'இதயக்கனல்' எனுந் தலைப் பிலமைந்த,

**"வீரிய சொற்கள் விளைக்கவும், புவி**
**வீணர்களைப் பற்றி அறுக்கவும்,**
**சீரிய ஓர் புவி தன்னையே—அந்தச்**
**செந்தமிழ்ச் சொல்லில் படைக்கவும்**
**பாரில் பிறந்து வளர்பவன்—புவி**
**மானுடத் துள்ளொரு மானிதன்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியம் செய்தன்றி ஓய்கிலேன்—இன்னும்
கட்டுரை சொல்ல விரும்பிலேன்...."

கவிதைகளில் ஒன்று தெளிவாக இனங்காட்டுகிறது!

ஆண்மை பொங்கக் காரியமாற்றும் கவிஞர், தமது காரியம்யாவிலுங்கை கொடுக்கும் துணையாகத் தமது துணைவி இருக்க வேண்டுமென விரும்புகிறார். இதனை,

"மோதுகின்ற காட்டுத் தீயில்
முன்னெழுந்து செல்கிறேன்—என்
முல்லையே, நீ கூட நில்லு
மூடர் தம்மை வெல்கிறேன்"

என்ற கவிதை மூலம் சொல்கிறார்.

அவர் விழைவு பலித்தது! தமிழுலகம் அறிந்த செய்தி!

'துணை ஏனோ?' எனுங் கவிதையும் தமிழர்க்கு அறிவு வழி சொல்லும் அரிய கவிதை!

"பூவரும் பைப்படி பொன்தளி ரைப்படி
புத்தகத்தைப்படி, தோழா—அதை
யாவரும் இப்படித் தான்படித் தாரெனும்
எண்ணத்தை நீஇடி, தோழா!

என்றும்,

உன்னை மறந்தொரு புத்தம் புதிய பணி
உன்னகத் தூறிட வேண்டும்—நீ
என்னை அவனை எவனையு மேதள்ளி
ஈடுபட்டே றிட வேண்டும்!

என்றும் கவிஞர் கவினோடு மொழிகிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த தமிழகம் எனுங் கவிதையில்,

"செத்துக்கொண் டேவரும்
இத்தமிழ் நாட்டினைத்
தேற்றுவ தெப்படி யோ?—இதில்
சேர்ந்துகொண் டேவரும்
மாபெரும் நோய்களை
நீக்குவ தெப்படி யோ?"
... ....

என்றும்,

......
"மேடையில் 'வெள்ளையும்
சொள்ளையு மாக" வே
வீற்றிருக்கின்றவ ரும்—செயல்
மேற்கொள்ளும் போதிலே
கூவத்தில் அல்லவோ
வீழ்ந்திடு கின்றனர் கள்!"
......

என்றும்,

.. ..
"வாக்கு நயமில்லை,
வாழ்க்கை நலமில்லை—
வாழுகி றான்தமி ழன்—இந்த
வையத்தி லேஇவன்
பூத்தவ னாம்! அந்த
வக்கணை என்னத்துக் கோ?"!

என்றும் தனது தணற் சிந்தனைகளை விருடைப்பாவாகச் சீருடன் செப்புகிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை இளந்திரையன் கவிதைகள் சொல்லெழிலும், கருத்துப் புதுமையும், சப்த மாட்சியும் நிறைந்தவை!

'உரைவீச்சு' எனும் புதுப்பெயர் கொடுத்து எழுதிய 'வசனகவிதை'களிலும் கவிஞரின் இனமானப் போக்கையும், கவித்திறனையும் காணக்கூடியதாக உள்ளது!

## வாழ்க்கைக் குறிப்புகள்

- நெல்லை மாவட்டத்தில் சாலை நயினார் பள்ளி வாசல் எனும் ஊரில் 6.9.1930இல் பிறந்தார் இவர்.
- தந்தையார் வ. இராமையா-தாயார் அன்ன லட்சுமி.
- தம்மோடு கல்லூரியில் இணைந்து பயின்ற கனக சவுந்தரி (சாலினி)யுடன் வாழ்விலும் இணைந்து தமிழின மேம்பாட்டுக்காக அயராது உழைத்து வருகிறார்.
- இளந்திரையன் கவிதைகள், அன்னை நீ ஆட வேண்டும், பூத்தது மானுடம் போன்ற நூல்கள் இவர்தம் பாத்திறனைப் பறைசாற்ற வல்லன: தமிழனின் ஒரே கவிஞன்' எனும் பெருநூல் பாவேந்தர் பாரதிதாசன் பேராற்றலை முழுமை யாக இனங்காட்டும் அரிய பொக்கிஷமாகும்.
- தன்னுரிமை உணர்ச்சி மேலோங்கிய ஆண்மைத் தமிழர்களை உருவாக்கும் வண்ணம் 'அறிவியக்கப் பேரவை' நிறுவி வீறுடன் செயலாற்றி வருகிறார் இவர்!

## பெருமிதப் பகடு

மண்ணைத் திருத்திட வந்து பிறந்தவன்
மானுட மானுட வன்—அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானைத் திறந்திட வந்து பிறந்தவன்
மானுட மானுடவன்
கண்ணைத் திறந்துயர் காமர் அழகினைக்
கண்டு களித்திடு வான்—அந்தக்
காட்சியி லேஇருள் கூட்டும் கொடியரைக்
காலில் மிதித்திடுவான்

கோபுரம் என்னும் குழந்தைக ளுக்கது
கூட்டி உயர்த்திடு வான்—வெயில்
கொன்ற நிலத்தையும் ஆழத்து நீரினைக்
கொண்டு புதுக்கிடு வான்
மாபெரும் கற்களை மண்ணு மணலெனப்
பண்ணிப் பரப்பிடு வான்—இந்த
மானுடன். மேடுகள் தள்ளிப் பலநெடும்
பள்ளம் நிரப்பிடு வான்

'எங்கள் சுதந்திரம்' என்ற புதர்களை
எட்டிப் பறித்தெறிந் தான்—புதிது
ஏற்றத் தடைவந் தெழுந்த இருட்டுகள்
யாவும் கிழித்தெறிந் தான்
பொங்கும் புதுச்சுனை யாகிப் புவிமகள்
பூக்க நடைஎடுத் தான்—கெடு
போக்கினர் கட்டிய புன்மை களில்எரி
மூட்டப் படையெடுத் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுட தோழனின் வீர நடையினைப்
பாடிப் புகழ்ந்திடு வேன்—அவன்
வாழ்க்கை வழி என்னும் மாணிக்க
வீணையை
மீட்டி மகிழ்ந்திடு வேன்
ஏடை, தம்பி, இருட்டர் பெருந்தடை
எத்தனை வைத்தனர்கள்!—அவை
எட்டி உதைத்திவன் கண்ட புதுமைகள்
எத்தனை எத்தனை கள்...!

## உள்ளம் உடைந்தது!

"ஓடும் ரெயிலினிலே—ஒருநாள்
ஊருக்குப் போகையிலே
பாடும் குரல் ஒன்றிலே—இனிமை
பரவி எழுந்ததம்மா!
மூடும் விழியுடனே—இசையில்
மூழ்கி இருக்கையிலே
பாடும் கலைஞனவன்—நடந்தென்
பக்கத்தில் வந்து நின்றான்

கண்கள் திறக்கவில்லை—கவிதைக்
காட்சியில் ஒன்றி விட்டேன்;
பண்கள் எனும் அவற்றில்—நடந்தே
பல்மைய மான இசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்கள் சிலிர்த்திடவே—பெருகி
விம்மித மானது போல்
கண்ணிமைக் கூட்டினுள்ளே—எதுவோ
காட்சி விரிந்ததம்மா!

தென்மொழி அத்தனையும்—அறிந்த
தேனிசை நற்கலைஞன்;
என்மொழி பாடிவிட்டே—தெலுங்கில்
இன்னிசை பொங்கி விட்டே,
கன்னட நன்மொழியும்—மலைஞர்
கண்ட நறுமொழியும்
என்னிரு காதினிலும்—இசையாய்
ஏற்றி முடித்து விட்டான்!

எங்கிருந்தேன்? அறியேன்!—இசையின்
இன்ப நறுஞ்சுவையில்
மூங்கிவிட்டே யிருந்தேன்!—சிறிதோர்
முள்ளொளி கேட்பது போல்
அங்கொரு சின்ன ஒலி—கலைஞன்
அட்டைக் கரிவிரலில்
தங்கிய நாணயங்கள்—நொடித்தே
தந்த வறுமை ஒலி!

கண்விழித்தே முழித்தேன்;—அடடா
கான மழை முகிலோன்
கண்களில் லாதவனா?—இரண்டு
காலில் ஒன் (று) அற்றவனா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்கள் அணிந்தவனா?—ஐயகோ!
பொட்டென் றுடைந்த துள்ளம்!
மண்ணினர்போல் எதுவோ—கொடுத்தே
கண்கள் குளமானேன்!

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபாரதி (ஈழம்)

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த மறுமலர்ச்சிக் கவிஞர்களில் ஒருவர் ராஜபாரதி.

ஈழத்தின் கிழக்கு மாகாணத்திலமைந்த மீன் பாடும் தேன் நாடென பேர்பெற்ற மட்டக்களப்பு மருங்கே உள்ள களுவாஞ்சிக்குடியிற் பிறந்தவர் இவர்.

இவர்தம் பாக்களில் தமிழுணர்ச்சி கரைபுரண்டோடும். சொற்கள் சுடர்வீசிப் பொலியும்.

சில ஆண்டுகளுக்கு முன் அகாலமரணத்தைத் தழுவிக் கொண்ட இந்த அற்புதக் கவிஞனின் கவிதைகள் சிலவற்றைக் கண்ணுறுவோம்.

தமிழின்பால் தாம் கொண்ட மகாவெறியை மகோன்னதமான முறையில்,

"கோடையிலே எரிவெயிலிற் காயும்போது
கொப்பளிக்குந் தமிழ்வெள்ளம் தோய
வேண்டும்
வாடைதரு மூதலிலே நடுங்கும் போது
வயந்தமிழ்க் கதிரென்னைக் காயவேண்டும்
பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும்
பைந்தமிழில் அழுமோசைக் கேட்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடையிலே என்சாம்பர் கரையும் போதும்
ஒண்தமிழே சலசலத்து ஓய வேண்டும்''

என்று பாடுகிறார் கவிஞர்!

'கவிதைப் பாசம்' எனுந்தலைப்பில் தமிழ்க்காதலை,

''பொன்பூக்கள் சொரிந்தொளிரும் பூங்கா
வொன்றில்
புள்ளினங்க ளிசைபாடப் புதுமை பூப்ப
வெண்பாக்கள் நொடிக்குள்ளே யாத்துப் பாடும்
விந்தையிலே சாதுர்யம் பெற்ற பாணன்
பண்பார்க்கும் தமிழ்பாடக் கேட்டேன்; ஆகா!
பருவத்தால் விம்மியெழும் பெண்மை நெஞ்சு
தன்பாட்டிற் பறந்தோடிச் சதங்கை கட்டித்
தாளத்திற் கமைவாக ஆடிற் றம்மா....''

என தமிழன்பர்கள் உயிரை ஈர்க்கும் வண்ணமெழுதுமிவர், மேலும்,

.........

''அசைகின்ற கமலத்தை-அநுரா கத்தேன்
அழைக்கின்ற களிவண்டை-அகிலத் தெட்டு
திசைகொண்ட வன்னத்தை-ரசிக்க வில்லை
தேனார்க்குந் தமிழ்கேட்டு லயித்துவிட்டேன்!''

என்று மிக அருமையாக எழுதுகிறார்!

ராஜபாரதி தமிழ்வாத்தியாராகப் பணியாற்றியவர்; வாழ்வில் வறுமையின் கொடுமைகளைச் சந்தித்தவர். பரிதாபகரமான இந்த அநுபவத்தை தம் மகளே பாடுவதாக உணர்ச்சி பீறிடும் பாவாக்குகிறார் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாட்டெழுதும் 'தமிழ்வாத்தி' எங்களப்பா
பசிகிடந்து பழகியவள் ஈன்ற அன்னை
நாட்டிலுள்ள பணக்காரத் தோழி மார்மேல்
நகைகிடந்து குலுங்குவதை உற்று நோக்கி
வாட்டமுறுங் கருவிழிகள் கையை நோக்க
வரிசங்கு கழுத்தையது தடவிப் பார்க்கும்
ஏட்டினிலே பாட்டெழுதும் எங்கள் வீட்டில்
'இல்லை' யென்ற பாட்டதுவே எதிரொலிக்கும்

மேற்காணும் கவிதை வரிகள் கல்லையும் கரைத்துவிடுமென்பதில் ஐயமென்ன?

மேலுங் கவிஞர் ஏழை வீட்டில் பிறந்த பிஞ்சு நெஞ்சின் ஆத்ம வேதனையை,

"காற்சட்டைத் துரைமாரின் குழந்தை குட்டி
காரினிலே பள்ளிக்குப் போகும்போது
மேற்சட்டைப் பீற்றலினைத் தொட்டுப்
பார்ப்பேன்;
மெல்லடிகள் வெயில்காய்ந்து கருவாடாகும்
பூப்போட்ட பாவாடை ஏதெனக்குப்
பூச்சழகு என்னிடத்தில் துளியுமில்லை
கூச்சமற்றுச் சொல்லுகின்றேன்; பெற்றதாயார்
குடல்நிறையச் சாப்பிட்ட நாளே யில்லை!

என்று 'உயிர் கலந்து' உன்னத கவியாகப் பொழிகிறார்!

தமிழை முறையாகக் கற்றோர், தமிழுக்காகத் தளராத் தொண்டாற்றுவோர் வறுமையில் வாடவும், பாமரரை ஏய்க்கும் வண்ணம் 'கவர்ச்சித் தமிழ்' பேசும் கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யறிந்தோர் அரசியலில் பட்டம் பதவிகள் பெற்று செல்வ மீட்டும் நடைமுறை ஒரு காலகட்டத்தில் ஈழத்திலும் இருந்தது.

பண வெறியும், பதவி வெறியும் பிடித்த இத்தகைய குடி கேடர்கள் வண்டமிழை வளர்ப்பதும் இல்லை; வறுமையை ஒழிப்பதும் இல்லை!

இத்தகையோர் முகத்திரையை கிழிக்கும் வண்ணம் அற்புதக் கவிஞர் ராஜபாரதி,

"முத்தாருங் கடல்சூழ்ந்த இந்த நாட்டில்
முத்தமிழைப் பாலகரின் உள்ள மேட்டில்
வித்தாக விதைக்கின்ற வித்த கர்க்கு
வேதனைதான் வேதனமோ? விளங்க வில்லை
"சத்தியமாய்ச் சம்வாதம் புரிவோம் என்று
சட்டசபை மேற்கொண்ட எம்.பி. மாரும்
நித்திரையா கொள்கின்றார் எந்த னுள்ளம்
நெக்குருகும் பரிதாபம் தீர்ப்ப தென்றோ"

என்று பாடுகிறார்!

ஆவேசமாகத் தமிழைப் பற்றியும், வறுமையைப் பற்றி யும் அமைந்த ராஜபாரதியின் கவிதைகள் சிலவற்றைப் பார்த்தோம்.

இனி நகைச்சுவை சிறப்போங்கிய 'மூட்டை விடுதூது' எனுங் கவிதையைப் பார்ப்போம்.

காதலிக்கு மூட்டைப் பூச்சியை தூதாக விடுத்து,

"கட்டில் இடுக்கிற் கதவோர மூலைக்குள்
ஒட்டி மறைந்தூரும் வட்ட உடற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டகமே
நெட்டுயிர்த்தே நள்ளிருட்டில் நீளக்
குறட்டைவிடும்
பெட்டையவள் காதிற்போய்ப் பேசு."

என எழிலோங்கப் பாடுங்கவிஞர், இரவிலே, உறவின் தாகம் அலைமோத, மூட்டைப் பூச்சியிடம்,

"என்னைக் கடித்தே எடுத்த இரத்தத்தைப்
பொன்னைப் பழித்தாள் தன் பூவுடலில்
சின்னக்
கொடுக்காலே குற்றிக் கொடுந்துயரத் தூங்கல்
அடுக்கா துனக்கென் றறை"

எனக் கூறுகிறார் கவிஞர்!

மேலும்,

.........

"கிள்ளாமற் கிள்ளு; கிளுகிளுப்பைப் பட்டாடை
உள்ளாலே ஊட்டின் உறங்காள் அக்
கள்ளி; கடை
வாயிற் திறந்தே வருவாள் எனைத்தேடி!
போ அப்பா, ஊராமற் போ!"

என சிறப்பாக பாடிச் செல்கிறார் கவிஞர்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணக்கிடக்கும் இயற்கையின் மகா சௌந்தர்யத்தில் தம்வசமிழந்த கவிஞர்,

"பட்டப் பகலைப் போலப்
பளிங்கு நிலா வெறிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக் களப் பாற்றில்-குயிலி
மச்சங்கள் பாடுதடி
ஊரிகள் ஒன்று கூடி
உல்லாச கீதம் பாடி
சீரை உயர்த்துதடி—குயிலி
செல்வங் கொழிக்குதடி
நாட்டுக் கவிகள் பாடி
நன் செய்வோ ரொன்று கூடி
பூட்டுங் கலப்பையிலே-குயிலி
பூதலம் ஆளுதடி''

என்று அமுதக் கவி இசைக்கிறார்!

## வாழ்க்கைக் குறிப்புகள்

- வி. கி. ராஜதுரை என்ற இயற்பெயரைக் கொண்ட 'ராஜபாரதி' ஈழத்தின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த களுவாஞ்சி குடியில் பிறந்தவர்.
- தமது மனைவி, ஜீவா பெயரிலும் மகள் பேரிலும் கூட பல கவிதைகளை இவர் யாத்துள்ளார்.
- தமிழாசிரியராகத் தமது பணியைத் தொடங்கி தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.
- ஈழகேசரி, வீரகேசரி, சுதந்திரன் போன்ற பத்திரிகைகளில் அற்புதமான பல கவிதைகளை எழுதிய இவர், அவற்றை நூல் வடிவில் வெளிக் கொணராது போனது தமிழுக்கு இழப்பென்றே சொல்ல வேண்டும்.
- மதுவுக்கடிமையாகி வாழ்வில் பல வில்லங்கங்களைச் சந்தித்த இந்த அற்புதக் கவிஞன், சுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாண்டுகளுக்கு முன் மட்டக்களப்பு வாவியில் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டார்!

## உள்ளமிசைக்குது காவியம்

முத்தொளி வீசும் முறுவலை—உயர்
முத்தமிழ் பேசும் இதழ்களை—நிறை
சித்திரை மாதத்துப் பூரணை—மதி
சிந்தும் நிலவு நிறத்தினை—ஒளிர்

பத்தரை மாற்றுயர் பொற்சிலை—செய்ய
பட்டுத் துகில்நிற மேனியைக்—
ஒத்தே இருக்கும் அழகினைக்—கண்டு
உள்ள மிசைக்குது காவியம்!

பாண்டிய ராசனின் வீச்சுவாள்—எறி
பட்டொளி தேங்கு விழிகளை—உளக்
கூண்டை உருவிட வீசுவாய்—தமிழ்க்
கூத்து முறைகளை ஆடுவாய்—என்

வேண்டுதல் ஏற்றிசை பாடுவாய்—கலை
வெள்ளம் மடைதிறந் தோடிட—உயிர்
தாண்டவ மாடுந் தமிழிலே—மனம்
தாவி யிசைக்குது காவியம்!

நீலக் கார்முகிற் கூட்டமோ?—என்
நெஞ்சம் புதைந்த பின்னலோ?—உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலக் கூந்தற் பரப்பிலே—கொடி
குலவு மல்லிகை பூத்திட—பூஞ்

சோலைக் காட்சி வெறுக்குது—கால்
சுற்றி உலவ மறுக்குது—என்
ஆழ நெஞ்செனும் பூங்குயில்-பண்
அயரப் பாடுது காவியம்!

காந்தட் கரங்களை ஆட்டுவாய்—என்
கற்பனைத் தேரைப் பூட்டுவேன் — பின்
தாந்தத் திங்கண தோமென—இணைத்
தாள் சிலம்பொலி கூட்டுவாய்—மற

வேந்தர் காத்த தமிழிலே—இதய
வீணை இசையை மீட்டுவேன்—மலர்
ஆய்ந்து கோத்த செந்தமிழ்—மணி
ஆர மாகுது காவியம்!

## தமிழ்த் தாய்

ஓங்கு புகழ்தாங்கி ஒல்கா நற் சொல்வளத்தால்
பாங்குடைய தென்னாட்டைப் பாலிக்கும்—
தீங்கனியே
தெய்வத் திருவே, திரியாத் தனியுருவே,
துய்ய நலம்பிறழாத் தூமணியே!—வையத்து
மூத்தமொழிக் குடும்பம் முளைத்துக் கிளைதாங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்த்துக் கனிசொரியக் காரணியாய்-வாய்த்தவளே
என்னம்மா உன்னை எவள்வந் திணைந்தாலும்
தன்னுருவாய் ஆக்குந் தரம்கொண்டு—முன்னாளில்
பாட்டும் உரையும் பரிந்தேற்றப் பாவலர்தம்
ஏட்டில் நடந்த எழில்மாதே—நாட்டுக்குக்
கண்ணாகி வண்ணக் கலை விளக்க மேற்றியிளம்
பெண்ணாயென் றென்றும் பிழையாமல்-மன்னுபுகழ்
கொண்டாய், புயல்கொண்ட கொள்கைசால்
'கூடல்'வளங்
கண்டாய், கலையின் கரைகண்டாய்—பண்டாண்ட
மூவர் புனைந்த முடிகொண்டு மொய்த்த படைக்
காவல் புரிந்த கடிமனையில்—ஏவலராய்
வேற்றுப் புலப்பெண்டிர் வேண்டும் பணியாற்ற
வீற்றிருந்த பேற்றை விழுங்கவருங்—கூற்றாகிப்
போந்த கடல்கோளும் புன்செல்லுங் கூட்டாகச்
சேர்ந்து வதைத்துஞ் செழித்த
முகஞ்-சோர்ந்தாயோ...?
இல்லை, என் தாயே என் இன்னுயிரே பேராற்றல்
வல்லை! நீ வாழ்ந்து வயங்கு.

□□□

UNIVERSITY ... DENIYA LIBRARY 6-1-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீலாவணன்

## [ 1931-1975 ]

செழுமையான சொல்லாட்சியோடும் மிடுக்கோடும் கூடிய அருமையான கவிதைகளை வடித்தவர் இவர்!

ஈழத்துக் கவிஞரான இவர் இந்த நூற்றாண்டில் தோன்றிய மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவர்.

1957இல் ஈழத்தின் கிழக்கு மாகாணத்திற்கு வந்த தமிழகக் கவிஞர் கண்ணதாசன், நீலாவணன், ராஜபாரதி போன்றோர்தம் கவிதைகளைக் கண்ணுற்று வியந்து பாராட்டினார்.

தாம் நடாத்திய 'தென்றல்' இலக்கிய இதழில் அவற்றை ''ஈழத்துக் கவிதைகள்'' என்று தலைப்பிட்டு வெளியிட்டு தமிழைக் கௌரவப் படுத்தினார்!

இனி நாம் நீலாவணன் கவித்தேன் பருகுவோம்.

கவிஞர் தமது 'தியாகம்' காவியத்தில் இயற்கையின் அம்சங்கள் காதல் கொள்வதாகக் கற்பித்துக் கவின் கவி பெய்கிறார்!

**'மங்கிவரும் பகற்பொழுது மடல்விரிந்த**
**தாழையெலாம் மணம் பரப்பத்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கநிற மணல்மேட்டிற் றனியாக
நானிருந்தேன் தமிழும் வந்தாள்!
பொங்கியெழும் கவியுணர்வுப் போதைக்கு
விசையூட்டப் புதுநி லாவும்
எங்கிருந்தோ அடிவானில் முளைத்தங்கே
ஆழியிடை அமுதம் பெய்தாள்"

எனப் பாடுங் கவிஞர், தொடர்ந்து

"அன்னையவள் கருவினிலே அடியேனோர்
பனித்துளியாய் அடைந்த வன்றே
தன்னிரண்டு கரத்தாலும் எனைத்தழுவித்
தாலாட்டித் தரணி வந்த
பின்னு மெனைப் பிரியாதே பேரன்பு
காட்டிவரும் பெண்ணாம் தூக்கம்
கண்ணிரண்டை அழுத்திடலுங் கவலையெலாம்
மறந்தினிய கனவு கண்டேன்"

என எழுதித் தமது பாத்திறனை தெளிவாக அடையாளங் காட்டுகிறார்.

காதங் கவிதைகளைத் தீட்டுவதிலும் நீலாவணன் கை தேர்ந்தவர்!

"மண்ணிடை இரவுக் கன்னியின் ஆட்சி
இன்னும் தேயவில்லை—இளம்
தென்னையின் ஓலை பண்ணிய இன்பப்
பாட்டுகள் ஓயவில்லை,
என்கடை வாயில் உன்னிதழ் ஊட்டிய
ஈரம் காயவிலை—எழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடும் என்றன் மென்முலை தானும்
பின்னே சாயவிலை!"

என்றும்,

"குறுமணல் மீது கொண்டல் தவழ்ந்த
சுவடும் மாறவிலை—அங்கு
புறவுகள் வந்து குறுநடை கொண்டு
கோலம் கீறவிலை"

என்றும் கவிஞர்யாத்த பாக்கள் இரசிகர்கள் இதயங்களில் இன்பலாகிரியை ஏற்படுத்த வல்லன!

நீலாவணன் கவிதைகளில் அதிகமாக ஆன்மிகப் போக்கும் அலை மோதுகிறது.

'துயில்' எனுந் தலைப்பில் 'மரணம்' பற்றி மகத்தான கவிதை ஒன்றை அவர் எழுதியுள்ளார். அதைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்த உலகில்
இருந்த சில நாழிகையில்
எந்தச் சிறிய உயிரும்
என் ஹிம்சையினால்
நொந்தறியா...
"யாதும் எனை நொந்ததிலை" என்கின்ற
அந்த இனிய நினைவாம்
அலங்கிர்தத் தாலாட்டுக்(கு)
என் இதயம் தந்து...
பழம் பிசைந்த
பால் கொஞ்சம் ஊட்டப்
பருகி, அதைத் தொடர்ந்து
கால்நீட்டிப் போர்த்தேன், என்
கம்பளியால்"

என்று அருமையாக பாட்டிசைக்கிறார்.

தொடர்ந்து,

"தாலாட்டில் மாலாகி
என்னை மறந்து துயில்கையில்...வீண்
ஒப்பாரி வைத்திங்கு
உலகத்தைக் கூட்டாதே!
அப்பால் நடப்பை அறிவேன்
அதை ரசிக்க
இப்பயலை மீண்டும்
எழுப்பித் தொலைக்காதே!
தப்பாக எண்ணாதே,
தாழ்ப்பாளைப் பூட்டிவிடு!"

என்கிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும்,

''மேளங்கள் கொட்டி என்றன்
மேட்டிமையை முழங்காதே!
தாளம் மொழிந்து
நடிக்காதே! என் பயண
நீள வழிக்கு நிலப்
பாவாடை தூவாதே,
ஆழ அகலம்
அளந்தெதுவும் பேசாதே!''

என்றெழுதி, தமது கவிதா திறனையும், அதேனூன்று 'ஆன்ம யாத்திரை' என்பது மரணத்தோடு முடியாத சங்கதி என்பதனையும் தெளிவாக உணர்த்துகிறார் கவிஞர்!

சமுதாயத்தில் சத்திய வேட்கை மங்கிவிட்டது! ஆள் பலத்தை வைத்தும், பணபலத்தை வைத்தும் அதிகாரம் செய்யும் வஞ்சகர் கூட்டம் பல்கிப் பெருகி விட்டது.

இதுகண்டு பொறுக்காத ஒரு வாத்தியார் கயவர்களை அழிக்கக் கனன்றெழுகிறார்! முடிவு? அவரை ஊரைவிட்டே விரட்டுகிறது கயவர் கூட்டம்!

'பாவம் வாத்தியார்' என்ற கவிதை மூலம் இந்த நிகழ்ச்சியை மண்வாசனை மணக்கும் மணிக்கவியாய் ஆக்குகிறார் நீலாவணன்.

''வாழத்தெரியாமல் வம்புகளில் போய் மாட்டும்
ஏழைப்புலவர் பெருமானே, என்ன இது!
கையிலே மூட்டை முடிச்சும் கவலைக ளோர்
பையிலுமாய் நிற்கிறீர்! ''பஸ்''சுக்கோ? நீண்ட
தொலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரப்பயணம் போல்! தொந்தரவே—எங்களது
ஊரார் உமையிந்த ஊரைவிட்டே ஓட்டுதற்காய்...
கல்முனைக்குப் போயலைந்து காசும் கொடுத்து
'ரைப்பிங்'
செல்லையா அண்ணரது சிந்தையைப்
போட்டுடைத்து
வெல்லமுடியாது சோடித்த பிட்டிசத்தில்
சொல்ல வெட்கமே; எனினும் சொல்லாமலும்போக
ஒண்ணா திருக்கிறது! ஓம் அந்த பிட்டிசத்தில்
உன்னானை நானுமொரு கையொப்பம்
போட்டதுண்டு"

என வாத்தியார்க்கு நேர்ந்த நிலையை மிக இயல்பாகக் காட்டும் இவர், தனிமனித நேர்மைகள் தருக்கர் சமூகத்தில் சரிவராது! அவர்களோடு இணைந்து போவதுதான் ஒரேவழி என்பதனை,

"பேடிகளாய்-பேயாய்ப் பிணமாய்க்-குருடாகிச்
சாராயத் துள்ளிகளில் சத்தியத்தைப் பூசிப்பார்!
ஆராண்டால் என்ன? அந்த ஆள்வோர்
திருப்புகழைப்
பாடி, நான் என்னுடைய பங்கைப் பெறுகின்றேன்
கூடினால் நல்லகுடி-விருந்து கொண்டாட்டம்
இல்லையென்றா சொன்னார்கள்? ஏனிந்தப்
பொல்லாப்போ?"

என்ற வரிகளில் அருமையாக எழுதுகிறார் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க்கைக் குறிப்புகள் :**

- கே. சின்னத்துரை என்ற இயற்பெயரைக் கொண்ட நீலாவணன் ஈழத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள பெரிய நீலாவணை எனுங்கிராமத்தில் பிறந்தார்.
- 1953 இல் தம் எழுத்துப் பணியை ஆரம்பித்தார்.
- வழி, வேளாண்மை ஆகிய இரு கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. இவர் யாத்த அருமையான **கவிதைகள் பல நூலுரு பெறாதிருப்பது தமிழுக்கு நட்டம் என்பதில் ஐயமே இல்லை!**
- கவிஞர் பள்ளியாசிரியராகவும் பணியாற்றியவர்.

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டுக்கோட்டை
# கல்யாணசுந்தரம்
## (1930—1959)

பொதுமக்களுக்குப் புரியக்கூடிய வகையில், பொது மக்களைத் தட்டியெழுப்புவதையே தமது ஜீவித லட்சியமாகக் கொண்டு பாட்டிசைத்தவர் இவர்.

மந்திரம் போன்ற எழிலார் மொழிப் பாங்கையோ, தனித்துவக் கற்பனை நயத்தையோ, நளினமான உவமைகளையோ இவர்தம் பாக்களில் காண்பது அரிது.

ஆனால் மக்கள் பேசும் மொழியிலேயே அதி ஆவேசமாகப் பாட்டிசைத்து சாமான்யர்களைத் தம் பாடற்கலையால் தட்டியெழுப்பும் மகாசக்தி கல்யாண சுந்தரத்திற்குக் கைவந்துள்ளது!

'மனிதசக்தி' என்ற மகுடத்தில்,

"சந்திரனைத் தொட்டதின்று
மனித சக்தி
சரித்திரத்தை மீறியது
மனித சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன்தான் விண்ணாட்டின்
அரசனென்ற
இலக்கணத்தை மாற்றியது
மனித சக்தி''

என உணர்ச்சி பீறிட மானுடனைப் பாடிக்களிக்கிறார் இவர்!

இந்தியா சுதந்திரம் பெற்றும் வறுமை தீரவில்லை; பொய்ம்மையும், போலித்தனமும் எங்கணும் விரவிக்கிடக்கிறது எனுங் கொதிப்பில்,

............

சுதந்திரத்தைப் பெற்ற முதல்
ஓர் நாளேனும்
துளியும் நீ மகிழ்ந்ததுண்டா?
உன்றன் மக்கள்
உகந்துமன ஒற்றுமையாய்
வாழ்ந்ததுண்டா?
உன்னைத்தான் மதித்ததுண்டா
உயர்ந்ததுண்டா?
எங்கோர் பகுதியிலே ஒன்றுபட்டார்
எனிலதனை ஆதரிக்கும் முறை
தானுண்டா?

என பாரதத் தாயிடம் வினவுகிறார் கவிஞர்.

'புதுஞாயிறு' என்ற தலைப்பில் உழைப்பாளர் உயர்வு பெற வேண்டுமென்ற வேணவாவோடு,

''செக்கச் சிவந்த செழுங்கதிரோனும்
கிழக்கினில் வந்துவிட்டான் —புவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மதிக்கண் விழித்துக் கிளம்பிட
வானில் உதித்து விட்டான்

.................

கத்தும் பறவை கனிமரத்தில் வந்து
ஒற்றுமை காட்டிடுதே—தலைப்
பித்தம் பிடித்தொரு கூட்டம் தனித்தனி
பேதம் வளர்த்திடுதே!
ரத்த வியர்வைகள் சொட்ட உழைத்தவன்
நெற்றி சுருங்கிடுதே—ஏழை
உத்தமர் வாழ்வை உறிஞ்சும் உலுத்தரின்
கொட்டம் அடங்கிடுதே—மக்கள்
வெற்றி நெருங்கிடுதே!''

என்று உணர்ச்சிப் பாட்டிசைக்கிறார் கவிஞர்!

வீரசிந்து' எனுந் தலைப்பில்,

''ஈரமற்ற நெஞ்சு கொண்ட
ஈனர் மாய்கவே
ஏழையை மிதித்து வாழும்
எத்தர் வீழ்கவே!
கோழை என்று நம்மை எண்ணும்
கொள்கை போக்குவோம்—கிளர்ச்சி
கொண்டு தாக்குவோம்
கூடி நின்று கொடியுயர்த்திக்
கொட்டி முழக்குவோம்—செல்வர்
கொட்ட மடக்குவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர்காள்!—துணிந்த
வீரர்காள்!!"

என ஆவேசமாக முற்போக்கு முரசு கொட்டுகிறார் கவிஞர்!

கல்யாணசுந்தரத்தின் முழுமையான ஆற்றல் அவர் யாத்த திரைப்பாடல்களிலேதான் விரவிக்கிடக்கிறது!

"வசதியிருக்கிறவன் தரமாட்டான்—அவனை
வயிறு பசிக்கிறவன் விடமாட்டான்

என்றும்,

"எழுதி படிச்சு அறியாதவன் தான்
உழுது ஒளச்சு சோறு போடுறான்;.
எல்லாம் படிச்சவன் ஏதேதோ பேசி
நல்லா நாட்டைக் கூறுபோடுறான்"

என அழகுற பாட்டிசைக்கிறார் கவிஞர்.

"செய்யும் தொழிலே தெய்வம்—அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி—கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி"

என்றும்,

"சாமிக்குத் தெரியும், பூமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலைமை—அந்தச்
சாமி மறந்தாலும் பூமிதந்திடும்
தகுந்த பலனை..."

என்றும் 'ஆளுக்கொரு வீடு' படத்திற்காகப் பாங்கோடு பாட்டிசைக்கிறார் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டித்தேவன் படத்தில்,

"கொடுமை புரிவதே
தொழிலாச்சு—உலகம்
கொள்ளை யடிப்பவர்க்கு
நிழலாச்சு!
வறுமைக்கு மக்கள் நலம்
பலியாச்சு—எங்கும்
வஞ்சகர் நடமாட
வழியாச்சு!"

எனக் கொள்கை முழக்கம் செய்கிறார் கவிஞர்.

'புதுமைப்பெண்' படத்திற்காக,

"......ஜாதிகள் பேசி நம்மைத்
தள்ளிவச்சி வாழ்ந்தவங்க
சாக்கடைப் பூச்சிகளாய்
ஏழைகளை நினைச்சவங்க
தனக்கே ஊர் முழுவதும்
சொந்தமென்று வளைச்சவங்க
சட்டங்கள் மாறிவரும்
நேரம் என்ன ஆனாங்க—எல்லாம்
சரி சமமாய்ப் போனாங்க!"

என முழங்குகிறார் பட்டுக்கோட்டையார்!

பொதுமக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சீரிய இலக்கிய ரசிகருங்கூட.

அவர் பார்வை கல்யாணசுந்தரம் மேல் விழுந்தது.

எம்.ஜி.ஆரின் திரைப்படங்களில் கவிஞரின் முற்போக்குப் பாடல்கள் இடம் பெறும் வாய்ப்புக் கிட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாடோடி மன்னன்' படத்தில்,

(ஆண்) "சும்மா கெடந்த நிலத்தைக் கொத்திச்
சோம்ப லில்லாமே ஏர் நடத்தி
கம்மாக் கரையை ஒசத்திக்கட்டி
கரும்புக் கொல்லையில் வாய்க்கால் வெட்டி
சம்பாப் பயிரைப் புடுங்கி நட்டுத்
தகுந்த முறையில் தண்ணீர்விட்டு
நெல்லு வெளைஞ்சிருக்கு—வரப்பும்
உள்ளே மறைஞ்சிருக்கு...

(பெண்) "வாழை நிலைக்குது சோலை தழைக்குது
ஏழைகளுக்கதில் என்ன கிடைக்குது?
கூழைக் குடிக்குது நாளைக் கழிக்குது
ஓலைக் குடிசையில் ஒட்டிக் கிடக்குது
காடு வெளைஞ்சென்ன மச்சான்
உழைப்போர்க்கு
கையும் காலுந்தானே மிச்சம்..."

என ஏழைவிவசாயிகளின் வாழ்க்கைப்போக்கினை அருமையாக அடையாளங் காட்டுகிறார் கவிஞர்.

இதே படத்திற்காக,

"தூங்காதே தம்பி
தூங்காதே—நீயும்
சோம்பேறி என்ற பெயர்
வாங்காதே!"
...நல்ல பொழுதையெல்லாம்
தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன்
தானுங் கெட்டார்—சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லும் பகலும்
தெருக்கல்லா யிருந்துவிட்டு
அதிர்ஷ்ட மில்லையென்று
அலட்டிக் கொண்டார்
விழித்துக் கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார் உன்போல்
குறட்டை விட்டோரெல்லாம்
கோட்டை விட்டார்!..."

என்று எழுச்சிப் பாட்டிசைக்கிறார் கவிஞர்!

எம்.ஜி.ஆரின் திருடாதே படத்திற்காக

"திருடாதே! பாப்பா திருடாதே!
வறுமை நிலைக்குப் பயந்துவிடாதே
திறமை இருக்கு மறந்துவிடாதே"

என்றும்,

"கொடுக்கிற காலம் நெருங்குவதால்—இனி
எடுக்கிற அவசியம் இருக்காது;
இருக்கிறதெல்லாம் பொதுவாய்ப் போனால்
பதுக்குற வேலையும் இருக்காது
ஒதுக்குற வேலையும் இருக்காது
உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டா
கெடுக்கிற நோக்கம் வளராது—மனம்
கீழும் மேலும் புரளாது"

என்றும் எளிமையாக சீர்திருத்தக் கருத்துகளைச் சிந்துகிறார் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சினிமா மிகுந்த வலிமை பெற்ற சாதனம். அத்தகைய சினிமாவில் பாட்டெழுதும் வாய்ப்பு கல்யாண சுந்தரத்திற்குக் கிடைத்தது!

கூடவே லட்சக்கணக்கான தமிழர்களை வசீகரித்திருந்த எம்.ஜி.ஆர். தோழமையும் கல்யாண சுந்தரத்திற்குக் கிடைத்தது.

இவற்றால் மிகக்குறுகிய காலத்திலேயே மக்களுக்கு அறிமுகமாகி விட்டார் கவிஞர்.

பொதுவுடைமைக் கொள்கை வழி நின்று இலக்கிய நயம் கொஞ்சும் அற்புதமான கவிதைகளைப் படைத்த தமிழ் ஒளியும், தொ.மு.சி. ரகுநாதனும் பெற இயலாத புகழை இசை பாத்திறன் மிகுந்த பட்டுக்கோட்டையார் பெற்றதற்கு சினிமாதான் காரணம்என்பதனை யாருமே மறுக்க இயலாது!

நாடோடிப் பாடல்களை அடியொற்றித் தாம்யாத்த திரைப்பாடல்களில் முற்போக்குச் சிந்தனைகளை வெகு அழகாகப் புகுத்தி மக்கள் மன்றத்தில் மங்காப்புகழ் பெற்றார் கல்யாணசுந்தரம்.

## வாழ்க்கைக் குறிப்புகள் :

- தஞ்சை மாவட்டத்தில், பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள செங்கப்படுத்தான் காடு கிராமத்தில் 13-4-1930இல் பிறந்தார்.
- தந்தையார் திரு. அருணாசலம் பிள்ளை தாயார் விசாலாட்சி அம்மையார்.
- 1954 இல் வெளிவந்த படித்த பெண் படத்திற்கு முதன்முதல் பாட்டெழுதினார்.
- பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்து நின்ற இவர் தம் பலகவிதைகள் இயக்க ஏடான 'ஜனசக்தி'யில் வெளிவந்துள்ளது.
- 8-10-1959இல், மூளைக்குச் செல்லும் ரத்தக் குழாய் வெடித்தமையால் இளமையிலேயே அநியாய மரணத்தைத் தழுவினார் கவிஞர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னி வளவன்

சரளமான மொழியாட்சி, ஆற்றொழுக்கு நடை, முறியா ஓசை இவை மூன்றும் பொருந்திய இனிய கவிதைகள் பல யாத்தவர் இவர்!

காதல் கவிதைகள் இவருக்கு மிக இயல்பாகக் கைவருகிறது!

'நூர்ஜஹான் தோல்வி' இவர் தம் அரிய குறுங்காவியம்.

முஸ்லிம் பேரழகியை,

**"நீலமலர்க்கண் அவன்தன் நெஞ்சுதுளைவேலாம்!**
**நித்திலத்தை ஒத்தசிறு பற்கள் மலர் முல்லை**
**கோலமலர்க் குளிர்பொழிலின் கோகிலத்தை ஒத்த**
**குரல், முதிர்ந்த கரும்பினிலே**
**குடிகொண்ட சாறு!**
**ஆலமரக் கிளிமூக்கு அவளிதழ்கள் பொய்கை**
**அல்லிஅவள் அழகியகை! அசைந்து**
**வரும் தென்றல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாலாட்டும் தளிர்தானோ அவளுடைய மேனி**
**தளிர்படுபூஞ் சோலையவள் பொதுவாகச்**
**சொன்னால்!**

என நயமோங்க வர்ணிக்கிறார் வண்டமிழ்க் கவி பொன்னி வளவன்!

எகிப்து தேசத்தின் அதிபராய் இருந்த நாசர் செருப்புத் தைக்கும் ஏழைத் தொழிலாளியின் மகளைக் கண்டார்; அவள் அழகிலே தன்னை இழந்தார்!

இதனைக் கவிஞர்,

**"அகமதிலே வாலிபத்தின் ஆசை வைத்தார்**
**அகலாமல் நாசர் அங்குக் கண்ணை வைத்தார்!**
**தகதகக்கும் எழில்மங்கை பூஆத் ஷாவின்**
**தங்கமகள் அங்கிருந்தாள்; அந்த மங்கை**
**முகமதியப் பெண்! தனது 'பர்தா' நீக்கி**
**முகமதியம் காட்டுவதைக் கண்டார்! தந்தை**
**முகம்புதைத்துச் செருப்புத்தைத்தார்! மகளோ வட்ட**
**முகங்காட்டி அவர்நெஞ்சைக் கண்ணால்**
**தைத்தாள்!"**

என்று அருமையாகப் பாடுகிறார்!

பொன்னி வளவன் விலைமாதொருத்தியை,

**"மாலையிலே குளிக்கின்ற குலக்கொழுந்து**
**மாப்பிள்ளை பலருக்குத் தனிஒருத்தி!**
**சேலையினால் பகல்மட்டும் உடல்மறைக்கும்**
**சிரிப்புநிலா! உடல்மூல தனத்தைக் கொண்டு**
**வேலைவெட்டி செய்யாமல் இருட்டு நேர**
**வியாபாரம் நடத்துபவள்! எழுத்தாணிக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைகள்கீழ் இருப்பதைப்போல் இளைஞருக்கு
உடல்மெத்தை யாய்க்கீழே இருக்கும் கன்னி!"

என்று இன்பரசம் சொட்டப் படம் பிடித்துக் காட்டுவது நயமாகவுள்ளது!

தண்டமிழ்மேற் தணியாக் காதல் கொண்டு பொன்னிவளவன் பொன்னார் கவிதை பொழிகிறார்!

"தனமே! சந்தனமே! செந்தமிழே! நெஞ்சத்
தளிரே! பொன்மலரே! நல்லுணர்ச்சியின்வா
கனமே! மோகனமே! செங் கரும்பே! தேனே!
கனியே! கண் மணியே! கற் கண்டே! முல்லை
மணமே! நற் புலவர்க்கு மதி யளித்த
மதியே!தேன் கவிஞர்களின் நினைவுப் பூங்கா
வனமே! தென் பொதிகைமலை மயிலே! என்றன்
வாழ்வுக்கு வித்தே! என்வணக்கம் தாயே!"

எனப் பாடுமிவர் மேலும்,

"கட்டியபூச் சரம்காய்ந்து போகும்; வெல்லக்
கட்டியும்தான் எச்சிலிலே கரைந்து போகும்!
வெட்டிவைத்த ஏரி, குளம் ஆறு கோடை
வெய்யிலில் நீர் பறிகொடுக்கும்;
வற்றிப் போகும்!
பட்டும்தான் கிழிந்துவிடும்; தமிழில் உள்ள
பாட்டுக்கோ அழிவில்லை! கற்றோர் நாவில்
சொட்டும்தேன் ஆகின்ற மொழியே உன்பேர்
சொல்லியதால் பேர்பெற்றோர் நூறு கோடி!"

எனத் தமிழின் மேன்மை பற்றி பகர்கின்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தமிழர்கள் பலர் 'தமிழ் வாழ்க' என்று முழங்கு வார்கள்! 'தாங்கள் தமிழர்கள்' என்று பெருமை பேசுவார் கள். ஆனால் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கில்லை!

மூன்றாந்தர திரைப்பட நடிகனையும், மோசக்கார அரசியல்வாதிகளையும், கிரிக்கெட் கோமாளிகளையும் பூஜா தெய்வங்களாகத் துதிக்கும் இவர்களுக்கு தமிழ் இலக்கியங் களை படிக்கவேண்டுமென்ற ஆர்வம் ஏனோ இல்லை!

இத்தகைய அறிவிலித் தமிழர்களை நோக்கி,

"உனக்குத்தான் சொல்லுகின்றேன் தமிழா!வீட்டில்
உறங்கும்உனை எழுப்பட்டும் எனது பாட்டு!
தனக்கென்றோர் குணம்கொண்ட நமது முன்னோர்
தந்ததமிழ் நூல்களை நீதொட்ட துண்டா?
மணக்கின்ற கருத்துமண இலக்கியத் தேன்
மலர்கள்உன் மனஅறையில் மணத்த துண்டா?
குணக்குன்றே! தமிழ் வாழ்க! வாழ்க! என்று
கூறிவிட்டுக் குறட்டைவிட்டால் தமிழா வாழும்?

என ஆவேசமாக வினவுகிறார் கவிஞர்!

கவிஞர் பொன்னி வளவன் மாதவி காவியம் வனையேந் தும் தமிழின் துணையேந்தித் துலங்குகிறது.

அக்காவியத்தில் 'அரங்கிலே ஆடினாள்' எனுந் தலைப்பில் மாதவி மகாத்மியம் பற்றி,

"கைவளை பாடக் கண்விளை யாடக்
கார்குழல் கூத்தாட—அவள்
மெய்நட மாட மேய்விழி யெல்லாம்
மிகவும் திண்டாடப் — பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொய்வலை மீன்வலை; பொல்லா விழிமீன்
போடுது வலை! ' என்றே—அங்கு
நெய் அழல் உருகும் நிலையினில் உருகி
நெஞ்சம் இழந்தாரே!

என நயமாகச் சொல்லுங் கவிஞர் தொடர்ந்து,

"மலர்வாய் திறந்து மகிழ்வாய் எழுந்து
மனமே கவர்ந்த மயிலாள்
நிலவாய் மிளிர்ந்து நெளிவாய் நெளிந்து
நின்றே நடந்த ஒயிலால்
பலவாய்ப் புகழ்ந்து பலபேர் வியந்து
பணிவாய் இருந்து மகிழ்வார்!
நிலமேல் இவட்கு நிகரில்லை யென்ற
நிலையை புரிந்து புகழ்வார்!"

என நேர்த்தியாகக் கவிமாலை கட்டுகிறார்!

மாதவி காவியத்தில் கோவலனைப் பிரிந்த கண்ணகியின் விரக வேதனையை,

"அந்திநிலாக் காணுகையில் ஆசைமனம்
பதைக்கிறது!
வந்துதொடும் தென்றல்எனை வாட்டி
வதைக்கிறது!
கொந்தளிக்கும் கடலோசை சிந்தையினைச்
சிதைக்கிறது!
வெந்துவிடும் போலெனது மேனி
கொதிக்கிறது!"

என்று எடுப்பாகப்பாடுகிறார்கவிஞர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைக் குறிப்புகள்

- மிகச் சிறந்த கவிஞரான பொன்னி வளவன் சிறந்த பேச்சாளராகவும், அரசியலில் வாய்ப்பு வசதிகளுக்காக தடம்மாறாதகண்ணியபுருடராகவும் துலங்குகிறார்.
- சென்னையில் வாழ்ந்து வரும் இவர், ராயபுரம் நகராட்சிப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசி ஆனந்தன்

## [1938...]

"என்னகவி எழுதுகிறீர்...?

பாவலரே... போலிகளாய்
இருக்கின்றீர்கள்!
கன்னியெழிற் றமிழணங்கு
கையிரண்டில் விலங்குடையாள்
கண்ணீர் கண்டும்
செந்நெருப்பு விழிகொண்டு
சீறியெழ மாட்டீரா?
சீச்சீ... வானில்
புண்ணிருந்தாற் போலிருக்கும்
நிலாவினையும் காதலையும்
புனைகின்றீரே!

பொங்கு வெறித் தமிழ்கொண்டு
போர்க்களத்தே ஔவையெனும்
பூவை அந்நாள்
செங்குருதி குளித்திருந்த
தமிழ்மன்னர் சிறப்பெல்லாம்
கவிதை ஆக்கிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமணித் தமிழ்தந்தாள்
அட நீங்கள் தாய்த்தமிழை
மறந்து நாட்டில்
தெங்கிளநீர் முலைபாடித்
திரிகின்றீர்... கவிஞர்களா?
செத்துப் போங்கள்!"

எனக் கற்பனை சுகத்தில் கவிபாடித் திரியும் பாவலர்களை ஆவேசமாகக் கண்டிக்கும் காசி ஆனந்தன், தமிழின மேம்பாடே தன் ஜீவித லட்சியமாகக் கொண்ட எழுச்சிக் கவிஞர்!

கோழைகளை நிமிரச் செய்யவும், அடிமைகளை ஆர்த்தெழச் செய்யவும் சக்தி படைத்தவை அவர் யாத்த கவிதைகள்!

"காதலியே உள்ளமெனும் காயத்தோடும்
கனத்துவரும் மூச்சோடும் கண்ணீரோடும்
வாதையுறவோ இவனைக் காதலித்தாய்?
சாதலுறவோ இவனைக் காதலித்தாய்!
சுகங்காட்டும் காதலர்கள் தோள்கள் மீது
துயில்கொள்ளும் எழில்மாதர் வாழும்
மண்ணில்
முகங்கூட காட்டாது களத்தே வாழும்
முண்டத்தை ஏனம்மா காதலித்தாய்?"

எனக் தம்மைக் காதலித்த பெண்ணிடம் வினாவிடுத்த காசி ஆனந்தன் நற்றமிழர் மேனிலை பெறுதற்காகவே வாழும் வரகவி!

தமிழர்தம் இழிநிலை கண்டு,

"மாற்றார் தலைதனில் ஏற்றினாய்
கல்லை! வாட்டினாய்! — இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டை சுமந்து நடக்கிறாய்!
தாழ்ந்து கிடக்கிறாய்!''

'எனக்கொதித்தெழுந்து பாடுகிறார் அவர்.'

''பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் — என்றன்
கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும் — வாழ்வு
கெட்டு நடுத்தெருவோடு கிடந்து
கீழ்நிலை யுற்றாலும் — மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ்மகளின் துயர்
துடைக்க மறப்பேனோ?''

என்று தமது தமிழ்ப்பற்றை உன்னதமாக இனங்காட்டுகிறார் கவிஞர்!

தமிழின விடுதலை வேண்டி,

''கடமுட என ஒரு கவியிடி
கொடியவர் பொடிபட வெடியாதோ?
திடுதிடுமென ஒரு படையணி
அடிமைகள் படுதுயர் துடையாதோ?
மடமட எனஒரு நொடியினில்
இடுகர விலங்குகள் ஒடியாதோ?
கொடியொடு படையொடு முடியொடு
தமிழின விடுதலை கிடையாதோ?''

என மிக அருமையாக கவி இசைக்கிறார் காசி ஆனந்தன்!

தமிழுக்காகத் தமிழர்களுக்காக பல போராட்டங்களில் ஈடுபட்டு — உதைபட்டு இரத்தம் கக்கி... பலமுறை சிறை வாழ்வை மேற்கொண்ட தனிப்பெருங் கவிஞர் இவர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975இல் தமக்கேற்பட்ட சிறை அநுபவத்தை,

"நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...?
அன்னைத் தமிழ் ஈழம்
என்றன் உயிர்த் தாகம்
தன்னை எவன் தொட்டான்?
தமிழா எழுக! என
மின்னலை இடியைப்
புயலைத் தமிழ்செய்தேன்...
என்னைக் கொடுங்கவிஞன்
என்றார் சிறையிட்டார்...
நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது....!

ஓங்கு நெடுமதில்கள்
உள்ளே இருட்கோலம்
தாங்க முடியா நோய்
தாகம் பசிக்கொடுமை
தீங்கு படைக்கும்
கொடியர் சிறைக்கோட்டம்
ஏங்கி ஒரு தமிழன்
இங்கு மடிகின்றேன்....
நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...."

என அதி ஆவேசத்தோடு பாடுமிவர் தமிழுலகின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர்.

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிள் சிவராம்

ஆழ்ந்து கவிதைகளை ரசிக்கத் தெரிந்த உயர்மட்ட ரசிகனுக்கு அரிய பொருட் சிறப்பை புலப்படுத்தி படிமப் பாங்கை இனங்காட்டி மகிழ்வில் திளைக்கச் செய்வன இவர் தம் கவிதைகள்!

'மறைவு' என்ற கவிதை,

''கூந்தலில் விடிந்து
வெடித்தெழும் வெண்முகம்
கண்ணிமைச் சிறகில்
ஆசைகள் நடுங்கும்....
இதழின் உதறலில்
நேசத் துளிகள்
உதிரும்...

ஆனால்,

முன்னும் பின்னும்
கெஞ்சும் கண்கள்,
நடுவில்
முத்தக் கனலில்
இதழ்கள் கரைகையில்
ஒளித்து மறையுது
ஏன்?

திருப்திச் சுடரில்
தியானித் திருக்கவா?
கனவுக் குமிழாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிக்குழி நீக்கி
நினைவில் அலையவா?
எங்கே?

நெருக்கக் கரையிலா?
இதழ்மதுக் கசிவின்
போதைக் குளித்திலா?
நெருப்புச் சுனையெழும்
இதயப் பிளவிலா?
ஏன்?....
எங்கே?...."

என்றமைந்து இக்கவிஞரின் கவித்திறனை அடையாளங் காட்டுகிறது!

முதுமை எனுங் கவிதையில் முதுமை கால நிகழ்வுகளை பட்டவர்த்தனமாக,

"காலம் பனித்து விழுந்து
கண்களை மறைக்கிறது
கபாலத்தின் கூரையுள்
ஒட்டியிருந்து
எண்ணவலை பின்னிப் பின்னி
ஓய்கிறது மூளைச் சிலந்தி,
உணர்வின் ஒளிப்பட்டில்
புலனின் வாடைக்காற்று
வாரியிறைத்த பழந்தூசு
உலகை நோக்கிய
என்விழி வியப்புகள்
உயிரின் இவ் அந்திப்போதில்
திரைகள் தொடர்ந்து வரும்
சவ ஊர்வலமாகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு திரையிலும்
இழந்த இன்பங்களின்
தலைகீழ் ஆட்டம்
அந்தியை நோக்குகிறேன்,
கதிர்க் கொள்ளிகள் நடுவே
ஏதோ எரிகிறது...
ஒன்றுமில்லை.
பரிதிப் பிணம்.''

என கவிஞர் படம் பிடித்துக் காட்டுகிறார்!

தருமு சிவராம் கவிதைகள் தனித்துவப் பாங்கில் அமைந்த கவிதைகள். நுனிப்புல் மேய்வோர்க்கு அவை புரியாத புதிர்!

பிரபல விமர்சகர் சி. சு. செல்லப்பா இவர் கவிதைகள் பற்றி ''சிவராமு ஒரு விசித்திர படிமவாதி — யூனீக் இமேஜிஸ்ட். இந்த படிமங்களின் அந்தரங்கத்துள் புகவாசகன் நுண்ணிய மனக்காரனாக இருக்க வேண்டியது நிர்ப்பந்தமாகிறது'' என மிகச் சரியாகக் கூறியுள்ளார்.

சிவராமின் புலமைக்குச் சான்று பகரவல்ல கவிதைகளில் 'மின்னல்' என்ற கவிதையும் ஒன்றாகும்.

மின்னல்,

'ககனப் பறவை
நீட்டும் அழகு
கதிரோன் நிலத்தில்
எறியும் பார்வை
கடலுள் வழியும்
அமிர்தத் தாரை
கடவுள் ஊன்றும்
செங்கோல்''

என அற்புதமாகச் சொல்கிறார் இவர்.

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல்ரகுமான்
## [1937 ..]

நீத்திலச் சொற்கோத்து ஓசை பிறழா மாபுக் கவிதைகள் பல யாத்தவர் இவர்.

கவியரங்கங்களில் சமயோஜித புத்தியோடு சாமான்யர் களையும் ஈர்க்கும் எளிமையும் இனிமையும் இணைந்த கவிதைபாடி பல்லாயிரக் கணக்கானோரைப் பரவசம் படுத்தியவர் இவர்.

இலக்கிய நயம் கொஞ்சும் உருது, என்றுமுள தென்றமிழ் அகிலம் விரிந்த ஆங்கிலம் ஆகிய மும்மொழி இலக்கியங்களை யும் முறையாகக் கற்றமையால் புதுக்கவிதைத் துறையிலும் தனித்துவம் மேலோங்கிய தலைசிறந்த கவிஞராக சுடர் விடு கிறார் இவர்.

அப்துல் ரகுமானின் 'நேயர் விருப்பம்' நூலில் அமுதனைய கவிதைகள் அணிவகுத்தலைக் கண்ணுறலாம்.

'மண்' என்ற தலைப்பில்,

> "உயிர்களின் கருப்பை நான்
> சமாதியும் நானே!
> புற்கள் என் புளகம்
> பூக்கள் என் கனவுகள்
> குறிஞ்சி என் கொங்கை
> முல்லை என் கூந்தல்
> மருதம் என் மணிக்கரம்
> நெய்தல் என் பணிப்பெண்
> பாலை, என் வேனிற்கால வியாதி!"

என உவமையெழில் கொஞ்ச இயல்பாகக் கவிதை பின்னுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

தொடர்ந்து—

"வசந்தத்தில்
நான் பூப்படைகிறேன்
கார்காலத்தில் நான்
கலவி செய்கிறேன்
இலையுதிர் காலத்தில்
நான் விரதமிருக்கிறேன்

உங்கள் தாய்
பத்து மாதம்தான்
உங்களைச் சுமக்கிறாள்
நானோ
ஆயுள் முழுவதும் சுமக்கிறேன்
பெற்றவளே 'பிணம்' என்று
உங்களை ஒதுக்கும் போதும்
என் வயிறு உங்களை
ஏற்றுக் கொள்கிறது..."

இப்படியாகக் கவிதை ராஜநடை போட்டுச் செல்கிறது!

அப்துல்ரகுமானின் 'மரணம்' எனுங்கவிதை,

"மூச்சுத் தொடரின்
முற்றுப் புள்ளிநான்
இதயத் துடிப்போ
என்கடிகாரம்
நோய்என் வாசல்
காயம் என் புன்னகை
தூக்குக் கயிறு நான்
கட்டும் தாலி....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன்ம விழாவின்
'ஜனகண மண' நான்"

என்று நவகற்பனை நர்த்தனமிடப் புனையப்பட்டுள்ளது.

'முத்துக்கள்' என்ற தலைப்பில்,

"சோலையிலே பாலையிலே
துளிர்களிலே தளிர்களிலே
கோலமலர் இதழ்களிலே
குலவுபனித் துளிகளெல்லாம்
மாலையெனும் தொழிலாளி
வடித்துவிட்ட வியர்வைநீர்
காலையெனும் முதலாளி
கணக்கெடுக்கும் முத்துக்கள்"

என்று உயிரில் அமுது பெய்யும் உயரிய கவிபாடுகிறார் இவர்!

இந்திய சுதந்திரம் அடைந்த நாள் பற்றி

............

"சாம்பல் எங்களை
மூடியிருந்தாலும்
நாம் முற்றும் அணைந்து விடவில்லை
காலத்தின் ஆணையில்—
மொட்டிலிருந்து விடுபட்ட மணமாக
மேகத்திலிருந்து விடுபட்ட மழையாக
நாம் வெளிவந்தோம்
உணர்ச்சிகளின் அடைகாப்பில்
எங்கள் சிறைச் சுவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டை ஓடுபோல் வெடிக்க
முகம் நிமிர்த்தி வெளிப்பட்டோம்..."

என்று ஜீவதுடிப்போடு கவிஞரின் பேனா தமிழ் சிந்துகிறது!

பெண்களைப் பற்றி,

"கூந்தலில் இருட்டு
முகத்தில் சூரியன்
பெண்களே;
உங்களால்தான் எமக்கு
இரவும் பகலும்!
இதழ்களில் அமுதம்
விழிகளில் நஞ்சு
பெண்களே;
உங்களால்தான் எமக்கு
வாழ்வும் மரணம்"

என சுவராஸ்யமாகக் கற்பனை செய்கிறார்!

அப்துல்ரகுமானின் 'பால் வீதி' கவிதைத் தொகுதியில் கவிதாமுதிர்ச்சி பாலொளி சிந்துகிறது! புதுமைப் பூக்கள் புன்னகைத்து விரிகின்றன!

"அர்த்தங்களின் சந்தையில் நாம்
முகவரிகளைத் தொலைத்துக் கொண்டோம்
திறந்திருந்ததொரு
வார்த்தையுள் நுழைந்து
தாழிட்டுக் கொண்டேன்
விளக்கையும் அணைத்து விட்டு
மற்றொரு வார்த்தையின் கதவை
நீ தட்டுகிறாய்
என்னைக் கூவி"

என சத்திர வாசம் என்ற கவிதையை 'கூர்த்த கவிமதி' யோடு தீட்டுகிறார் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வேர்வைத்தாலி' என்ற கவிதையை,

"படைப்பின் உச்சியில்
மானுட மகுடம்
வியர்வைத் துளிகள்
கோகினூர் வைரங்கள்
ஆதி நிர்வாணத்தில்
முதற்பகலின் கிரணங்கள்
நம்மில் இந்த
முதலுடை நெய்தன
அதோ....
இரவில் மின்னும் அவை
நட்சத்திரங்களல்ல!
விடியலை பிரசவிக்கும்
வேதனையில்
இருளுக்குத் துளிர்த்த
வியர்வை...."

இப்படி நயமாக எழுதிச் செல்கிறார் கவிக்கோ!

'மெழுகுவர்த்தி' பற்றி

"ஒற்றை நெருப்பு உதட்டின்
வாசிப்பில்
புல்லாங்குழலே
உருகுகிறது"

என்றெழுதும் இவர் இன்றைய காலகட்டத்தின் முதன்மை நிலைக் கவிதா சிற்பி என்பதில் ஐயமென்ன?

□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நா. காமராசன்

அழுத்தமான மரபுக் கவிதைகளாலும், வீச்சும் எழிலும் மண்டிய புதுக்கவிதைகளாலும் தமிழன்னைக்குப் புகழ் சேர்த்தவர்களில் நா. காமராசன் ஒருவர்.

"சித்திரக் கனவுகள் வித்திய பூமியில்
சிந்திய தேன் துளிநான் — மனப்
புத்தகப் பாடலைத் தத்துவ மேடையில்
புலம்பிடும் பாடகன் நான்

.........

கற்பனைப் பாத்தியில் சத்திய வேர்விடும்
காவியப் பூச்செடி நான்—உயிர்ப்
பொற்கொடி மீதொரு பொக்கிசமாகவே
காய்த்துக் கனிந்தவன் நான்
பொய்மனக் கோட்டை பொடிபட நின்றொரு
போரில் ஜெயித்தவன் நான்— கொடும்
ஐம்புலக் காட்டை அழித்தொரு ஞான
ஆற்றில் குளித்தவன் நான்"

என்று கம்பீரக் கவி செய்கிறார் இவர்!

நா. காவின் 'ரத்தப் புஷ்பங்கள்' என்ற கவிதையும் நெகிழ்ச்சியானது!

.........

'தேனீப் பாடகனே — ஒரு
தேவ வசந்தத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி நிலமண்ணில்—உயிர்க்
கனவுகாலய் மலர்ந்தோம்

.........

எங்கள் பூமியிலே—காற்றில்
ஏறிடும் பாடகனே!
எங்கள் குலம்தழைக்க—ஓர்முறை
இன்னிசை நீருற்று!
இல்லையெனில் உனது — மாய
இன்சுவைத் தேன்கூடு
கல்லறை யாகிவிடும் — எங்கள்
கண்ணீர் வற்றிவிடும்''

என கவிதை உயிரொளி மின்னத் துலங்குகிறது!

'புல்' பற்றி,

''வால் முளைத்த மண்ணே!
வசந்தத்தின் பச்சை முத்திரையே
உடல் மெலிந்த தாவரமே,
உன்னைப் பனித்துளிகளின் படுக்கை
அறை என்பேன்''

என்று உன்னதமாகக் கற்பனை செய்கிறார் கவிஞர்!

இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த கவிதைகளில் நா. காமராசன் 'விலை மகளிர்' எனுந்தலைப்பில் எழுதிய கவிதையும் ஒன்றாகும்.

''நாங்கள் ரஜனியின் மக்கள்
மன்மதனின் ஒற்றர்கள்
கற்புச் சிறையை உடைப்பதால்
கைது செய்யப்படுகிறோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்கடல் அமுதத்தை தேவர்கள்
சுவைத்து விட்டதால்தான்
எங்கள் இதழ் அமுதத்தை அரக்கர்களுக்கு
வழங்குகிறோம்

..........

நாங்கள் நிர்வாணத்தை விற்பனை
செய்கிறோம்
ஆடை வாங்குவதற்காக.

..........

நாங்கள்
மன்மத அச்சகத்தின் மலிவுப் பதிப்புகள்

..........

எங்கள் புன்னகைகளுக்குச்
செயற்கைப் பிரசவம் ஏற்படுவதால்தான்
எங்கள் கண்ணீர்த் துளிகளுக்குச்
செயற்கை மரணம் சம்பவிக்கிறது.

..........

உணவுக் கொழுப்பில் பசி கொண்டவர்
களுக்குப்
பசிக்கிறக்கத்தில் உணவானவர்கள்
நாங்கள்
குழந்தையின் பசியை நாங்கள்
அறிந்ததில்லை.

ஏனெனில்,

நாங்கள் பசியின் குழந்தைகள்
எங்கள் முதலிரவிலும் கூட
வேர்வைப் பன்னீர்தான் தெளிக்கப்படுகிறது"

இப்படியாக இந்தக் கவிதை சத்திய பூர்வமாக அபூர்வ சொற் சாதுர்யத்துடன் நா. காமராசனால் வரையப்பட்டுள்ளது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கவிஞர் சமத்துவ சிந்தனைகளில் ஆழமான பிடிப்புள்ளவர்!

**"நீங்கள் என்னை சோசலிஸ்ட் ஆக்கினீர்கள்"**

என்ற கவிதை இதைத் தெளிவாக அடையாளங் காட்டுகிறது.

..........

**எங்கெல்லாம் வர்க்கவெறிப் புயலிடையோர்**
**இளம் படகு தவழ்கிறதோ அங்கெல்லாம்**
**என்னுடைய துடுப்புகளில் நான் துடிப்பேன்**
**எங்கெல்லாம் பகல்மேகப் பந்தலின் கீழ்**
**இளையயுகம் எழுகிறதோ அங்கெல்லாம்**
**இரத்தகங்கை அலைகளில் ஓர் அலையாவேன்"**

என்று ஆவேசமாக ரமணீய சொல்மிடுக்கோடு எழுதுகிறார் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவரான நா. காமராசன்.

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். ஏ. நுஃமான் [ஈழம்]

இந்த நூற்றாண்டில் தமிழ்க் கவிதையை தலைநிமிரச் செய்து கௌரவப் படுத்திய கவிஞர்களில் இவரும் ஒருவர்.

யாப்பை உதாசீனம் செய்யாமலேயே ஒரு நல்ல கவிஞனால் பலப்பல புதுமைகளைச் செய்ய முடியும் என்பதற்கு இவர் கவிதைகள் சான்று பகர்கின்றன.

''அரைக்கண நேரத்து மின்னல் எனினும்'' என்ற கவிதையை,

''வான் இருண்டுள்ளது;
நட்சத்திரங்கள் மறைந்தன
ஓ,
நான் போகும் பாதை இதுவா?
இருட்டின் நடுவில் ஏதும்
தோன்றவே இல்லை ;
எது என் திசை?
நீள் தொலைவில அதோ
வான் இருண்டுள்ளது;

என்றும்,

''இருட்டிலே நாங்கள்
வழிநடக்கின்றோம்
இதோ எரியும்
மின்மினிப் பூச்சிகள்
வழி துலக்கி
வரட்டும், என இன்னும் காத்திருப்போமா?
வழி நடப்போம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைக்கண நேரத்து மின்னல் எனினும்
அது பெரிதே''

என்று அற்புதமாக எழுதியுள்ளார்.

'துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும்' என்ற கவிதையை,

''நாளையக் கனவுகள் இன்று கலைந்தன
நேற்றைறய உணர்வுகள் இன்று சிதைந்தன
காக்கி உடையில்
துப்பாக்கி அரக்கர்
தாண்டவம் ஆடினர்
ஒருபெரும் நகரம் மரணம் அடைந்தது
வாழ்க்கையின் முடிவே மரணம் என்போம்
ஆயின் எமக்கோ
மரணமே எமது வாழ்வாய் உள்ளது''

என்று ஈழத்தமிழர் மேல் மேற்கொள்ளப்படும் அட்டூழியங்களை நேர்கண்டு நெஞ்சைப் பிழியும் வண்ணம் எழுதியுள்ளார்;

'நாங்கள் கோப முற்றெழும்போது' என்ற கவிதையில்,

''எங்கள் அடுப்பில் எரியா நெருப்பு
எங்கள் வயிற்றில்
எரிந்து கொண்டுள்ளதை
நீ யறியாயா?

என்று பாட்டாளி வர்க்கத்திற்காக குரல் கொடுக்கிறார்.

தொடர்ந்து,

''நிதமும்
அவர்கள்
நீர் பாத்திரத்துள் நீர் நிறைவதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வயிற்றில் எரியும் நெருப்போ
கொழுந்துவிட் டெரிந்து
கொண்டிருப் பதையும்

அழும்போ தெமது கண்ணீர்த் துளிகள்
பழுக்கக் காய்ச்சிய
விழிகளில் இருந்து
வெந்நீர்த் துளிகளாய்
விழுகின் றதையும்
நிதமும் நிதமும் நீ அறிவாயா?

என்று வரிக்கு வரி தமது இதய தாகத்தை எடுத்துக்காட்டி,

............

"எங்கள் வயிற்றில் எரியும் நெருப்பு
கண்களின் ஊடே கனன்று வருக!
எங்கள் பார்வையில் எதிர்ப்படும் போதில்
அவர்கள் பொசுங்கி அழிந்தே விடுக!"

என்று, என்றோ ஒருநாள் தொழிலாளி வர்க்கம்முதலாளித்துவத்திற்கு சாவு மணி அடிக்கும் என ஜீவனுள்ள தமது கவிதை மூலம் பறைசாற்றுகிறார்!

"வைகறை நிலவு வாசலில் விழுந்தது
இலைகளுக்கூடே நிலவு வழிந்தது
நிலவுத் துளிகள் நெளிந்தன மண்ணில்
வைகறை, நிலவு
மணக்கும் பூக்கள்
பனிக்குளிர் சுமந்து
பரவும் காற்று
அமைதி அழகை அனைத்துப் புனைந்தது'

என்று இயற்கை நிகழ்வையும் உன்னத கவியழகோடு எழுதும் இந்த மிகச் சிறந்த கவிஞர், ஈழத்தின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகம் சிவலிங்கம் [ஈழம்]

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களில் சிறந்த கவிதைகள் வடித்தவர்கள் நூற்றுக்கணக்கில் உள்ளார்கள்.

ஆனால் அவர்களில் தமக்கெனத் தனிப்பாணியை வகுத்து கவிதைகளில் சிறப்பு முத்திரைகள் பதித்தவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே உள்ளார்கள்!

தமிழகத்தில் பாரதி, பாரதிதாசன், கம்பதாசன், சுரதா, ந. பிச்சமூர்த்தி, அப்துல் ரகுமான், நா. காமராசன், சிற்பி போன்றோர் இந்த வரிசையில் வருவர்!

ஈழத்தைப் பொறுத்தவரை தமிழ்க் கவிதைக்கு ஓர் புதிய முகத்தைக் கொடுத்தவர்கள் வரிசையில் மஹாகவி, எம். ஏ. நுஃமான், இ. முருகையன், சண்முகம் சிவலிங்கம்ஆகியோரை முக்கியமாகச் சொல்ல வேண்டும்!

சண்முகம் சிவலிங்கம் கவிதைகள் செயற்கை வேலைப் பாடுகள் சிறிதும் இல்லாத இயல்பான கவிதைகள்! ஒருசோக நிகழ்வை,

"அவளின் அழுகை சகிக்கவேயில்லை
விளக்கை அலுமாரிமேல் வைத்துவிட்டு
கதவைத் திறந்து
வெளியிலே வந்தேன்
நிலவு மங்கலாய் விழுந்த வாசலில்
நாலைந்து முறை
நடந்து குழம்பினேன்
கோயில் அரசமரம் முன்னால் தெரிந்தது
எல்லா இலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிர்ந்த கிளைகளின் பின்னால்
நரைத்த பெரிய நிலாப்பந்து

மங்கல்;
வெறுமை;
மயக்கம்
மணல் சிதற
எங்கும் நடந்தேன்
எனது அடியின் கீழ்ப்பட்டு,
இறுகிப் பதிந்தும் உதிர்கின்ற
மண்ணின் நெருளை மனதில்
புாட்டுகிறேன்

.........

நானும் அவள்போல் அழுது நயமென்ன?
வீதியில் நேரும் விபத்துகள் எத்தனை
அந்த விபத்தினைப் போன்று
சில வேளை சந்தித்தல் கூடும்
அதற்காய் சரித்திரத்தை
உந்தும் விசைகள் உறங்குமா, என்ன?
எழுந்து,
கதவைத் திறந்துள்ளே வந்தேன்
அவளின் அழுகை ஒலி இன்னும் கேட்கிறது"

என்று அடிமனத்தை ஊடுருவிச் செல்லும் வண்ணம் அற்புதமாகச் செதுக்கியுள்ளார் தம் கவிதையை!

'நீர் வளையங்கள்' என்ற கவிதையை,

"இன்று மிகத்துயர் உற்றேன்
என் இனிய அன்பே,
இவ்விரவின் நிலவொளியில் என்னுடன்
நீயிருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பனியின் துளி சொட்டும்
பூங்கொத்தைப் போன்று விம்முகின்ற என்
நெஞ்சில்
ஆறுதல்கள் தருவாய்

'இன்று இந்த மிகச்சிறிய சம்பவத்திற்காக
இவ்விதமோ துயர் உறுதல்'
என்று நினைப்பாயோ?
இன்றளவும் வாழ்ந்துள்ளேன்
எனினும் எனதன்பே.
எனது மனம் பூஞ்சிட்டின் மென் சிறகுத்
தூவல்
என்பாதம்
இடர்கல்லில் அழுந்தாத ரோஜா
என் நண்பர் மிக இனியர்
சுடு சொல்லை அறியார்
கண்ணீரின் துளிபோல
காலம் எனும் நதியில் கலப்பதற்கே
உயிர் செய்த
காதல் உரு ஆனார்..
என் இதயம்
இப்பரந்த வான் முழுதும் ஆகி இருப்பதனை
ஆர் அறிவார் என் இதய ஊற்றே?..
என் எதிரில் தெரிகின்ற வான்முழுதும்,
இந்த இரவெல்லாம் ஒளிர்கின்ற கற்கண்டுத்
தூளும்
பொன்னிதயம் என்னுள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுஞ் சுரங்கமாகிப் பூக்கின்ற அழகைத்தான்
ஆர் கண்டார் அன்பே

..........

அதோ இந்த நிலவில்
அகன்ற இலை வாழையிலே பனிசொட்டும்
கீதம்
'இச்'
என்ற ஒலியுடனே எழுகிறது மீண்டும்;
இனி என்ன!
போய் துயில்வேன், என் உயிரின் கண்ணே"

என்று நவநோக்குள்ள கவிதா பிரேமிகளின் இதயங்களை வசீகரிக்கும் வண்ணம் அருமையாக எழுதுகிறார் சண்முகம் சிவலிங்கம்!

ஈழத் தமிழர்களுக்கு அதிகார வர்க்கத்தின் ஏவல்பேய்கள் செய்யும் செய்யும் கொடூரத்தை 'பிள்ளைக்கறி' என்ற கவிதையை,

"சாப்பிடக் குந்துகிறேன்
பீங்கான் நிறைய அவித்த ரத்தம்
நிமிர்ந்து அவளைப் பார்க்கிறேன்
அசைவற்றுப் போன என் விழிகளில்
அவள் எதனைப் பார்க்கிறாள்?

பாடசாலை வெண்புறாக்கள்
தெருவில் சடசடக்கும்
நிறைமதியம்
சந்திக்குச் சந்தி
காக்கிச் சட்டைகள் துப்பாக்கிகளுடன்,
கரும்பச்சை வாகனங்களின் யுத்த நெருக்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றுகை—ஓட்டம்—முகமூடி—
தட். தட் ... பட் ... பட் ..
சற்று இடைவெளி
தலை உயர்த்த எண்ணுகையில்,
திடீரென,
படீச்—படீச்—படீச் ... எஸெம்ஜி.
சரி முடிந்தது.
கொக்கு நாரைகளுடன்
எத்தனை குருத்து வெண் புறாக்களோ?
ரத்தப் பூக்களில்
இந்நேரம் ஈமொய்த் திருக்கும்
குனிந்து மீண்டும் உண்ணப் போகையில்
மீண்டும் அவித்த ரத்தம்!''

என பாறை நெஞ்சையும் பிளக்கும் வண்ணம் ஜீவ எழுச்சியோடு தீட்டியுள்ளார்! தனித்துவக் கவிஞர் சண்முகம் சிவலிங்கம்.

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்குலாப்

நசுக்கப்பட்ட மக்களுக்காக ஆர்தெழுந்து அனல் கவிதை களை படைப்பவர் இவர்.

உள்ளத்து உணர்ச்சிகளை இயல்பாக எழுதுங் கலை இவருக்கு மிகச் சிறப்பாக கைவந்துள்ளது.

பிளாட்பாரத்தில் வாழ்கின்ற மக்கள் நிலைகண்டு கனல் கவி பெய்கிறார் இவர்!

ஏழைக் குடும்பத்து ஏந்திழை ஒருத்தியின் சோகத்தை,

"......பதினேழு வயது...பருவக் கனவுகள்
விழிவீதிகளில் ஊர்வலம் போகும்
வசந்தகாலம்.... இவளோ வறுமையின்
கைதி!

குடிசைப் பாத்தியின் குறைந்த உரங்களில்
சோர்ந்து மலர்ந்த சாலைரோஜா இவள்!
கோணி அடைப்பின் கந்தல் கண்களால்
உடைமை வர்க்கத்தின் உல்லாச
மாளிகைகளைப்
பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுபவள்

ஊருக்கெல்லாம் கட்டிடம் கட்டும்
கொத்தனார் இவளைப் பெற்ற அப்பன்
இவர்கள்—
கோணிப்பை அடைப்புக் குடியிருப்
பாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமித்தாள்களின் கட்டிடக் காவியங்கள்
எழுப்பிவிட்டுக்
குடிசை அறியாமையைக் கூலியாய்ப்
பெறுகிறார்கள்
கோவணங்கட்டி நெசவு நெய்கிறார்கள்
கோமளவல்லிகள் பட்டில் புரள்கிறார்கள்
இந்தியாவுக்கு இதுவா தலைவிதி''

என்று இதயத்தை பிழியும் வண்ணம் சொல்கிறார் கவிஞர்.

மேலும்—

''பெய்த மழையில் பெருகிய ஓடையில்
கண்மணி மேகத்தின் கண்ணீரும் கலந்து
வாடைக்காற்றின் ஊதல் ஒலியில்
இந்தப்
பேதையின் பற்கடிப்பும் சேர்ந்து கலந்தது
அடுப்பெரியாத அந்தக் குடிசையில்
இவளின்
மேனிச்சூடு எத்தனை நாளைக்கு வரும்?

என உயிர் உருக்கும் வினாத்தொடுக்கும் கவிஞர், தொடர்ந்து,

''சாலையில் எழுதப்பட்ட உயிர்க் காவியத்தைப்
பேழையில் வைத்துப் பேணாத காரணத்தால்
மழையின் நீர்க்கரம் அழித்து விட்டது''

என நெகிழ்வோடு சொல்லி விட்டு,

''பண்பாடு மிக்க பாரத நாட்டில்
மானுடம் மட்டுந்தான் மலிவாய் போனது!''

எனச் சொல்லி நீசச் செல்வர்களுக்கும், நாசத் தலைவர்களுக்கும் மரண அடி கொடுக்கிறார் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் 'யுகப் பிரளயம்' என்ற தலைப்பில்,

**"மகாத்மாக்களே'**
**உங்கள்**
**மயான மஞ்சங்களின் விளிம்பில்**
**நாங்கள்**
**சிந்துவதையும்**
**பன்னீர் துளிகள் என்றெண்ணிப்**
**பரவசப் படாதீர்கள்!**
**உங்கள் கல்லறைச் சாளரத்தின் வழியே**
**இப்பொழுது வீசுபவை**
**இமயத்தின்**
**இதயத்திலிருந்து புறப்பட்ட**
**பனித்தென்றல்கள் அல்ல**

**எங்கள்**

**ஆன்மாவின் சூடுபட்ட**
**கண்ணீர்த் துளிகள்!**
**பெருமூச்சுகள்!**

என்று ஜீவத்துடிப்போடு கவியெழுதும் இன்குலாப் மேலும்,

**"நாங்கள்**
**நெருப்புக் கல்லறையில்**
**உயிரோடு நீறாகையில்**
**கைகளை நீட்டிக்**
**கதறினோமே!**

**வெண்மணித் தீயை**
**விழிகளின் நீரால் மட்டுமே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைக்க முயன்று
அலறினோமே!''

என்று தாழ்த்தப்பட்டவர்களுக்கு சமூகத்தில் நேர்ந்த கொடுமைகளை காந்தியாரிடம் கூறும் கவிஞர், இறுதியாக

எந்த
சுரண்டில் சாம்ராஜ்யங்களின்
தர்பார் மண்டபங்களில்
நீங்கள்
புரோகிதம் புரிந்தீர்களோ
அந்தச் சாம்ராஜ்யங்கள்
பரிவாரங்கள்
வேதங்கள்
பஜனைகள்
இந்த யுகப்பிரளயத்தின்
கந்தக அலைகளால்
சாம்பலாகின்றன.
நாங்கள் எழுகின்றோம்
நாங்கள் எழுகின்றோம்''

என உணர்ச்சிபொங்கக் கூறுகிறார்.

நசுக்கபட்ட ஈழத் தமிழர்களுக்காக எழுச்சிக்கவிஞர் இன்குலாப்,

''... போராடும் ஈழமே
உனது விடியலைச்
சூரியனில் தேடு
ஈழத்தை மட்டுமல்ல
எல்லாத் தேசிய இனங்களையும்
இருளிலிருந்து விடுதலை செய்யும்''

என முழங்குகிறார்!

□ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிற்பி

[பாலசுப்பிரமணியம்]

புதுமை பூத்துப் பொலியும் கவிதைகளை யாத்துக் கம்பீர உலா வருபவர் இவர்!

"வெண்மதியம் ஒளிபொழியும், வானின் மீன்கள்
விரிமலர்போல் குவிந்திருக்கும் சோலைக்
குள்ளே
பண்ணிசைக்கும் சிற்றருவி, அதனோரத்தே
பாதிவிழி திறந்தபடி அன்பன் தோள்மேல்
பெண்ணொருத்தி சாய்ந்திருப்பாள்; அவர்கள்
நெஞ்சம்
பெருவிண்ணில் பறந்திருக்கும்;
கவிதையென்னும்
எண்ணத்தின் வார்ப்படமாய் இவற்றை யாக்க
இளந்தமிழே! நீயன்றோ அருளுகின்றாய்!"

என்று கவினொழுகத் தமிழைப் பாடும் இவர், பொன்னி நதியின் மாட்சி வியந்து

.............

நுரையினில் நகைத்து, நல்லோர்
நூலெனப் பரந்து செல்லக்
கரையினைச் சாடிக் கன்னல்
காட்டினுள் மீன்கள் மின்னத்
திரைகளால் அணைத்த பூக்கள்
துறை தொறும் சூடிப்பாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையிலாக் காலம் தொட்டு
வாழ்த்திடும் தாயாம் பொன்னி!"

என்று மிகச் சரளமாகச் சந்தன மலர்களாய் சொற்கோத்து எடுப்புள்ள எழிலார் கவி பாடுகிறார்.

சிற்பியின் 'ஒளிப்பறவை' ஓர் உன்னதமான கவிதை நூல்!

"என்னைத் தெரிகிறதா?
இளையமுகம் தெரிகிறதா?
அன்புக்குக் காத்திருக்கும்
அடியவளைத் தெரிகிறதா?
மின்னல் வகிடெடுத்து
மேகநிலாப் பட்டுடுத்து
சின்ன அடிபதித்து
சிலப்பொலிக்க வருபவள் நான்
பொன்னெடுத்து நிற்பார்க்குப்
பூவைமுகம் தெரியாது
'என்னடி அதிகாரம்'
என்னிடத்தில் பலிக்காது

..............

சாலைகளில் மாட்டுவண்டிச்
சலங்கையிலே கொஞ்சிநிற்பேன்
காலத்தை மிதிக்குமவர்
கண்வீச்சைக் கெஞ்சிநிற்பேன்
களையெடுக்கும் கூந்தலிலே
காற்றுவந்து கதையுரைக்க
விளையுமந்தப் பறைச்சிறுமி
தெம்மாங்காய் விம்மிநிற்பேன்..."

என 'இளையமகள்' எனுந் தலைப்பில் நெஞ்சைக் கசிய வைக்கும் பசுந்தமிழ்ப்பா வடிக்கிறார் கவிஞர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒளிப் பறவை' எனுந் தலைப்பேந்திய கவிதை,

"வானில் ஒளிப்பறவை
வட்டமிட்டுப் போகிறது
மாணிக்க வைகறையின்
மலர்க்கூட்டம் சிலுசிலுக்க
ஏனோ விழிபனிக்க
இதயத்தில் களியூற
எழுதும் விரல் நடுங்க
எதிரொலிகள் கேட்கிறது!"

............

கருநீல மேலாக்கில்
கண்ணீர் துளிமறைத்து
கட்டிலிலும் தொட்டிலிலும்
கவிதைவளர் நீளிரவில்
ஒரு 'குக்கூ' என்மனதில்
ஓவியத்தை வரைகிறது
ஓரமுத வாரிதியாய்
உலகனைத்தும் நிறைகிறது!"

என்று ஒரு உயரிய கவிதைக்கு வேண்டிய மொழியெழில், ஓட்டம், கற்பனையெழில், உணர்ச்சி அனைத்து அம்சங்களும் பொருந்திப் பொலிகிறது!

சிற்பியின் எந்தக் கவிதையும் வலிந்து கட்டப்பட்டதல்ல! பிறர் எழுதிய கவிதைகளை படித்த அருட்டுணர்வில் உதித்தவையல்ல!

அவர் கவிதைகள் அசல் கவிதைகள்; சுயத்துவம் சுழன்றாடும் சுடர்மிகும் கவிதைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நறுக்கிய மாம்பழ
நடுவில்ஓர் புழு
சிறுக்கியின் உதடாய்ச்
சிறிதே நெளிந்தது!"

என்றும்,

"நித்திரைக் கிண்ணத்தில்
கனவுநுரைகள் துளும்பியபோது
அச்சிறு குமிழிகள்
ஒவ்வொன்றிலுமாய்
அழகுறச் சிரித்தவள் நீ!"

என்றும் தமது பல்வேறு கவிதைகளையும் தனிச் சிறப்போடு எழுதியுள்ளார் இவர்!

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவை இரத்தினதுரை (ஈழம்)

விடுதலை வேள்வியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து, ஆண்மைமிகும் கவிதைகளால் இனஎழுச்சியை ஏற்படுத்தும் கவிஞர் இவர்!

............

"விடுதலைப் பண்பாடி
விரித்த சிறகொடு கால்
எட்டி மிதித்து, எதிரி முகாம் மீதெழுந்து,
தொட்டளைத்து,
அங்கே தீமூட்டும் கைகளெவை?

உன் தங்கை கைகள் உலகத்தை அசைக்கிறது
கண் திறவாய் நீயும்
காலெடுத்து வெளிவருவாய்
எழுக என் தங்காய்! எழுக என் தங்காய்!

இருளினுள்ளிருந்து எழுக என் தங்காய்!
மலையென நிமிர்க! மலையென நிமிர்க!
மாதவப் பேறே மலையென நிமிர்க!"

என மகளிர் குலத்தைப் போர் முனைக்கழைக்கும் அக்கினிக் கவி பெய்யும் இவர், தாயக விடுதலை திண்ணமே என்ற உறுதிமிக்கவராக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

............

"இருட்டில் இருப்பது விடியலுக்காகவே
விடிவே விடுதலை என்பது சத்தியம்
இருட்டில் இருந்தும்
இருட்டைத் துடைப்போம்
இருகை விலங்கை இன்றே உடைப்போம்
சூரிய வெளிச்சம் சுதந்திரமானால்
நாளை எங்கள் மண்ணின் மேலே
சூரியன் வருவது நிச்சயம்
நிச்சயம்!"

என்று அதிஆவேசக் கவிதை பொழிகிறார்!

இந்தக் கவிஞர் ஏழைகள் இல்லாத சமத்துவ உலகினைக் காணும் சிந்தனைகளும் நிரம்பியவர். "சரித்திரத்தை மாற்றுவோம்" என்ற கவிதை,

"மாடியிற்சில மானுடர் வாழ்வும்
மரத்தடியிலே பற்பலர் சாகவும்
தேடியே பணம் சேர்த்தவர் தூங்கவும்
சேர்த்தவர்க் கதை கொடுக்கவும்
நீடியாதிது என்றுமே சொல்லுவோம்
நிச்சயம் இதை மாற்றியே தீருவோம்
ஆடிக் காற்றென வாலிப சக்தியே
ஆடவர் முதலாளிகள் நெஞ்சிலே..."

என எழுச்சியோடு துலங்குகிறது!

காதலையும், இயற்கை அழகையும் ஆராதிக்காத விழையாத கவிஞர் தாமென்பதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்திவான், தென்றல், பொய்கை
அழகுமீன், அடுத்த வீட்டுச்
சந்திரா, அவளின் மார்புச்
சதைவெளி தெரியும் போது
சிந்திடும் அழகு தன்னைச்
சிறப்புடன் கவிதை செய்யும்
மந்திரம் ஏதும் கற்று
மலர்ந்திடாக் கவிதைக் காரர்!"

என்ற கவிதை மூலம் தெளிவாக அடையாளங் காட்டுகிறார்!

தங்குதடையின்றி கவி மழை பொழியும் புதுவை இரத்தினதுரை எமது காலத்தின் தலைசிறந்த கவிச் செம்மல்களில் ஒருவர் என்பது அசைக்க முடியாத உண்மை!

□□□

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரோடு தமிழன்பன்

பொருட்சிறப்பும், மொழிநுட்பமும் மிகுந்த கவிதைகளால் தமிழ் மக்களை வசீகரித்து வரும் வண்டமிழ்க் கவிஞர் இவர்.

"......முற்றுப் புள்ளிகள்
அவை
அடுத்து முளைக்கப்போகும்
எண்ணங்களின்
கருவறைகள்
எனவே
ஒவ்வொரு முடிவில் இருந்தும்—நீ
புதிதாய்ப்
பிறக்கிறாய்!"

என நயமாக எழுதுகிறார்.

மருத்துவமனையிலே வாழ்வின் கடைசி நிமிடங்களை எண்ணிக் கொண்டிருந்த நோயாளி நண்பன் நிலைப்பாட்டை—

"இன்று
கண்ணுச்சாமி
கண்ணாடிமேல்
அந்தி மேகங்கள்
கூடுகட்டி யிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் ஊடே
அவனைக் கண்டபோது....
இமைகளையே
கைக்குட்டைகளாக அவன் கண்கள்
அசைக்க,
மங்கலான வெளிச்சத்தில்—அவன்
எங்கோ
பயணம் போய்க்கொண்டிருந்தான்
அவனது விழிகளுக்குள்
இருபதாண்டு நட்போடு நான்
பேசிக்கொண்டே இருந்தேன்
திடீரென்று
திரையொன்று விழுந்தது
அந்தப்பக்கம்
அவன் மட்டும்
போய்க் கொண்டிருந்தான்
தொடர முடியாமல்
நான்.........."

என்று மிகவும் இயல்பாக உருக்கமாக எழுகிறார் கவிஞர்!

ஈரோடு தமிழன்பனின் 'அந்த வார்த்தை' ஓர் அருமையான கவிதை!

"எழுதிவைத்த கவிதைகளில்
வார்த்தை ஒன்று
எங்கோ தொலைந்து போனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவில்லின்
நறுக்கொன்று
எடுத்து வைத்தேன் —
சரிப்பட்டு வரவில்லை.

ஒரு பூப்பறித்துப்
பொருத்திப் பார்த்தேன்
மற்ற வார்த்தைகளின்
வெப்ப மூச்சில் — அது
வெந்து வீழ்ந்தது

ஒரு
வாலைக் குமரியிடம்
புன்னகை வாங்கி வந்தேன்—
கவிதை வரிகள் எங்கும் சலசலப்பு
என்ன செய்வதென்று
ஏங்கிய என்முன்
தெருவில் ஆடிவிட்டுத்
திரும்பி வந்தான் என்குழந்தை
அடடே
காணாமற் போன
கவிதை வார்த்தை
அவன்
சின்னக் கண்ணில்
மின்னலடித்தது!

என நயமோங்க எழுதுகிறார் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கவிஞர் சமதர்மச் சிந்தனைகளையும் கனல் தெறிக்கும் வண்ணம்,

"...தேசியம் என்னும்
புல்லாங் குழலின்
திறந்த பொத்தல்களில்
தன்னலப் பாம்புகள்
தங்கின.... இதுவரை....

............

சமூகம் என்னும்
சமவெளி மீது
சமதரும ரதியின்
அலையுதடுகள்
வறுமை ஒழிகவென முழங்குகின்றன.
இளைய பாரதச்
சிம்புப் பறவை சிலிர்க்கிறது
அஸ்தனமனக் கூண்டு
அதிர்ந்து விழுகின்றது!"

என உணர்ச்சிக் கவி படைக்கிறார். உயரிய கவி வளம்மிக்க ஈரோடு தமிழன்பன்.

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு. மேத்தா

எமது காலத்தின் மிகச்சிறந்த கவிஞர்களில் இவர் ஒருவர்.

''எங்கள் தேசப் பிதாவே
அமைதி கொலுவிருக்கும்
உன் சிலைகளைப்
பார்க்கும் போதெல்லாம்
நான்
அழுது விடுகிறேன்!

கண்ணீரின்
வெப்பத்தால்
என் கவிதை
முழுமை பெறாமலே
முடிந்து விடுகிறது....

அமுத சுரபியைத்தான்
நீ தந்து சென்றாய்
இப்போது
எங்கள் கைகளில் இருப்பதோ
பிச்சைப் பாத்திரம்.

............

சட்டக் கட்டிடங்களில்
ஓட்டைகள் விழுந்துவிட்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதாகிப் போனதால்
தர்ம ஸ்தூபிகள்,
தள்ளாடுகின்றன!
எங்கள் வாழ்க்கை
இருட்டோடு
இல்லறம் நடத்துகிறது

............

ராஜதானியில்
மலர்கிரீடங்கள்
சூட்டப்படுகிறபோது
சேரிக் குழந்தைகளின்
சின்ன விழிச் செடியில்
உப்பு மலர்கள்
உதிர்ந்து விழுகின்றன''

மேற்கண்டவாறு ''தேச பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி'' என்ற தலைப்பில் காந்திஜியிடம் ஆவேசமான தமது கவிதை வாயிலாக பேசுகிறார் கவிஞர்.

'கண்ணீர் பூக்கள்' மேத்தாவின் ஆற்றலை அருமையாக உணர்த்துகிறது.

''என் வாழ்க்கை நாடகத்தில்
எத்தனையோ காட்சிகள்
எத்தனையோ காட்சிகளில்
எழமுடியா வீழ்ச்சிகள்!

............

''சூடுகின்ற மாலைகளோ
தோள்வலிக்கும் தோல்விகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோள் வலிக்கும் தோல்விகள் நான்
தொடங்கி வைத்த வேள்விகள்!

.............

மின்னும் விழிப் பொற்குளத்தில்
மீன்பிடிக்கப் போனவன்
மீன்பிடிக்கப் போனதினால்
வேதனைக்குள் ளானவன்!

.............

வரங்கொடுக்கும் தேவதைகள்
வந்தபோது தூங்கினேன்
வந்தபோது தூங்கிவிட்டு
வாழ்க்கையெலாம் ஏங்கினேன்!''

இப்படியாக இந்தக் கவிதை கவிஞரின் சுயவாழ்வு விமர்சனமாய் சுடர் வீசி நிற்கிறது!

''உனக்காக உதிரிப்பூ'' என்ற தலைப்பில் மேத்தா நெகிழ்ந்து பாடிய கவிதைகளில் இலக்கியம் இன்பம் கங்கையெனப் பொங்குகிறது!

''ஒரே ஒரு பூவுக்காக
நீ யாசித்தபோது
என் கூடை
காலியாக இருந்தது
இப்போது
என் கூடையெல்லாம்
பூவாய்க்
குவிந்திருக்கும்போது
உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லறையைப் பார்த்து
நட்சத்திரங்கள்
கண் சிமிட்டுகின்றன"

எனக் கவிஞரின் பேனா சித்திரம் தீட்டுகிறது!

கவிஞர் மேத்தா விரிந்த சிந்தனைப் போக்குடைய கவிஞர் என்பதினை

"வறுமைத் தீயிலும் கொடுமை 'பெல்சி'யிலும்
எங்கள் சோதரர் எரிகிறபோது—நாங்கள்
ராஜபுத்திர பெண்களைப்போல்
உடன்கட்டை ஏறுவதில்லை

கண்ணகிப் பெண்போல்
ஊரைக் கொளுத்தும் நெருப்பை
உளத்தில் வளர்க்கிறோம்
உங்கள் விழிப்பறவைகள்
கூடுகளுக்கு உள்ளேயே சிறகடிக்கின்றன.

எங்கள் கவிதைப் பறவைகளோ
கூடுகள் தாண்டி எல்லைக் கோடுகள் தாண்டி
உலக வீதியில் உலா வருகின்றன.

.........

இந்தக் கவிக்குயில்கள்
எழுத்துக் கிளைகளிலே இளைப்பாறும்
கருத்துக் கவிக்கூட்டில் கண்ணுறங்கும்
புரட்சி அணிவகுப்பில் போய்ககூவும்"

"அறிமுகம்" என்ற தலைப்பிலுள்ள மேற்கண்ட கவிதைகள் அற்புதமாக இனங்காட்டுகிறது!

கவிஞர் மேத்தாவின் கவிதைகள் மிக எளிமையானவை. ரசிக இதயங்களை ஊடுருவும் சக்தி அவற்றிற்கு நிரம்ப உண்டு. பல்லாயிரக்கணக்கான ரசிகர்களை தமது கவிதைகளால் வசப்படுத்திய கவிவாணர் இவர்!

☐☐☐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வ. ஐ. ச. ஜெயபாலன் [ஈழம்]

ஈழத்துக் கவிஞரான இவர் கவிதைகள் உணர்ச்சியும், மொழிநயமும் ஓட்டமும் மிக்கன.

'சூரியனோடு பேசுதல்' என்ற கவிதையில்,

"கண் மலர
நாள் விடியும்
.........
நேற்று இள மாலையிலே
இருள் கவியும் கடல்மீது
போராடி முன்னோக்கும் படகில்
பிரியும் உன் முகம் நோக்கி
உள்ளம் கிளர்ந்திருந்தேன்

இன்று அதிகாலை
தமிழகத்தில்
ஓடுகின்ற பஸ்சின் ஜன்னலால்
முத்தமிட்டாய்

கண்விழித்த எந்தன் கைகளுக்குள்
ஒரு புதிய நாளைப் பரிசு தந்தாய்
நீ நடுவே ஒரு பூவாய்
போர்க்களத்தில் உயிர்த்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது வாழ்வுக்கு
இந்நாளை நான் தருவேன்.
மீண்டுமென் தாய்நாட்டின்
கரைகளிலே
எம்முடைய கால்களிலே எழுந்து நின்று
உனைக்காணும் நாட்களை மீட்டெடுக்க
இந்நாளை நான் தருவேன்''

என்று அநுபவ நிகழ்வுகளை அருமையாக வெளிப்படுத்துகிறார் இந்தப் போராளிக் கவிஞர்!

''சிறு பிராயத்துச் சிங்கள நண்பனுக்கு'' என்ற கவிதையும் ஜெயபாலனின் கவித்துவத்தை அற்புதமாக நிறுவும் வண்ணம்.

''ஒரு பகலாயின கால் நூற்றாண்டுகள்
நேற்றுப் போல இருக்கிற தெல்லாம்
'மத்துகாமத்து' மலைச் சாரல்களில்
வசந்த காலப் பட்டாம் பூச்சிநாம்;

அருவி நீரில் பொன்மீன் குஞ்சுகள்,
ரப்பர் காட்டில் தாவும் மந்திகள்,
நேற்று போல இருக்கிறதெல்லாம்
எனது பால்ய சிங்களத் தோழா!

மீண்டும் உன்னை எதிர் கொள்கையிலே
படபடவென்று
கிளர்ச்சி அடைந்த மாடப் புறாக்களாய்
ஆயிரம் நினைவுகள் இறகை விரித்தன;
'பியர்' மதுக்கிண்ணமாய் நுரைத்தது நெஞ்சம்
தோழமை என்ற பேரின்பத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திளைத்திருக்கையில்
இதயத்தில் முள்ளாய் ஏதோ நெருடும்''

என்று சிங்களன்—தமிழன் என்ற இனபேதமின்றி வாழ்ந்த பழையநட்புநாட்களைப் பொற்சித்திரமாய்த் தீட்டும் கவிஞர்,

பேரினவாதம் சிறுபான்மைத் தமிழரை சிதைக்க முற்பட்டமையால் தமது நட்புத் தொடராது என்ற நிலையில்,

''கைகளைப் பற்றி, கண்கள் பனிக்க
பிரியா விடையில் வஞ்சனை யின்றி
இன ஒடுக்குதலைக் கண்டனம் செய்தனை
நன்றி நண்பா!
எனினும் இதுவுமோர், கால் நூற்றாண்டுகள்
கேட்டுப் புளித்த வார்த்தைகள் எமக்கு;
அநுதாபிகளின் பட்டியல் நீண்டது;
அதிகரித்தது சுமைகளும் நண்பா
எங்களின் தளைகளை எரித்திட இறுதியாய்,
வேள்வித் தீயுள் புகுந்திடத் துணிந்தோம்''

என எவரையும் நெகிழச் செய்யும்மாறு நித்திலச் சொல்லடிக்கி நிகரற்ற கவிபெய்கிறார் கவிஞர்!

இரவல் உணர்ச்சிகளை வாங்கிப்
பாட்டிசைக்காது பாரதிபோல்—கம்ப
தாசன்போல் அநுபவ நிகழ்வுகளையே
பாட்டாக்குபவர் ஜெயபாலன்!

'முதற்காதல்' என்ற தலைப்பில்,

',வாடைக் காற்று
பசும்புல் நுனிகளில்
பனிமுட்டை இடும் அதிகாலைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இதயம் நிறைந்து கனக்கும்,

அன்னையின் முலைக்காம்பையும்
பால்யசகியின் மென் விரல்களையும்
பற்றிக் கொண்ட கணங்களிலேயே
மனித நேயம்
என் மீதிறங்கியது!

என அழகாய்ச் சொல்லும் கவிஞர் காதல் முறிவை,

.........

நடை வரப்பில்
நாளையோர் பொழுதில்
என்னை நீ காணலாம்
யார் மீதும் குற்றமில்லை
என்ன நீ பேசுதல் கூடும்?
நலமா திருமண மாயிற்றா?
என்ன நான் சொல்வேன்?

புலப்படாத ஒரு துளி கண்ணீர்

கண்ணீர் மறைக்க
ஒரு சிறு புன்னகை
ஆலாய்த் தழைத்து
அறுகாக வேர் பரப்பி
மூங்கிலமாய்த் தோப்பாக்கி
வாழ வேண்டும் எந்தன் கண்ணே!''

என்று கவிதையை முடிக்கும்போது ஜெயபாலன் நிஜக் கவிஞன்; தமிழை மேம்படுத்த வல்லவன் என்ற உணர்வே மேலோங்கி நிற்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரமுத்து

உள்ளத்தின் உணர்ச்சிகளை அழகிய மொழி நயத்தோடு வெளிப்படுத்தும் கவிதைக்கலை இவருக்கு கை வந்தது,

''என் எழுத்துக்கு
மரணமில்லை!
மரணத்தைப் போலவே
என் எழுத்தும்
நிலையானது!
என் பாஷையை—
அலைகளுக்குச்
சொல்லிக் கொடுத்து விட்டுச்
சாவேன்!
என் கவிதைகளை—
பூக்களுக்குச்
சொல்லிக் கொடுத்து விட்டுப்
போவேன்!

............

சில நூற்றாண்டுகளுக்குத்
தேவையான மையை-என்
சின்னப் பேனாவில் சேமித்திருக்கிறேன்''

என்று அரிய கவிதை தீட்டுகிறார் இவர்.

காலம் கடந்தும் கல்யாணம் நிகழாது வெந்து கொண்டிருக்கும் மகளிர் நிலையை,

''வைகாசி வந்தால்
முப்பத்து மூன்று
முடிகிறது அவளுக்கு.
அவள் திருமணத்தை
நிச்சயிக்க நினைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளில் மட்டும்
சொர்க்கத்திற்கு
விடுமுறை போலும்,

.........

பாவம்!
தன்
கண்ணீர் முத்துக்களைக்
கோக்கத்தான்
நொந்து நொந்து அவள்
நூலாய் இளைத்தாளோ?

.........

முன்பெல்லாம்
கனவுகளுக்காகவே
உறங்கினாள்
இப்போதோ
உறக்கமே
ஒரு கனவாகிவிட்டது."

இப்படியாக அருமையான கற்பனைவளத்தோடு சொல்கிறார் கவிஞர்.

காதல் கவிதைகளை சுவையோங்கத் தீட்டுவதில் வைரமுத்து கில்லாடி!

'காதல் உயில்' என்ற தலைப்பில்

"உன்னை தான்
பார்த்திராவிட்டால்
என்
கவிதை நோட்டு
வெள்ளையாகவே இருந்திருக்கும்
உன் கூந்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பித்திரா விட்டால்
என் தோட்டத்தில்
பூச்செடிகள் வைத்திருக்கமாட்டேன்.

உனது
ஒரே பார்வையில்
அரச இலையாக இருந்தவன்
தென்னங்கீற்றாய் கிழிந்தேன்

மழையில் நனைந்து
என்
ஜன்னலோரம் ஒதுங்கிய
மாலை நேரக்காற்றாய்
சின்னச் சின்ன நினைவுகள்
சில்லிடுகின்றன.

ஒரு மேகத்தைப்போல்
சுதந்திரமாய் இருந்தவனை
ஒரு மழைத்துளியைப் போல்
கைதுசெய்து விட்டாய்.

மொழியைக் கொண்டு சௌந்தர்ய சிற்பம் வடிக்கிறார் கவிஞர்.

மகாகவி பாரதிபற்றி இதுகாறும் தமிழில் புனையப்பட்ட மிகச்சிறந்த கவிதைகளில் வைரமுத்து எழுதிய 'நிலத்தை ஜெயித்த விதை' என்ற கவிதையும் ஒன்றாகும்.

"அது எப்படி?
எட்டயபுரத்தில் மட்டும்
ஒருத்திக்கு
நெருப்பைச் சுமந்த கருப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுகூட சாத்தியந்தான்
ஆனால்—இது எப்படி?
ஏகாதிபத்திய எரிமலையை

ஒரு
தீக்குச்சி சுட்டதே!

ஒரு வீரியவிதை
முளைக்கும் போதே
பூமியை ஜெயிக்கிறதே!
அப்படித்தான் அது!

..........

உன் பேனா
தமிழ்த்தாயின் கூந்தலுக்குச்
சிக்கெடுத்தது!

..........

உன் எழுத்தில்தான்
முதன் முதலில்
வார்த்தை, வாக்கியத்தைப் பேசியது!

இவ்வாறு உணர்ச்சிபீறிட பளிச் பளிச்செனு வார்த்தைகளைச் சிந்தித்து தமது கவி வளத்தை நிறுவுகிறார் உன்னத கவிஞர் வைரமுத்து!

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேரன் [ஈழம்]

இன்றைய தலைமுறையின் சிறந்த கவிஞர்களில் இவர் ஒருவர்.

வார்த்தை வனப்புகளையும் உவமை, உருவகம் போன்ற அணி அலங்காரங்களையும் இவர்தம் கவிதை களில் காண்பதரிது!

போரின் விளைவுகளை தமது அநுபவ ஞானத்தின் துணையோடு இயல்பாக—உணர்ச்சிபீறிட கூறுவதே இவர் தம் கவிப்பாணி!

"அன்றைக்குக் காற்றே இல்லை;
அலைகளும் எழாது செத்துப் போயிற்று.
கடல்,
மணலில் கால் புதைதல் என
நடந்து வருகையில்
மறுபடியும் ஒரு சூரிய உதயம்.

இம்முறை தெற்கிலே—
என்ன நிகழ்ந்தது?
எனது நகரம் எரிக்கப்பட்டது
எனது மக்கள் முகங்களை இழந்தனர்

எனது நிலம், எனது காற்று
எல்லாவற்றிலும் அந்நியப் பதிவு."

என தமது மனக்குமுறலை ஆதிக்கவாதிகளின் போர்க் கொடுமையை ஜீவன் ஊறித் ததும்பும் கவியாகத் தருகிறார் இவர்.

மேலும் தாக்குண்ட மக்கள் வெகுண்டெழுந்து எதிரி களை துவம்சம் செய்ய வேண்டுமென்பதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கைகளைப் பின்புறம் இறுகக்கட்டி
யாருக்காகக் காத்திருந்தீர்கள்?
முகில்கள் மீது
நெருப்பு,
தன் சேதியை எழுதியாயிற்று!
இனியும் 'யார்' காத்துள்ளனர்?
சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து
எழுந்து வருக"

என்று வீரியம் சுடருங் கவி பின்னுகிறார் இவர்!
இன்னுமொரு கவிதையில்,

"நூறு நூறாயிரம் தோள்கள் மீது
ஏறி நின்று,
எனது நிலம் என உரத்துச்சொல்கின்றேன்!
ஏழு சமுத்திர வெளிகளைத் தாண்டி
அதன்மேல் எழுகின்ற அலைகளை மீறி
அதனைக் கொண்டு போய்
எங்கும் ஒலிக்கிறது காற்று....
'எனது நிலம்
எனது நிலம்"

என்று எழுச்சி முரசு கொட்டுகிறார் கவிஞர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க பிற கவிஞர்கள்

# சுத்தானந்தபாரதியார்

இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த தமிழறிஞர்களில் முதல் வரிசையில் வைத்துக்கொண்டாடப் பட வேண்டியவர் இவர்.

ஆயிரத்திற்கும் அதிகமான நூல்களை தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி உட்பட பலமொழிகளில் எழுதிய தனிப் பெரும் மேதை இவர்!

அற்புதமான இசைப்பாக்கள் பல வடித்து தமிழிசை வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளார்!

'எம்பாவாய்' எனுந் தலைப்பில்,

"தேவர் குறளாட்டித் திருவா சகஞ்சூட்டி,
மூவர் தமிழோதி, நாலாயி ரம்பாடி
தாவடங்க ளாகமுச் சங்கத் தமிழணிந்து,
காவிய மாமணியாகக் கம்ப முடிகவிழ்த்துத்
தீவினை மாற்றுந் திருமந் திரஞ்சொல்லி
ஆவியுருக்கும் அருட்பாவா லர்ச்சித்துக்
கூவித் திருப்புகழைக் கூத்தாடித்
தெண்டனிட்டுத்
தேவாதி தேவனருட் சேர்ந்திடுவோ
மெம்பாவாய்"

என அருமையாகக் கவியோவியம் வரைகிறார்.
பிறிதொரு கவிதை,

"உலகமெல்லாம் அன்பினிலே ஒன்றாக
வுரைத்திடுமே தமிழர் வேதம்
கலகமிலா உபசாந்தங் காட்டிடும்
ஆரியவேதக் கலைக ளெல்லாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுதிருக் குறளுடனே கீதையினை
எல்லாரும் இனிது கற்போம்
சலசலக்குஞ் சாதிமதச் சண்டையறச்
சமயோக சித்தியாமே!"

என்றமைந்து சுவாஜியின் விரிந்த நோக்கைத் தெளிவாக உணர்த்துகிறது!

## நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை

"தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா"

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமுதே அவனது மொழியாகும்
அன்பே அவனது வழியாகும்."

மேற்கண்ட கவிதைகள் மூலம் தமிழன் மேன்மை பாடும் கவிஞர்,

"கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது"

என காந்திஜியின் அகிம்சை மாண்பைப் பாடுகிறார்.

நாமக்கல் கவிஞரின் உணர்ச்சிகள் உன்னதமானவை!

ஆனால் அவை கவிதைகளாக வெளிப்படும்போது 'இசை வடிவம்' என்ற எல்லையோடு நின்று விடுகின்றன.

கவிஞரின் 'அவனும் அவளும்' காவியத்தில் சில அழகிய விருத்தங்கள் உள்ளன.

நாமக்கல் கவிஞரின் உரைநடை நூலான 'என் கதை' மிக அற்புதமானது! கவிஞர் எழுதிய 'திருக்குறள் உரை' நூலும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ப. ஜீவானந்தம்

'ஜீவா' என்று பல்லாயிரக்கணக்கான பாட்டாளித்தோழர்களால் மெய்யன்போடு அழைக்கப்பட்ட மெய்யான ஓர் தலைவரான ஜீவானந்தம் உணர்ச்சி அலைமோத — இசையின்பம் கொண்ட நல்ல பல பாடல்களை வடித்துள்ளார்.

**"நல்லாரை உழைப்போரைப் பறையர் என்றார்**
**நயவஞ்ச முடையோர்மேற் சாதியென்றார்**
**பொல்லாத கொடியவரை மன்னர் என்றார்**
**பொய்உரைத்தக் கயவர் தம்மைக்**
**குருக்கள் என்றார்**
**சொல்லாரும் தாயினத்தை அடிமை என்றார்**
**சூதுமிகும் ஆசாரம் சமயம் என்றார்**
**இல்லாத பொய்வழியில் சென்றதாலே**
**இந்நாட்டார் அடிமை வாழ்வெய்தினாரே!"**

என்ற இக்கவிதையொன்றே ஜீவாவின் ஆவேச கவியுள்ளத்தை அடையாளங் காட்ட வல்லது!

## புதுமைப்பித்தன்

தமிழ்ச்சிறுகதை உலகின் புரட்சித் தாரகையாய் ஜொலிக்கும் இவர் இடைக்கால புலவர்கள் போக்கை பின்பற்றி - ஆனால் புதிய தடத்தில் நின்று ஆவேச கவிதைகள் சில எழுதியுள்ளார்.

**"...இத்தனைக்கும் மேலே**
**இனி ஒன்று ஐயா, நான்**
**செத்ததற்குப் பின்னால்**
**நிதிகள் திரட்டாதீர்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவை விளிம்புகட்டி,
கல்லில் வடித்து
வையாதீர்!

"வானத்து அமரன்
வந்தான் காண! வந்ததுபோல்
போனான்காண்" என்று
புலம்பாதீர்!

அத்தனையும் வேண்டாம்
அடியேனை விட்டுவிடும்"

என்று ஆர்த்தெழுந்து பாடுகிறார்.

'பாதை' என்ற கவிதையை,

"செல்லும் வழி இருட்டு
செல்லும் மனம் இருட்டு
சிந்தை அறிவினிலும்
தனி இருட்டு

பாதை இயங்குவதால்
பாதை பிறக்கின்றதுவால்
விதி எனத் தனியாய
வகுத்தவழி ஏதுமில்லை"

எனத் தத்துவப் போக்கில் தரமான எழுதிச் செல்கிறார்!

## சுரபி

"வானத்து வில்லை வளைத்துத் தலைக்கொரு
மாமுடி சூடிடுவேன்—மின்னும்
மீனக் குழுவினைக் கோத்துத் தொடுத்தொரு
மேகலை யாக்கிடுவேன்"

என எழுச்சியோடு எழுதும் இவர் ஐம்பது ஆண்டு காலத்திற்கு மேல் அமைதியாய் இருந்து அருமையான பல கவிதைகளைப் படைத்து வருகிறார். தரமான ஒரு கவிஞர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு. கருணாநிதி

மரபு வழி நின்று அதேஞான்று யாப்பு விதிகளைச் சட்டை செய்யாது சுயேட்சைப் போக்கில் கவிபாடுகிறார் கலைஞர்.

இவர் கவிதைகளில் ஒரு நல்ல கவிதைக்கு மிகவும் வேண்டிய மொழியெழில், நடைமிடுக்கு, உணர்ச்சி, பொருள் நயம்மிகுந்துள்ளதை மறுக்க இயலாது!

''புறநானூற்றுத் தாய்'' எனுந் தலைப்பில்

"பனிமுட்டை அடைகாக்கும்
பசும்புல்லின் தரைமீது
மணித்தேர் அசைவதுபோல்
மாதொருத்தி நடந்து வந்தாள்"

என்று கவிதை கம்பீரமாகச்-சரள நடை போடுகிறது!

இதே தலைப்பில் பிறிதொரு பகுதியில்,

"அவன்
குகைவிட்டுக் கிளம்பும் புலியென
பகைவிட்டுக் கிளம்பும் எரிமலையென,
பகைவெட்டிச் சாய்க்கும் வாளெடுத்தான்
சூளுரைத்தான்; சுடர்முகம் தூக்கினான்;
'சுக்கு நூறுதான் சூழ்ந்துவரும் பகை'
என்றான்"

என வீரம் பொங்கத் தமிழ் பெய்கிறார் கலைஞர்!

'தலை கேட்டான் தம்பி' என்ற தலைப்பில் குமணன் கொடைச் சிறப்பை,

"கரும்பெடுத்துத் தமிழ் பிழிந்து-மலரில்
சுரும்பெடுத்து வருகின்ற தேன் கலந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பெடுத்துச் சிரிக்கின்ற மகளிர் கூட்டம்
"எறும்பெடுத்துச் செல்கின்ற உணவுகூட
எம்மன்னன் குமணவள்ள தந்த"தென்று
எழுச்சி நடை போடுகின்ற கொங்கு நாடு"

என எழுச்சிமின்ன பாச்சிந்துகிறார் இவர்.

அறிஞர் அண்ணா பற்றி கலைஞர்,

"சந்தனமே!
தென்பொதியை தவழ்ந்துவரும் இளங்காற்றே!
நந்தாத சுடர்விளக்கே!
நறுமணத்துப் புதுமலரே!
.........
சிங்கத் தமிழர்களின் சிந்தையெலாம்
பறிகொண்டு
வங்கக் கடலோரம் வாய்மூடிக் கண்மூடி
மோனத் தவமிருக்கும் முத்தமிழே!"

என்று நெகிழ்வோடு நித்திலத் தமிழ் சிந்துகிறார்.

## பெ. தூரன்

அமைதி கொஞ்சும் அழகிய பாடல்கள் யாத்த நல்ல கவிஞர் பெ. தூரன்.

"கருக் கரிவாள் கைக் கொண்டே
கழனி செலும் இள நங்காய்!
அறுத்துவிட்டாய் என் உள்ளத்தை
அஞ்சனக் கண் வாளாலே!"

என அருமையாக எழுகிறார்!

'கவிக்கனல்' என்ற தலைப்பில்,

"வில்லெனும் சிறைக்கட்டினை — நீங்கி
வேகங் கொண்டுபாய அம்புபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லையுங் கடந்தேகுமோர்—உள்ளத்
துடிப்பிலே கவி சொல்லுவேன்!'

என சுவையாகப் பாடுகிறார்

## எஸ். டி. சுந்தரம்

"காலமெனும் சிற்பி செய்த
கவிதைத்தாய் கோயிலடா"

என்று காலம் வென்ற கவிதையைப் பாடியவர் இவர்!

'வானமுதம்' என்ற இவர்தம் கவிதைத் தொகுதியில் மொழிநயமும், உணர்ச்சித் துடிப்பும்மிக்க பல நற்கவிதைகள் உள்ளன.

பரணிபிக்சர்ஸ் தயாரித்த 'லைலாமஜ்னு' படத்தில்இடம் பெற்ற இலக்கிய நயமிக்க பாடல்களான,

"இதயமதில் உதயசுகம்
சொல்லுவாய் நீ வான்மதி"
'பறந்து செல்லும் பைங்கிளியே
மறதி ஆகுமா?"

போன்றவை இவர்தம் சிந்தனையில் பிறந்தவை!

## மு. அண்ணாமலை

பாவேந்தர் அடிச்சுவட்டில் பாட்டெழுத வந்தவர் இவர்! இவர் யாத்த 'தாமரைக்குமரி' நூலில் ஓசை நயமும், மொழி நயமும் கூத்தாடும் அரிய கவிதைகள் மின்னுகின்றன!

இல்லற இன்பத்தின் மாட்சிபற்றி,

"செந்தமிழில் கவியெழுதித் தரையில் வைக்கச்
சிறுகுழந்தை வெடுக்கென்று கிழித்துப்போடும்
வந்திருக்கும் சிரிப்புதனை எனக்குக் காட்டும்
வருகின்ற கோபத்தின் கால் ஒடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்தப்பெண்—என் மனைவி— வந்து தூக்க,**
**அப்பாவோ என அழைக்கும்; பின்னால்**
**போவேன்**
**இந்தவிதம் சுவையூட்டும் பெரு ஞாலத்தை**
**எட்டிக்காய் எனச்சொன்னால் பொறுக்க**
**மாட்டேன்!"**

மு. அண்ணாமலையின் கவித்திறனை மேற்காணும் கவிதை மூலம் நாம் தெளிவாக அறியலாம்!

## நாரா நாச்சியப்பன்

பாவேந்தரைத் தமது ஆதர்ச கவிஞராக வரித்துக் கொண்டு அவர்தம் வழியில் நல்ல பலகவிதைகள் படைத்தவர் இவர்.

**"அன்னைதரும் பாலமுதம் செந்தமிழே அவள்**
**அன்புமுத்தம் அத்தனையும் செந்தமிழே!**
**என்னுயிரும் என்னுணர்வும் செந்தமிழே உள்**
**இழைத்துவரும் மூச்செல்லாம் செந்தமிழே!**

**பன்னுமொழி அத்தனையும் செந்தமிழே நான்**
**பாடுமிசைப் பாட்டெல்லாம் செந்தமிழே;**
**தென்னகத்து வீதியெல்லாம் செந்தமிழே—**
**உளம்**
**தேடுகின்ற உறவெல்லாம் செந்தமிழே"**

என்று தமிழ்ப்பற்றை அழகிய கவிதை மூலம் வெளிப்படுத்துகிறார்!

காதல் வாழ்க்கை பற்றி,

**"இனித்திருக்கும் காரிருளில் நீலவானில்**
**எழுந்துவரும் பந்தனைய நிலவின்கீழே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்திருக்கும் உப்பரிகைமேலே, தென்றல்
தழைக்காட்டுப் பூமணத்தை வாரி வீசப்
பனித்திருக்கும் செவ்வாயில் முல்லை பூத்துப்
படர்ந்துவரும் தளிர்க்கொடியைச் சுற்றி
என்றன்
மனத்திருக்கும் ஆசையெலாம் நிறையக் கண்டேன்
மற்றதனைச் சொற்படுத்தும் வகையைக்
காணேன்!"

என எழிலொழுகப் பாடுகிறார் இவர்!

## கா. மு. ஷெரீப்

சிறந்த பல கவிதைகளையும், அருமையான திரைப் பாடல்களையும் வரைந்தவர் இவர்.

'தமிழர் கூட்டம்' என்ற தலைப்பில்,

"மாங்கனியும் தீம்பலாவும் மதுவை நல்கும்
மாமலர்நச் சோலையுடன் வயல்கள் சூழ
வீங்குநீர் கரைபுரண்டு மகிழ்ந்து பாடி
விம்முகின்ற களிப்புடனே அமுதம் பாய்ச்சி,
நீங்காத இசையெழுப்பி அசைந்தசைந்து
நிம்மதியாய் பெருமிதத்தில் நடந்து செல்லும்
ஓங்குபுகழ் படைத்தநிதி பலவு மோட
உயர்ந்தவளம் பெற்றமக்கள் தமிழர் கூட்டம்".

என அழகாகப் பாடுகிறார் இவர்.

## சில்லையூர் செல்வராசன் [ஈழம்]

இவர் பல தரமான கவிதைகளைப் படைத்தவர்.

"மின்னலைப் போல் ஒரு பாட்டு—இங்கு
மேதினி பற்றி விழித்தெழக் காட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னத் தமிழ் மடவாட்டி!—உன்றன்
வார்த்தைக் கடலிடைத் தோய்த்தெனக்
கூட்டு"

என எழுச்சிபொங்க எழுதுகிறார். காதல் ரசமூற,

"கொங்கை குவட்டிலென் கவிதைக் குறிகளை
எழுதினேன், உன்னோ டிணைந்து புணர்ந்த
வேளைதோறும் விளைந்தப னுவல்கள்
பற்குறி நகக்குறிப் பாஷையிற் பதித்தேன்;
சிவமும் சக்தியும் சேர்க்கை கொள்ளும்
ஓங்கார ரப்பே ருன்னதப் பாடலை
உன்னுடல் அணுத்தொறும் உன்னுயிர்க்
கலம்தொறும்
அந்தரங் காத்மா அடங்கலும் வரைந்தேன்!'

என மிடுக்கோடு கவிபாடுமிவர் சமூக பிரக்ஞையோடும் பல அரிய கவிதைகள் படைத்தவர்.

## கே. சி. எஸ். அருணாசலம்

"கவிதை எனக்கொரு கைவாள்—மார்பில்
கவசம் எனக்கு வாய்மை!
புவியில் தீமைகள் வீழ—நான்
போர்செயும் ஓர்படை வீரன்"

எனக் கம்பீரமாகக் கவிதா பிரகடனம் செய்யும் இக்கவிஞர், உணர்ச்சி ஊஞ்சலாடும் உயிர்க்கவிதைகள் பல யாத்துள்ளார்.

"விதியெனும் பொய்கொல்ல முனைந்தோம்—
அதில்
வெற்றிக் குரல்கேட்டு நம்முள்ளம் மகிழ்ந்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதோர் உலகம் படைப்போம்! — அந்தப்
புகழ்மிக்க செய்து விரதம் முடிப்போம்!''

போன்ற பல கவிதைகள் உண்மையிலேயே சிறப்பாக உள்ளன.

## குலோத்துங்கன்

பாவேந்தர் வழியில் பாக்கள் வரைய ஆரம்பித்த இவர், காலஓட்டத்தில் தமக்கென அமைந்த தனிப்பாணியில் விஞ்ஞான சிந்தனைகள் விரிந்து கிடக்கும் பொன்னான கவிகள் தீட்டும் ஆற்றலைப் பெற்றவர்!

**''பாலருந்தும் குழந்தையையும் பிரித்துப் பேசும்
பாதகத்தை மதப்பற்று, மொழிப்பற் றென்போர்
காலனினும் கொடியர்; அவர் இருக்கும் பக்கம்
கண்திறந்து பார்ப்பதற்கும் கூசு கின்றேன்''**

என்று ஆணித்தரமான எழுதுகிறார்.

## சாமி பழனியப்பன்

பாவேந்தர் பாதையில் ஜீவனுள்ள பல கவிதைகளைப் படைத்தவர் இவர்'

**''அன்றிலுக்கும் வளர்காதல் பயிற்று விக்கும்
அன்பகமே! பேரழகுப் பிழம்பே! தேனே!
இன்பத்தின் கொள்கலமே! அமுதினூறும்
இன்சுவையே! என்றெல்லாம் பேசிப் பேசி
இன்பத்தின் பெருவெளிக்கே கொண்டு சென்ற
என்துணைவர் இற்றைநாள் என்னை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மாலைப் பூவாக்கிப் பிரிந்து போனார்
முழுநிலவே நீயுமெனை வதைத்தல்
நன்றோ''

என அழகாகக் காதற்பிரிவைப் பாடுமிவர்,

''மின்னலைப்போல் அவள்கடைக்கண் வீச்சிருக்கும்
மேவிவளர் கொங்கைஎழில் பூத்து நிற்கும்
பொன்னிதழாற் சுவையமுதம் உண்ணு தற்கும்
பூவையவள் காதலுளம் துடிது டிக்கும்
மென்குழலிற் பூவவிழ்த்து விதவை யென்றார்!
விட்டாரா? மூலையிலே கிடத்தினார்கள்!
கன்னல்மொழி யாள்காதல் தீய்க்கும் பொல்லாக்
கயவர்களோ வாழுகிறார் மாள வில்லை''

என்று விதவை ஒருத்தியின் பரிதாப நிலையை அற்புத கவிதையாக வழங்குகிறார்!

## எஸ். வைத்தீஸ்வரன்

''விடியும் தெருவில்
விழுந்த மழையால்
தெருவில் படியும்
கண்ணாடிப் பாளம்

அதில்
வானம் துளிகண்டு
மேகம் தவறி விழும்
பொழுதில்

இருளை நகர்த்தி நகரும்
பல கால்கள்
கண்ணாடி யஞ்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூசிக்கூசி நடை பயிலும்
காலற்ற பஸ்ஸோ
மூளையற்ற மிருகமாய்
பூமெனத் திரும்பி
வீதிக்குள் பாய
பளாரென்று
கண்ணாடித் துகளாய் நொறுங்கி
காலடியில்
சூரியன் சுக்கு நூறாகும்
கண்ணெதிரில்!

என்று இயற்கை நிகழ்வை உயிரோட்டமுள்ள கவியாக்கும் இவர் மிகத் தரமான கவிஞர்களில் ஒருவர்!

## ஞானக்கூத்தன்

தரமான கவிதைகளைத் தனிப்போக்கில் படைக்கும் திறனாளி இவர்!

'மீண்டும் அவர்கள்' என்ற தலைப்பில் மானுடரால் ஓர் பறவைக்கு நேர்ந்த இம்சையை, அற்புதமாக எழுதியுள்ளார்!

''மழைபொழியக் கடமைப் படாதவை எனினும்
அழகாய் இருந்தன காலை மேகங்கள்
பறக்கலாம் என்று நினைத்துக் கொண்டேன்
எழும்பினேன் வானில்
சிறகை விரித்து.

புனித கோபுரக் கலசங்கள் சில
பறக்கும் எனது கால்களுக்கிடையில் பூமியில்.
சலனமற்ற மரங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிப்பந்தின் ஊடே ஒளிந்திருந்து
அவர்கள் சுட்டார்கள்

எங்கும் அமராத அந்தப்பறவை அதோ என்று
புகைக் கோலத்தை வானில் வரைந்து
நான் விழும்போது
அவர்கள் சென்றார்கள்
அன்றைய நாளின் பூரணங்கொண்டு.

............

துப்பாக்கிகளை மீண்டும் தோளில்பூட்டி.
எந்தத் திசையை நோக்கிற்றாயினும்
துப்பாக்கிக் கழகு துப்பாக்கியே என்று
திரும்பிப் பார்த்து அவர்களில் ஒருவன்
சொன்னான்

வானில் சிரித்த நண்பகல் நாதனை
நானும் கண்டேன் நெருஞ்சிப் பூவாய்.
துப்பாக்கிக் குண்டால் சிதறிய உடம்பை
சமித்துப்போல சேமித்துக் கொண்டு மீண்டும்
வானில் எழுந்தேன்!

அன்றைக் கிரவு அவர்களின் காதலிகள்
கூடுதலாகக் கொஞ்சிக் களிக்கலாம் நானும்
எங்கும் அமராமல் எங்கும் பறப்பேன்

.........

இறப்பென்றாலும் இறப்புக் கிடையில்
பறக்கை இனிது;
பறந்தேன் உயர உயர
துப்பாக்கிக் கோல்களை சுவரில் சாய்த்து
காதலிமாரைக் கையால் அணைத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவை கொன்ற பெருங்கதை பேசிக்களிக்கும்
அவர்களை வாழ்த்தி ”

என்று அமைந்துள்ளது கவிதை!

## திருலோக சீத்தாராம்

தரமான பல கவிதைகளை எழுதியவர் இவர். இவர்தம் கற்பனைத் திறனுக்குக் 'கந்தர்வ கானம்' நூல் சாட்சி பகர்கிறது.

## புதுவை சிவம்

பாவேந்தரின் தொடக்ககால மாணவர்களில் ஒருவரான இவர், இனஎழுச்சி வேண்டிப் பல பாங்கான கவிதைகளைப் படைத்தவர்.

## மீ.ப. சோமசுந்தரம் (சோமு)

சந்த இன்பம் கொஞ்சும் பல கவிதைகளைப் படைத்தவர். இவர்! இவர்தம் 'இளவேனில்' நல்ல கவிதைத் தொகுதி!

## தங்கப்பா

புதுவையைச் சேர்ந்த தரமுயர்ந்த கவிஞர் இவர்! 'கள்ளும் மொந்தையும்' என்ற கவிதைத்தொகுதியில் அழகிய கவிதைகளைக் கண்டேன்!

சான்றாக,

“பொன்வண்டின் மென்சிறகு
முரட்டெருமைக்கு விசிறி ஆகுமா?
என்பாட்டு உனக்கா?”

என்ற பாட்டே போதும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீரா

குறிப்பிட வேண்டிய ஒரு நல்ல கவிஞர் இவர்.

"நீரிலே நெடுநாட்களாய் கிடந்தாலும்
கருங்கல் கரைவதில்லை;
ஓராயிரம் இளம் பார்வைகளில் மூழ்கியும்
முன்பெல்லாம்
என் மனம் கரையவில்லை
இன்று—இது என்ன அதிசயம்!

ஒரே வினாடியில்
உன் ஈரப் பார்வையில்
என்மனம் உப்பாகி விட்டதே!"

என உணர்ச்சிபூர்வமாக எழுதுகிறார்!

பிறிதொரு கவிதையை,

"என் ஆசைகளை
பாறைமேல் முளைக்கும் புற்கள் போல்
வேகமாக உலர்ந்துபோக விடாதே!
என் நம்பிக்கைகளை
வயல் முளைக்கும் களைகளைப்போல்
கிள்ளி எறிந்துவிடாதே!

என் கனவுகளையும் கற்பனைகளையும்
ஒன்றுக்கும் உதவாத துண்டுக்
காகிதங்களைப்போல்
கிழித்தெறிந்து விடாதே!"

என நெகிழ்வோடு எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுவய்யா
## (சுந்தர ராமசாமி)

"காற்றைத் திரித்து நகத்தைக் கிழித்து,
விளக்கேற்றி,
ஊனைக் கரைத்து, உயிரைப் பிழிந்து, எழுத்தாக்கி
நெஞ்சைக்குத்தி விரலைத தோய்த்துப் படைத்தேன்

திரியை எரித்தது விளக்கு
விளக்கை அணைத்தது காற்று
விரலையும் கரைத்தது குருதி

எனினும்—
என்னை அழிக்க யாருண்டு?
எழுத்தில் வாழ்பவன் அன்றோ யான்?"

என்றெழுதும் இவர் சிறந்த கவிவளம் மிக்கவர்.

## த. கோவேந்தன்

"கோவேந்தன் பாடிக் குவிக்கின்றான் நாளடைவில்
பாவேந்தன் ஆகிடுவான் பார்!"

என்று புரட்சிக் கவி பாரதிதாசனால் பாராட்டப் பெற்ற இவர், கவிஞனின் காதலி, தோழனைப் பாடுவேன் போன்ற தரமான கவிதை நூல்களைப் படைத்தவர்.

ஈழத்துக் கவிஞர் 'மஹாகவி' தமிழுக்கு அறிமுகப் படுத்திய 'குறும்பா' எனும் நவ கவிதைகளை பின்பற்றி இவரும் தரமான குறும்பா' நூலொன்றைப் படைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னடியான்

பாவேந்தர் நிழலில் தம் பைந்தமிழ்க் கவியாற்றலை வளர்த்துக் கொண்ட கனல் கவிஞர் இவர்.

"என்னுயிர் மூச்சும் என்னுடற் பேச்சும்
எல்லாம் தமிழினுக்கே!
என்விழி வீச்சும் என்புகழ்ப் பூச்சும்
எல்லாம் தமிழினுக்கே!
ஆயிரம் ஆயிர மாக வளரும்பல்
ஆண்டுகள் தமிழினுக்கே;
பாயும் நிலவொளி தன்முடி தாங்குமிப்
பாரே தமிழினுக்கே"

என்று தாய்மொழியாம் தமிழின் மேன்மையில் உளம்தோய்ந்து பாடுகிறார் கவிஞர்!

தொழிலாள நேயத்தோடு,

"உழைப்பவர் தோள்களில்
உலகம் ஒருநாள்
ஊஞ்ச லாடிடப் போகுது-எத்திப்
பிழைப்பவர் வாய்களில்
வயிற்றினி லெல்லாம்
மண்விழுந் தேமூடப் போகுது-தம்பி
ஏங்கிய ஏழையர்
மடிகளில் இவ்வையம்
இனிசுழன் றாடிடப் போகுது!—சுத்த
தூங்கு மூஞ்சித்
துரைகள் பிழைப்பினில்
தொல்லைகள் சூழ்ந்திடப் போகுது-தம்பி"

என எழுச்சி கவிபாடுகிறார் இவர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் தத்துவப் பாங்குடன்,

"உலகமென்னும் சிறையினிலே
உலவுகின்ற பைத்தியம் நாம்!
விலங்கிடாத கைதிகள் நாம்
விளங்கிடாத கைதிகள் நாம்!"

என அழகாகக் கவிபாடுகிறார் இவர்.

# திருச்சி தியாகராஜன்

இந்தக் கவிஞர் பொதுவுடமை பூக்கவேண்டுமென்ற வேணவாவோடு உணர்ச்சியும் உருவ சௌந்தர்யமும் பொருந்திய பலப்பலக் கவிதைகளை யாத்தவர்!

வெளிச்சம் என்ற தலைப்பில்,

"வீதிக்கு வெளிச்சம் போட்டான்
நீதிக்கு வெளிச்ச மில்லை
சேதிக்கு வெளிச்சம் போட்டான்
செயலுக்கு வெளிச்சமில்லை
சாதிக்கு வெளிச்சம் போட்டான்
சத்திய வெளிச்ச மில்லை
போதைக்கு வெளிச்சம் போட்டான்
புத்திக்கு வெளிச்சமில்லை"

என்று அழகாகப் பாடுகிறார் கவிஞர்.

# சௌந்தரா கைலாசம்

குறிப்பிடத்தக்க நல்ல பெண் கவிஞர்களில் இவரும் ஒருவர். சந்த எழிலும், சரளமொழியும்கைகோத்து நிற்கிறது இவர் கவிதைகளில்!

ஆன்மிக ஈடுபாட்டோடு அதிகம் கவிதைகளை ஆக்கியுள்ளார் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மனிதரைப் பாடுவேன்' என்ற தலைப்பில் கவிஞர் கண்ணா தாசன் பற்றி,

"மடைமாறிப் புனல்பாயும்; மாற்றானின் வயல்
விளையும்
மறுபடியும் மாறும் கதையே
மனம்போன போக்கெல்லாம் மறைக்காது
சொல்கின்ற
மனிதனை நாம் போற்றல் தகுமே!
உடைமாறும்; இடம்மாறும்; உரைமாறும்;
என்றாலும்
உனக்கென்ன பாடு மனமே!
ஓயாத உணர்வூற்றென் றோங்குகண்ண தாசனிடம்
உளமுருகப் பாடல் எழுமே!
தடுமாறும் போதையிலும் கவிபாடும் மேதையவன்
தவறாது தாளம் விழுமே!
தமிழுக்குப் புதுமெருகு தருமவனைப்
புகழ்ந்துருகத்
தயங்குவது கஞ்சத் தனமே!"

என்று செஞ்சொற் கவி பெய்கிறார் அம்மையார்!

## வா, மு. சேதுராமன்

மிகப்பலக் கவிதை நூல்களை எழுதியவர் இவர். உலகின் பலபாகங்களுக்கும் சென்று கவிமுழக்கம் செய்யும் வாய்ப்பைப் பெற்றவர்.

உணர்ச்சி பொங்கும் கவிதைகள் பல இவர் வடித்துள்ளார்.

"சித்தனுக்குச் சித்தன் யான்
தேவனுக்குத் தேவன் யான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தனுக்கு முத்தன் யான்
முன்னவனின் முன்னோன் யான்
அத்தனுக்கே அத்தன் யான்
ஆண்டானுக் காண்டான் யான்
பித்தனுக்குப் பித்தன் யான்!
பித்தலாட்டம் அறியேனே!"

என்று எழுச்சியோடு பாடுகிறார்!

## மின்னூர் சீனிவாசன்

"அழகுமலர் ரோஜாவின் இதழ் பிரித்தே
ஆசையொடு தின்கின்ற சிறுவர்போல
அழகிளமைக் காதலெனும் ரோஜாப்பூவை
அறியாத சிறுவனெனும் காலம்தின்னும்!"

என்று எழில் ஊற்றாய் கவிவடிக்கும் இவர், அமைதிகொஞ்சும் அரியகவிதைகள் பல யாத்துள்ள தரமான கவிஞர்!

## அமுதபாரதி

இவர் குறிப்பிட வேண்டிய நல்ல கவிஞர். ஒரு காலகட்டத்தில் செழுமைசெறிந்த மரபுக் கவிதைகளை எழுதினார். பின்பு புதுக்கவிதைத் துறையில் புகுந்து தம் திறனை இனங் காட்டினார். அண்மைக் காலங்களில் ஹைக்கூ வகைக் கவிதைகளை மிக அருமையாக எழுதி வருகிறார்! இவர் தம் 'ஹைக்கூ அந்தாதி' நூல் தமிழுக்கு ஆரோக்கியமான வரவு!

## குருவிக்கரம்பை சண்முகம்

சிறந்த கவிஞர்களில் ஒருவரான இவர் எழுச்சிமிக்க மரபுக் கவிதைகளைப் படைத்து. நவகற்பனை தாலாட்டும் புதுக் கவிதைகளைப் புனைந்து, அழகிய திரைப்பாடல்கள் ஆக்கித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது படைப்புத்திறனை அழுத்தமாக அடையாளங் காட்டியுள்ளார்!

## இளவேனில்

''வசந்தத்தை உனது
மூச்சுக் காற்றினால்
நிரந்தர மாக்கு
உயிரூட்டும் உனது
இதழ்களின் ஓரம்
உதிரும் சிரிப்பே என்
தேசீய கீதம்''

என உணர்ச்சி அலையென மோதும் நல்ல பல கவிதைகளை வடித்தவர் இவர்.

## கலாப்பிரியா

நடைமுறை நிகழ்வுகளை மிகமிக இயல்பான பாஷையில் கவியாக்கும் திறன் இவர்பால் மிகுதியாகவுள்ளது.

''கொலு வைக்கும்
வீடுகளில்
ஒரு குத்து சுண்டல்
அதிகம் கிடைக்குமென்று
தங்கையைத்
தூக்க முடியாமல்
தூக்கிப் போகும்
அக்காக் குழந்தைகள்''

என்றும்

''எட்டும் வரை
முதுகு தேய்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம் தூக்கிவிட
ஓட்டுப் போட
ஒன்றுக்கிருக்கும்போது
உதவிக் கொள்ள
குழந்தையையும் மனைவியையும்
நையப் புடைக்க
கைகள் தேவைதானே
எங்களுக்கும்''

என்றும் தமது கவிதை ஒவ்வொன்றையும் யதார்த்தமாகத் தீட்டுகிற இவர் குறிப்பிடத்தக்க நல்ல கவிஞர்களில் ஒருவர்!

## பொன்மணி வைரமுத்து

தரமான பெண் கவிஞர்களில் இவரும் ஒருவர். ஆண்டாள்பால் அகமுருகி,

''பனிக் காலைகளில்
உன் அந்த
மலர்க்கனவுப் பாடல்களை
மனமுருகிப் பாடுகையில்
என் சின்னக் குழந்தைகள்
பரவசத்தோடு அணைத்துக் கொள்ளும்
பாச 'வெதுவெதுப்பு' எனக்குள்
பரவுகிறது கண்மணி''

என்று எழுதுகிறார்.

நிலாவைப் பற்றி,

''நானோர்
இதழ்களில்லாத பூ
இரவின் வருகையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானப் பொய்கையில்
மலர்ந்து மிதக்கிறேன்!''
நான் மிதக்கும்போது தெறிக்கும்
தேன் துளிகளே இந்த
நட்சத்திரங்கள்''

என்று அழகாகக் கவி செய்கிறார்.

இவரைப் போலவே நிர்மலா சுரேஷ், மாலதி போன்ற பெண்பாலாரும் நன்கு கவி எழுதுகிறார்கள்.

## தாராபாரதி

வேகமும், சந்த எழுச்சியும் மிக்க கவிதைகளைப் படைக்கும் திறன் மிகுந்தவர் இவர்!

''கண்கள் அருகே இமைமயிர்கள்
கரும்புல் லாகக் காட்சிதர
கண்ணிமை வரப்பில் நுனிப்புல்லைக்
கடித்துப் பார்த்த விழிமான்கள்''

என வெகு நேர்த்தியாக—புதுமைப் பாங்கோடு பல கவிதைகளைப் படைத்துள்ளார்!

## இளந்தேவன்

ஆவேசமும் அழகும் பின்னிப் பிணைந்த
அற்புதமான மரபுக் கவிதைகளை
இவர் எழுதி வருகிறார்! இன்றுவாழ்கின்ற
அருமையான கவிஞர்களில் இவரும் ஒருவர்!

கு. ப. ரா., வல்லிக்கண்ணன், நகுலன், கு. மா. பா., வேழவேந்தன, கலைக்கூத்தன், பெரி. சிவனடியான், புலமைப்பித்தன், முத்துலிங்கம் போன்றோரும் சிறந்த கவிஞர்களே!

இந்நூலாசிரியரும் தனிப்பாணியில் பல கவிதைகளை படைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசிய-சிங்கப்பூர் கவிஞர்கள்

இருபதாம் நூற்றாண்டுக் கவிதை வளர்ச்சிக்கு மலேசியா சிங்கப்பூர் தேசக் கவிஞர்களும் தம்மால் இயன்ற பங்களிப்பை செய்துள்ளார்கள்.

**ஐ. உலகநாதனை** விஷேடமாகக் குறிப்பிட வேண்டும்! இவருடைய 'சந்தனக்கிண்ணம்' அருமையான கவிதைகளை உள்ளடக்கிய நூல்.

கோலாலம்பூரைச் சேர்ந்த **டி. எஸ். பொன்னுசாமியின்** 'தீப்பொறி' ஆவேசமான நற்கவிதைகளை உள்ளடக்கிய தொகுதி.

**கரவைக்கிழார்** மரபு மணங்கமழும் மணிக்கவிதை பல தீட்டியவர்,

**அன்பானந்தம், முரசுநெடுமாறன், முகிலன், க. பெருமாள்** போன்றோரும்க தரமான விஞர்கள். பொதுவில் நானறிந்த மலேசிய-சிங்கப்பூர் கவிஞர்களில் மிகப்பலர் பாவேந்தர் பாரதிதாசன் அடிச்சுவட்டை அழுத்தமாகப் பின்பற்றியே பாடியுள்ளனர்!

கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள் பால் மோகவெறி கொண்டு அலைந்ததன் பெறுபேறாக பரந்த முறையில் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களை அடையாளங்காட்டும் **முதல் நூலாக** இந்நூலை தமிழன்னையின் பாதக் கமலத்தின்முன்பு பணிவோடு வைத்துள்ளேன்.

எல்லாம் புகழும் இறைவனுக்கே.

UNIVERSITY OF ... PERADENIYA
6 ... 1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

468874

UNIVERSITY OF PERADENIYA
6-1-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிலோன் விஜயேந்திரன், எம்.ஏ., டி.லிட்.

- அன்பு நண்பர் விஜயேந்திரனை இந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஒரு இனிய மாலைப் பொழுதில் முதன் முறையாக நேரில் சந்தித்தேன்.
- பல சினிமாக்களில் பயங்கர **வில்லன்** நடிகராக முன்பே அவரைப் பார்த்திருக்கிறேன்.
- நேரில் சந்தித்தபொழுதுதான் **உலக இலக்கியங்களிலும் ஆன்மிகம் போன்ற பல துறைகளிலும் அவருக்குள்ள விசாலமான அறிவு** எனக்குப் புரிந்தது. தங்கு தடையின்றி கவிதை நடையில் அவர் பேசுவதை கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.
- நண்பர் விஜயேந்திரன் உண்மையான தமிழறிஞர். தமிழுக்கு பல **முதல் நூல்களை** இலட்சிய வெறியுடன், அயராது பல்லாண்டு உழைத்து வழங்கியவர்.
  - **கம்பதாசன் வாழ்வும் பணியும்**
  - **ஈழத்துக் கவிதைக் கனிகள்**
  - **ஈழத்துக் கவிதை விமர்சனம்**
  - **அறுபதாண்டு காலத் திரைப் பாடல்களும் பாடலாசிரியர்களும்**

போன்ற அற்புதமான முதல் நூல்களைத் தொடர்ந்து "இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த கவிஞர்களும் கவிதைகளும்" என்ற படைப்பை ஆக்கியுள்ளார். இதனைப் பதிப்பித்து வெளியிடுவதில் மிகவும் பெருமைப் படுகிறேன்.

— முல்லைச் செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org